வரு.76 இல. 32 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
තිනකරන් වාරමන්ජරී

2024 ஓகஸ்ட் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
August 18 Sunday, 2024

24 பக்கங்கள் 100/-
















# சஜித்தின் ஐ.ம.சக்திக்குள் விரிசல்



ராஜித சேனாரத்ன | ஏ.எச்.எம்.பௌஸி | வடிவேல் சுரேஷ் | அ.அரவிந்த்குமார் | எம்.வேலுகுமார் | குமார வெல்கம | அலி சப்ரி ரஹீம் | எஸ்.எம்.எம்.முஷாரப் | இஷாக் ரஹ்மான் | ஹரின் பெர்னாண்டோ | மனுஷ நாணயக்கார | டயனா கமகே | சரத் பொன்சேக்கா

## 54 ஐ.ம.ச. எம்.பிக்களுள் இதுவரை 13 பேர் விலகல்

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே ஏற்பட்டுள்ள விரக்தி மற்றும் கருத்து வேறுபாடுகளுக்கு மத்தியில் ஜனாதிபதியின் தனித்துவமான பொருளாதார நோக்கில் கவரப்பட்ட சில எம்.பி.க்களுக்கு சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக ஐக்கிய மக்கள் சக்தி பிளவுபட்டு வருவதுடன், தற்போது அக்கட்சியிலிருந்து கடந்த பாராளுமன்ற தேர்தலில் தெரிவாகிய 54 எம்.பி.க்களில் 13 பேர் கட்சியை விட்டு வெளியேறியுள்ளனர். இது 24 வீதத்தை விட அதிகரிப்பு என்றே கூறலாம்.

இவ்வாறு கட்சியை விட்டு விலகிய பாராளுமன்ற உறுப்பினர்களில் மிகவும் பிரபல்யமாக முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களான டொக்டர் ராஜித சேனாரத்ன, ஏ.எச்.எம்.பௌசி, வடிவேல் சுரேஷ், அரவிந்த்குமார் மற்றும் கண்டி மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பலமான உறுப்பினரும், கோப் குழுவின் முன்னாள் உறுப்பினருமான எம்.வேலுகுமார், பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப், அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் ஆகியோரும் அடங்குவர். இஷாக் ரஹ்மான் கடந்த பொதுத் தேர்தலில் அநுராதபுரம் மாவட்டத்தில் அதிக வாக்குகளை பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினராவார்.

அத்துடன் முன்னாள் அமைச்சர்களான ஹரீன் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோரும் ஐக்கிய மக்கள்

06

## "மக்கள் சிரமப்படும் போது ஏன் விலகி ஓடினீர்கள்?" பதிலளிக்குமாறு சஜித், அநுரவுக்கு ஜனாதிபதி சவால்



### "பதில் இல்லை என்றால் எனது மேடைக்கு வாருங்கள்" என ஜனாதிபதி பகிரங்க அழைப்பு

நாட்டில் எரிபொருள், எரிவாயு, மின்சாரமின்றி மக்கள் தவிக்கும் போது அவர்களைக் காப்பாற்ற முன்வராமல் எங்கே ஓடி ஒளிந்தார்களென்ற கேள்விக்கு பதிலளிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (17) அநுராதபுரத்தில் சவால் விடுத்தார்.

நாடும் மக்களும் பிரச்சினையிலிருக்கும் போது சவாலை ஏற்காமல் சஜித்தும் அநுரவும் ஏன் ஓடி ஒளிந்தார்கள் என்ற கேள்விக்கு தெளிவான பதிலை வழங்க வேண்டுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார். இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்கத் தவறினால், அவர்கள் தனது மேடைக்கு வந்து தனது இருபுறமும் அமரவேண்டுமெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சாரம் தொடர்பான மக்களின்

06



ஐ.ம.சக்தி தேசியப்பட்டியலில்

## ஹிருணிகாவுக்கு MP பதவியை கோருகிறது பெண்கள் அமைப்பு



தேசியப்பட்டியலிலிருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவான முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுக்கு பதிலாக இளைஞர்களின் தலைமைத்துவத்தை வழங்கக் கூடிய ஹிருணிகா பிரேமச்சந்திரவை

06

## யாழில் வேட்பாளர் திலித் ஜயவீர சர்வமத தலைவர்களுடன் சந்திப்பு

*யாழ். விசேட நிருபர்*



சர்வஜன அதிகாரத்தின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் சர்வமத தலைவர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ். ஆரியகுளம் நாக விகாரை, யாழ்ப்பாண ஆயர் இல்லம், ஐந்து சந்தி ஜும்மா பள்ளிவாசல், நல்லை ஆதீனம், நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கும் திலித் ஜயவீர இதன்போது சென்றார். சர்வஜன அதிகாரத்தின் கட்சி தலைவர்களான

06

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை செப். 15 இல்

### GCE A/L நவம்பர் 25 இல்



2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிமை நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர

06

## ரணிலுக்கு ஈடான அறிவு, அனுபவம் கொண்ட வேறு தெரிவுகள் இல்லை

### அவரை ஆதரிப்பதே காலத்தின் கட்டாயம்



நாட்டை கட்டியெழுப்பக் கூடிய தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே. அவருக்கு ஈடான அறிவு, அனுபவம், இயலுமை கொண்ட வேறு தெரிவுகள் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார் தெரிவித்துள்ளார். தமிழ் முற்போக்கு கூட்டணி பாராளுமன்ற உறுப்பினரான வேலுகுமார், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை

06

## எங்கள் கருத்து...

## அரசியல் நெறிமுறை தவறும் பிரசாரங்கள்!

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் முடிவடைந்ததையடுத்து வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகள் சூடு பிடித்துள்ளன. வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் தென்பகுதி உட்பட நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் தேர்தல் பரபரப்பு களைகட்டியுள்ளது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தல் கடந்த காலத்தைப் பார்க்கிலும் மிகவும் பரபரப்பு நிறைந்ததாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில் முன்னைய தேர்தல்களைப் போலல்லாது இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் எல்லாமாக 29 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் மாத்திரமன்றி, சுயேச்சையாகவும் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். நாட்டின் அரசியல் கட்சிகள் யாவும் பல்முனைகளில் களத்தில் இறங்கியுள்ளதால் பரபரப்பும், ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளும் அதிகமாகவே இருக்கப் போகின்றன. ஒருபுறம் கட்சிகளுக்கிடையிலான

06

## பொருளாதார ரீதியாக நாட்டை முன்னேற்றுவதே எனது இலக்கு

### புதியதொரு நாட்டை மக்களுக்கு வழங்க வேண்டும்



பொருளாதார ரீதியாக நாட்டை முன்னேற்ற வேண்டும் என்பதே தனது இலக்கென எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "நாட்டின் அனைத்து விடயங்களும் தற்போது இயல்பு

06

## தமிழரசு கட்சியின் நிலைப்பாட்டை சரியான நேரத்தில் அறிவிப்போம்



"ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை சரியான நேரத்தில் அறிவிப்போம்" என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, "கடந்த மூன்று ஜனாதிபதி

06

## SLPP ஜனாதிபதி வேட்பாளர் நாமல் இன்று பேருவளையில்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ இன்று (18) பேருவளைக்கு விஜயம் செய்கிறார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலின் அழைப்பின் பேரில் பேருவளைக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ, வரலாற்று பிரசித்தி பெற்ற கெச்சிமலை தர்காவில் இன்று மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ள துஆ பிரார்த்தனை நிகழ்விலும் பங்கேற்பார்.

பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல்

06

## இலங்கை சரித்திரத்தில் முதன்முறையாக

# அரசாங்க ஊடக நிறுவனம் நடத்தும் தமிழ் மொழியிலான ஊடக தொடர்பாடல் டிப்ளோமா

**லேக் ஹவுஸ் மீடியா அகாடமி (LHMA) தமிழில் ஊடக தொடர்பாடல் பற்றிய விரிவான டிப்ளோமா பாடத்திட்டத்தை அறிவித்துள்ளது. இது LHMA இன் குறிப்பிடத்தக்க சாதனையாகும். இதன் முதல்கட்டம் 2024 செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகும். விண்ணப்பங்கள் ஆகஸ்ட் 20 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும், ஆனால் ஆகஸ்ட் 31ஆம் திகதி வரை சலுகைக் காலமும் கொடுக்கப்பட்டுள்ளது. வெகுஜன ஊடக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் லேக் ஹவுஸ் நிறுவன தலைவரின் வழிகாட்டலில் ஆரம்ப விழா நடைபெறவுள்ளது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக சபை உறுப்பினரான மூத்த ஊடகவியலாளர் ஜெயரஞ்சன் யோகராஜினால் இந்த பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. மற்றும் பாட நெறிக்கு பதிவு செய்யும் பணிகளை சங்கீத்பனி விஜயவர்தன மேற்கொள்கிறார்.**

**இந்த பாடத்திட்டத்தின் வடிவமைப்பாளர், ஒருங்கிணைப்பாளர் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜெயரஞ்சன் யோகராஜ் உடனான நேர்காணல் இது.**



**கே : இந்த பாடநெறியின் முக்கியத்துவம் பற்றி கூற முடியுமா ?**

**பதில்** : இது சமகாலத்தில் ஒரு சிறந்த ஊடக டிப்ளோமா கற்கைநெறியாகும். வானொலி ஒலிபரப்பு, தொலைக்காட்சி, அச்சு பத்திரிகை அனைத்தும் உள்ளடங்கியுள்ளது. செயல்முறை practical விளக்கங்களும் உண்டு.

கற்கைநெறிகள் அடுத்த மாதம் ஆரம்பமாகும். சனி,ஞாயிறு தினங்களில் வகுப்பறை பயிற்சிகள், கொழும்பில் லேக் ஹவுஸ் நிறுவன பயிற்சி கூடத்தில் இடம்பெறும். அவசியம் ஏற்பட்டால் சில சந்தர்ப்பங்களில் ZOOM தொழில்நுட்பத்தின் ஊடாகவும் பயிற்சிகள் நடத்தப்படும். அரச ஊடகமொன்று தமிழ் மொழியில் டிப்ளோமா பயிற்சி நெறியை முன்னெடுப்பது இதுவே முதற் தடவையாகும். இது 100வீதம் அரச அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா சான்றிதழாகும். பதிவுக்கட்டணம் செலுத்தியவுடன் நேர அட்டவணை தொடர்பான தகவல்கள் வழங்கப்படும். பெரும்பாலும் ஞாயிறு மு.ப 9 – பி.ப 3.30 மணிவரை பாடங்கள் நடத்தப்படும்

**கே : பாடநெறிக்கான காலவரையறை பற்றி கூற முடியுமா ?**

**பதில்** : பாடநெறி காலம் சுமார் 8 மாதங்கள். உண்மையில் இந்த பாடநெறி ஆரம்பத்தில் 1 வருடத்திற்கு வடிவமைக்கப்பட்டது, ஆனால் சமூகத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு, கால அளவு 8 மாதங்களாக குறைக்கப்பட்டது.

**கேள்வி : பாட நெறி கட்டணம் பற்றி?**

**பதில்** : பாடநெறிக் கட்டணம் ரூ. 60,000/– மட்டுமே (அனைத்தும் உள்ளடங்கலாக). இதனை ரூபா 11000/– வீதம் மாதாந்த தவணைகளாகச் செலுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த பாடநெறிக் கட்டணமானது விரிவுரை மண்டபத்துக்கான அடிப்படைச் செலவு, விரிவுரையாளர் கொடுப்பனவு, மின்சாரம் மற்றும் இதர மேல்நிலைச் செலவுகளை சமாளிக்கவே அறவிடப்படுகிறது. இந்த கட்டணம் உண்மையில் பெயரளவிலான சலுகைக் கட்டணமாகவே கருதப்படுகிறது. ஆனால் இரண்டாவது தொகுதி மாணவர் உள்ளீர்ப்புக்கு, தேவைப்பாடு காரணமாக பாடநெறிக் கட்டணம் அதிகரிக்கப்படும்.

**கே : பாட நெறி சமகால ஊடக அறிவுத் தேவையை பூர்த்தி செய்யுமா ?**

**பதில்** : நிச்சயமாக பூர்த்தி செய்யும். ஊடகத் தொடர்பாடலின் தற்போதைய போக்குக்கு ஏற்றவாறு பாடநெறி சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. நான் பாடநெறி வடிவமைப்பின் முக்கிய ஆசிரியராக இருந்தாலும், நுண்ணறிவு வடிவமைப்பு கட்டமைப்புகள், இறுதி வடிவம் பெறுவதற்கு முன்பாக மதிப்பாய்வு மற்றும் பாடநெறி பகுப்பாய்வு பல கட்டங்களைக் கடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**கே : இந்த பாட நெறியின் உள்ளடக்கம் பற்றிய ஒரு சிறு விளக்கம் தர முடியுமா ?**

**பதில்** : ஊடகத் தொடர்பாடல் டிப்ளோமாவில் ஊடக நெறிமுறைகள், ஊடக பண்புகள், இலத்திரனியல் ஊடகங்களின் (வானொலி/தொலைக்காட்சி) நடைமுறைகள், அச்சு ஊடகம் மற்றும் சமூக வலைத் தளங்கள் மற்றும் இதர ஊடகங்களின் விரிவான ஆய்வுத் திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கியது.



நடைமுறை விளக்க பயிற்சியானது ஒரு குறிப்பிடத்தக்க பகுதியாகும். லேக் ஹவுஸ் (அச்சு ஊடகம்), வானொலி ஒலிபரப்பு (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் SLBC மற்றும் தொலைக்காட்சி (ரூபவாஹினி கூட்டுத்தாபனம் SLRC) ஆகியவற்றின் வேலைக் கட்டமைப்பை மாணவர்கள் அவதானிக்கும் வாய்ப்பைப் பெறுவர். மாணவர்களுக்கு நிகழ்நேர நடைமுறை விளக்கங்கள் மற்றும் டெமோக்கள் செயல்முறை விளக்கவுரைகளும் வழங்கப்படும்.

**கே : பாட நெறியின் விரிவுரையாளர்கள் பற்றி கூற முடியுமா ?**

**பதில்** : உயர் தகுதியும் அனுபவமும் கொண்ட விரிவுரையாளர் குழு மாணவர்களுக்கு ஊடக நிபுணத்துவப் பயிற்சியை வழங்குகிறது.

நான் பாட ஒருங்கிணைப்பாளராகவும் விரிவுரையாளராகவும் செயல்படுவேன். ஊடக தொழிலில் தற்போது பணிபுரிபவர்கள் (Working Journalists) விரிவுரைகளை நடத்துவார்கள் என்பது சிறப்பம்சமாகும்.

**கே : இந்த பாடநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு வேலை வாய்ப்பு எவ்வாறு இருக்கும் ?**

**பதில்** : உயர் அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா கற்கைநெறியை தொடர்ந்து, நன்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழைப் பெற, ஊடக ஆர்வமுள்ள தமிழ் பேசும் சமூகத்திற்கு இது ஒரு பொன்னான வாய்ப்பாகும். இந்த கற்கை நெறியில் சிறந்து விளங்கும் அனைத்து மாணவர்களுக்கும் இந்தத் தகுதி நிச்சயம். வேலைவாய்ப்பை பெற்று தரும். பாடத்திட்டத்தில் பல வகுப்பு அறை ஒப்படைகள் (CA), களப் பணிகள் (FA) மற்றும் குழுநிலை ஒப்படைகள் (GA) உள்ளன.

**கே : புள்ளி வழங்கப்படும் முறை மற்றும் மதிப்பீட்டு பணிகள் பற்றி கூற முடியுமா ?**

**பதில்** : பாட மதிப்பீட்டு செயல்முறை கடினமான மற்றும் சவாலான செயல்முறையாகும், எனவே மாணவர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். வருகைக்கும் மதிப்பெண்கள் வழங்கப்படும்.



**கே : பாட நெறி எப்போது ஆரம்பமாகும் என்று சொல்ல முடியுமா ?**

**பதில்** : வெகுஜன ஊடக, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மற்றும் லேக் ஹவுஸ் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் வெகு விமரிசையான ஆரம்ப விழாவுடன் வகுப்புகள் செப்டம்பர் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**கே : வகுப்புகள் இடம்பெறும் நாள் மற்றும் நேரம் பற்றி கூறமுடியுமா ?**

**பதில்** : வழக்கமாக வகுப்புகள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை, கொழும்பில் அமைந்துள்ள லேக் ஹவுஸ் மீடியா அகாடமி கேட்போர் கூடத்தில் நடத்தப்படும். நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்னதாக வகுப்புகளை முடிக்க வேண்டிய அவசியம் ஏற்படும் போது கூடுதல் ZOOM அமர்வுகள் நடத்தப்படும்.

வழக்கமாக 45 மணிநேர வகுப்பறைப் பயிற்சி மற்றும் 105 மணிநேர வகுப்பறை பணிகள் (CA), Field Assignments (FA) மற்றும் குழு பணிகள் (GA) இருக்கும். எதிர்காலத்தில், LHMA இந்தச் சேவையை வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்திற்கு கிளை நிறுவனங்களின் மூலம் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**கே : இந்த பாடநெறி மற்றும் பதிவு செயல்பாடுகள் பற்றிய மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள யாரைத் தொடர்புகொள்ள வேண்டும்?**

**பதில்** : பாடநெறி பற்றி, மேலும் விபரங்களுக்கு நீங்கள் என்னைத் தொடர்பு கொள்ளலாம் ஜெயரஞ்சன் யோகராஜ் 0777 315 206 அல்லது WhatsApp: 0727 315 206 அல்லது 0703165206

**கே : பாட நெறி பதிவு கட்டணம் பற்றி கூறமுடியுமா ?**

**பதில்** : பதிவுக் கட்டணம் ரூ 3000/– மட்டுமே. LHMA யில் மாணவராகச் இணைவதற்கு இது ஒரு முறை கட்டணம். ஒருமுறை செலுத்தினால் வாழ்நாள் முழுதும் மாணவராக இருக்க முடியும்.

பதிவு விபரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும் சந்தீபனி விஜயவர்தன 0770 088 467 (குரல் அழைப்பு மற்றும் வட்ஸ்அப்)

**கே : பதிவுகள், விண்ணப்பத்திற்கான கால எல்லை, முடிவுத்திகதி பற்றி?**

**பதில்** : இறுதித் திகதி ஒகஸ்ட் 20, 2024 என்றாலும், பதிவு செய்ய ஆகஸ்ட் 31ஆம் திகதி வரை உங்களுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. பதிவு செய்முறை முழு செயல்முறையின் மிக முக்கியமான பகுதியாகும்.

**இந்த அரிய வாய்ப்பை நழுவவிடாதீர்கள்! உங்களுக்கு எமது வாழ்த்துக்கள்!**

# சமூக வாக்குகளை தீர்மானிக்கும் சக்தி முஸ்லிம் தலைமைகளிடம் இல்லை



> ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக்கும் நோக்கமே மஹிந்தவிடம் இருந்தது. பின்னரே நிலைமைகள் மாறத்தொடங்கின.

**இனம், சமூகம், கட்சி, கொடி மற்றும் அரசியல் பற்றி சிந்திக்கும் காலமல்ல இதுவெனத் தெரிவித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முஸ்லிம் பிரிவுத் தலைவர் அப்துல் சத்தார் நாட்டை மட்டும் சிந்தித்து வாக்களிக்கும் ஜனாதிபதித் தேர்தலே இதுவெனக் குறிப்பிட்டார். தினகரன் வாரமஞ்சரிக்கு அவர் வழங்கிய நேர்காணலில் இவ்வாறு தெரிவித்த அவர், முஸ்லிம்களின் வாக்குகளைத் தீர்மானிக்கும் சக்தி ஹக்கீமிடமோ அல்லது ரிஷாத் பதியுதீனிடமோ இல்லை என்றும் குறிப்பிட்டார். தினகரன் வாரமஞ்சரிக்கு அவர் வழங்கி நேர்காணலில் தெரிவித்தவை வருமாறு;**

**கே : முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய நண்பரான நீங்கள், அரசியல் நிலைப்பாட்டை மாற்றியுள்ளதாகத் தெரிகிறதே?**

பதில்; ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப் பொறுப்பு 2006 இல், மஹிந்த ராஜக்ஷவிடம் வந்தது. அந்த நேரத்தில் அவருடன் இணைந்தேன். அவர், ஜனாதிபதியாக பதவி வகித்த காலங்களில் அதிகளவு சேவைகளைச் செய்யக் கூடியதாக இருந்தது. முஸ்லிம்களின் பாதுகாப்புக்குப் பக்கபலமாக மஹிந்தவின் ஆட்சியே இருந்தது. தற்போது தனிப்பட்ட நட்பு நீடித்தாலும் மஹிந்தவுடனான அரசியல் உறவு நீடிக்கவில்லை.

> நாட்டுக்காக கட்சியை கைவிடுவது தவறல்லை

**கே : ராஜபக்ஷக்களுடன் அரசியல் தொடர்பைத் துண்டிக்க நேர்ந்தமைக்கான காரணங்கள் என்ன?**

பதில்: சட்டெனச் சொல்வதென்றால் அவரது முதுமையே காரணம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தற்போது அவரது முழுமையான கட்டுப்பாட்டில் இல்லை. காலப்போக்கில் இக்கட்சி குடும்பச் சொத்தாக மாறலாம். மாறிக் கொண்டே வருகிறது.

**கே : கட்சியைக் குடும்பச் சொத்தாக்கும் நோக்கிலா நாமல் ராஜபக்ஷ களமிறக்கப்பட்டுள்ளார்?**

பதில்: இல்லை. ஆரம்பத்தில் ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக்கும் நோக்கமே மஹிந்தவிடம் இருந்தது. அவருடன் நெருங்கிப்பழகியதால் என்னால் இதை உணர முடிந்தது. பின்னர், நிலைமைகள் மாறத்தொடங்கின.

வாரிசு அரசியல் பற்றி சிந்தித்ததால் வந்த வினையே இது. குடும்ப அழுத்தத்திலிருந்தும் பிள்ளைப் பாசத்திலிருந்தும் விலகிச்செயற்பட முடியாத நிலையே அவருக்கு ஏற்பட்டது. அனுர குமாரவின் தேசிய மக்கள் சக்தியை விடவும் குறைவான வாக்குகளையே (சுமார் பத்து இலட்சம்) நாமல் ராஜபக்ஷ பெறுவாரென்பது எனது கருத்து. மஹிந்தவுக்கான வாக்குகளாகவே இவை இருக்கும். எனினும், தனிப்பட்ட ரீதியில் மஹிந்தவை என்றும் மரியாதைக் குரியவராகவே நோக்குகிறேன்.

**கே : ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நீங்கள் ஆதரிப்பதற்கான விசேட காரணங்கள் எவை?**

பதில்: விலையேற்றம், பொருட்கள் தட்டுப்பாடு இன்னும் மின்சாரத் துண்டிப்பு என்பவற்றை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது நாட்டைப் பொறுப்பேற்க எவரும் முன்வரவில்லை. இந்நேரத்தில் ரணில் விக்கிரமசிங்க முன்வந்து நாட்டைப் பொறுப்பேற்றார். பசி, பட்டினி மக்களை விரக்திக்குள்ளாக்கியது. 12 மணித்தியாலங்கள் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால், மின் உயர்த்திகள் இயங்கவில்லை.

இதனால், மாடி வீடுகளில் வசித்த முதியோர்கள் அவசர தேவைகளுக்காக வெளியே வர முடியாது தவித்தனர். அவசரமாக வெளிநாடு செல்வதற்கு ஒரு டொலரைக்கூட பெறப் முடியாதிருந்தது. இருந்தபோதும், இரண்டு வருடங்களுக்குள் சுமுக நிலையை

> தனிப்பட்ட நட்பு நீடித்தாலும் மஹிந்தவுடனான அரசியல் உறவு நீடிக்கவில்லை.

ஏற்படுத்தி பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டார் ஜனாதிபதி. சர்வதேச நாணய நிதியத்திடம் பெற்ற கடன்களில் இன்னும் மீதியைச் செலுத்த வேண்டியுள்ளது.

இந்நிலையில் போலியான வாக்குறுதியை வழங்கி மக்களை ஏமாற்றத் தேவையில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்து காட்டியுள்ளார்.

ஆனால், ஆட்சியைக் கையளித்தால் செய்து காட்டுவோம் எனக் கூறுவோர், திட்டங்கள் எதையும் முன்வைக்கவில்லை. உயிர்வாழ உணவு வேண்டும். பட்டினி காலத்தில் உணவளித்த ஜனாதிபதி ரணிலுக்கு வாக்களிப்பதுதான் நியாயம்.

பங்களாதேஷில் இடம்பெற்ற கலவரத்தில் இருநூறுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். நமது நாட்டிலோ ஒருவரே உயிரிழந்தார்.

> பட்டினி காலத்தில் உணவளித்த ஜனாதிபதி ரணிலுக்கு வாக்களிப்பதுதான் நியாயம்.

மக்களையும், நாட்டையும் பாதுகாத்தார் என்ற இந்த விசேட காரணங்களால்தான் ஜனாதிபதியை ஆதரிக்கிறேன்.

நாட்டுக்காகவே அவரும் கட்சியை கைவிட்டு, சுயேச்சையாகப் போட்டியிடுகிறார். இவ்வாறிருக்கும் போது, நாட்டுக்காக நாமும் கட்சியை விடலாம்தானே.

**கே : நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றன. இது குறித்து என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

பதில்; நஷ்டத்தில் ஈடுபடும் நிறுவனங்களை இலாபமீட்டும் செயற்பாடே இது. ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நஷ்டத்தில் இயங்கிய போது வெளிநாட்டுக் கம்பனிக்கு (எமிரேட்ஸ்) விற்கப்பட்டது. இதன் பின்னர் இக்கம்பனி இலாப மீட்டத் தொடங்கியதால் இலாபத்தில் பாதி நாட்டுக்கு கிடைத்தது. பின்னர், அரசியல் நோக்கங்களுக்காக மீண்டும் அரசாங்கம் இதைப் பொறுப்பேற்றது. அன்றிலிருந்து இந்நிறுவனம் மீண்டும் நஷ்டத்தில் இயங்குகிறது. இப்போது இதை விற்பதற்கு முயன்றாலும் வாங்குவதற்கு எவரும் வருவதில்லை.

எண்ணெய் வளத்தை இயற்கையாகக் கொண்டுள்ள நாடு சவூதி அரேபியா. ஆனால், அமெரிக்க நிறுவனங்களிடம் இதன் செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டதால்தான் செல்வச் செழிப்பில் அந்நாடு உள்ளது. எந்தத் துறையில் நிபுணத்துவம் இல்லையோ, அந்தத் துறையை கற்க முயற்சிக்க வேண்டும். அல்லது இலாபமீட்டும் வழிகளைக் கண்டறிய வேண்டும். இதில் எவற்றையும் நாம் செய்வதில்லை.

காரணம் இங்குள்ள அரசியல் போக்குகளே. இந்நிலையில், அவசரமாகச் செய்ய வேண்டிய இரண்டு விடயங்கள் உள்ளன. இலங்கை போக்குவரத்து சபை மற்றும் இலங்கை ரயில்வே திணைக்களம் என்பவற்றை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றுவதே அவை.

**கே : முஸ்லிம் தலைமைகள் குறிப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கின்றன. இந்நிலையில் பெரும்பாலான முஸ்லிம் வாக்குகள், சஜிதுக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுமா?**

பதில்; முஸ்லிம்களின் வாக்குகளைத் தீர்மானிக்கும் சக்தி, ஆற்றல் இத்தலைமைகளிடம் இல்லை. தற்போது முஸ்லிம்கள் தெளி வடைந்துள்ளனர். உலமாக்கள், பள்ளிவாசல் நிர்வாகங்களின் ஆலோசனைகளில் செயற்படுவதற்கே அதிகமான முஸ்லிம்கள் ஆர்வமாக உள்ளனர்.

இன்றைய சூழலில், எவருக்கும் எவரும் ஆலோசனை கூற வேண்டியதில்லையே. வீழ்ச்சியடைந்த நமது நாட்டை மீட்டு, எங்களைக் காப்பாற்றிய தலைவர் ரணில் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்தானே.

ஏ. ஜீ. எம் தௌபீக்...

# ரணிலை ஏன் வெற்றிபெறச் செய்ய வேண்டும்.?

## அச்சமின்றி நாட்டைக் காப்பாற்ற முன்வந்தார்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தலைவர், துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா



நாங்கள் ஏன் ஜனாதிபதியை ஆதரிக்கின்றோம் என்ற விடயத்தில் நாம் தெளிவாகக் குறிப்பிட வேண்டிய விடயம், இந்த நாட்டில் இருக்கும் தலைவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள், கடந்த காலங்களில் அவர்களுக்கு மக்களால் வழங்கப்பட்ட பொறுப்பை ஏற்காமல் தப்பி ஓடிய போது, அச்சமின்றி நாட்டைப் பொறுப்பேற்றுக் காப்பாற்றிய தலைவர் என்பதனால்தான் இரண்டாவது, அவ்வாறான பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர், சொந்த அரசியல் கட்சியின் அனுகூலங்களைப் பற்றிச் சிந்திக்காமல் நாட்டைப் பற்றி சிந்தித்து நாட்டுக்காக தீர்மானங்களை எடுத்து, நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டமை. மூன்றாவது, அவர் ஒரு முதிர்ந்த அரசியல்வாதியாக இருப்பதால், சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புள்ள அரசியல்வாதியாக செயற்படுவதற்கான பலம் அவருக்கு உள்ளது. நாட்டுக்காகப் பணியாற்றி தன் திறமையை வெளிக்காட்டிய தலைவர் என்பதாலும், குறுகிய கால விசித்திரக் கதைகள், வாக்குறுதிகள் கொடுத்து மக்களை ஏமாற்றும் தலைவர் அல்ல என்பதாலும் அவருக்கு ஆதரவு வழங்குகின்றோம்.

## மக்கள் ஆணை நாட்டை மீட்ட ரணிலுக்கே

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா



கோட்டாபய ராஜபக்சவை ஆட்சிக்குக் கொண்டுவந்த போது நாங்கள் அதை எதிர்த்தோம். ஆனால் அவரை ஜனாதிபதியாக்க நாட்டு மக்கள் முடிவு செய்தனர். அவரிடம் அரசியல் அனுபவம் இல்லாததால், அவரால் நாட்டை சரியாக நிர்வகிக்க முடியவில்லை. எனவேதான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாட்டின் பொருளாதாரத்தை சரியான முறையில் கையாள்வதில் அனுபவம் உள்ள ஒருவரை ஜனாதிபதியாக்க வேண்டும் என்று நாம் கூறுகின்றோம். மக்கள் விடுதலை முன்னணியின் பயங்கரவாதத்தால் 2022க்குப் பிறகு பலரால் அரசியல் செய்ய முடியவில்லை. எனினும் இப்போது யார் வேண்டுமானாலும் சுதந்திரமாக அரசியல் செய்யலாம் என்ற நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளது. மக்களுக்கு அரசியல் கட்சிகள் தேவையில்லை என்ற நிலையுள்ளது. எனவே, அரசியலை மக்கள் வேறுவிதமாக புரிந்து கொண்டுள்ளனர். மக்களின் வித்தியாசமான எண்ணத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் இந்த நாட்டின் ஜனாதிபதியாக யார் வரவேண்டும் என்பது குறித்து கடந்த காலங்களில் தொடர்ச்சியாக கலந்துரையாடினோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்பதை அங்கீகரித்தோம்; அதற்கு பல காரணங்கள் உள்ளன. கடந்த காலத்தில் இந்த நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலையிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு அவருக்கு வாய்ப்பு கிடைத்தது. எதிர்காலத்திலும் அவருக்கு ஆணை கிடைக்க வேண்டும். அதன்படி அவருக்கு ஆதரவளிக்க முடிவு செய்தோம்.

## நாட்டைப் பற்றிச் சிந்திப்பவர்கள் ரணிலிடம் அதனை ஒப்படையுங்கள்

பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் அசங்க நவரத்ன



இம்முறை ஜனாதிபதித் தேர்தல் மிகவும் முக்கியமானது. இந்த ஜனாதிபதித் தேர்தலில் குறிப்பாக கட்சி அரசியலை ஒரு பக்கத்தில் வைத்துவிட்டு, இந்த நாடு தற்போது முன்னேற்றத்தை நோக்கிச் செல்வதற்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்க நாம் உழைக்க வேண்டும். இந்த நேரத்தில், அவர் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுகிறார். நானும், எனது கட்சியினர் அனைவரும், நாட்டின் நலனுக்காக அவரை ஆதரிக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். இந்த விடயம் தொடர்பில் தொடர்ந்தும் கலந்துரையாடி எமது கட்சியின் கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுவதை விடுத்து தற்போதைய ஜனாதிபதியினால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டம் குறிப்பிட்ட காலத்துக்கு தொடர வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். குறிப்பாக அவர் இந்த நாட்டைப் பொறுப்பேற்றபோது நாடு பெரும் நெருக்கடிக்குள் வீழ்ந்திருந்தது. நாட்டில் பொருட்களுக்காக மக்கள் வரிசையில் நிற்கும் காலம் இருந்தது. எனவே, படிப்படியாக இவற்றைச் சீராக்கிக் கொண்டு வருகிறார். குறிப்பிட்ட காலத்துக்கு அவருக்கு அதிகாரம் வழங்குவதன் மூலம் இந்த வேலைத்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பார் என நான் நம்புகின்றேன். இவ்வேளையில் ஏனைய அரசியல் கருத்துக்களில் தொங்கிக்கொண்டிருக்காமல் நாட்டைப் பற்றி சிந்தித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்குமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்கின்றேன்.

## நாட்டுக்காகச் சிறந்த தீர்மானங்களை எடுக்கும் தலைவர் அவர் மாத்திரமே!

விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர



இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் பெரும் செலவில் பிரசாரம் செய்யப் போனால், நாடு ஐந்து மாதங்களில் மீண்டும் பெரும் பொருளாதார வீழ்ச்சியை சந்திக்கும். இக்கட்டான நேரத்தில் தான் ஜனாதிபதி நாட்டைப் பொறுப்பேற்றார். முழு நாடும் சரிந்து வீழ்ந்திருந்தது. நாட்டுக்கான உணவு உற்பத்தி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்நேரம் உர நிறுவனங்களுக்கு 29.000 மில்லியன் ரூபா கடனாக செலுத்த வேண்டியிருந்தது. அந்த பணம் முழுவதையும் இரண்டு வருடங்களில் செலுத்தி முடித்தோம். அதேபோன்று, 2022ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு வரையிலான 05 பயிர் போகங்களிலும் விவசாயிகளுக்கு உரம் கொள்வனவு செய்வதற்கு 50,000 ரூபாவை நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி வழங்கினார். அதனால் இரண்டே ஆண்டுகளில் அரிசியில் தன்னிறைவு அடைய எம்மால் முடிந்தது.

சஜித்திடமோ, அனுரவிடமோ இந்நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்கள் இல்லை. அவர்கள் வழங்கும் வாக்குறுதிகளை அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் நிறைவேற்றுவதற்கு இருப்பது நாம் சேர்த்து வைத்திருக்கும் 5 பில்லியன் டொலர்கள் மாத்திரமேயாகும். அது ஐந்து மாதங்களில் முடிந்துவிடும். அதன் பின்னர் மீண்டும் இந்நாட்டில் எரிபொருள் வரிசை, எரிவாயு வரிசை ஏற்படும். இந்த முறை முன்னோட்டம் பார்க்க முடியாது. அதற்கான நேரம் இதுவல்ல. நாட்டுக்குத் தேவை காலத்தை முகாமைத்துவம் செய்யும், சிறந்த தீர்மானங்களை மேற்கொள்ளும் தலைவர் ஒருவராகும். அவ்வாறான தலைவர் ஒருவரே இருக்கின்றார். அது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமேயாகும். நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற வகையில் ஆதரவளிக்கும் வேட்பாளர் வெற்றியடைவார்.

## நெருக்கடியான சூழ்நிலையில் நிபந்தனையின்றி ரணில் நாட்டைப் பொறுப்பேற்றார்

சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல்



இந்த நேரத்தில் ஜனாதிபதியை ஆதரிக்கும் முடிவை எடுப்பதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் பொருளாதார நெருக்கடியுடன் ஏற்பட்ட சூழ்நிலையாகும். கோட்டாபய ராஜபக்ஷ 2019இல் 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்தவுடன், கொவிட் தொற்றுநோய் என்ற உலகளாவிய நெருக்கடி நிலை ஏற்பட்டது; நாடு பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்று அந்த உலகளாவிய பிரச்சினைக்கு வெற்றிகரமான தீர்வை வழங்கினார். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, அந்நிய செலாவணி கையிருப்பு இன்று நாட்டில் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டது. தொழில்வாய்ப்புக்கள் இல்லாமல் போயின. கட்டுமானத் துறையில் வேலைத் திட்டங்கள் முடங்கின. ஊட்டச்சத்துப் பிரச்சினை அதிகரித்தது. அந்தநேரம், ஒரு மாற்றுத் தலைமையை நோக்கி நாங்கள் தள்ளப்பட்டோம். பிரதமர் பதவி அங்கு அனைவருக்கும் திறந்திருந்த போதிலும், இந்த பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்து அந்த பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்கி எவராலும் நாட்டைப் பொறுப்பேற்க முடியவில்லை. இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாததால், அனைவரும் ஒதுங்கி விட்டனர். அந்த நேரத்தில் ரணில் விக்கிரமசிங்க நிபந்தனையின்றி நாட்டை நெருக்கடியான நேரத்தில் பொறுப்பேற்றார். அதன்பிறகு, தனது தலைமையில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு இந்த நாட்டை கட்டியெழுப்பினார். மக்கள் விரும்பாத முடிவுகள் எடுக்கப்பட்டன. தீர்மானங்கள் எடுக்கப்பட்டு நாடு ஸ்திரத்தன்மைக்கு கொண்டு வரப்பட்டது. நாட்டில் மோசமான வரிசைகளின் சகாப்தம் முடிவுக்கு வந்தது. எனவேதான் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க முடிவு செய்தோம்.

## நாட்டைக் கட்டியெழுப்பும் போராட்டத்தின் பங்காளர்களாக ரணிலுக்கு ஆதரவளிக்கிறோம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்கா



இப்போது போட்டியிடும் வேட்பாளர்களிடையே இந்த நாட்டுக்காகப் பணியாற்றியவர், மாற்றத்தை ஏற்படுத்திக் காட்டியவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே. பாதாளத்தில் வீழ்ந்த இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதே நாம் விரும்புவது. அதனால்தான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

போராட்ட காலத்திலும், நாடு வீழ்ந்திருந்த போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு ரீதியாக ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி ஆக்குவதற்கு ஆதரவளித்தது. இந்த நாட்டில் பொறுப்புள்ள கட்சி என்ற வகையிலும், அதிக காலம் ஆட்சியில் இருக்கும் கட்சி என்ற வகையிலும், நாடு வீழ்ச்சியடைந்த போது, மக்கள் துன்பப்படும் நேரத்தில் வெளியே வந்து சிரித்துக் கொண்டிருக்காமல், நாட்டைப் பற்றிச் சிந்தித்து தீர்மானம் எடுக்கும் பொறுப்பு எமக்குள்ளது. எனவே பாராளுமன்றத்தில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கினோம். இப்போது மக்கள் வாக்கு மூலம் ஜனாதிபதியாகும் வாய்ப்பு வந்துள்ளது.

அதனால்தான் நாங்கள் ஜனாதிபதியை ஆதரிக்கிறோம். இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் சுயேச்சையாக அவர் போட்டியிருகின்றார். எனவே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட எந்தவொரு கட்சிக்கும் தனது அடையாளத்தை வைத்துக்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்பும் போராட்டத்தில் பங்குபற்றக் கூடிய வாய்ப்பு உள்ளது.

கட்சி என்ற அடையாளத்தை வைத்து நாட்டை கட்டியெழுப்பும் போராட்டத்தில் அங்கம் வகிப்போம்.

## இந்நாட்டை அவரிடமே ஒப்படைக்க வேண்டும்

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி பிரேம்நாத் சீ. தொலவத்தை



அன்று நாம் பெரும் நெருக்கடிக்குள் சிக்கியிருந்தது. இந்த நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்க எவரும் முன்வராத நிலையில் அவர் இந்த நாட்டைக் காப்பாற்ற முன்வந்தார். அன்று அவர் பணியாற்றியிருக்காவிட்டால், நாடு இன்று பங்களாதேஷைப் போன்று ஆகியிருக்கும்.

அப்படி நடந்திருந்தால் இன்று அரச சேவைக்கு என்ன நடந்திருக்கும்? நாடு முற்றாக அராஜக நிலைக்குள்ளாகியிருக்கும். அரச ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கும். எமக்கும் அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டது. அப்போது ரணில் பதில் ஜனாதிபதியாகி பின்னர் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியானார். அதன் பிறகு இந்த நாட்டைக் கட்டியெழுப்ப கடுமையாக உழைத்தார். தன்னால் இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்பதை அவர் செய்து காட்டியுள்ளார். அவரால் மட்டுமே இந்த நாட்டை நல்ல நிலைக்குக் கொண்டு வர முடியும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மட்டுமே நாட்டை கட்டியெழுப்ப முடிந்தது. அவருக்கு மக்கள் ஆணை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் இருக்கிறேன்.

## வேட்பாளர்களிடையே தகுதியானவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பைசர் முஸ்தபா



நாம் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதற்கு முக்கியமான காரணமாக இருப்பது நாடு மிகவும் இக்கட்டான கட்டத்தில் இருந்த போது அவர் நாட்டைப் பொறுப்பேற்று ஓரளவுக்கு ஸ்திரமான நிலைக்குள் கொண்டு வந்தமையாகும். போராட்டத்தின் காரணமாக அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறினார். எனினும் இவர் அவ்வாறு செய்யவில்லை. அந்தக் கடினமான நேரத்தில் அந்தப் பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டார். அவ்வாறு இவர் நாட்டைப் பொறுப்பேற்ற பிறகு, நாட்டின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மைக்குத் திரும்பியது. எனவே, இந்த சந்தர்ப்பத்தில் அவரே சிறந்த தலைவர் என நான் நினைக்கிறேன்.

அதேபோன்று, தற்போதைய வேட்பாளர்களுள் ரணில் விக்கிரமசிங்கவே மிகவும் தகுதியான வேட்பாளர் என்று நான் நம்புகிறேன். கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து பொறுப்பேற்றுக் கொண்ட அரசாங்கத்தையே இவர் முன்னெடுத்துச் செல்கிறார். இந்த அரசாங்கத்தில் உள்ள சிலர் தொடர்பில் எமக்கு பிரச்சினைகள் உள்ளன. ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணையைப் பெற்று ஜனாதிபதியானதன் பின்னர் அந்தப் பிரச்சினைகளுக்கு அவர் நேரடியான தீர்வுகளை வழங்க வேண்டும்.

**எம். எஸ். முஸப்பிர்**

## பேராசிரியர் பாஸில் கலாசார பீட பீடாதிபதியாக மீண்டும் தெரிவு!



*அம்பாறை மத்திய தினகரன் நிருபர்*

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதியாக, பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஏற்கனவே பீடாதிபதியாக பணியாற்றிய பேராசிரியர் பாஸிலின் பதவிக்காலம் நிறைவடைந்த நிலையில், புதிய பீடாதிபதியைத் தெரிவு செய்யும் நிகழ்வு கடந்த 15ஆம் திகதி பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீட் தலைமையில் பீடத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில், தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் உயர்சபை உறுப்பினர்கள், பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர், சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.ரீ. அஹமட் அஷ்ஹர் மற்றும் சிரேஷ்ட சட்ட ஆலோசகர் ஏ.ஆர்.எம். சுல்பி ஆகியோரும் கலந்துகொண்டனர். நிகழ்வில் குறித்த வெற்றிடத்துக்காக பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் போட்டியிட்டிருந்தார். இதில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று பேராசிரியர் பாஸில் மீண்டும் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

மர்ஹூம் வெள்ளைக்குட்டி மன்சூர், முஹம்மது இப்றாஹிம் உம்மு சல்மா தம்பதியினரின் மூத்த புதல்வரான பேராசிரியர் எம்.எம். பாஸில், 1974ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 07ஆம் திகதி மருதமுனையில் பிறந்தார். இவர் தனது பாடசாலைக் கல்வியினை மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் பெற்றுக்கொண்டார். உயர்தரத்தில் கலைப் பிரிவினைத் தெரிவு செய்திருந்த இவர், உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முதற்தொகுதி மாணவர்களுள் ஒருவராவார். பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தினை விசேட துறையாகத் தெரிவு செய்து, அதில் சிறப்புச் சித்திபெற்றார். பேராசிரியர் எம்.எம். பாஸில் பல்கலைக்கழகக் கல்வியில் சிறந்து விளங்கியதுடன் மட்டும் நின்றுவிடமால் ஏனைய சமூகம்சார் செயற்பாடுகளிலும் அக்கறையுடன் செயற்பட்டிருந்தார்.

முகவரி மாற்றம்

Good Neighbors Sri Lanka

இல. 32A, ரேமன்ட் வீதி, நுகேகொடையில் இருந்த Good Neighbors International (INGO) நிறுவனம் 2024 ஆகஸ்ட் 01ஆம் திகதி முதல் இல. 9A, 1/4, 5ஆம் மாடி, சென் அந்தனிஸ் மாவத்தை, கொழும்பு -03, எனும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

INTERNATIONAL DRIVING LICENCE

Obtain Your International Driving Licence to Drive Overseas.

AA CEYLON

Contact :
Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Markar Mawatha,
Colombo 03
Tel: 011 2421528 - Ext 200/201
WEB : www.aaceylon.lk



# 2025 ஜனவரியிலிருந்து அரச ஊழியர்களுக்கு கணிசமான சம்பள அதிகரிப்பு



- மூன்று வருடங்களுக்கு 25,000 ரூபா வீதம் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு
- அடிப்படைச் சம்பளம் 24 – 35 வீதம் வரையில் அதிகரிப்பு
- கீழ் மட்ட அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் 55,000 ரூபாய் சம்பளம் மற்றும் கொடுப்பனவு



2022 இல் இலங்கையில் ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடி, அதனால் ஏற்பட்ட விலையேற்றம், வாழ்க்கைச் செலவில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பு போன்ற காரணங்களால், நிரந்தர வருமானம் பெறும் அரச ஊழியர்கள் தமது அன்றாட வீட்டுச் செலவுகளை மேற்கொள்வதில் மிகுந்த சிரமங்களை அனுபவித்தனர்.

நாட்டின் நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் ரணில் விக்கிரமசிங்க அனைத்து அரச ஊழியர்களுக்கும் 10,000 ரூபா கொடுப்பனவை வழங்க ஏற்பாடு செய்தார்.

எனினும் சில மாதங்களுக்குப் பின்னர் பெரிய எதிர்ப்புகள் கிளம்பின. குறிப்பாக வைத்தியர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இந்த நிலைமையை ஆராய்ந்த பின்னர், தேசிய வைத்தியசாலை கட்டமைப்பை முன்னெடுத்துச் செல்வதன் அவசியத்தை கவனத்தில் எடுத்துக்கொண்டு, வைத்தியர்களின் கொடுப்பனவுகள் சரிசெய்யப்பட்டது.

அது முடிவடையும் போது பல்கலைக்கழகத்தினரின் போராட்டம் ஆரம்பமானது. அந்த சந்தர்ப்பத்தில், மாணவர்களின் கல்விக்கு இடையூறு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, அந்த ஊழியர் குழுவுக்கும் கொடுப்பனவு சரிசெய்யப்பட்டது.

அந்தப் பிரச்சினை முடிவடையும் போது அரசாங்கத்தின் நிறைவேற்று மட்ட அதிகாரிகள், குறிப்பாக மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் விடுத்த கோரிக்கைகளை கருத்திற் கொண்டு அரசாங்கம் இவ்விடயத்தில் முறையான கவனம் செலுத்தியது.

இவ்விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரச ஊழியர்களின் சம்பளத்தை முறையாக உயர்த்துவதற்கும், சம்பள முரண்பாடுகளை களைவதற்கும் விசேட அமைச்சரவைப் பத்திரமொன்றை முன்வைத்தார்.

அதன்படி, அனைத்து அரச சேவையினரதும் சம்பளத்தை சீர்திருத்துவதற்கான அமைச்சரவைப் பத்திரமே அதுவாகும். 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை சமர்ப்பிக்க நிபுணர் குழுவை நியமிப்பதற்கு 2024ஆம் ஆண்டு மே 27ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது அனுமதி வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் நியமிக்கப்பட்ட குழுவில் 10 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி செயலாளர் உதய ஆர். செனவிரத்னவின் தலைமையிலான குழுவே இவ்வாறு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் செயலாளராக ஜனாதிபதி மேலதிகச் செயலாளராக ஜீ. எல். வர்ணன் பெரேரா செயற்பட்டார்.

இக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக ஜூட் நிலுக்ஷன் (பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்), ஹிரன்சா களுதந்திரி (பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்), எஸ். ஆலோக பண்டார (ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்), எச். ஏ. சந்தன குமாரசிங்க (நிறுவகப் பணிப்பாளர் நாயகம்), டொக்டர் டெரன்ஸ் காமினி டி சில்வா (ஓய்வு பெற்ற பிரதிப் பணிப்பாளர் நாயகம், சுகாதார அமைச்சு), துமிந்த ஹுலங்கமுவ (தலைவர், இலங்கை வர்த்தக சபை), சண்டி எச். தர்மரத்ன (பிரதான மக்கள் அதிகாரி (Chief people officer) BCS International Technology PTY LTD) மற்றும் இசுரு திலகவர்தன (பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள்) கொமர்சியல் வங்கி) ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் இந்தப் பணியை முன்னெடுத்துச் சென்ற போது 30 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர். அத்துடன் 200 பேரிடம் பல்வேறு விடயங்கள் தொடர்பில் சாட்சிகளை ஆய்வு செய்ததன் பின்னர் நீண்ட அறிக்கையைத் தயார் செய்தனர்.

அதேபோன்று, தற்போது 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு வரும் நிலையில், அதனுள் உள்ளடக்குவதற்கான இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த இடைக்கால அறிக்கை கடந்த12ஆம் திகதி ஜனாதிபதியினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அமைச்சரவையினால் அதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் அந்த இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பை இந்த முறை வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கான பரிந்துரை உள்ளடக்கப்பட்டது.

தற்போது அரச சேவையில் காணப்படும் 30 வகையாகப் பிரிக்கப்பட்டுள்ள சம்பளம் நான்காகக் குறைக்கப்படவுள்ளது.

இந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் சம்பள முரண்பாடுகள் தீர்க்கப்படும் வகையில் அரச சேவையின் தரச் சம்பள வகைகள் நான்காகத் திருத்தப்படும்.

அதன்படி 2027ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு மாதமும் அரச ஊழியர்களுக்கு தொடர்ச்சியாக 25000 ரூபா வாழ்வாதார கொடுப்பனவாக வழங்கப்படும். மேலும், அனைத்து அரசு ஊழியர்களின் அடிப்படைச் சம்பளமும் 24% முதல் 35% வரை உயரும்.

குறிப்பாக, 13 லட்சத்திற்கும் அதிகமான அரசு ஊழியர்களால் 220 இலட்சம் மக்களுக்கு அமைச்சகங்கள், திணைக்களங்கள் மற்றும் பெருநிறுவனங்கள் மற்றும் சட்டபூர்வ அமைப்புகள் மூலம் பாரிய சேவைகள் வழங்கப்படுகின்றன.

குறிப்பாக அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளுக்காக வருடாந்தம் 1200 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை செலவிடப்படுகிறது, இதற்கு மேலதிகமாக அரசாங்கம் மேலும் 400 பில்லியன் ரூபாவை ஓய்வூதியத்திற்காக செலவிடுகிறது.

அத்துடன், புதிய சம்பளக் கட்டமைப்பின் படி, 2030ஆம் ஆண்டுக்குள் அரச சேவையில் உள்ள மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையை பத்து இலட்சமாக (1,000,000) அல்லது அதற்கும் குறைவாகக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் குழு முன்மொழிந்துள்ளது. இது நவீன உலகிற்கு ஏற்ப புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலமாகும்.

இதில் 2025ஆம் ஆண்டு முதல் 03 ஆண்டுகளுக்குள், அரச சேவையின் இயன்ற அனைத்து துறைகளிலும் டிஜிட்டல் மயமாக்கல் (Digitalization) மற்றும் தன்னியக்கமயமாக்கல் (Automation) முறைமைகளைக் கொண்டு வந்து மின்னணு அமைப்புகள் மூலம் அரசாங்கக் கட்டுப்பாட்டுக்கான நடைமுறைகளை (E – Governance) அறிமுகப்படுத்தல் மற்றும் அதற்கான அரசாங்க முதலீட்டுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இன்னொரு விஷயத்தையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

ஏனென்றால், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிக்கும் போது, வணிக ரீதியான அரச நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் அந்த வகையினுள் அடங்கக் கூடியவை அல்லவென்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும். இந்தப் புதிய சம்பளம் மற்றும் கொடுப்பனவு முறையானது அந்த வகைகளைத் தவிர அனைத்து அரச நிறுவனங்களுக்கும் நடைமுறைப்படுத்தப்படும்.

அதேபோன்று தற்போதுள்ள வரிக் கொள்கைக்குள்ளேயே இந்த செலவினங்களை முகாமைத்துவம் செய்வதற்குஅமைய , இந்த சம்பள முறையினை நடைமுறைப்படுத்தல் மற்றும் முன்மொழியப்பட்ட சம்பள முறை 2025 ஜனவரி 01 முதல் அரசின் நிதி ஸ்திரத் தன்மையினையும் கவனத்திற் கொண்டு கட்டம் கட்டமாக செயல்படுத்தப்படும்.குழு அறிக்கையின் பரிந்துரைகளுக்கு, கொள்கை அங்கீகாரம் வழங்குவதற்கும், அந்த பரிந்துரைகளை 2025 வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கி நடைமுறைப்படுத்துவதற்கும் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கைகள் நடைமுறையில் உள்ளதால், மீண்டும் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு 2027ஆம் ஆண்டே மேற்கொள்ளப்படும்.


அதுவரையிலான வழிமுறைகள், இந்தக் குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

அனைத்து அரச சேவையையும் மக்களுக்கு சேவைகளை வழங்குவதோடு, திறைசேரிக்குச் சுமையில்லாத சேவையாக மாற்றக்கூடியதாக இருப்பது அந்தச் செயற்பாடுகளை அவ்வாறே செயற்படுத்துவதன் மூலமாகவேயாகும்.

அரச சேவையில் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய சம்பள உயர்வு தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனடிப்படையில், அனைத்து அரச ஊழியர்களுக்கும் 25,000 ரூபா வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக வழங்கப்படும், அதேபோன்று அனைத்து அரசாங்க ஊழியர்களின் அடிப்படை சம்பளமும் 24% இல் இருந்து 35% ஆக அதிகரிக்கப்படும். இந்த சம்பள உயர்வின்படி, குறைந்தபட்ச ஊதியம் ரூ.55,000 ஆக உயரும். வரலாற்றில் இவ்வளவு பெரிய ஊதிய உயர்வு செய்யப்பட்டுள்ளதாக எவராலும் கூற முடியாது.

**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மற்றும் அமைச்சரவைப் பேச்சாளர்**
**கலாநிதி பந்துல குணவர்தன**

# களுத்துறையில் ரணில் அலை?



ஜனாதிபதித் தேர்தலுக்கு 39 வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்துள்ள நிலையில், தேர்தல் களம் மேலும் சூடுபிடித்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், ஆளும் கட்சி எதிர்க் கட்சி உறுப்பினர்கள் தங்களுக்கு விருப்பமான கட்சிகளுக்கு மாறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கிடையில், பல்வேறு தரப்பினரும் பணத்துக்கு விலை போவதாக பல்வேறு குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இரண்டு பிரதான அரசியல் கட்சிகள் மேடையில் விளையாடிக் கொண்டிருக்கும் வேளையில், ஜனாதிபதி ரணில் சத்தமில்லாமல் எதிர்கால முன்னெடுப்புக்களைத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்.

**ஜனாதிபதி ரணில் கண்டி, நுவரெலியாவில்**

ஜனாதிபதி ரணில் கடந்த வார இறுதியை கண்டி மற்றும் நுவரெலியாவில் கழித்தார். முதலாவது கூட்டம் கண்டி ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றதோடு, கண்டி வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டிருந்தனர் கண்டி வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் அனைவரும் நாட்டின் பொருளாதாரத்தை வழமைக்கு கொண்டு வந்தமை தொடர்பில் ஜனாதிபதி ரணிலுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டதோடு, வரி அறவிடும் போது ஏற்பட்டுள்ள குளறுபடிகள் தொடர்பிலும் அவர்கள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

இங்கு ஜனாதிபதி ரணில் கண்டியின் அபிவிருத்தி மற்றும் 2025ஆம் ஆண்டு வாகன இறக்குமதி குறித்தும் எடுத்துரைத்தார். வாகனங்களை இறக்குமதி செய்யும் போது வரி அதிகரிக்கும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டின் வரிக் கொள்கைகளை மாற்றுவது குறித்தும் பேசினார்.

**கண்டி வாகன நெரிசலில் சிக்கிய ஜனாதிபதி ரணில்**

அந்த நிகழ்வு முடிவடைந்து, ஜனாதிபதி ரணில் தொழிலாளர் தலைவர்களை சந்திப்பதற்காக பேராதனை வீதிக்கு செல்ல வேண்டியிருந்தது.

கண்டியில் நடைபெறும் எசல பெரஹெர நிகழ்வுக்காக பெருமளவான மக்கள் வருகை தந்த நிலையில் பாதுகாப்பு தரப்பினரின் பிரசன்னம் அவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது என ஜனாதிபதி ரணில் பாதுகாப்பு தரப்பினருக்கு, முன்னதாக பணிப்புரை விடுத்திருந்தார்.

ஜனாதிபதி ரணிலும் தான் பயணிக்கும் வீதிகளை மூடி மக்களுக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம் என்று கூறியதன் காரணமாக போக்குவரத்து நெரிசலில் சிக்கி ஒரு மணித்தியாலத்திற்கும் மேலாக தாமதமாகவே கூட்டத்திற்கு வருகை தர வேண்டியிருந்தது.மஹிந்த, கோட்டாபய அடுத்ததாக ரணில்

அன்றைய தினம், பொதுஜன பெரமுனவின் முன்னாள் உள்ளூராட்சி மன்ற தலைவர்களது கூட்டம் இடம்பெற்றதோடு, இதன் போது குருநாகல் முன்னாள் மேயர் துஷார சஞ்சீவ, "மஹிந்தவை வெற்றி பெறச் செய்ததைப் போல், கோட்டாபாயவை வெற்றி பெறச் செய்ததைப் போல நாம் இம்முறை உங்களையும் வெற்றி பெறச் செய்வோம்" எனக் கூறியதைத் தொடர்ந்து ஏனையோரும் அதனையே ஜனாதிபதியிடம் கூறினர்.

கண்டியில் நடைபெற்ற கூட்டங்களின் பின்னர் வடிவேல் சுரேஷ் ஏற்பாடு செய்திருந்த வர்த்தக மற்றும் தோட்ட சமூகத்தினரின் சந்திப்பில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் ஹட்டன் நகருக்குச் சென்றார். அதன் பின்னர் ஜனாதிபதி ரணில், கே.கே. பியதாஸவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பேரணியில் கலந்து கொண்டதன் பின்னர் அங்கிருந்து நுவரெலியா நோக்கிச் சென்றார்.

**ஜனாதிபதிக்கு ஆதரவைத் தெரிவிப்பதற்கான வரிசை**

திங்கட்கிழமை காலை கொழும்பில் உள்ள பிளவர் வீதியில் அமைந்துள்ள அரசியல் அலுவலகத்திற்கு வந்த ஜனாதிபதி ரணில், அமைச்சரவைக் கூட்டத்தில் இணைவதற்காக மாலை ஜனாதிபதி அலுவலகத்திற்குச் சென்றார். இதற்கிடையில் பொதுஜன பெரமுனவின் புத்தளம் மாவட்ட உறுப்பினர் ஜகத் பிரியங்கர ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதாக அறிவித்தார்.

ஜனாதிபதி கடந்த வாரத்தின் பெரும்பகுதியை அரசியல் காரியாலயத்தில் தனது தேர்தல் பணிகளுக்காக செலவிட்டார். கூட்டணி அமைப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் மற்றும் முஸ்லிம், தமிழ் எம்.பி.க்களும் வந்து ஜனாதிபதியைச் சந்தித்து ஜனாதிபதி தேர்தலில் ஆதரவளிப்பதாக வாக்குறுதியளித்தனர்.

**ஜனாதிபதி ரணிலுக்கு பங்களாதேஷ் பிரதமரிடமிருந்து அழைப்பு**

பங்களாதேஷ் இடைக்கால அரசாங்கத்தின் பிரதமர் முஹம்மது யூனுஸிடமிருந்து ஜனாதிபதி ரணிலுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது.

புதிய பதவிக்கு வாழ்த்து தெரிவிக்க அவரை தொடர்பு கொள்ள முயற்சித்ததன் விளைவாக, பங்களாதேஷ் பிரதமர் ஜனாதிபதி ரணிலுக்கு அழைப்பு விடுத்தார்.

ஜனாதிபதி ரணிலின் புதிய பதவிக்கு முதலில் வாழ்த்து தெரிவித்த அவர், தனது நாட்டில் நிலவும் நிலைமையை விரைவில் தீர்க்க முயற்சிப்பதாக தெரிவித்தார். நாட்டின் பொருளாதாரத்தை பாதுகாக்குமாறு ஜனாதிபதி ரணில் கூறிய போது, பங்களாதேஷில் முதலீடு செய்துள்ள இந்நாட்டு முதலீட்டாளர்களை நாட்டை விட்டு வெளியேற வேண்டாம் என அறிவிக்குமாறு பிரதமர் யூனுஸ் கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதியிடமிருந்து பங்களாதேஷுக்கு உத்தரவாதம்

பங்களாதேஷின் அபிவிருத்திக்காக சகல வழிகளிலும் செயற்படுவதாக ஜனாதிபதி ரணில் தெரிவித்த போது, தனது நாட்டு நிலைமை சீரடைந்த பின்னர் பங்களாதேஷிற்கு விஜயம் செய்யுமாறு பிரதமர் யூனுஸ் ஜனாதிபதி ரணிலுக்கு அழைப்பு விடுத்தார். "நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும் உங்கள் ஆதரவு எங்களுக்குத் தேவை. நெருக்கடியில் இருந்து இலங்கை காப்பாற்றப்பட்டது போல், பங்களாதேஷை நெருக்கடியிலிருந்து காப்பாற்ற ஆதரவு அளிக்க வேண்டும்" என யூனுஸ் இறுதியாக ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டார்.

ரணிலுக்கான சுப நேரம் கணித்த வஜிர

ஜனாதிபதி ரணில் அன்றைய தினம் காலை வேட்பு மனுவில் கையொப்பமிட்டார். தேர்தல் செயலகத்தில் வேட்புமனுவை கையளித்தது வியாழக்கிழமை என்பதால் அன்றைய தினம் காலை அவர் பிளவர் வீதியில் உள்ள அரசியல் அலுவலகத்துக்கு வந்தார்.

அலுவலகத்திலிருந்து புறப்படும் சுப நேரம் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தனவினால் கணிக்கப்பட்டிருந்ததோடு, அந்த நேரத்தில் அங்கிருந்து ஜனாதிபதி ரணில் ராஜகிரிய தேர்தல் செயலகத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

மத வழிபாடுகளை முடித்துக் கொண்டு தேர்தல் செயலகத்திற்குச் சென்ற ஜனாதிபதி ரணில் பிரதான மண்டபத்திற்குச் செல்வதற்கு முன்னர் தேர்தல் அலுவலக அதிகாரிகளிடம் எத்தனை வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் எனக் கேட்டறிந்தார்.

**வேட்பாளர்களுக்கு ஒரு பஸ்**

"சேர், 40 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்கள்" என தேர்தல் அதிகாரிகள் கூறியபோது, "ஆ... அப்படியாயின் அவர்கள் இங்கிருந்து செல்வதற்கு பஸ் ஒன்றை ஒழுங்குசெய்ய வேண்டும்" என ஜனாதிபதி கூறியதைக் கேட்டு அங்கிருந்தவர்களின் சிரிப்பை அடக்க முடியாமல் போனது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் வந்திருந்த ஜனாதிபதி ரணில் தனது முறை வந்தவுடன் வேட்புமனுவை கையளிக்கச் சென்றதோடு, அவருக்குப் பின்னால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தும் வந்து வேட்புமனுவை கையளிப்பதற்காக வரிசையில் நின்றார். வரிசையில் நின்றிருந்த சஜித், திடீரென தேர்தல் அதிகாரிகள் அமர்ந்திருந்த இருக்கைகளுக்குப் பின்னால் சென்று வேட்புமனுவைக் கையளிக்க எடுத்த முயற்சி தொடர்பில் அனைவரும் பேசத் தொடங்கினர்.

**2015ஆம் ஆண்டில் மஹிந்த செய்ததை சஜித் செய்தாரா?**

"2015ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவ்வாறே வேட்புமனுவைக் கையளித்தார்" என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர கூறியபோது அங்கிருந்த சாகல ரத்நாயக்காவும் தலையசைத்து அதனை அங்கீகரித்தார்,

ரணிலுக்கு கேஸ் சிலிண்டர் கிடைத்த விதம் இதேவேளை, வாக்குச் சின்னம் தொடர்பில் ஆராயுமாறு ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.

தேவைப்பட்டால் ஆதரவு வழங்குமாறு தேர்தல் அதிகாரிகளிடமும், செய்திப் பணிப்பாளர் நாயகம் தினித் சிந்தக்கவிடமும் ஜனாதிபதி ரணில் கூறினார்.

எரிவாயு சிலிண்டரை வாக்குச் சின்னமாகப் பெறுவதற்கு ஏற்கனவே திட்டமிட்டிருந்த அவர்கள், அந்தச் சின்னத்தை யாரும் கேட்காததால், ஜனாதிபதி ரணிலின் சின்னமாக எரிவாயு சிலிண்டரைப் பெற்றுக் கொண்டனர்.

எரிவாயுவே இல்லாத காலத்தில் நாட்டைப் பொறுப்பேற்றுக் கொண்ட ஜனாதிபதி ரணிலுக்கு அந்த அடையாளம்தான் முக்கியமான அடையாளம் என அங்கிருந்தவர்கள் பேச ஆரம்பித்தனர்.

**களுத்துறை ரணிலுக்கு**

களுத்துறை மாவட்டத்தில் உள்ள ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளின் பெரும்பான்மையான அரசியல் தலைவர்கள் சுயேட்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க இணங்கியுள்ளனர்.

டாக்டர் ராஜித சேனாரத்ன, குமார வெல்கம, ரோஹித அபேகுணவர்தன போன்றோர் அவர்களுள் முக்கியமானவர்களாகும்.

மேலும், ஏ.எச்.எம். பௌசி, வடிவேல் சுரேஷ், மொஹமட் முஸம்மில், அசங்க நவரத்ன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளதுடன், எதிர்காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாக எதிர்க்கட்சியில் இருந்து பலர் வரவுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எம். எஸ். முஸப்பிர்**




# சர்வதேச நாணய நிதிய விடயத்தில் தவறான நிலைப்பாட்டையே உருவாக்கியுள்ளனர்

## அமைச்சர் அலி சப்ரி பேட்டி



**தாங்கள் ஆட்சிக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை மறுசீரமைப்போம் எனப் பல்வேறு அரசியல் கட்சிகள் கூறுவது நடைமுறைச் சாத்தியமற்ற விடயமாகும் என வெளிவிவகார அமைச்சரும், நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சருமான அலி சப்ரி தெரிவித்தார். அரச இலத்திரனியல் ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அமைச்சர் அலி சப்ரி இதனைத் தெரிவித்தார்.**

**கே: சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை இலங்கை கோரியிருப்பது குறித்து கடந்த பல மாதங்களாக கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றன. உண்மையில் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு எந்தளவு முக்கியமானது?**

பதில்: சர்வதேச நாணய நிதியம் என்பது உலகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விசேட மருத்துவ நிபுணர் ஒருவரைப் போன்றதாகும். பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் இரண்டு விடயங்கள் ஏற்படலாம். ஒன்று ஸ்தம்பிதமடையலாம் மற்றையது பொருளாதாரம் முற்றுமுழுதாக சரிவடைந்து வங்குரோத்து நிலைக்குச் செல்லலாம். இவை இரண்டும் வெவ்வேறு விடயங்கள். அபிவிருத்திகளுக்கு ஒத்துழைப்பு வழங்க பல்வேறு வங்கிக் கட்டமைப்புக்கள் உள்ளன. ஆனால் ஒரு நாட்டின் பொருளாதாரம் சரிவடைந்து விட்டால், அந்த வங்கிகள் எதுவும் எட்டிக்கூடப் பார்க்கப் போவதில்லை. முதலில் ஸ்திரப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், அதற்கே சர்வதேச நாணய நிதியம் அவசியம்.

அந்த வைத்தியர் சரியில்லையென்றால் வேறொரு வைத்தியரை நாட வேண்டும். அது உள்நாட்டு வைத்தியராக இருந்தாலும் சரி. மாற்றுவழி இல்லையென்றால் அந்தத் தெரிவையே எடுக்க வேண்டும். சுகவீனத்தை சரிசெய்வதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கூறுவதற்கு ஒருவர் வேண்டும். அத்துடன், நாம் சரியான பாதையில் செல்வதற்கான வழிகாட்டலை வழங்குவதற்கு ஒருவர் அவசியம். அந்த வகிபாகத்தையே சர்வதேச நாணய நிதியம் வகிக்கின்றது. நாம் 16 தடவை இந்த வைத்தியரிடம் சென்றுள்ளோம். ஆனால், மருந்து எடுத்து ஓரளவுக்குக் குணமடைந்ததும் சுகவீனத்தை முழுமையாக மறந்து விடுவதையே நாம் கடந்த காலத்தில் செய்துள்ளோம். பின்னர் இரண்டு மூன்று வருடங்களில் திரும்பவும் அதே நிலைமை ஏற்படுகின்றது.

இதனைப் போலவே, பொருளாதார ரீதியில் நெருக்கடியான நிலைக்கு முகங்கொடுக்கின்ற நாடுகளில் இடம்பெறுகின்றது. முதல் ஒரு வருடத்தில் எமது நாட்டில் இந்த நிலைமை ஏற்பட்டமைக்கான காரணங்களை ஆராய்ந்து எமது கடன் சுமை அதிகம், வருமானம் குறைவு, ஊழல் மோசடிகள் குறைக்கப்பட வேண்டும் போன்ற விடயங்களை எமக்கு எடுத்துக் கூறினார்கள். அவர்கள் முன்வைத்த விடயங்கள் யாவும் நல்ல விடயங்கள். எனினும், வழமையான பழக்கத்திற்கு அமைய எதிரான கருத்துக்களையே அதிகமானவர்கள் முன்வைக்கின்றனர். சிலர் வெளிநாட்டு சதி, அமெரிக்க எதிர்ப்பு எனப் பல்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

உண்மையில் சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் பிழையான நிலைப்பாடொன்றையே உருவாக்கியுள்ளனர். அவர்களின் குற்றச்சாட்டுக்களைப் பார்த்தால் அதில் எவ்வித உண்மையும் இல்லையென்பது தெளிவாகின்றது. வீழ்ச்சியடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஒன்றுடன் ஒன்று இணைந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதையே சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்துகின்றது. இது வழங்கும் சான்றிதழைப் பொறுத்தே ஏனைய நாடுகளும் எமக்கு உதவி செய்ய முன்வரும் என்பதே யதார்த்தம்.

**கே: இந்தப் பயணத்துக்கு நாடு என்ற ரீதியில் மக்கள் எவ்வாறு முகங்கொடுக்க வேண்டும்?**

பதில்: கோஷங்களின் அடிப்படையில் வாழ்ந்த காலத்தை நாங்கள் மறக்க வேண்டும். உள்மனதில் இருக்கும் உணர்ச்சியின் அடிப்படையில் செயற்படுவதை விடுத்து, நடைமுறைச் சாத்தியமான விடயங்களின் அடிப்படையில் எவ்வாறு முகங்கொடுப்பது என்பதைச் சிந்திக்க வேண்டும். உதாரணமாக சீனாவை எடுத்துக் கொண்டால், ஆரம்பத்தில் கடும்போக்கான, இடதுசாரிக் கொள்கையை முன்னெடுத்துச் சென்றது. எனினும், தொடர்ந்தும் இந்தக் கொள்கையில் இருக்க முடியாது என்பதை 70களில் புரிந்து கொண்ட சீனா, தனது கொள்கையை நடைமுறைச் சாத்தியமான முறையில் மாற்றிக் கொண்டது. அந்நாடு தற்போது அடைந்துள்ள வெற்றிக்கு இதுவே காரணமாகும். நடைமுறையீதியில் களத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்களை ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டு சாத்தியமான விடயங்களைப் பின்பற்ற வேண்டும். மீண்டும் வீழ்ச்சியடையாத நாட்டை உருவாக்குவதற்கு அனைவரும் நடைமுறையான களத்தில் வாழவேண்டும்.

**கே: நாடு வீழ்ச்சியுற்றிருந்த நிலையில் வெளிநாடுகளின் ஒத்துழைப்பும் இழக்கப்பட்டது. இவ்வாறான நிலையில் வெளிநாடுகளுக்குச் சென்று நிலைமைகளை விளக்கி அவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு நீங்கள் கடுமையான முயற்சிகளை எடுத்திருந்தீர்கள். அந்தக் காலகட்டத்தில் எவ்வாறான நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தீர்கள் என்பதை நாட்டு மக்களுக்குக் கூற முடியுமா?**

பதில்: எமக்கு 20 இற்கும் மேற்பட்ட நாடுகள் கடன் உதவி வழங்கியிருந்தன. முதலில் நாம் சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றபோது, அவர்கள் தேசிய ரீதியில் முகாமைத்துவம் வேண்டிய சில செயற்பாடுகளை எமக்குச் சுட்டிக்காட்டியிருந்தனர். உதாரணமாகக் கூறுவதாயின், முன்னர் நாம் பெற்றோல் லீட்டர் ஒன்றை 168 ரூபாவுக்கு வழங்கியபோது, அதற்கான செலவு சுமார் 400 ரூபாவுக்கும் அதிகம். இந்தச் செலவைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமே ஏற்றுக் கொண்டது. இது திறைசேரிக்கும் நாட்டுக்கும் சுமை. இதனால் ஏற்படுகின்ற வேறுபாடு வரி செலுத்தும் மக்களுக்கே சுமையாக இருந்தது. இதுபோன்ற நடவடிக்கைகளை நிறுத்துமாறு சர்வதேச நாணயநிதியம் எமக்குச் சுட்டிக்காட்டியது. நாமும் அதனைச் செய்தோம். இதனைச் செய்யாதிருப்பின் அரசாங்கத்துக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடுசெய்ய மீண்டும் மீண்டும் மக்கள் மீதே வரிச்சுமையை அதிகரிக்க வேண்டியிருக்கும். அத்துடன், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட, கஷ்டப்பட்ட மக்களையும் பாதுகாக்க வேண்டும். அதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அது மாத்திரமன்றி எமக்குக் கடன் வழங்கிய நாடுகளுடன் கலந்துரையாடல்களை நடத்தி சர்வதேச கடன் மறுசீரமைப்புக்கு அவர்களின் இணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டியிருந்தது. சகல நாடுகளுடன் கலந்துரையாடி இதற்கான நடவடிக்கை எடுக்க முடிந்தது.

**கே: நாம் அதிகாரத்துக்கு வந்தால் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை மாற்றியமைப்போம் என ஏனைய அரசியல் கட்சிகள் மேடைகளில் கூறி வருகின்றன. இது பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்: இது நடைமுறைச் சாத்தியமற்றது என்றே நான் கருதுகின்றேன். சர்வதேச நாணய நிதியம் எமது நாடு தொடர்பில் முழுமையான ஆய்வொன்றை மேற்கொண்டு வருமானம் எவ்வளவாக இருக்க வேண்டும், படுகடன் எல்லை எவ்வாறு இருக்க வேண்டும் போன்ற வழிகாட்டலொன்றை வழங்கியது. இதில் மாற்றங்களைச் செய்வதாயின் செலவுகள் குறைக்கப்பட வேண்டும். அதனை எவ்வாறு செய்வது என்பது தொடர்பில் தெளிவான நிலைப்பாடொன்று அவசியம். உதாரணமாக வரியைக் குறைப்பதாயின் ஏதாவது ஒன்றுக்கான செலவைக் குறைக்க வேண்டும். அதனை சரியான முகாமைத்துவத்துடன் செய்வதே அவசியமானது. எனவே அவர்கள் அவ்வாறு கூறுவது முழுமையான பொய். புதிதாகக் கலந்துரையாடுவதாயின் அதுவரையான காலப்பகுதியில் கடன் வழங்க மாட்டோம் என்பதை சர்வதேச நாணய நிதியம் தெளிவாகக் கூறியுள்ளது. வாக்குகளைப் பெறுவதற்காகப் பொய் கூறி மக்களை ஏமாற்ற வேண்டாம். 70 வருடங்களாகப் பொய் கூறி செய்த அரசியலும் அதனால் மக்கள் எதிர்கொண்டுள்ள மோசமான நிலைமைகளும் போதும். வாக்குகளைப் பெறுவதாயின் உண்மையைக் கூறி வாக்குகளைக் கோருங்கள்.

**கே: அரசியல்வாதிகள் தர்க்கரீதியான விவாதங்களை முன்னெடுக்கக் கூடிய அரசியல் கலாசாரமொன்றுக்கு வர வேண்டும் என்ற அழுத்தத்தை மக்கள் கொடுத்துள்ளனர். இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: இது முக்கியமானதொரு விடயம். சமூக சேவையொன்றுக்குச் செல்வதாயின் நாட்டை முன்கொண்டு செல்வதற்கான அர்ப்பணிப்பு எந்நேரமும் இருக்க வேண்டும். நாட்டுக்கு முன்னுரிமை கொடுத்து அதற்கு அமைய தனிப்பட்ட விடயங்களை மாற்றிக் கொண்டதான் காரணமாகவே பல்வேறு உலக நாடுகள் வளர்ச்சியடைந்துள்ளன. எனினும், இலங்கையில் நடைபெறுவது என்னவென்றால், நாட்டுக்கு முன்னுரிமை அளிப்பதை விடுத்து தமது முன்னுரிமைக்கு ஏற்ற வகையில் நாட்டைக் கொண்டுசெல்லும் அரசியலையே பெரும்பாலானவர்கள் முன்னெடுக்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு நாட்டுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். இனத்தை, மதத்தைப் பயன்படுத்துவது போன்று தமக்கு ஏற்ற விடயத்தைப் பயன்படுத்தி நாட்டை அதன் பின்னால் கொண்டு செல்கின்றனர்.



**வாக்குகளைப் பெறுவதற்காகப் பொய் கூறி மக்களை ஏமாற்றாதீர்கள்! உண்மையைக் கூறி வாக்குகளைக் கோருங்கள்!**

---

# இந்தியாவுடன் நெருக்கம் பேணுவதை தவிர்க்கும் சில அயல்நாடுகள்!



**சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு நரேந்திர மோடி முதன்முறையாக இந்தியப் பிரதமராகப் பதவியேற்ற போது, அவர் பல அண்டை நாடுகளின் அரசு அல்லது நாட்டின் தலைவர்களை பதவியேற்பு விழாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்து அனைவரையும் ஆச்சரியப்படுத்தினார்.**

இந்த விழாவில் பங்கேற்க பாகிஸ்தான் பிரதமருக்கும் அன்று அழைப்பு விடுக்கப்பட்டது. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் அண்டை நாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்று பதவியேற்ற முதல் நாளிலிருந்தே மோடி அரசு கூறி வருகிறது.

இந்தக் கொள்கையானது அதிகாரபூர்வமாக 'அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை' என்ற பெயரில் அறியப்படுகிறது. நரேந்திர மோடி அரசின் வெளியுறவுக் கொள்கையின் அடிப்படை இதுதான் என்று மத்திய அமைச்சர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் கடந்த பத்தாண்டுகளாக திரும்பத் திரும்ப கூறி வருகின்றனர்.

ஆனால் வாய்வார்த்தையில் இதைச் சொல்வது வேறு விஷயம். ஆனால் நரேந்திர மோடி அரசின் செயல்பாட்டில் இது உண்மையிலேயே பிரதிபலிக்கின்றதா?

டெல்லி பெரும்பாலும் மேற்கத்தேய நாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது என்று நம்பத் தோன்றுகிறது. இந்தியா மறுபுறத்தில் சீனாவைப் பற்றியும் அதிகம் சிந்திக்கிறது.

பிரதமர் நரேந்திர மோடி நேபாளம் (ஓகஸ்ட், 2014), இலங்கை (மார்ச், 2015) மற்றும் வங்கதேசம் (ஜுன், 2015) ஆகிய நாடுகளுக்கு மேற்கொண்ட முதல் பயணத்தின் போது அவருக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. மக்கள் பெருமளவு ஆர்வத்துடன் அதில் கலந்து கொண்டனர். ஆனால் அந்த நிலை இப்போது நீடிப்பதுபோல காணப்படவில்லை. பாகிஸ்தானுடனான உறவிலும் முன்னேற்றம் ஏற்பட்டதற்கான அறிகுறிகள் தென்படவில்லை.

நேபாளத்தில் புதிய அரசியலமைப்புச் சட்டம் அமுலாக்கத்தின் போது இந்தியாவின் மறைமுக ஆதரவுடன் நடத்தப்பட்ட 'பொருளாதார முடக்கத்திற்கு' எதிராக நேபாள மக்கள் இந்திய எதிர்ப்பு போராட்டங்களில் இணைந்தனர். தற்போது நேபாளத்தில் ஆட்சியில் இருக்கும் கே.பி. ஷர்மா ஒலி, ஒரு தீவிர இந்திய எதிர்ப்பாளர் என்று கருதப்படுகிறார்.

மாலைதீவிலும் கடந்த ஆண்டு நடந்த தேர்தலில் இந்திய ஆதரவு அரசை ஆட்சியில் இருந்து அகற்றி அதிபரான முகமது முய்சு, இந்திய இராணுவ வீரர்கள் தனது நாட்டிலிருந்து உடனடியாக திரும்பப் பெறப்பட வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பினார்.

அவரது கட்சியால் தொடங்கப்பட்ட 'இந்தியா வெளியேறு' பிரசாரம் அதிக ஆதரவைப் பெற்றது. மேலும் அதிபர் முய்சு எந்த தயக்கமும் இல்லாமல் சீனாவின் பக்கம் சாய்ந்தார்.

ஏறக்குறைய அனைத்து விஷயங்களிலும் இந்தியாவைச் சார்ந்து இருக்கும் பூட்டான் கூட சீனாவுடன் எல்லைப் பேச்சுவார்த்தைகளை தானே தொடங்கி விட்டது. தூதரக உறவுகளை ஏற்படுத்தும் சீனாவின் முன்மொழிவையும் நேரடியாக அது நிராகரிக்கவில்லை.

அதேசமயம் ஆப்கானிஸ்தான் மற்றும் மியன்மாரில் ஆளும் அரசுகளுடன் இந்தியாவுக்கு நல்லுறவு உள்ளது என்றும் கூற முடியாது. தலிபான்களுடன் இந்தியா முழுமையான தூதரக ரீதியிலான உறவை இன்னும் ஏற்படுத்தவில்லை.

இந்த இரு நாடுகளிலும் பல்வேறு துறைகளில் இந்தியா செய்துள்ள பல நூறு கோடி ரூபா மதிப்புள்ள முதலீடுகள் இப்போது நிச்சயமற்ற சூழலில் சிக்கித் தவிக்கின்றன.

இந்தப் பட்டியலில் சமீபத்தில் சேர்ந்துள்ள பெயர் பங்களாதேஷ். இந்தியாவின் நெருங்கிய நண்பராக விளங்கிய, கடந்த ஒன்றரை தசாப்தங்களாக அங்கு ஆட்சியில் இருந்த அரசு ஒரே இரவில் அதிகாரத்தை விட்டு வெளியேற வேண்டியிருந்தது.

'இந்தியாவின் நண்பர்கள்' என்று சொல்ல முடியாத சில சக்திகள் இப்போது அங்கு ஆட்சிக்குள் வந்துள்ளன. இது தவிர சுமார் மூன்றரை ஆண்டுகளுக்கு முன்பு




## வெளியுறவுக் கொள்கை ஏற்புடையதாக இல்லையா!

நரேந்திர மோடியின் வங்கதேசப் பயணத்தின்போது அவருக்கு எதிரான போராட்டங்களும் வன்முறைகளும் உச்சத்தில் இருந்தன. வங்கதேசத்தில் சமீபத்திய இடஒதுக்கீடு எதிர்ப்பு இயக்கங்களும் வலுவான இந்திய எதிர்ப்பு உணர்வுகளை உள்ளடக்கியதாக இருந்தன.

ஒன்றன்பின் ஒன்றாக அண்டை நாடுகளில் இந்தியாவுக்கு எதிரான உணர்வுகள் தலைதூக்கும் இந்தச் சூழலில், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் சில கடுமையான குறைபாடுகள் உள்ளதா அல்லது தெற்காசியாவின் புவிசார் அரசியல் கட்டமைப்பு காரணமாக இந்தியாவின் இந்த தலைவிதி ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதா என்ற கேள்விகள் எழுகின்றன.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையைப் பகுப்பாய்வு செய்தால் மாலைதீவு, இலங்கை அல்லது நேபாளம் போன்ற எந்த அண்டை நாடுகளுடனும் நீண்டகால உறவுகளை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கொள்கையை இந்தியா ஒருபோதும் முன்னோக்கி நகர்த்தவில்லை என்பது உண்மை.

அண்டை நாடுகளின் குறுகிய கால நலன்களை மனதில் கொண்டு இந்தியா எப்போதும் நகர்ந்து வருகிறது. நீண்டகால நலன்களைப் பற்றி ஒருபோதும் சிந்தித்ததில்லை. ஒன்றன்பின் ஒன்றாக பல நாடுகளில் அதன் விளைவுகளை இந்தியா சந்தித்து வருகிறது.

இத்தகைய சூழ்நிலையில் தெற்காசியாவின் சிறிய நாடுகள் இந்தியாவை ஒரு பிராந்திய மேலாதிக்க சக்தியாகப் பார்க்கின்றன.

நரேந்திர மோடி அரசு ஆட்சிக்கு வந்த உடனேயே அறிவித்த 'அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை' என்ற கொள்கையில் தொடக்கத்திலேயே குறைபாடுகள் இருந்தன.

வங்கதேசத்தின் தற்போதைய நிலைமையை எடுத்துக் கொண்டால் அங்கும் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் தோல்விக்கான பல காரணங்களைப் பார்க்க முடிகிறது.

உதாரணமாக, பிரதமர் ஷேக் ஹசீனா சரியான பாதையில் செல்லவில்லை என்பதையும், அவர் மீது சாமானிய மக்களின் கோபம் அதிகரித்து வருகிறது என்பதையும் இந்தியா ஒருபோதும் அவரிடம் தெளிவாக எடுத்துக் கூறவில்லை.

அவர் இந்தியாவின் சிறந்த நண்பராக இருக்கும் பட்சத்தில் இதை அவரிடம் தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் இது செய்யப்படவில்லை. இது தவிர உளவுத்துறை தோல்வியும் ஏற்பட்டது.

ஷேக் முஜிபுர் ரஹ்மான் படுகொலை செய்யப்படுவதற்கு முன்பு இந்திரா காந்தியின் அரசியல் செயலாளர் பிஎன் ஹக்சர், பாதுகாப்பு காரணங்களுக்காக ஹெலிகொப்டர் மூலம் அவரை அங்கிருந்து வெளியேற்ற முன்வந்தார்.

இதற்கு முஜிபுர் ரஹ்மான் தயாராக இருக்கவில்லை என்பது வேறு விஷயம். ஆனால் அவரது உயிருக்கு ஆபத்து இருப்பதை இந்தியா அறிந்திருந்தது.

ஆனால் ஷேக் ஹசீனாவை ஆட்சியில் இருந்து நீக்குவதற்கான அறிகுறி இருப்பது பற்றி இந்தியாவுக்கு எந்தத் தகவலும் இருக்கவில்லை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அதேவேளை தற்போது நேபாளம், ஆப்கானிஸ்தான், மாலைதீவு மற்றும் வங்கதேசம் ஆகிய நான்கு நாடுகளில் இந்திய எதிர்ப்பு அரசுகள் ஒரே நேரத்தில் ஆட்சிக்கு வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு நாடுகளுடனான இந்தியாவின் உறவில் ஏற்ற இறக்கங்கள் உள்ளன. தற்போது மூன்று அல்லது நான்கு நாடுகளுடனான இருதரப்பு உறவுகள் சவாலான கட்டத்திலேயே உள்ளன.

எஸ்.சாரங்கன்...

### வ.ஞானபண்டிதன் 1940 இல் எழுதிய

# 'கதிர்காமத் திருமுருகன் நூலின்' 8 ஆவது பதிப்பு பழனியில் வெளியீடு

பதுளை சமத்துவ சங்கத்தின் ஸ்தாபகர் வ.ஞானபண்டிதன் 1940 ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட 'கதிர்காமத் திருமுருகன்' என்ற நூலின் எட்டாவது பதிப்பு தமிழ் நாட்டில் வெளியிடப்படவுள்ளது.

எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் பழனியில் நடைபெறும் முத்தமிழ் முருகன் சர்வதேச மகா நாட்டிலேயே இந்நூல் வெளியிடப் படவுள்ளது.

பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுதர்சன் செல்லத்துரையின் காத்திரமான அணிந்துரையுடன் கலைஒளி முத்தையாபிள்ளை அறக்கட்டளை சார்பில் எச்.எச். விக்கிரமசிங்க இந்நூலை வெளியிட்டுள்ளார்.




இலங்கையின் இந்துசமய வளர்ச்சிக்கு பெரும் பணியாற்றிய ஜிந்துப்பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி ஆலய அறங்காவலர்களான அமரர்கள் வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை, க.சி. சிவசங்கரன்பிள்ளை, ஏ.எஸ்.எஸ். சோமசுந்தரம்பிள்ளை, ஜி.எஸ். விஸ்வநாதபிள்ளை இன்றும் சமூக சமய பணிகளை ஆற்றிவரும் கே. சௌந்தரராஜன் ஆகியோருக்கு இந்த புனித நூல் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

# ஸ்ரீ ரங்கநாத பெருமாள் கோயில் கொடியேற்றம்

கிளிநொச்சி, வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கோயில் பிரமோற்சவம் நாளை திங்கட்கிழமை (19) காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.


தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று 27ஆம் திகதி தேர் திருவிழாவும் 28ஆம் திகதி தீர்த்தோற்சவமும் அன்றையதினம் இரவு கொடியிறக்கமும் நடைபெறும். 29ஆம் திகதி பூங்காவனமும் அன்றையதினம் இரவு திருக்கல்யாணமும் 30ஆம் திகதி ஆஞ்சநேயர் திருவிழாவும் நடைபெறவுள்ளதாக, மேற்படி கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

திருவி ழாக்கள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 12.00 மணிக்கும் மாலை திருவிழாக்கள் மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி இரவு 9.00 மணிக்கும் நிறைவுறும். தேர், தீர்த்த திருவிழாக்கள் அதிகாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறுமெனவும், நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# பூண்டுலோயா பகுதியில் திடீர் தீ விபத்து 25 தோட்ட குடியிருப்புகள் எரிந்து நாசம்

### நள்ளிரவில் சம்பவம்; 86 பேர் நிர்க்கதி

(ஹற்றன் சுழற்சி, பொகவந்தலாவ நிருபர்கள்)



பூண்டுலோயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீன் பழைய தோட்டமென அழைக்கப்படும் சீன் லோவர் பூண்டுலோயா தோட்டத்தில் நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்து காரணமாக 28 வீடுகள் கொண்ட தொடர் குடியிருப்பில் 25 வீடுகள் எரிந்து நாசமாகியுள்ளன.

இப்பகுதிக்கு பொறுப்பான கிராம அபிவிருத்தி அதிகாரியின் தகவலுக்கமைய பூண்டுலோயா பொலிஸார் இத்தகவலை தெரிவித்தனர்.

இந்த திடீர் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 25 வீடுகளை சேர்ந்த 86 பேர் நிர்க்கதிக்குள்ளாகி தோட்ட ஆலய மண்டபம் மற்றும் உறவினர் வீடுகளில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த திடீர் தீ விபத்து சம்பவத்தினால் அதிர்ச்சிக்குள்ளான இரு வயோதிபர்கள் கொத்மலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் வீடுகளை இழந்துள்ள மூன்று கர்ப்பிணி தாய்மார்கள், உறவினர்கள் வீடுகளில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டனர். சம்பவத்துக்கான காரணம் மற்றும் சேத விவரங்களை கண்டறிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தனர். சம்பவம் இடம்பெற்ற சிறிது நேரத்தில் சீன் தோட்டத்துக்கான மின்சாரம் தடைப்பட்டது. தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இளைஞர்கள் போராடிய போதிலும் பலனளிக்கவில்லை. இதனால் நுவரெலியா மாநகர சபை தீயணைப்பு பிரிவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

தீ பரவலை உணர்ந்த குடியிருப்பாளர்கள் முடிந்தவரை போராடி தமது உடைமைகளை பாதுகாத்துள்ளனர். ஆயினும் பலர் தமது உடைமைகளை இழந்துள்ளனர்.

அத்துடன் இந்த சம்பவத்தை அறிந்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், சம்பவ இடத்துக்கு நள்ளிரவில் சென்று பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிட்டதுடன் உடன் தேவைகளுக்கான வசதிகளும், நிதி உதவியும் செய்து சென்றதாக தோட்ட மக்கள் தெரிவித்தனர்.

### அச்சுறுத்தல் குறித்து மதிப்பீட்டின் பின்

# ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்க ஏற்பாடு



உயிர் அச்சுறுத்தல் இருப்பதாக கருதப்படும் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு அச்சுறுத்தல்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டு வருவதாகவும், மதிப்பீட்டின் பின்னர் பெறப்படும் அறிக்கையின்படி உயிர் அச்சுறுத்தல் உள்ள வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்படுமெனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தேர்தல் காலத்தில் வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை மேற்பார்வையிடுவதற்கு விசேட குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தக் குழு எடுக்கும் தீர்மானங்களுக்கமைய வேட்பாளர்களின் பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் மூலம் அச்சுறுத்தலுக்குள்ளான வேட்பாளர்களின் வீடுகளுக்கும், அவர்கள் வெளியிடங்களுக்கு செல்லும் போது அவர்களுக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்படும். ஜனாதிபதி வேட்பாளர்கள் பங்கேற்கும் அனைத்து கூட்டங்களுக்கும் விசேட பாதுகாப்பை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# எய்ட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

### 50 குழந்தைகள் பாதிப்பு

இலங்கையில் தற்போது எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக விசேட வைத்திய நிபுணரான சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

2018ஆம் ஆண்டில் ஒரு மில்லியன் மக்கள் தொகையில் 0.03 எய்ட்ஸ் நோயாளிகள் கண்டறியப்பட்டாலும், தற்போது அந்த எண்ணிக்கை பத்தில் ஒரு பங்காக அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போது நாடு முழுவதும் சுமார் 3,500 எய்ட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதில் 50 குழந்தைகளும் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அண்மைய தரவுகளில் தெரியவந்துள்ளதாக விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்தார். தற்போது கண்டறியப்பட்ட நோயாளர்களுள் சுமார் 81 வீதமானவர்கள் மருத்துவ சிகிச்சை பெறுவதாகவும், எதிர்காலத்தில் இந்நோய் மேலும் பரவும் அபாயம் உள்ளதால் மக்கள் இது குறித்து விழிப்புணர்வுடன் செயற்படுவது அவசியமெனவும் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ மேலும் தெரிவித்துள்ளார்.

## மக்கள் சிரமப்படும் போது...

கேள்விகளுக்கு தாம் இதுவரை வெற்றிகரமாக பதிலளித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இன்றைய வாய்வீச்சு வீரர்களாக செயற்படும் தலைவர்கள் மக்களின் அவலத்தை அன்று உணர்ந்திருந்தால் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி அந்த பிரச்சினைகளை தீர்த்திருப்பார்கள் என தெரிவித்த ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவருக்கும் எதிர்க்கட்சியிலுள்ள ஏனைய தலைவர்களுக்கும் அதனை ஏற்றுக்கொள்ளும் கடமை இருப்பதாகவும் குறிப்பிட்டார். பொருளாதாரத்தில் நாடு மிகவும் அதளபாதாளத்துக்குச் சென்றுள்ள இவ்வேளையில் சஜித், அநுர உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் எங்கே என்ற கேள்விக்கு பதில் சொல்ல முடியாவிட்டால் தேர்தலில் போட்டியிட அவர்களுக்கு தார்மீக உரிமை இல்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அனுராதபுரம் சல்காது மைதானத்தில் நடைபெற்ற ஜனாதிபதி பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் பெய்த பலத்த மழையையும் பொருட்படுத்தாமல் மக்கள் மைதானத்தில் திரண்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக முன்னாள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவும் இணைந்துகொண்டமை விசேட அம்சமாகும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட பல அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் இந்த பேரணியில் கலந்துகொண்டனர்.

## ஹிருணிகாவுக்கு MP பதவியை...

நியமிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியுடனான பெண்கள் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரின் பாராளுமன்ற ஆசனங்கள் பறிக்கப்பட்டதுடன், ஹரின் பெர்னாண்டோவின் தேசியப்பட்டியல் ஆசனம் தற்போதுவரை வெற்றிடமாகவே உள்ளது.

இதற்கு ஹிருணிகாவை நியமிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி தலைமைக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

### நாட்டில் பெய்துவரும் கடும் மழை

# மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

நாட்டில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக களுத்துறை, மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கையை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்துள்ளது.

நிலம் மற்றும் சுவர்களில் விரிசல் ஏற்படுதல், மரங்கள், வேலிகள் மற்றும் மின்கம்பங்கள் சாய்தல், திடீரென நீரூற்றுகள் தோன்றல், சேற்று நீர் வெளியேறல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் எச்சரிக்கையாக இருக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அனர்த்த முகாமைத்துவ மையத்தின் 117 என்ற இலக்கம் ஊடாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இலங்கைக்கு மேலாக வளிமண்டலத்தின் கீழ் மட்டத்தில் தென்படுகின்ற இடையூறின் காரணமாக நாட்டின் தென்மேற்கு பிராந்தியத்தில் நிலவுகின்ற மழையுடனான வானிலை இன்றும் தொடரக்கூடுமென சிரேஷ்ட வானிலை அதிகாரி கலாநிதி மொஹமட் சாலிஹீன் தெரிவித்தார்.

# கடவுச்சீட்டுகள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

கடவுச்சீட்டு விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது. கடவுச்சீட்டுகள் அச்சிடும் புத்தகங்கள் தீர்ந்து விட்டதால் தினமும் விநியோகிக்கப்படும் கடவுச்சீட்டுகளின் எண்ணிக்கையை 250ஆக மட்டுப்படுத்தியுள்ளதாகவும் அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் திகதி மற்றும் நேரத்தை முன்பதிவு செய்யாமல் வரும் 30 பேருக்கு மட்டுமே கடவுச்சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விமான அனுமதிக்கான இபாஸ் போர்ட் முறையை உருவாக்க முடிவு செய்ததால் இந்த ஆண்டுக்கு தேவையான புத்தகங்கள் வாங்கப்படவில்லை. ஆனால் ஜூலை மாதம் வரவிருந்த இபாஸ்போர்ட் புத்தகங்கள் ஒக்டோபர்வரை தாமதமானதால் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு சொந்தமான கடவுச்சீட்டு புத்தகங்களின் அளவு குறைய ஆரம்பித்தது. இதன் காரணமாக கடவுச்சீட்டு வழங்குவதை இயலுமான வரை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தினமும் சுமார் 1,300 கடவுச்சீட்டுகள் அச்சிடப்பட்டாலும் தற்போது அது 250 முதல் 300வரை குறைந்துள்ளது.

அவசர தேவை இல்லாவிட்டால் ஒக்டோபர் மாதம்வரை கடவுச்சீட்டு விண்ணப்பங்களை அனுப்ப வேண்டாமென குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய அண்மையில் தெரிவித்திருந்தார்.

## SLPP ஜனாதிபதி வேட்பாளர்...

தலைமையில் நடைபெறும் முக்கிய சந்திப்புகளிலும் கலந்துரையாடல்களிலும் அவர் கலந்துகொண்டு விளக்கமளிக்கவுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இன்று மாலை வரலாற்று பிரசித்தி பெற்ற கந்த விகாரைக்கு விஜயம் செய்து வழிபாடுகளிலும் அவர் ஈடுபடுவார்.

## தமிழரசு கட்சியின் ...

தேர்தல்களிலும் தேர்தலுக்கு அண்மித்த காலத்திலேயே எமது நிலைப்பாட்டை அறிவித்தோம். இந்த முறை அது ஒரு வித்தியாசமாக வரவேண்டுமென்ற எந்த தேவையும் கிடையாது. அனைத்து வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கையை எதிர்பார்க்கிறோம். அவர்களின் தேர்தல் அறிக்கையில் முழு நாட்டுக்கும் என்ன கூறியிருக்கிறார்கள் என்பதை அவதானித்து சரியான நேரத்தில் அறிவிப்போம்" எனத் தெரிவித்தார்.

## யாழில் வேட்பாளர் திலித்...

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, கெவிந்து குமாரதுங்க, அனுராத யகம்பத் உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டனர். மௌபிம ஜனதா கட்சியின் தலைவரான திலித் ஜயவீர ஜனாதிபதி தேர்தலில் நட்சத்திர சின்னத்தில் போட்டியிடுகிறார்.

# எங்கள் கருத்து...

## அரசியல் நெறிமுறை தவறும் பிரசாரங்கள்!

போட்டாபோட்டிகள், மறுபுறம் ஆதரவாளர்களுக்கிடையிலான குரோதங்கள் என்றபடி இம்முறை தேர்தல் பரபரப்பாகவே இருக்கப் போகின்றது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் சிலரது பிரசாரப் பேச்சுகள் சர்ச்சைக்குரியவையாக உள்ளன. எதுவித ஆதாரங்களும் இல்லாத உண்மைக்குப் புறம்பான தகவல்களை அவர்கள் மக்கள் முன்பாகச் சென்று கூறுகின்றனர். தமக்கு விரோதமான வேட்பாளர் மீது போலியான குற்றச்சாட்டுகளையும், தவறான தகவல்களையும் அவர்கள் கூறுகின்றனர்.

பொருளாதாரத்தில் அதலபாதாளத்துக்குச் சென்றுள்ள நாட்டை இன்றைய நிலைமைக்கு மீட்டெடுப்பதில் அரசாங்கம் சந்தித்த பல்வேறு சவால்களையும், தடைகளையும், அம்முயற்சியில் அடைந்துள்ள வெற்றியையும் அறிந்தும் அறியாதவர்களாக எதிரணியினர் சிலர் பேசுகின்றனர். சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடியது தவறென்றும், அந்நிதியத்துடனான ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்யப் போவதாகவும் எதிரணியிலுள்ள பலர் பேசுகின்றனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக நாடு பாதாளத்தில் மூழ்கியிருந்த வேளையில், நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்பதற்கு முன்வராமல் ஒதுங்கிக் கொண்டவர்கள், இன்று சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை தவறென்று கூறுகின்றனர்.

இவை போன்றுதான் சாத்தியமற்ற வாக்குறுதிகள் பலவற்றையும் எதிரணியினர் பலர் மக்களிடம் கூறுகின்றனர். உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுகளையும் கூறி வருகின்றனர்.

எதிர்வரும் நாட்களில் தேர்தல் பிரசாரங்கள் மேலும் சூடு பிடிக்கவிருக்கும் நிலையில், இவ்வாறான பல்வேறு ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் மக்கள் மத்தியில் முன்வைக்கப்படுமென்பதில் ஐயமில்லை.

நாட்டின் அரசாங்கத் தலைவரைத் தெரிவு செய்வதற்கான இத்தேர்தலில் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் அரசியல் நெறிமுறைகளைக் கடைப்பிடித்து செயற்படுவது அவசியமாகும். அதேசமயம் உண்மையானதும், போலியானதுமான பிரசாரங்களை வேறுபடுத்தி அறிகின்ற நிதானம் மக்களுக்கு அவசியமாகின்றது.

## தரம் 5 புலமைப்பரிசில்...

தெரிவித்துள்ளார். இதுவரை 323,876 பரீட்சார்த்திகள் இணையவழி முறையின் ஊடாக விண்ணப்பித்துள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தாண்டு கபொ.த. உயர்தர பரீட்சை நவம்பர் மாதம் 25ஆம் திகதி ஆரம்பமாகுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் நவம்பர் மாதம் 25ஆம் திகதி பரீட்சை ஆரம்பமாகி டிசம்பர் மாதம் 20ஆம் திகதி நிறைவடையுமென்று பரீட்சை திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற கல்வி பொதுத் தராதரப் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வெளியிடப்படுமென்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரித்துள்ளார்.

## சஜித்தின் ஐ.ம.சக்திக்குள்...

சக்தியிலிருந்து விலகி ஜனாதிபதியின் கீழ் அரசாங்கத்தின் பயணத்துக்கு ஆதரவளித்ததுடன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகேயும் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து முன்னதாகவே வெளியேறினார்.

இக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் காரணமாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகினார்.

ரிசாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் நான்கு உறுப்பினர்கள் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். அவர்களில் ரிஷாட் பதியுதீன் தவிர்ந்த ஏனைய மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்து இணைந்துகொண்டுள்ளனர்.

இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்த ஏனைய கட்சிகளை சேர்ந்த எம்.பி.க்கள் விலகியதால் அக்கட்சியில் விரிசல் ஏற்பட ஆரம்பித்துள்ளதால் இனி வரும் நாட்களில் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க மற்றொரு பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று ஆலோசித்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

## பொருளாதார ரீதியாக நாட்டை...

நிலைக்கு வந்து விட்டதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். ஆனால் உண்மையில் என்ன நடந்துள்ளது? பலருக்கு வேலைவாய்ப்பு பறி போயுள்ளது. வறுமை தலை தூக்கியுள்ளது. வாழ்வாதாரத்துக்கான வழிகள் இல்லாமல் போயுள்ளன.

சேமிப்புக்கோ முதலீட்டுக்கோ வழிகள் இல்லாமல் மக்கள் பெரும் துன்பத்துக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர். மக்களின் பொருளாதாரத்தை சுருக்கும் பொருளாதாரக் கொள்கைதான் இன்று நாட்டில் பின்பற்றப்படுகிறது. இப்படி செய்தால் இயல்பு நிலையில் நாடு வந்துவிட்டது என்று அறிவிக்கலாம்தானே. நாம் இந்த நிலைமையை மாற்றியமைத்து புதியதொரு நாட்டைதான் மக்களுக்கு வழங்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

## ரணிலுக்கு ஈடான...

ஆதரிப்பதென்ற தீர்மானத்தை அறிவித்த பின்னர் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

“ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்முறை நாட்டுக்காகவே போட்டியிடுகின்றார். கட்சி சார்ந்தோ, குழுவினர் சார்ந்தோ அல்லாமல் சுயாதீன வேட்பாளராகவே களம் இறங்கியுள்ளார். நாட்டை கட்டியெழுப்பக்கூடிய தலைவர் ஜனாதிபதி ரணிலே.

அவருக்கு ஈடான அறிவு, அனுபவம், இயலுமை கொண்ட வேறு தெரிவுகள் இல்லை. எனவே மக்கள் பிரதிநிதி என்ற வகையில் எனது சமூக பொறுப்பை நிறைவேற்றும் வகையில் எக்கட்சியும் சாராது சுயாதீனமாக ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளேன்.

மலையக வரலாற்றில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான ஜனாதிபதி ரணில் தலைமையிலான நல்லாட்சிக் காலம் சிறப்பு மிக்கது. பல சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களை அக்காலப்பகுதியில் மேற்கொள்ள முடிந்தது. அந்த வகையில் மலையக மக்களின் அபிலாஷைகளை பெற்றுக்கொள்வதற்கு ஜனாதிபதி ரணிலே நம்பிக்கைக்குரிய தலைவராக உள்ளார். அவரோடு கைகோர்த்து பயணிப்பதே நாட்டுக்கும், நம் சமூகத்திற்கும் பயன் சேர்க்கும்.

ஜனாதிபதி ரணில் தலைமையிலான நல்லாட்சியில் 7 பேர்ச் காணி ஒதுக்கீட்டுடன் தனி வீட்டு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. மலையகத்தில் புதிய கிராமங்கள் உருவாகின. மலையகத்துக்கான அதிகார சபை உருவாக்கப்பட்டது. உள்ளூராட்சி மன்றங்களின் அபிவிருத்தி செயற்பாட்டுக்குள் மலையக தோட்டங்கள் உள்வாங்கப்பட்டன.

மற்றும் நுவரெலியா மாவட்டத்தின் பிரதேச சபைகளின் அதிகரிப்பு, பிரதேச செயலகங்கள் அதிகரிப்பு முன்னெடுக்கப்பட்டன. இவை அனைத்துக்கும் மேல் சிறந்த பாடசாலை திட்டத்தில் நூற்றுக்கும் அதிகமான மலையக பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. இவற்றுக்கு அங்கீகாரம் அளித்தது ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசாங்கம் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

நாட்டை கட்டியெழுப்ப சரியான ஒரு தலைவரை அடையாளம் காட்ட வேண்டியது எமது கடமை. அதனையே நான் முன்னெடுத்திருக்கிறேன். இது ஒரு கடினமான முயற்சி என்பது எனக்கு தெரியும். ஆனாலும் அந்த சவாலை வெல்வதன் மூலமாக மட்டுமே எதிர்காலமொன்றை பற்றி சிந்தித்து பார்க்க முடியும். அதை விடுத்து அடுத்த தேர்தலில் நாம் எங்கே இருந்தால் வெற்றி பெற முடியும், எம்மை காப்பாற்றிக்கொள்ள முடியும் என்ற குறுகிய எண்ணப்பாட்டுடன் முடிவுகளை எடுத்தால், இரண்டு ஆண்டுகளுக்கு முன் சந்தித்த கியூ யுகத்திற்கே மறுபடியும் செல்ல வேண்டி ஏற்படும்.

தத்தமது எதிர்கால நலனை விட்டு, முழு நாட்டினதும், சமூகத்தினதும் நலனை முன்னிறுத்தும் அனைவரும், கட்சி, நிறங்களை விட்டு நாட்டுக்காக முன்னிற்கும் தலைவரை ஆதரிக்க முன்வர வேண்டும். எமது தாய் நாட்டின் முன்னிருக்கும் சவால்களை வெல்லும் தகைமையுடைய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணிலை ஆதரிப்பது மட்டுமே காலத்தின் கட்டாயமாக உள்ளது” எனத் தெரிவித்துள்ளார்.

# அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தில் புரட்சி செய்த ஒரே தலைவர் ரணில்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இந்த நாட்டின் தீவிர முதலாளித்துவவாதி என்று சிலர் கூறுகின்றனர். சுதந்திரத்திற்குப் பிந்திய காலத்தில், இடது மற்றும் வலது இரண்டும் நாட்டில் வலுவான நிலையைப் பெற்றிருந்தன. இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் முதலாவது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இலங்கை சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி என்.எம்.பெரேரா வகித்தார். நாட்டில் தொழிற்சங்க இயக்கமும் இடதுசாரி அரசியல் கட்சிகளால் வழிநடத்தப்பட்டது. அப்படியிருந்தும், இந்த நாட்டில் அரச ஊழியர்களின் சம்பள மட்டத்தை தற்போதைய நிலைக்கு கொண்டு வருவதற்கு மிகப்பெரிய பங்களிப்பு செய்தது இடதுசாரி இயக்கம் அல்ல, இடதுசாரிகளால் தீவிர முதலாளித்துவவாதி என அழைக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவே அதைச் செய்தார் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்ள வேண்டும்.

2015ஆம் ஆண்டின் முற்பகுதியில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்த நல்லாட்சி அரசாங்கம் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. அரசசேவையில் உள்ள அனைவரின் சம்பளத்தையும் ரூ.10,000 வால் உயர்த்த வேண்டும் என்பது அதன் முன்மொழிவுகளில் ஒன்று. முன்மொழிவுசெயல்படுத்தப்பட்டது.இது இந்த நாட்டின் வரலாற்றில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அதிகூடிய சம்பள அதிகரிப்பாகும்.

ஆனால், சம்பள உயர்வு முதலில் போனஸாகவே வழங்கப்பட்டது. எனவே, அடிப்படை ஊதியத்தின் அடிப்படையில் வழங்கப்படும் பிற கொடுப்பனவுகளில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. 2015 டிசம்பர் 14 அன்று அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை வெளியிட்டார். 2016ஆம் ஆண்டு முதல் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவான ரூ.10,000 அடிப்படை சம்பளத்துடன் பல கட்டங்களாக சேர்க்கப்படும் என அவர் குறிப்பிட்டார். அதன்படி, இது தொடர்பான சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டு, அடுத்த ஐந்தாண்டுகளில் பல கட்டங்களாக அடிப்படை சம்பளத்துடன் ரூ.10,000 சேர்க்கப்பட்டது. இதனால், அரசு ஊழியர்களின் சம்பளம் வெகுவாக உயர்ந்துள்ளது.

ஊதிய மாற்றத்தின் இறுதிக் கட்டம் 2020இல் நிறைவடைந்தது. அரசு ஊழியர்களின் சம்பளம் கடுமையாக உயர்ந்துள்ளது. டிசம்பர் 31, 2015 நிலவரப்படி, அலுவலக உதவியாளரின் அடிப்படைச் சம்பளம் ரூ.11,730. ஜனவரி 01, 2020 அன்று சம்பளம் ரூ.24,250 ஆக உயர்ந்தது. ரணிலின் சம்பள மாற்றத்தில் அலுவலக உதவியாளரின் அடிப்படைச் சம்பளம் ரூ.12,920 ஆல் அதிகரித்திருந்தது. அதேபோல், மற்ற அனைத்து அரசு ஊழியர்களின் அடிப்படை ஊதியமும் அதிகரித்து, அவர்களின் மொத்த ஊதியமும் அதிகரித்தது. சம்பளம் தொடர்பாக ரணில் செய்த முதல் புரட்சி அது.

சம்பள அதிகரிப்புக்கு முன்னர், இலங்கை நிர்வாக சேவையில் புதிதாக நியமிக்கப்பட்ட அதிகாரி ஒருவரின் அடிப்படை சம்பளம் ரூபா 22,935 ஆக இருந்தது. ரணில் விக்கிரமசிங்கவின் சம்பள மாற்றம் காரணமாக, 2020 ஜனவரி 01 அன்று அந்த அதிகாரியின் அடிப்படை சம்பளம் ரூ.47,615 ஆகும். சம்பளம் ரூ.24,680 உயர்ந்திருந்தது. இதன் மூலம், சிறு அரசு ஊழியர்கள் முதல் நிர்வாகம், தொழில்நுட்ப சேவைகள், நிர்வாக சேவைகள் உட்பட அனைத்து அரசு அதிகாரிகளின் சம்பளம் பாதிக்கு

## பின்புலம்

மேல் அதிகரித்துள்ளது. கணிசமான அளவு சேமிப்பைத் தக்க வைத்துக் கொண்டு, முதல்முறையாக தங்கள் செலவினங்களைச் சந்திக்கும் அரச சேவையாளர்களுக்கு இதை ஒரு வாய்ப்பாகவும் கூறலாம்.

அரசு ஊழியர் வருமானத்தில் இருந்து மாதாந்த செலவுகளை மட்டுமே சமாளிக்கக்கூடிய வாழ்க்கைத் தரத்திலிருந்து செலவு + சேமிப்பு என்ற நிலைக்குச் சென்றார்கள். ரணிலின் முதல் சம்பள உயர்வில் அரச உத்தியோகத்தர்களின் வாழ்க்கை அந்த வகையிலேயே மாற்றமடைந்தது.

இவ்வருடம் ஜனாதிபதி தேர்தல் நெருங்கி வரும் நிலையில் அரச சேவையில் உள்ள பல்வேறு சேவைகளின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிக்கும் நோக்கில் தொழில்சார் போராட்டங்களும் வேலை நிறுத்தங்களும் முன்னெடுக்கப்பட்டன. தேர்தல் நெருங்கும் போது இலங்கையில் இது ஒரு பொதுவான நிலை. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்சமயம் சம்பளத்தை அதிகரிப்பதற்கு பணம் இல்லை எனவும் ஒவ்வொரு அரச நிறுவனத்துக்கும் விசேட கொள்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெளிவாக கூறினார்.

எனவே, 2024 மே 27 அன்று நடைபெற்ற அமைச்சரவையில், அனைத்து அரச சேவைகளிலும் நிலவும் ஊதிய முரண்பாடுகளை மறுஆய்வு செய்யவும், அவற்றைத் தீர்ப்பதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்கவும் ஒரு நிபுணர் குழுவை நியமிக்க முடிவு செய்யப்பட்டது. மேற்படி குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய, 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஆவணத்தின் ஊடாக அரசாங்க ஊழியர் சம்பள அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. நிபுணர் குழுவின் தலைவராக மூத்த நிர்வாக அதிகாரி உதய செனவிரத்னவும், குழுவின் செயலாளராக ஜனாதிபதியின் மேலதிக செயலாளரான அனுபவமிக்க நிர்வாக அதிகாரி வெர்னான் பெர்னாண்டோவும் நியமிக்கப்பட்டனர்.

வழமை போன்று அரச ஊழியர்களின் போராட்டங்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கு குழுக்களை நியமிக்கும் நடவடிக்கை இம்முறையும் இடம்பெற்றுள்ளதாக பலரும் கருதினர். தீர்வுகளை வழங்குவதை விட தீர்வுகளை ஒத்திவைப்பதற்கான ஒரு நடவடிக்கையாக இது பலரால் கருதப்படுகிறது. இருந்தபோதிலும் முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் உதய செனவிரத்ன தலைமையிலான குழு, இரண்டரை மாதங்களுக்குள் தனது அறிக்கையை சமர்ப்பித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடிய அமைச்சரவை இந்த பிரேரணையை ஏற்றுக்கொண்டதுடன், 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் ஊடாக அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பரிந்துரைகள் ஜனவரி 01, 2025 முதல் செயல்படுத்தப்படும். அதற்கிணங்க, இலங்கையின் தீவிர முதலாளித்துவம், இரண்டாவது முறையாக நாட்டின் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான மாற்றத்திற்கு வழி வகுத்துள்ளது. நடைமுறைப்படுத்தப்படவுள்ள சம்பள திருத்தத்தின் பிரகாரம், அனைத்து வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகளுக்குமாக அரச ஊழியர்களுக்கு ரூபா 25,000 வழங்கப்படும். அதே நேரத்தில், அடிப்படை சம்பளம் 24% முதல் 35% வரை உயர்த்தப்படும். அதன்படி தற்போது ரூ.24,250 அடிப்படை சம்பளம் பெறும் ஊழியரின் அடிப்படை சம்பளம் ரூ.30,000 ஆக உயரும். அதனுடன் வாழ்க்கைச் செலவு ரூ.25,000ஐச் சேர்க்கும்போது, அரசு ஊழியரின் மொத்த மிகக் குறைந்த சம்பளம் ரூ.55,000 ஆக உயர்கிறது. அந்த வகையில் அனைத்து அரசு ஊழியர்களின் சம்பளமும் 24% முதல் 35% வரை உயரும். அரச ஊழியர்களின் சம்பளம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஒரு மாபெரும் மாற்ற த்தை ஏற்படுத்தியுள்ளார் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

மேற்கண்ட குழு அரசு ஊழியர்களுக்கு ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டுள்ளதாக தெரிகிறது. 2020ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு அவர்களுக்குரிய சம்பள உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன, அவர்களின் ஓய்வூதியம் திருத்தப்பட்டுள்ளது. மற்றும் அது தொடர்பான முரண்பாடுகள் தீர்க்கப்பட்டுள்ளன. கூடுதலாக, ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு, 2025 ஜனவரி முதல் பணியில் உள்ள அரசு அதிகாரிகளுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவின் 50%க்கு சமமாக இருக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட சம்பள அதிகரிப்பு முன்மொழிவுகளின்படி, மிகக் குறைந்த சம்பளம் பெறும் அரச உத்தியோகத்தரின் சம்பளம் ரூபா 11,750 லிருந்து 24,250 ஆக அதிகரிக்கப்பட்டது. இந்த ஆண்டு முன்மொழிவுகளின்படி, 2025 ஜனவரி முதலாம் திகதி சம்பளம் ரூ.55,000 ஆக உயரும்.

அனைத்து அரச ஊழியர்களும் காப்புறுதி திட்டத்தில் சேர்க்கப்படுவார்கள். இதன்மூலம், அரசுப் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் ஊதியத்தில் உள்ள ஏற்றத் தாழ்வை நீக்குவதோடு, குறைந்த ஊதியம் பெறும் அரசு ஊழியரின் சம்பளம் ரூ.55,000ஆக உயரும் அதே வேளையில் அனைத்து அரசு ஊழியர்களின் சம்பளம் 24% முதல் 30% வரை உயரும்.

மக்கள் நேசன்


# உரம் விற்பனைக்கு உள்ளது

கினிகத்தேனவில் பெரிய அளவிலான உரம் விற்பனைக்கு உள்ளது.

இதில், நைட்ரஜன் மற்றும் மண்ணை செறிவூட்டும் ஊட்டச்சத்துக்கள் மிக அதிகமாக உள்ளது.

இது அனைத்து வகையான காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்களுக்கும் ஏற்றது.

25kg 40kg

பொதிகளில் வாங்கலாம்.

வாங்குவதற்கு அழைக்கவும்

076 620 8992/076 100 7687

# இலங்கை வரலாற்றில் முதன்முறையாக அதிக எண்ணிக்கையானோர் களத்தில்!



**இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிப்பதற்காக எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் 39 பேர் போட்டியிடுகின்றனர்.**

1977ஆம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பின் பின்னர் நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தல்களில் அதிக எண்ணிக்கையான வேட்பாளர்கள் போட்டியிடும் ஜனாதிபதித் தேர்தலாக இத்தேர்தல் அமைகின்றது.

பொருளாதார நெருக்கடி மற்றும் அதனைத் தொடர்ந்ததான மக்கள் போராட்டம் எனப் பல்வேறு சவால்களை எதிர்கொண்ட நாட்டில் மாற்றத்துக்கான கோரிக்கை வலுப்பெற்றுள்ள நிலையில் நடைபெறும் முதலாவது தேர்தல் என்பதால் இதன் மீது அனைவரினதும் கவனம் திரும்பியுள்ளது.

2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக 40 பேர் கட்டுப்பணம் செலுத்தியிருந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை 39 பேர் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். தாக்கல் செய்யப்பட்ட அனைத்து வேட்புமனுக்களையும் தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்றுக் கொண்டது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளின் சார்பில் 22 வேட்பாளர்களும், சுயேச்சையாக 17 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர். இதில் ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்டவர்கள் மற்றும் முதல் தடவையாகப் போட்டியிடுகின்றவர்கள் எனப் பலரும் காணப்படுவதுடன், முன்னாள் ஜனாதிபதிகளின் புதல்வர்கள் இருவர் போட்டியிடுகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் புதல்வரான சஜித் பிரேமதாச மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரான நாமல் ராஜபக்ஷ ஆகியோரே அவர்களாவர்.

வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த 39 பேரில் ஒருவரை இந்நாட்டில் ஜனாதிபதியாகத் தேர்வு செய்வதற்கு 17.1 மில்லியன் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 10 இலட்சம் பேர், அதாவது ஒரு மில்லியன் பேர் முதன் முறையாக வாக்களிக்கவுள்ள புதிய வாக்காளர்களாவர்.

2019 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் பின்னர் நடைபெறும் இத்தேர்தலில் 10 இலட்சம் பேர் புதிய வாக்காளர்களாக இணைந்திருப்பதாகத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்படக் கூடிய தேர்தலில் எந்த வேட்பாளர் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறுகின்றாரோ அவரே ஜனாதிபதியாக முடியும் என்பது அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயமாகும்.

இவ்வாறான நிலையில் அதிக எண்ணிக்கையிலான வேட்பாளர்கள் இம்முறை போட்டியிடுவதால் எந்தவொரு வேட்பாளருக்கும் அந்த இலக்கை எட்ட முடியாமல் போகலாம் என்றதொரு கணிப்பும் பொதுவாகக் காணப்படுகின்றது. அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுமாயின் இரண்டாவது விருப்பு வாக்கு எண்ணப்பட வேண்டிய தேவை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஏற்படலாம். அவ்வாறு இரண்டாவது விருப்பு வாக்கு எண்ணும் நிலைமை ஏற்பட்டால், அது இலங்கைக்குப் புதியதொரு அனுபவமாக அமையும் என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாக உள்ளது.

கடந்த வியாழக்கிழமை வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதும் வேட்பாளர்களுக்கான சின்னங்களையும் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு கட்சியின் சின்னம் வழங்கப்பட்டிருக்கும் அதேநேரம், சுயேச்சையாகப் போட்டியிடும் வேட்பாளர்களுக்குத் தேர்தல்கள் ஆணைக்குழு சின்னங்களை வழங்கியது.

இந்த வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுவதால் அவருக்கான சின்னத்தை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்தது. இந்த அடிப்படையில் ஜனாதிபதிக்கு காஸ் சிலிண்டர் சின்னம் கிடைத்துள்ளது. வேட்புமனுக்கள் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேர்தல் பிரசாரங்களும் தீவிரப்படுத்தியுள்ளனர் வேட்பாளர்கள்.







ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் அறிவிப்பதற்கு நீண்ட நாட்களுக்கு முன்னரே பிரசாரங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும், இவை தற்பொழுது தீவிரப்படுத்தப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இம்முறை போட்டியிடுபவர்களில் பிரதான வேட்பாளர்களாக நால்வரை அடையாளம் காண முடியும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரே அவர்களாவர்.




## 39 வேட்பாளர்கள் போட்டியிடுவதால் வாக்குகள் சிதறுண்டு போகலாமென ஊகம்!

இவர்கள் தவிர மேலும் இரு பாராளுமன்ற உறுப்பினர்களான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஆகிய இருவரும் இந்தத் தேர்தல் போட்டியில் இருப்பதுடன், இரு தமிழ் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன் மற்றும் மயில்வாகனம் திலகராஜ் ஆகியோரும் போட்டியிடுகின்றனர். அவற்றுக்கும் அப்பால் இரு பௌத்த பிக்குமாரும் இதில் இணைந்துள்ளனர்.

அத்துடன், இதற்கு முன்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் வழமையாகப் போட்டியிடும் வேட்பாளர்களான ஸ்ரீதுங்க ஜயசூரிய, ஏ.எஸ். பி.லியனகே, சரத் மனமேந்திர போன்றவர்கள் இம்முறையும் போட்டியில் குதித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களில் மற்றுமொரு குறிப்பிடத்தக்க நபராக தொழிலதிபரும், ஊடக வலையமைப்பின் முன்னாள் தலைவருமான திலித் ஜயவீரவைச் சுட்டிக்காட்ட முடியும்.

தமிழ் பொது வேட்பாளராக பா.அரியநேத்திரன் சுயேச்சையாகக் களமிறங்கியுள்ளார். இவ்வாறு பல்வேறு தரப்பினர் இம்முறை போட்டியிடுவதால் வாக்குகள் சிதறுவதற்கான சந்தர்ப்பங்கள் இருப்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இருந்தபோதும், பாரிய மாற்றமொன்றைக் கோரி மக்கள் போராட்டங்களை முன்னெடுத்த பின்னர் நடத்தப்படும் தேர்தல் என்பதால் மக்களைத் தம்பக்கம் ஈர்த்துக் கொள்வதற்கு அனைத்து வேட்பாளர்களும் முயற்சிக்கின்றனர். பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டவர் ஜனாதிபதி என்பதால் அவருக்கு மக்களின் ஆதரவு கிடைக்கும் என்பது அவரது ஆதரவாளர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

இலங்கையில் காணப்பட்ட காஸ் சிலிண்டருக்கான மக்கள் வரிசையைப் போக்கிய தலைவருக்குத் தற்பொழுது கிடைத்துள்ள சின்னமும் காஸ் சிலிண்டர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவற்றுக்கெல்லாம் அப்பால் கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில், ஜே.வி.பி தரப்புக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு சற்று அதிகரித்திருப்பதாக ஊடகங்களின் அறிக்கையிடல்களில் அறியக் கிடைக்கின்றது.

'ஊழலை ஒழிப்போம், இழந்த சொத்துக்களை மீட்போம்' என்ற தொனிப்பொருளில் அவர்களின் பிரசாரங்கள் அமைகின்றன. இதுபோன்று ஒவ்வொரு வேட்பாளரும் தமது தேர்தல் பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளனர். எதிர்வரும் நாட்களில் ஒருவர் மீது ஒருவர் வசைபாடுவது, சேறு பூசுவது மக்களைக் குறைசொல்வது போன்று இன்னோரன்ன அரசியல் விளையாட்டுக்களைப் பார்க்க முடியும்.

**பி.ஹர்ஷன்...**

# காஸா மக்கள் எதிர்கொள்ளும் மற்றொரு பேராபத்து போலியோ!



**மத்திய தரைக்கடலுக்கு அருகிலுள்ள பலஸ்தீனின் காஸா மீது கடந்த பத்து மாதங்களாக இஸ்ரேல் யுத்தத்தை முன்னெடுத்து வருகிறது. கடல், ஆகாயம், தரையென அனைத்தும் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் தொடராக முன்னெடுக்கப்படும் இப்போரினால் 23 இலட்சம் மக்களைக் கொண்ட காஸா பெரும் துன்பங்களுக்கும் இழப்புக்களுக்கும் முகம்கொடுத்துள்ளது. இற்றைவரை 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காஸா மக்களை காவுகொண்டுள்ள இப்போரினால் 92 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். அம்மக்கள் பேரவலங்களுக்கு முகம்கொடுத்துள்ளனர். இடம்பெயர்தலும் சனநெரிசல் மிக்க கூடாரங்களில் தங்குவதுமாக அவர்களது துன்பம் தொடருகின்றது.**

## உலகளாவிய அச்சுறுத்தலாக உருவெடுக்கலாமென விஞ்ஞானிகள் அச்சம்

இப்போரினால் காஸாவின் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் அழிவடைந்தும் சேதமடைந்துமுள்ளன. அடிப்படை சுகாதார வசதிகள், கழிவுநீரகற்றல் கட்டமைப்புகள் மற்றும் மனிதக் கழிவகற்றல் நடவடிக்கைகள் அனைத்தும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. யுத்தம் தொடராக முன்னெடுக்கப்படுவதால் அவற்றை திருத்தி மீளமைக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது. கட்டட இடிபாடுகள், மனிதக் கழிவுகள் அடங்கலான திண்மக்கழிவுகள், கழிவுநீர் என்பன காஸா எங்கும் நிறைந்து காணப்படுகின்றன. அவற்றை முறையாக அகற்ற முடியாத நிலையை இப்போர் ஏற்படுத்தியுள்ளது. ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் மதிப்பீட்டின்படி, 40 மில்லியன் தொன் திண்மக்கழிவுகளும் கட்டட இடிபாடுகளும் காஸாவில் காணப்படுகின்றன.

யுத்தம் தொடர்வதால் தூயகுடிநீரைப் பெற்றுக்கொள்வதிலும், தனிப்பட்ட சுகாதாரத்தைப் பேணிக்கொள்வதிலும் கடும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ள காஸா மக்கள், கழிவுநீரகற்றும் கட்டமைப்புக்கள் சேதமடைந்துள்ளமையாலும், திண்மக் கழிவுகள் முறையாக அகற்றப்படாமையாலும் பலவிதமான சுகாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துள்ளனர்.

உலக சுகாதார ஸ்தாபனமும் யுனிசெப் நிறுவனமும் காஸாவில் தொற்று நோய்களும் தொற்றா நோய்களும் தலைதூக்கக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுவதாக கடந்த வருடம் டிசம்பர் முதல் முன்னெச்சரிக்கை விடுத்துவருவதோடு, அந்நோய்களைத் தவிர்த்துக் கட்டுப்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்துமாறும் வலியுறுத்துகின்றன.

### கழிவுநீரில் போலியோ வைரஸ்:

இவ்வாறான சூழலில் கடந்த ஜுன் பிற்பகுதியில் காஸா சுகாதார அமைச்சு, ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்துடன் ஒருங்கிணைந்து இடம்பெயர்ந்துள்ளவர்கள் தங்கியுள்ள கூடாரங்களுக்கு இடையே காணப்படும் நீரிலும் ஒடும் நீரிலும் சேகரித்த நீர் மாதிரிகளில் மேற்கொண்ட ஆய்வில் போலியோ வைரஸ் 2 (Poliomyelitis Type 2) காணப்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. காஸாவின் டெய்ர் அல் பலா பகுதியிலும் தெற்கு காஸாவின் கான்யூனிஸ் பிரதேசத்திலும் இரண்டு வெவ்வேறு இடங்களில் பெறப்பட்ட ஆறு நீர் மாதிரிகளில் இவ்வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்திருக்கிறது.

இது காஸாவிலும் இஸ்ரேலிலும் மாத்திரமல்லாமல் ஏனைய பிராந்திய நாடுகளிலும் பெரும் பேசுபொருளாகியுள்ளது. போலியோ என்பது மிக வேகமாகப் பரவும் ஒரு வைரஸ்.

இவ்வைரஸ் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு, குறிப்பாக 2 வயதுக்குட்பட்டவர்கள் மத்தியில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும். குறிப்பாக முள்ளந்தண்டு பகுதியிலுள்ள நரம்பு தொகுதியைத் தாக்கி முதுகெலும்பு மற்றும் சுவாச முடக்கத்திற்கு வழிவகுக்கும். அதனால் பக்கவாதம் ஏற்படும். குறிப்பாக கால் அல்லது கை ஊனமடையக்கூடிய அச்சுறுத்தல் நேரிடலாம்.

இப்பேராபத்து மிக்க வைரஸ் தொற்றை ஒழித்துக்கட்டுவதற்கான தடுப்பு மருந்து வழங்கும் வேலைத்திட்டம் 1988 இல் உலகளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பயனாக உலகின் பல நாடுகளிலும் இவ்வைரஸ் கட்டுப்பாட்டு நிலையை அடைந்தது. அவற்றில் பலஸ்தீன் உள்ளிட்ட காஸாவும் அடங்கும். கடந்த 25 வருடங்களாக காஸாவில் போலியோவுக்கு எவரும் உள்ளாகவில்லை என்று பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்திருக்கிறது.



## தடுப்பு மருந்து வழங்கவென யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தும் WHO



தற்போது காஸாவில் இவ்வைரஸ் கண்டறியப்படுவதற்கு இஸ்ரேல் முன்னெடுக்கும் யுத்தமே அடிப்படைக் காரணம் என்றுள்ள காஸா சுகாதார அமைச்சு, இவ்வைரஸ் காஸாவுக்கு மாத்திரம் பாதிப்பை ஏற்படுத்தப் போவதில்லை. காஸாவுக்கு அருகிலுள்ள பிரதேசங்களிலும் இஸ்ரேலிலும் மத்திய கிழக்கு உட்பட உலகளாவிய ரீதியிலும் இதன் தாக்கத்தை எதிர்கொள்ள நேரிடும். இது போலியோ ஒழிப்பு வேலைத்திட்டத்தில் பின்னடைவையும் ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான சூழலில், இஸ்ரேலிய சுகாதார அமைச்சும் காஸா பகுதியில் நீர் மாதிரிகளை எடுத்து மேற்கொண்டுள்ள ஆய்விலும் போலியோ வைரஸ் காணப்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் காஸாவிலுள்ள தமது படையினருக்கு போலியா சொட்டு மருந்து வழங்கும் நடவடிக்கையை இஸ்ரேல் முன்னெடுத்துள்ளது. ஏற்கனவே இத்தடுப்பு மருந்து பெற்றுள்ளவர்களுக்கு பூஸ்டர் டோஸ் வழங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காஸா மீது முன்னெடுக்கப்படும் யுத்தம் காரணமாக வழமையான போலியோ தடுப்பு மருந்து உள்ளிட்ட நோய்த்தடுப்பு மருந்து வழங்கும் வழமையான வேலைத்திட்டம் சீர்குலைந்துள்ளது. அதனால் காஸாவில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் போலியோ மற்றும் பிற நோய்களுக்கான தடுப்பு மருந்துகளைப் பெற்றுக் கொள்ளாதவர்களாக உள்ளனர். இதன் விளைவாக தடுப்பூசிகளால் தவிர்க்கக்கூடிய நோய்களால் காஸா பிள்ளைகள் பாதிக்கப்படக்கூடிய அபாயமும் நிலவுகின்றது என்றுள்ளார் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பேச்சாளர்.

இந்நிலையில் காஸா சுகாதார அமைச்சு காஸாவில் போலியோ பரவும் வலயத்தை கடந்த ஜுலை 30 ஆம் திகதி பிரகடனப்படுத்தியது.

### போலியோ குறித்து விஞ்ஞானிகள்:

காஸாவில் போலியோ வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறித்து உலகளாவிய மருத்துவ விஞ்ஞானிகளும் கவனம் செலுத்தியுள்ளனர். அந்த வகையில் கொபன்ஹேகன் பல்கலைக்கழகத்தின் உலகளாவிய சுகாதார பேராசிரியர் ஃப்ளெமிங்கொன்ராட்சென், இவ்வைரஸ் மத்திய கிழக்கு முழுவதும் பரவக்கூடிய சாத்தியம் உள்ளது. காஸாவில் சுகாதார உட்கட்டமைப்பு வசதிகள் சீர்குலைந்துள்ளதன் வெளிப்பாடே இது. காஸாவெங்கும் சுகாதார நிலைமை நம்பமுடியாத அளவிற்கு மோசமாக உள்ளது. நீர் சுத்திகரிப்பு, கழிவுநீர் சுத்திகரிப்பு அல்லது கழிவுகளைக் கையாளுவதற்கான ஆற்றல், உட்கட்டமைப்பு வசதிகளோ அல்லது இரசாயனங்களோ எதுவுமில்லை. அதனால் போலியோ பற்றிய அறிக்கைகள் குறித்து இஸ்ரேல் கவலைப்பட வேண்டும். ஏனெனில் எதிர்வரும் நாட்களில் போலியோ பிராந்தியத்திலுள்ள மற்ற நாடுகளுக்கும் பரவும் அபாயமுள்ளது. இது வரலாற்று ரீதியில் நம்பமுடியாதளவுக்கு துன்பத்தையும் நிதிச் சுமையையும் உருவாக்கியுள்ளது. இந்நோய் பரவுவதை இஸ்ரேலும் விரும்பாது' என்றுள்ளார்.

இதேவேளை கேயர் இன்டர்நேஷனல் என்ற அமைப்பின் காஸாவுக்கான பதில் பணிப்பாளர் பிரான்சிஸ் ஹியூஸ், 'அடுத்த சில நாட்கள் அல்லது வாரங்களில் போலியோ பரவும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். கழிவுநீரில் போலியோவை ஏற்படுத்தும் வைரஸ் கண்டறியப்பட்டிருப்பது ஒரு சுகாதார பேரழிவு ஏற்பட்டிருப்பதை எடுத்துக்காட்டுகிறது எனக் கவலை தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறான பின்னணியில் காஸா பிள்ளைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து வழங்குவதில் விஷேட கவனம் செலுத்தியுள்ள உலக சுகாதார ஸ்தாபனமும் யுனிசெப் நிறுவனமும் இது தொடர்பில் ஆராயவென விஷேட குழுவை அனுப்பி வைக்கவும் எதிர்பார்த்துள்ளன.

அத்தோடு 12 இலட்சம் சொட்டு மருந்தை அனுப்பவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 8 வயதுக்குட்பட்ட சுமார் 6 இலட்சம் குழந்தைக்ளுக்கு இரண்டு சொட்டுகள் வீதம் இத்தடுப்பு மருந்தை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் யுத்தம் தொடராக முன்னெடுக்கப்படுவதால் இத்தடுப்பு மருந்தை வழங்குவது சவால் மிக்க காரியமாக உள்ளது. அதனால் காஸாவில் யுத்தநிறுத்தத்தை உலக சுகாதார ஸ்தாபனமும் வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில் இங்கிலாந்தில் உள்ள கிழக்கு ஆங்கிலியா பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பேராசிரியர் போல் ஹண்டர், போலியோவால் இஸ்ரேல் எதிர்கொள்ளக்கூடிய அபாயங்களைக் கருத்தில் கொண்டு, காஸா மக்களதும், தங்களது மக்களதும் உலக மக்களதும் நலன்களை முன்னிலைப்படுத்தி காஸாவில் போலியோ தடுப்பு மருந்து வழங்க அனுமதிக்க வேண்டும்' என்று கூறியுள்ளார்.

போலியோ வைரஸ் காஸாவின் கழிவுநீர் மாதிரிகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதோடு, 10 மாதக் குழந்தையொன்றுக்கு தொற்று ஏற்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு வெள்ளியன்று அறிவித்தது. அதனைத் தொடர்ந்து ஐ.நா, காஸா குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து வழங்கவென உடனடியாக 7 நாள் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. இதனை சாதகமாக நோக்குவது இஸ்ரேல் உள்ளிட்ட அனைத்து தரப்பினரதும் பொறுப்பாகும்.



**மர்லின் மரிக்கார்...**

வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

# தமிழ் மக்கள் தரப்பின் ஒருமித்த தீர்மானம் எட்டப்படாமல் களமிறக்கப்பட்ட பொதுவேட்பாளர்!

## தமிழர் அரசியலில் பேரம் பேசும் சக்தியைப் பலவீனப்படுத்தி விடுமா?

**ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்களும், வேட்பாளர்களும் தமது பிரசார–ங்களைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.**



வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் ஏழு அரசியல் கட்சிகளும், ஒரு சில சிவில் அமைப்புக்களும் இணைந்து ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் பொதுவேட்பாளராகக் களமிறக்கப்பட்டுள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஜனநாயகப் போராளிகள் கட்சி உள்ளிட்ட ஏழு கட்சிகள் இதில் உள்ளடங்கியுள்ளன. தேர்தலில் வெற்றிபெறாவிட்டாலும், தமிழ் மக்களின் அபிலாஷைகளை சர்வதேச நாடுகளுக்கு எடுத்துச் சொல்லும் நோக்கிலேயே பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டிருப்பதாக அதற்கு ஆதரவான அரசியல் கட்சிகள் கூறுகின்றன.

இவ்வாறான பின்னணியில் பொது வேட்பாளரைக் களமிறக்கிய கட்சிகளின் தலைவர்கள் சிலர் தென்பகுதியில் உள்ள பிரதான வேட்பாளர்கள் இருவரைச் சந்தித்துக் கலந்துரையாடியமை அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான பிரதிநிதிகளும், புளொட் கட்சியின் தலைவர் தர்மலிங்கம் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் மற்றும் செயலாளர் துளசி உள்ளிட்டோர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் இது தொடர்பான சந்திப்புக்களை நடத்தியிருந்தனர்.

சுயேச்சை வேட்பாளரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச ஆகியோரை இந்தக் குழுவினர் தனித்தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.



தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களுடன் சந்திப்பு

பொதுவேட்பாளரைக் களமிறக்குவது பற்றிய முடிவை எடுப்பதற்கான காரணம் மற்றும் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்புக்களில் நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டுள்ளது. சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு, 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது போன்ற விடயங்கள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைத் தீர்க்கும் முகமான சமஷ்டி அதிகாரப் பகிர்வு தேவை என்ற கருத்து தமிழ்ப் பிரதிநிதிகளால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதை தற்போது செய்ய முடியாது என்றும், ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு அதில் தெரிவாகும் அரசாங்கத்துடன் அனைவரும் பேசி அது தொடர்பில் முடிவுக்கு வரமுடியும் எனவும் கூறியுள்ளார்.

அதுவரைக்கும் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட மாகாண சபைக் கட்டமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காக தான் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும், அதற்காக தன்னிடம் தயாரித்து வைக்கப்பட்டிருக்கும் யோசனைகளடங்கிய ஆவணத்தையும் ஜனாதிபதி இவர்களிடம் கையளித்துள்ளார்.

ஏற்கனவே மாகாண சபையின் பறிக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் மீள வழங்குவதாகவும், நிதி உட்பட மேலதிக அதிகாரங்களையும் பொருளாதார அபிவிருத்தி ஆணைக்குழுவையும் மாகாண சபை கொண்டிருக்கும் என்றும் இதன் போது அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் சார்பில், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி, எஞ்சியுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு மற்றும் அபகரிப்பை தடுப்பது, தமிழ் இளைஞர்கள் யுவதிகள் நீதியற்ற முறையில் கைது செய்யப்படுவது, விசாரணை என்ற போர்வையில் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தல் நடவடிக்கையை நிறுத்துதல், இந்திய மீனவர்களுடைய அத்துமீறலினால் எமது மீனவர்கள் படுகின்ற துன்பம் உட்பட பல விடயங்கள் தீர்க்கப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணிலிடம் வலியுறுத்தப்பட்டது.

இதற்கான தீர்வுகளை தான் நிச்சயமாக வழங்குவதாகவும் ஏற்கனவே சில விடயங்களுக்கான தீர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக அரசியல் கைதிகள் விடுதலை மற்றும் தொல்லியல் விவகாரங்களை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தான் சமர்ப்பித்த ஆவணத்தில் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன எனவும், அவற்றைப் பரிசீலித்த பின்னர் தொடர்ந்தும் சந்திப்புகளை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேநேரம், சஜித் பிரேமதாசவுடனான சந்திப்பின் போது, இதுவரை காலமும் தான் இந்த நாட்டின் ஜனாதிபதியாகவோ அல்லது பிரதம மந்திரியாகவோ பதவி வகிக்கக் கூடிய சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்றும், இம்முறை அந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படும் பட்சத்தில் நிச்சயமாக தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தான் முடிவு காண்பதாகவும் கூறியுள்ளார். ஆகவே, கடந்தகால கசப்பான



நிகழ்வுகளை மனதில் வைத்துக்கொண்டு தன்னையும் அந்த வேட்பாளர்களோடு அல்லது பதவிகளைப் பெற்றுக் கொண்டவர்களோடு ஒப்பிட வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதற்குச் சகல உரிமைகளும் இருக்கின்றன என்றும், அதை தாம் மதிப்பதாகவும் தெரிவித்த அவர், “தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற உங்களுடைய நிலைப்பாட்டுக்குத் நான் மதிப்பளிக்கின்றேன்” என்றும் கூறியுள்ளார்.

ஆனாலும் தேசிய ரீதியான தேர்தலில் இன, மொழி, மத மற்றும் பிரதேச ரீதியான அடையாளத்தோடு வேட்பாளர்களை முன்னிலைப்படுத்துவது ஒற்றுமையைச் சீர்குலைக்கலாம். முதல் கட்டமாக பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் ஊடாகக் கொண்டுவரப்பட்ட மாகாண சபைக் கட்டமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்காகத் தாம் தயாராகவுள்ளதாகவும், அதற்காகத் தாம் வெளிப்படையாகவும் பேசி வருவதாகவும் தன்னைச் சந்தித்த தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் சஜித் பிரேமதாச கூறியுள்ளார்.

இவ்வாறான நிலையில், பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கிய தமிழ்க் கட்சிகள் தென்னிலங்கையிலுள்ள பிரதான வேட்பாளர்கள் இருவரைச் சந்தித்தமை குறித்து சந்தேகங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

எனினும், பிரதான வேட்பாளர்கள் இருவர் விடுத்த அழைப்பை ஏற்று அதற்கு மதிப்பளிப்பது அரசியல் கட்சியென்ற ரீதியில் தமது பொறுப்பு என ரெலோ கட்சியின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் கூறியிருந்தார்.

பொதுவேட்பாளர் தொடர்பில் ஒப்பந்தம் செய்துகொண்ட சிவில் சமூக அமைப்புக்களுக்குத் தெரியப்படுத்திய பின்னரே தாம் இந்தச் சந்திப்புக்களில் கலந்து கொண்டதாகவும், வேலைப்பழு காரணமாக சிவில் சமூகப் பிரதிநிதிகளினால் இச்சந்திப்புக்களில் கலந்துகொள்ள முடியாமல் போனதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

அது மாத்திரமன்றி, தமது நிலைப்பாட்டை பிரதான வேட்பாளர்களிடம் எடுத்துக் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் கட்சியென்ற ரீதியில் அவர்கள் இந்தச் சந்திப்பை நடத்தியிருந்தாலும், பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்கிய பின்னர் இதனை மேற்கொண்டிருப்பதே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இது கூட்டுப் பொறுப்பை மீறும் செயற்பாடா என்ற கேள்வியும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

தமிழ் மக்களின் ஒற்றுமையையும் அபிலாஷைகளையும் வெளிப்படுத்த பொதுவேட்பாளரைக் களமிறக்கி தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் அதிர்வலையொன்றை ஏற்படுத்திய பின்னர் இவ்வாறான சந்திப்புக்களை மேற்கொள்வது வாக்காளர்களாகிய மக்களை குழப்பத்திற்கு உட்படுத்தும். அது மாத்திரமன்றி தமிழ் வேட்பாளர் என்பது தமிழ் மக்களின் வாக்கு வங்கி அல்லது தமிழ் மக்களின் பேரம்பேசும் சக்தியைப் பலவீனப்படுத்தும் ஒன்றாக அமைந்துவிடக் கூடாது. அவ்வாறு பலவீனப்படுத்தப்படுமாயின் தமிழ் மக்களின் ஒற்றுமை குறித்து தென்னிலங்கையில் பிழையானதொரு நிலைப்பாடு உருவாக்கப்பட்டு விடும் என்று தமிழர் தரப்பிலுள்ள புத்திஜீவிகள் கூறுகின்றனர்.

இது இவ்விதமிருக்க, தமிழ் பொது வேட்பாளர் குறித்து தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் ஒருமித்த நிலைப்பாட்டை எட்ட முடியாமல் போயிருப்பதும் ஒருவித பலவீனமாகவே பார்க்கப்படுகின்றது. சிவில் அமைப்புகள் எனக் கூறிக்கொள்ளும் ஒரு சிலர் சில தமிழ் அரசியல் கட்சிகளை இணைத்துக் கொண்டு பொதுவேட்பாளரைக் களமிறக்கியுள்ளனர்.

பிரதான தமிழ்க் கட்சிகளில் ஒன்றான இலங்கைத் தமிழரசுக் கட்சி பொதுவேட்பாளர் பற்றிய தனது உத்தியோகபூர்வ தீர்மானத்தை இன்னமும் எடுக்கவில்லை. தமிழரசுக் கட்சியின் ஒரு சிலர் தனிப்பட்ட ரீதியில் பொதுவேட்பாளர் விடயத்துக்கு ஆதரவாக இருந்தாலும் உத்தியோகபூர்வ தீர்மானம் எடுக்கவில்லை.

அனைத்து வேட்பாளர்களுடனும் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்துப் பேச்சுக்கள் நடத்தப்பட்டு பின்னரே தீரமானம் எடுக்கப்படும் எனத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியிருந்தார். எனவே, பொதுவேட்பாளர் விடயத்தில் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைப்பதற்குத் தவறியுள்ள பின்னணியில் தமிழ் மக்களின் ஆதரவு இதற்கு எந்தளவுக்கு உள்ளது என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# விழிப்புணர்வுப் பாடல்கள் நிறைந்த விஜிதாவின் 'புது வரவு'

வரலாற்றுப் பெருமையும், கலை இலக்கியப் பாராம்பரியமும் கொண்ட திருக்கோவில் மண்ணிலிருந்து, சிறுவர் பாடல் இலக்கியத்துக்குப் புதுவரவாகிப் பூத்திருக்கின்றது 'புதுவரவு' சிறுவர் பாடல் நூல்.

மண்ணோடு உள்ள பற்றுதலிலும், கடமைப் பொறுப்பில் கிடைத்த பக்குவத்திலும் சிறுவர்மீது கொண்ட அக்கறையிலும் கவிபாடும் கோவிலூர் விஜிதாவாகி இந்நூலினைத் தந்திருக்கின்றார் பொலிஸ் சார்ஜன்ட் விஜிதா.

எழுகவி ஜெலீலின் வடிவமைப்பில் அமைந்த அழகிய முகப்பட்டையோடும், மெதடிஸ்த திருச்சபையின் கிழக்குப் பிராந்திய இணைப்பாளர் அருட்திரு எஸ். டீ.தயாசீலனின் ஆசியுரையோடும், கவிஞர்கள் முல்லை வீரக்குட்டி, தம்பிலுவில் ஜெகா ஆகியோரின் அணிந்துரை, வாழ்த்துரைகளோடும் 86 பக்கங்களில் (உரைகள் தவிர்த்து) 72 பாடல்களோடு நூல் மலர்ந்திருக்கின்றது.

மனித உரிமை, மகளிர் நலன், சிறுவர் பாதுகாப்பு என்று குறித்தொதுக்கப்பட்ட கடமைகளில் கூடுதல் கவனம் செலுத்துபவர் பொலிஸ் சார்ஜண்ட் விஜிதா. அதனால் அவரின் பாடல்கள் சமூகப் பொறுப்பும் கடமைப் பொறுப்பும் இணைந்ததான விழிப்புணர்வுப் பாடல்களாக மலர்ந்திருக்கின்றன. காக்கி உடைக்குள் ஒரு கனிந்த உள்ளமாக அவர் மிளிர்வதை அவரின் பாடல்கள் உணர்த்துகின்றன. இலகு மொழியில், எளிய சந்தத்தில் பாடல்களைத் தர அவர் முன்வந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. சிறுவர்களுக்கு வழிகாட்டுவனவாகவும் அறிவுரை தருவனவாகவும் அவரின் பாடல்கள் அமைகின்றன.

"சின்னச் சின்னப் பாப்பா
வீதி ஒழுங்கை கேளப்பா
இறைவன் தந்த உயிரினை
இடையில் அழிப்ப தேனப்பா?
பொலிஸ் மாமா சமிங்ஞையை
பொறுமையுடன் நோக்கணும்
மஞ்சள் கோட்டை கடக்கையில்
வலமும் இடமும் பார்க்கணும்"

என்று தொடரும் 'வீதி ஒழுங்கு' என்ற தலைப்பிலான பாடலில், வீதி ஒழுங்கு விதிகளை சிறுவர்களுக்கு அன்போடு எடுத்துரைக்கிறார் விஜிதா.


கல்வி கற்கும் உரிமையும்
கருத்து ரைக்கும் உரிமையும்
சேர்ந்து வாழும் உரிமையும்
சிறுவர் எமது உரிமையே
சிறுவர் எம்மைத் துன்புறுத்த
எவர்க்கும் உரிமை இல்லையே
வேலைக் கெம்மை அமர்த்துவோர்
விரைந்து பெறுவார் தண்டனை!
கெட்ட சிந்தை கொண்டுமே
தொட்டு விட மேனியை
துட்டர்களுக்கு இடமில்லை
சட்டம் தானும் சொல்லுதே !
சிறுவர் எமது உரிமையை
சிதைக்கும் தீய புல்லரை
ஒன்று கூடி அடக்குவோம்
உரிமை பெற்று வாழுவோம்!

'சிறுவர் உரிமை' பற்றி விளக்கும் விஜிதா, தீயவர்களை அடக்குவதற்கு ஒன்று கூட வேண்டுமென்று அழைப்பு விடுப்பதோடு, துட்டர்களுக்கு மறைமுக எச்சரிக்கையும் விடுக்கிறார்.

"பாதகம் செய்பவரைக் கண்டால் நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்து விடு பாப்பா அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா " என்று

அநீதிக்கெதிராக கொதித்தெழ வேண்டுமெனப் பாப்பாக்களை முன்னிறுத்தி கவிதை சொல்வார் மகாகவி பாரதி. அதனையொத்த கருத்தில் சிறுவர்களை முன்னிறுத்திப் பல பாடல்களை இந்நூலில் தந்திருக்கின்றார் விஜிதா.

"ஆசையோடு பெற்றெடுத்த
அழகுச் சின்னப் பெண்ணே
அம்மா நானும் சொல்லுகின்ற
அறிவுரையைக் கேளும்.
உன்னாலே குடும்பத்துக்கு
பெருமை உண்டு கண்ணே!
பெண் வாழ்வில் தவறிவிட்டால்
இழுக்கு வந்து சேரும்.
அறியா நபர் வண்டியிலே
அமர்ந்து செல்ல வேண்டாம்....
சிறுமி உன்னைத் தொட்டுப்பேசி
அங்கச் சேட்டை செய்வார்
தீண்டாத இடங்களிலே
தீண்டிப் பார்க் முனைவார்" என்று,




சிறுமிகளுக்கு அன்னையின் அறிவுரையாக அவர் பாடல் தருகிறார். அவதானமாக நடந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை அழகாகச் சொல்கின்ற வரிகள் அவை.

"பாரம் சுமக்கும் மனிதனும்
பலவானாக ஆவ தில்லை
பாரில் தன்னை சுமப்பவனே
பலவான் என்றார் புத்தர் மகான்
உயர்ந்தோர் தாழ்ந்தோர் எனும் பேதம்
உலகில் இல்லை என்றாரே
உலக மக்கள் நாங்கள்தான்
உயர்வு தாழ்வு பார்க்கின்றோம்"

என்று "கௌதம புத்தர் உரை" என்ற தலைப்பில்

உள்ள பாடலும்,

"சத்தியம் காத்து வாழ்ந்திடனும்
சாந்தி சமாதானம் போற்றிடனும்
ஏழைக்கென்றும் உதவிடனும்
எடுத்துரைத்தார் ஏந்தல் நபி"

என்று நபிகளின் அல்ஹதீஸ் என்ற தலைப்பில் தருகின்ற பாடலும் விஜிதாவை மதங்கடந்த மனித நேயப் படைப்பாளியாக அடையாளப் படுத்துகின்றன.

மொத்தத்தில், விஜிதா "புதுவரவு" என்ற கவிதைத் தொகுதிமூலம் சிறுவர் மனங்களில் நல்லெண்ண விதைகளைத் தூவுகிறார். உன்னதமான பொருட்பரப்பில் அவரின் பாடல்கள் மலர்ந்திருக்கின்றன.

கவித்துவ நுட்பங்களைப் புரிந்து கொண்டு, கலைத்துவ ஆற்றலில் மேலும் சிறந்து இன்னும் பல நூல்கள் அவர் தர வேண்டு மென்பதே நமது அவா.

அவருக்கு நமது வாழ்த்துகள்.

**நூல் :– புதுவரவு (சிறுவர் பாடல்கள்)**
**நூலாசிரியர்:– கிருஷ்ணமூர்த்தி விஜிதா**
**முகவரி:– 8ஆம் வீதி,காயத்ரி கிராமம், திருக்கோவில்–04.**
**வெளியீடு :– விஜிதா வெளியீட்டகம், திருக்கோவில்.**
**விலை ரூபா 600**

**பாவேந்தல் பாலமுனை பாறூக்...**

காப்பியக்கோவின்

# 'இரு காவியங்கள்' கத்தாரில் வெளியீடு



காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரீபுத்தீன் இயற்றிய இரு காவியங்களின் வெளியீடும் அறிமுக நிகழ்வும் அண்மையில் கத்தாரில் நடைபெற்றது. கத்தார் வாழ் தமிழ் இலக்கிய நண்பர்கள் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் 'அருட்கொடையின் அருட்கொடை அன்னை ஆயிஷா காவியம்' மற்றும் 'கலீபா உமர் கத்தாப் காவியம்' ஆகிய இரு காவிய நூல்கள் கத்தார் ஐக்கிய தமிழர் சங்க தலைவர் தஸ்த்தகீம் சுலைமான் முன்னிலையில் வெளியிட்டு வைக்கப்பட்டன.

அன்னை ஆயிஷா காவியம் அறிமுகத்தை ஊடகவியலாளர் பிஷ்ரின் முஹம்மதும் கலீபா உமர் கத்தாப் காவியத்தை கவிஞர் லரீபா பதுர்தீனும் நிகழ்த்தினர். நிகழ்வில் காப்பியக்கோவின் அபிமானிகள், கலை ஆர்வலர்கள் கலந்துசிறப்பித்தனர்.





# மலையகம் இங்கிருந்து எங்கே? ஹட்டனில் நூல் வெளியீட்டு விழா







ஹட்டனில் நடைபெற்ற மலையகம் இங்கிருந்து எங்கே? நூல்வெளியீட்டு விழாவின் சிறப்பு அம்சமாக மலையக ஆய்வாளர் பீ. மரியதாஸ் எழுதிய 'மலையகம் இங்கிருந்து எங்கே?'என்ற நூலினை அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க வெளியிட்டுவைக்க, விக்னேஸ்வரா சர்வானந்தா, எம்.சிவஞானம், ஆர். ஸ்ரீதரன், எஸ்.கேசவன், சுதர்ஷன், தியாகராஜா, சத்தியசீலன் ஆகியோர் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர் என்பதுதான். பேராசிரியர் துரைமனோகரன் நூலின் அறிமுக உரையை நிகழ்த்தினார். அவர் நூலின் பல சிறப்பம்சங்களை எடுத்துரைத்தார். மரியதாஸ் அறுபதுகளில் மலையகத்திலிருந்து பல்கலைக்கழகம் சென்ற இளம் பட்டதாரிகளுள் ஒருவர். ஆசிரியராக, அதிபராக, உதவிக் கல்விப்பணிப்பாளராக முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக கல்வித்துறையில் பணியாற்றியிருக்கிறார். மலையகத்தில் கணிசமான ஆசிரியர்களையும் பட்டதாரிகளையும் உருவாக்கிய பெருமைக்குரியவர். இயல்பாகவே மார்க்சிய சிந்தனை கொண்ட அவர் இடதுசாரி இயக்கங்களுடன் இணைந்து பணியாற்றியிருக்கிறார். இந்நூல் அவரது மலையகம் தொடர்பாக ஆய்வுக்கட்டுரைகளின் முதல் தொகுப்பு நூலாக விளங்குகிறது.

பதினெட்டு கட்டுரைகளை உள்ளடக்கிய இந்நூலுக்கு 'பீ.மரியதாஸ் ஹட்டனில் எழுந்த மார்க்ஸியக் குரல்' என்னும் தலைப்பில் ஒரு சிறந்த அணிந்துரையை ஆய்வாளர் மு.நித்தியானந்தன் வழங்கியுள்ளார். 'செழுமையான மார்க்சிய ஞானம் கொண்ட மரியதாஸின் எழுத்துக்கள் மலையக எழுத்தில் தனிமுத்திரை பதிப்பவை. தன்னை முன்னிலைப் படுத்தாத மாண்பு அவருடையது. தொடர்ந்து, அயராத, ஆழ்ந்த அவரது வாசிப்பு எழுத்திற்குக் கனதிசேர்க்கிறது. அனைத்தையும் வரலாற்றுப் பின்புலத்தில் அணுகும் அவரின் ஆய்வுநோக்கு கட்டுரைகளுக்கு ஆழத்தை சேர்க்கிறது. நடைமுறை அரசியலையும் மலையகத்தின் புதிய அரசியல் தேவைகளையும் எழுச்சிகளையும் தன துமார்க்ஸிய தரிசனத்தில் பரிசீலித்து அவர் தந்திருக்கும் இந்த நூல் நமக்குக் கிடைத்திருக்கும் சிறந்த அரசியல், சமூகக் கையேடு' என்று மு.நித்தியானந்தன் பொருத்தமாக தெரிவித்துள்ளார்.

மலையகம் சார்ந்த பல சிறந்த நூல்களை கலைஒளி முத்தையாப் பிள்ளை அறக்கட்டளை வெளியிட்டு வருகிறது. அந்தவகையில், அதன் செயலாளராக விளங்கும் எச்.எச்.விக்ரமசிங்கவின் சேவை மிகவும் பாராட்டுக்குரியது.

இந்நூலுக்கான வெளியீட்டுரையை விக்கிரமசிங்க எழுதியுள்ளார். 'மரியதாஸ் வாசிப்பில் மட்டுமே கருத்தூன்றி நின்ற காலத்தில், 'நீங்கள் எழுத வேண்டும்' என்று அவருக்கு உற்சாகமூட்டி இக்கட்டுரைகளை பத்திரிகைகளில் பிரசுரம் செய்து அவற்றை தொகுத்து நூலாக்கும் பணியில் முழுமூச்சுடன் உழைத்த எச்.எச்.விக்கிரமசிங்கவிற்கு நன்றி கூற வேண்டும்' என்றுமு.நித்தியானந்தன் குறிப்பிட்டிருப்பது சாலப் பொருத்தமே.

நூலாசிரியர் மரியதாஸ், 'பீட்டர் மரியதாஸ் ஆகிய நான்' எனும் தலைப்பில் தமது முன்னுரையில் அனுபவங்களையும் இணைத்து எழுதியுள்ளார். அவரது பதினெட்டுக் கட்டுரைகளும் பயனுள்ளவையாக விளங்குகின்றன. மலையகம் பற்றிய அவரது விசாலமான நோக்கினை நூல் வெளிப்படுத்துகின்றது. நூலுக்குத் தேவையான புகைப்படங்களும் இணைக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. இந்நூல் மலையக வரலாற்றுப் பாதையில் ஒரு புதியதடத்தை ஏற்படுத்தும் என்று நம்பலாம். மலையகம் பற்றிய ஒரு புதிய பார்வையை இந்நூல் வாசகர்களுக்கு வழங்கும். மாத்தளையில் இந்நூலை வெளியிட்டுவைத்த விபுலானந்தர் கலா மன்றத்தினர் பாராட்டுதலுக்குரியவர்கள். அவர்களின் பணி தொடரட்டும்.

கேகாலை
**எஸ். மரதன் கிருஷ்ணன்**

# பாரம்பரியம் நிகழ்ச்சித் தொடரில் மூத்த உலமா மௌலவி எச். ஸலாஹுத்தீன்









இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் எதிர்வரும் செவ்வாய் (20/08/2024) இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் "பாரம்பரியம் நிகழ்ச்சித் தொடரில்" மூத்த சன்மார்க்க அறிஞர் மர்ஹூம் கண்டி மௌலானா மௌலவி எச். ஸலாஹுத்தீனின் நினைவுகள் பரிமாறப்பட உள்ளன.

நிகழ்ச்சியின் அதிதிகளாக, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் கண்டி மாவட்டத் தலைவரும், கண்டி 'புர்கானிய்யா' அரபிக்கல்லூரி பணிப்பாளருமான மௌலவி எச்.ஒமர்தீன், சிரேஷ்ட எழுத்தாளர் கவிஞர் சிரேஷ்ட சட்டத்தரணி ரஷீத் எம்.இம்தியாஸ், மௌலவி எச். ஸலாஹுத்தீனின் இளைய சகோதரரான முஹம்மத் நஸீரின் புதல்வர், மௌலவி நஸீர் இம்ரான் முஹம்மத் ஆகியோர் பங்கேற்று, மௌலவி ஸலாஹுத்தீனின் முஸ்லிம் சேவையுடனான தொடர்பு, இதர சமூக எழுத்துகள் பற்றிய நினைவுகளைப் பதிவு செய்கிறார்கள். நிகழ்ச்சியை எம்.எஸ். எம்.ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவை பொறுப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஷியா தயாரித்தளிக்கிறார்.



முன்னாள் நீதியமைச்சரும், ஜனாதிபதி வேட்பாளருமான விஜேயதாஸ ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுவை கடந்த வியாழக்கிழமை தாக்கல் செய்ததன் பின்னர் பம்பலப்பிட்டியில் உள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார் பழைய கதிரேசன் ஆலயத்தில் இந்துமத வழிபாடுகளில் ஈடுபட்டபோது பிடிக்கப்பட்ட படங்கள்.

# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 237 கண் மருத்துவர் மற்றும் உபகரணங்கள்

அதி நவீன சுவிஸ் மற்றும் ஜேர்மன் தயாரிப்பில் உருவான A1 தொழில்நுட்பத்துடன் கூடிய நீர் புகா மற்றும் ரீச்சார்ஜ் செய்யக் கூடிய காதுகேள் கருவிகளை விக்ரமாரச்சி ஹியரிங் கியாரிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள், இலவச செவிப் பரிசோதனை மற்றும் காதுகேள் கருவிகளை அணிந்து பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளலாம். ரூ. 55, 000 முதல் எம்மிடம் காதுகேள் கருவிகள் உண்டு. நாடு முழுவதும் உள்ள எமது கிளைகளில் இச் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தகவல்களுக்கு - 0112 201700. 056402

## வேலைவாய்ப்பு

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

டயர் கடைக்கு பயிற்சி பெற்ற / பயிற்சி பெறாத தொழிலாளர்கள் தேவை. உணவு தங்குமிட வசதிகள் உண்டு. சம்பளம் பேசித் தீர்க்கலாம். 077 3744255. 055868

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

ஹோட்டலுக்கு ரொட்டி பாஸ் தே னீர் பென்றிதாரர் சமைய லறைக்கு கையு தவியாட்கள் கெசியர் பதவிகளுக்கு கிராமப்புற திருமணமாகதவர்கள் தேவை. தங்குமிடம் உண்டு. 070 5613940, 070 1309155. 055952

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

தேயிலைத் தோட்டத்தில் தங்கி வேலை செய்யக் கூடிய தமிழ் குடும்பங்கள் தேவை. தோட்ட வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை தங்குமிடம் இலவசம். திருமண தம்பதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (இடம் காலி வீரபண்ணை) தொடர்புக்கு - 077 9380711, 076 3673631. 055878

தோட்டத்தில் தங்கி வேலை செய்யக் கூடிய 35 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் ID மற்றும் கிராமசேவகர் சான்றிதழ் தேவை. 0711 628964. 055864

### 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

35 வருடங்கள் பழைமையான அங்கீகரிக்கப்பட்ட போக்குவரத்து நிறுவனத்திற்கு நிரந்தர சேவைக்காக வாகன உதவியாளர்கள் தேவை. தங்குமிட வசதிகள், நிரந்தர சம்பளம், மேலதிக வேலைக் கொடுப்பனவு மற்றும் ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்படும். ஓகஸ்ட் 22 மற்றும் 23 ஆகிய தினங்களில் மு.ப. 9.00 இற்கும் 12 இற்கும் இடையில் வருகை தாருங்'கள். பெமிலி மூவஸ் பிரைவட் லிமிட்டட், இல. 405பீ, பழைய கொட்டாவ வீதி, நு கேகொடை. தொ.பே. 0 7 7-3925594. 055719









## காணி/தோட்டம்

### 607 எஸ்டேட் விற்பனைக்கு

மதுரங்குளி 40 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்கு 1 ஏக்கர் 65 இலட்சம், நீர், மின்சாரம் - 2 சிறிய வீடுகள் பிரதான வீதியிலிருந்து 300 மீற்றர் 2 உட்செல்ல ல் வழிகள் (20 ஏக்கரில் 2 துண்டுகள் வழங்கப்பட லாம்) தொலைபேசி 0776852342 052297



### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கல்கிசை, பார்ன்ஸ் அவெனியு வில் முழுமையான தளபாடங்களுடன் AC ஆடம்பர 3 படுக்கையறை 1570 சதுர அடி கடல் காட்சியுடன் அபாட்மென்ட் உடனடியாக விற்பனைக்கு COC மற்றும் உறுதிகள் தயார் நிலையில் விலை 55 மில்லியன் மற்றும் விலைமனுக்கள் மேலதிக விபரங்களுக்கு முகவருடன் தொடர்பு கொள்ளுங்கள். (0776700667) 051157

தெல்கந்தவில் 14.3 அல்லது 6 பேர்ச் விற்பனைக்கு. ஹைலெவல் வீதியிலிருந்து 100 m தெளிவான உறுதி உண்டு. 071-9285096. 055888

தெஹிவளை புதிதாகக் கட்டப்பட்ட வீடு விற்பனைக்கு. 9.5 பேர்ச் 7 படுக்கையறை, 7 குளியலறை, 2 வாகன நிறுத்துமிடங்கள், கராஜ், 2 மாடி வீடு பிரத்தியேக பிரவேச வழியுடன்/ நீர்/ மின்சாரம் 89.5 மில்லியன் அழையுங்கள். 071-36 9399 9 உண்மையான கொள்வனவாளர்கள் மட்டும். தரகர்கள் வேண்டாம். 056026

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

ஜா-எலயில் 50+1 பேர்ச் காணியுடன் வீடு விற்பனைக்கு. அழையுங்கள் - 0777 571440. 056408

வத்தளை, ஹுணுப்பிட்டியவில் 10 பேர்ச் காணி விற்பனைக்கு. பேர்ச்சொன்று 105000 ரூபா. தொலைபேசி 0719112114. 055486

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

கண்டியில் வீடு விற்பனைக்கு. மாநகர சபை எல்லைக்குள் வாவிக்கு, மாளிகாவைக்கு மற்றும் பாடசாலைகளுக்கு நடைதூரம். பலமாக கட்டப்பட்ட 3000 ச.அடி, 22 பேர்ச் காணி, 5 படுக்கையறைகள், 4 குளியலறைகள், அமரும் பகுதி, சாப்பிடும் பிரதேசம். இன்னும் பலவும். முன்னும் பின்னும் தோட்டம். Threephase மின்சாரம் SLT Fibre Connection விடுதியாக மாற்றலாம். தொலைபேசி - 081-2219534. 044742

# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

**கறையான்களை கட்டுப்படுத்துவதற்கான தீர்வு**

**Solution to Get rid of Termites**
Pre & Post Construction treatments For Termites
RODENT CONTROL To Minimize the Pest Attack & Usage of Pesticide Keep Your environment Clean
COCKROACHES, FLIES, MOSQUITOES, ANTS, BED BUGS, WOOD BORES
Hotline: 074 031 5517
Licence No - RP/PCR/WP/100, Approved by Registrar of Pesticides
**Leemaka Industries (Pvt)Ltd.**
No. 374/5, Robert Gunawardana Mw, Battaramulla.
Tel - 0112 785344, Email - Leemakaindustries@gmail.com

**LAND FOR SALE NEAR THE HIGHLEVEL ROAD**
(WIJERAMA - CAMPUS ROAD)



A HIGHLY RESIDENTIAL AREA IN WIJERAMA, (GANGODAWILA NUGEGODA) EGODAWATTA ROAD, 2ND LANE AND BETWEEN WEERA MAWATHA, FACING PADDY FIELD 7.8 PERCH BARE LAND FOR SALE.
2.2 Million per perch, (Negotiable) only one land available. 15' ft. access road, 10 minutes to highlevel road and Sri Jayawardenapura Campus Close proximity to all convenience, Egodawatta 2nd lane last land. All approved. Can take bank loan as well
Contact Details
0718 712 795, 0774 745 333

**KOTTAWA - MALAPALLA**
HOUSE FOR SALE WITH 20 PERCH LAND
2 STOREY HOUSE - 5 BEDROOMS, 2 BATHROOMS, 2 LIVING ROOMS, DINING ROOM AND PANTRY, COVERED PARKING FOR 2 VEHICLES
5 minutes to Kottawa town, Makumbura highway interchange and public transport hub and Homagama base hospital Friendly and safe neighbourhood.
URGENT SALE.
077-3 446 933

**ආවා AWA**
SPECIAL INCENSE
Incense Sticks manufacturing institution requires island-wide sales agents and salesmen for distribution. Suriyawewa
Inquiries 0706 000 382

**HOUSE FOR SALE IN GAMPAHA TOWN**
FOUR STOREY HOUSE IN GAMPAHA TOWN ON JA-ELA ROAD IS FOR SALE.
(500m to Gampaha Railway station and Bus Stand)
Second floor built in apartment style with 08 rooms, 08 bathrooms (05 AC rooms) Total area of the whole house is 7000 sq.ft.
There is a shopping stall attached to the house (550 sq.ft.). Third floor has a Gym (AC) and Roof top Garden. Buddhist shrine is also available in the fourth floor
Solar Hot water, facilities available for the all three house. (Solar 5kw Grid and off Grid power back up system) separate water and electricity facilities available for 03 houses & shopping stall Property is 25 perches if required can be increased up to 100+ perches
SEPARATE OWNER - SEPARATE PRICES
INQUIRIES - 0768 828 350

**இரத்தினக்கல் பதித்தல்**
வேலை வாய்ப்புக்கள்
கொழும்பு 5 இலுள்ள தங்க ஆபரணங்கள் உற்பத்தி செய்யும் கம்பனியில் அனுபவமுள்ள இரத்தினக்கல் பதிப்பவர்களுக்கான வெற்றிடங்கள் உண்டு.
தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.
0779 955 515

**NAWALA**
KOSWATTA JUNCTION FLAT FOR SALE
One room flat previously occupied, at No.486 1/1, Nawala road, Rajagiriya available for sale. The flat situated on the upper floor of the building is unfurnished, has one bedroom, large hall for sitting and dining room, store room, small kitchenette, toilet with all facilities. The floor is completely tiled and has 650 square ft. with balcony in front and passage in the rear. There is no parking for Vehicles. The flat with very clear title deed, is centrally situated facing the main Nawala Rajagiriya road, at the best convenient location in Koswatta.
PRICE EXPECTED RS.14 MILLION NEGOTIABLE. INSPECTION BY APPOINTMENT, PLEASE CALL
078 355 81 23

**Sun Lanka 077 226 6666**
**SEAT COVERS**
Alto, Wagon R, Maruti 800, Stingray
Aqua, Rush, Axio, Axia, Premio, Vitz
Vezel, Fit, Insight, Grace
SUZUKI TOYOTA HONDA

**LAND FOR SALE IN PILIYANDALA**



- By the peaceful Bolgoda River in Madapatha, Piliyandala (Polduwa)
- Spacious 100 perches, ideal for your dream home or business (with a 40 ft. river reservation)
- Easy access via a wide road
- Clear Deeds: Smooth, worry-free buying process

Call - 0714 469 086


LAND FOR SALE
**NEDIMALA, DEHIWELA**
Salmal Mawatha, Nedimala, Dehiwela - 24 Perch square flat land, parapet walled in a highly residential area with an old well-maintained house suitable for occupation but not valued.
In very close proximity to many conveniences including the Colombo South General Hospital. Only 3.4 km to Colombo city limits.
Rs. 3.25 Million Per Perch
(No Brokers)
077 7 390 413

**VICTORIAN GUEST**
Bandarawela




බණ්ඩාරවෙල නිවාඩුවක් ගත කරන ඔබට සුන්දර නිවාඩු නිකේතනයක්...
Rs. 22,000/- (Full Bungalow) - A Cook available
077 3 711 196 | 070 2 536 896

**පරිසරහිතකාමී නිවාස**




**Chandula Construction**
Tel : 0777371475 / 0774447749

**GOODMAX**



Agency for world's leading Shaving Razor 'Goodmax' requires
**ISLAND WIDE DISTRIBUTORS**
in Sri Lanka to expand the business activities
HIGH BENEFITS ASSURED
0776 453 413, 0714 426 374
dinuka@ceybizinfo.com
GOODMAX HOLDINGS PVT LTD
20D, GUILDFORD CRESCENT, COLOMBO 07

**Land with a Waterfall is for sale in Ayagama area**



- Face to the main bus route (Carpeted Road)
- 03KM to Ayagama Town
- Gangodakanda Ingiriya (Via Idamgoda)
- Gangodakanda Kalawana
- Boardering Ayagama, Gangodakanda Vidyalaya
- 8 /12 acre uncultivated land with valuable trees and a small quarters in a calm area
- Three Phase Electricity
- Any Vehicle motorable to the land

Price Negotiable
15 Perch also suitable for residential purpose on the road in front of Horana Depot (Nartanagala)
070 53 25 200 / 077 312 52 00

**CAR FOR SALE**
**Mercedes Benz C 2**
Company Maintained



Contact 071 4327764

**GOLDEN TYCKE INTERNATIONAL**
மகிழ்வூட்டும் பிரயாண விசா
| | |
|---|---|
| டுபாய் | 30/ 60 நாட்கள் |
| மலேஷியா | 30 நாட்கள் |
| பாகிஸ்தான் | 30 நாட்கள் |
| கென்யா | 30 நாட்கள் |

அனைத்து நாடுகளுக்குமான விமான டிக்கட்டுக்கள்
குறைந்த விலையில் விரைவான சேவை
www.tyckeinternational.lk
Call Now 0112804661 0777512829 0787534688

**Find Your Dream Home**
DREAM HOMES REAL ESTATE (PVT) LTD
077 444 6063
www.dreamhomes.lk

TALAWATUGODA

| Location | Bedrooms | Bathrooms | Area | Land | Price |
|---|---|---|---|---|---|
| TALAWATUGODA - KIBULAWALA | 05 BEDROOMS | 05 BATHROOMS | 5400 sq.ft | 22 PERCH | 200 MILLIONS NEGOTIBLE |
| TALAWATUGODA - KALALGODA RD | 04 BEDROOMS | 03 BATHROOMS | 2700 sq.ft | 15 PERCH | 95 MILLIONS NEGOTIBLE |
| PADDY VIEW TALAWATUGODA | 04 BEDROOMS | 04 BATHROOMS | 6000 sq.ft | 08 PERCH | 89 MILLIONS NEGOTIBLE |
| LUXURY HOUSE - TALAWATUGODA | 05 BEDROOMS | 04 BATHROOMS | 2900 sq.ft | 21.5 PERCH | 68 MILLIONS NEGOTIBLE |

BATTARAMULLA

| Location | Bedrooms | Bathrooms | Area | Land | Price |
|---|---|---|---|---|---|
| PRIME BATTARAMULLA | 05 BEDROOMS | 03 BATHROOMS | 2800 sq.ft | 14 PERCH | 100 MILLIONS NEGOTIBLE |
| BATTARAMULLA - TALAHENA | 04 BEDROOMS | 03 BATHROOMS | 3000 sq.ft | 15 PERCH | 63 MILLIONS NEGOTIBLE |
| ASOKA CIRCLE - BATTARAMULLA | 05 BEDROOMS | 04 BATHROOMS | 8500 sq.ft | 18.6 PERCH | 350 MILLIONS NEGOTIBLE |
| MUTHTHETTUGODA RD | 04 BEDROOMS | 04 BATHROOMS | 2400 sq.ft | 06 PERCH | 36 MILLIONS NEGOTIBLE |
| PALAWATTA - BATTARAMULLA | 04 BEDROOMS | 03 BATHROOMS | 2124 sq.ft | 15 PERCH | 110 MILLIONS NEGOTIBLE |
| PALAWATTA - BATTARAMULLA | 04 BEDROOMS | 03 BATHROOMS | 3000 sq.ft | 06 PERCH | 59 MILLIONS NEGOTIBLE |

**KOTTAWA**
**BARE LAND FOR SALE**



352 PERCH
4 Minutes to High Way Entrance
Prime Commercial Land
Suitable for Land Sale Project, International School, Private Hospital, Factory or Warehouse
Price Rs. 950,000/= Per Perch (Negotiable)
Contact 077 763 1722

## வாரமஞ்சரி BUDGET adz போட்டோ குறும் விளம்பரம்



Mitsubishi Fuso Crew Cab 2019 - Full option, manual transmission, full aluminium body with rear hydraulic door, first owner, 3000cc registered as Dual purpose vehicle Rs 14500,000 - 0777840141
kus - 1



Nissan Murano 2012 SUV registered, full option, 2500cc, tiptronic transmission, 18" alloys new tires, very spacious interior, Rs 8850000 0777840141
kus - 2



Tata Ultra 612 2018 model, 3800cc 16.5 feet thatu AC, P/S first owner kandy Rs 3950000 0777840141
kus - 3

Looking for **Your Life Partner..,**
Gather with, SUNDAY OBSERVER
**Marriage Proposals**
Decades of Trusted Service
Pay online and save your precious time
BANK OF CEYLON Acc. No. 000000377 Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343



# நாட்டுக்காக மாத்திரமே நிபந்தனை விதித்தேன்

## எனக்காகவல்ல - ராஜித

**ஜனாதிபதித் தேர்தல் சூடுபிடித்தவுடன் யாரும் எதிர்பார்க்காத தீர்மானத்தை நீங்கள் எடுத்துள்ளீர்கள். ஏன் திடீரென இவ்வாறான முடிவை எடுத்தீர்கள்? இது முன்னரே எடுத்திருக்க வேண்டிய தீர்மானம்தானே?**

நான் இந்த முடிவை எடுத்தது நேற்று இன்று அல்ல. என்றாலும் நான் சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னரே நான் இந்த நிலைப் பாட்டிற்கு வந்தேன்.

இந்த ஜனாதிபதி நாட்டின் பொருளாதா ரத்தை கட்டியெழுப்பிய போதும், சர்வதேச சமூகம் அவரைப் பாராட்டிய போதும், எனது விமர்சனங்களை ஒதுக்கி வைத்து விட்டு அவர் கூறும், செய்யும் விடயங்களை அவதானித்துக் கொண்டிருந்தேன். அதே போன்று அவரது இந்த கடினமான செயற் பாடுகளை நான் பாராட்டினேன். நீங்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து கொண்டு ஏன் ஜனாதிபதியைப் பாராட்டுகின்றீர்கள் என பலரும் என்னிடம் கேட்டனர். நான் ஒரு குருடனாக இருக்க முடியாது. என் இரு கண்களும் நன்றாக தெரிகின்றன. இரு காதுகளும் நன்றாக கேட்கின்றன. வாசனை எது நாற்றம் எதுவென்று நன்றாகவே விளங்கும். இந்த நாட்டின் வறிய மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் போது என்னால் குருடனைப் போன்று பேச முடியாது எனக் கூறினேன். ஜனாதிபதியின் இந்த வேலைத்திட்டத்தில் நாம் மகிழ்ச்சியடையா விட்டால் நாங்கள் அரசியல்வாதிகள் அல்ல. சுமார் ஆறு மாதங்கள் இப்படியே இருந்தேன். சில சமயங்களில் ஜனாதிபதியைச் சந்திக்கச் சென்ற சந்தர்ப்பங்களும் இருந்தது. அவ்வாறு சென்ற நேரங்களிலும், நாம் பேசியது அரசியல் விடயங்களே அன்றி, சொந்த விடயங்கள் அல்ல. சில சமயங்களில் நான் குறைகளைச் சுட்டிக் காட்டுவேன். அதேநேரம், எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் பேசிக் கொண்டிருந்தேன். எனது நிலைப்பாட்டைத் தெளிவாகப் பேசினேன். சில சந்தர்ப்பங்களில் ஆளும் கட்சி உறுப்பினர்களை விட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் நான் நாட்டுக்கு ஒரு சிறந்த செய்தியை வழங்கினேன்.

> ★ராஜபக்ஷக்கள் காரணமாகவே நான் முன்னைய அரசாங்கத்தில் இணைந்து கொள்ளவில்லை.
> ★ தேர்தல் சூடுபிடித்தவுடன் இன்னும் பலர் எம்மோடு இணைந்து கொள்வார்கள்.
> ★ வரலாற்றில் மிகப் பெரும் வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற ஜனாதிபதியாவார் ரணில் விக்கிரமசிங்க

**உங்களது சுவரொட்டிகளைப் பார்த்து நீங்களும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாகவே மக்கள் நினைத்தார்கள். நீங்களும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக வேண்டும் என்ற எண்ணம் இருந்ததா?**

ஜனாதிபதி தேர்தல் களத்தில் நானும் குதித்துத்தானே இருக்கின்றேன். எனினும் நான் ஆரம்பத்தில் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளாராகப் போகிறேன் எனக் கூறியதால் மக்கள் மத்தியில் பெரும் கேள்வி எழுந்தது, நானும் இந்தப் போட்டியில் கலந்து கொள்கிறேனா என்று. ஆனால் மாலையில், எனது ஜனாதிபதிக்கான போராட்டம் யாருக்கானது என்பதை நான் சுட்டிக்காட்டினேன்.

**உங்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சமீபத்திய 'ராஜித்தவின் தீர்மானம்' என்ன என்பதை மக்கள் அறிய விரும்புகிறார்கள்?**

முதலில், நாம் வெற்றி பெற்ற பின்னர் ஊழல் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவது எவ்வாறு, இரண்டாவது, வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாத குறைந்தபட்ச வேலைவாய்ப்பின்மை கொண்ட சமூகம், மூன்றாவது தேசிய நல்லிணக்கம், பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் ஒற்றையாட்சியை அங்கீகரிக்கும் அனைத்து இனத்தவர்களுக்கும் நியாயமான உரிமைகளை வழங்குவது, நான்காவது ஆரோக்கியமான, நல்ல ஊட்டச்சத்துள்ள தலைமுறையை உருவாக்குவது மற்றும் அனைவருக்கும் சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் கல்வியை வழங்குவது.

**உங்கள் வருகைக்கு எதிர்க்கட்சித் தலைமையிலிருந்து எந்த அழுத்தமும் வரவில்லையா?**

எனது அரசியலில் ஒருபோதும் நான் கட்சித் தலைவர்களிடம் சிறைபட்டிருக்கவில்லை. நான் ஒரு போதும் கட்சித் தலைவர்களுக்கு அடிபணியவும் மாட்டேன். அடிபணிவதாக இருந்தால் இன்றிருக்கும் ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாத்திரம்தான்.

**உங்களுக்கு சுகாதார அமைச்சுப் பதவி தருகிறோம், அரசுடன் இணைந்து கொள்ளுங்கள் என ஆரம்பத்தில் அழைப்பு கிடைக்கவில்லையா?**

அவ்வாறு பேசுவதற்கு எந்த தேவையுமில்லையே. அவர் தனியான போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றார். அவரைச் சுற்றியிருந்தது ராஜபக்ஷக்கள். அவர் கடினமான வேலையைச் செய்ய வேண்டியிருந்தது. அவர் வெற்றிபெற்றார். இனி ராஜபக்ஷக்கள் முடிந்தார்கள். இன்னும் சில நாட்களின் பின்னர் எதிர்க்கட்சியும் முடிந்துவிடும். இதனை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

**நீங்கள் நிபந்தனையின்றி இணைந்ததாகச் சொன்னீர்கள். உண்மையில் எந்த நிபந்தனைகளும் இல்லையா? குறைந்த பட்சம் அமைச்சுப் பதவியாவது?**

என்னிடத்தில் தனிப்பட்ட நிபந்தனைகள் எதுவுமில்லை. இன்று வரைக்கும் நான் என்னைப் பற்றியோ, சதுரவைப் பற்றியோ ஒரு வார்த்தைகூட பேசவில்லை. எனக்கு என்ன கிடைக்கும், எனக்கு எந்தப் பகுதி கிடைக்கும், எனக்கு என்ன அமைச்சுப் பதவி கிடைக்கும் என்ற எந்த விடயங்களைப் பற்றியும் நான் பேசவில்லை. நான் பேசியது எனது நாட்டைப் பற்றியும், என்னைத் தெரிவு செய்த மக்களைப் பற்றியும் மாத்திரம்தான்.

**ஜனாதிபதித் தேர்தல் வெற்றி தொடர்பில் என்ன கூறப் போகின்றீர்கள்?**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரலாற்றில் மிகவும் கூடிய வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற ஜனாதிபதியாவார். நான் ஜனாதிபதிகளுக்கு ஆரம்பத்தில் கூறிய கணிப்பீடுகள் தற்போது சரியாகியிருக்கின்றன. எனவே எனது இந்தக் கணிப்பீடும் பிழையாகாது.

**தற்போதைய ஜனாதிபதியின் பொருளாதார வேலைத்திட்டங்களை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

நான் அவரை மிகவும் பாராட்டுகின்றேன். அமெரிக்காவின் செனட் சபையின் செயலாளர் கூறுவதைப் போன்று இது பொருளாதார அதிசயமாகும். இதை விட எம்மால் கூறுவதற்கு எதுவுமில்லை.

**எனினும் தம்மிடம் மிகச் சிறந்த பொருளாதார நிபுணர்கள் குழு உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி கூறுகின்றதே?**

முன்னாள் அமைச்சர் ஒருவர் இருக்கிறாரா? கபீர் ஹசீமும் கூட அமைச்சரானது 2015ஆம் ஆண்டு நாம் அரசாங்கத்தை அமைத்ததனால் தானே. அன்று நாம் வெளியேறி அரசாங்கத்தை அமைத்ததனால்தானே சஜித் பிரேமதாசவும் அமைச்சரானார்.

ஒருபோதும் அமைச்சுப் பதவியை வகிக்காதவர்கள் எவ்வாறு நிதி அமைச்சை முன்னெடுத்துச் செல்ல முடியும்? நிதி அமைச்சு என்பது மிகவும் சிக்கல் மிக்கது. இதற்கு அவர்களிடத்தில் இருக்கும் அனுபவம் என்ன?

**முன்னாள் அமைச்சர்கள் மனுஷாவுக்கும் ஹரினுக்கும் ஏற்பட்ட நிலை உங்களுக்கும் ஏற்பட்டால்?**

அதுவொரு பிரச்சினையல்ல. மக்களே எம்மை பாராளுமன்றத்திற்கு அனுப்பினார்கள். இது எங்களின் பெற்றோர்கள் எமக்கு வழங்கிய சொத்து அல்லவே. 30 ஆண்டுகளாக எனக்கு வாக்களித்த மக்கள் என்னைக் கைவிட மாட்டார்கள். நான் கலந்து கொள்ளாத திருமண வீடுகளோ, மரண வீடுகளோ, விழாக்கள் நடக்கும் வீடுகளோ இல்லை. யார் வராவிட்டாலும் அமைச்சர் ராஜித வருவார் என அந்த மக்கள் நம்புகின்றனர்.

**கட்சியோடு மீண்டும் இணைந்து கொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சக்தியிடமிருந்து அழைப்பு வந்தால்?**

இப்போது இந்த முடிவை எடுத்த பிறகு, மீண்டும் வருமாறு அவர்கள் அழைக்கப் போவதில்லை. எனவே, ஜனாதிபதியும் என்னை பிரமாண்டமான முறையில் வரவேற்றார். கங்காராமவில் என்னை வரவேற்க பெருமளவிலான தேரர்கள் வந்திருப்பதை அனைவரும் பார்த்தர்களே. என் மாவட்டத்திலிருந்து யாரும் போகாமல் அங்கு கூட்டம் நிரம்பியிருந்தது.

**நீங்கள் வெளியேறியதன் வெற்றிடத்தை நிரப்புவதற்காக மற்றொரு பிரபலமான பாட்டலி சம்பிக மீண்டும் ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்துள்ளாரே?**

ஆமாம். என்ன நடக்கப் போகிறது எனப் பார்ப்போம். நான் வந்தது நிபந்தனைகளை விதித்து அல்ல. நாட்டைப் பற்றிய நிபந்தனைகளுடனேயே இணைந்து கொண்டுள்ளேன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் முன்னேறிச் செல்வது இலகுவானது.

எதிர்க்கட்சியிலிருந்து இன்னும் பல பிரபலங்கள் அரசாங்கத்துடன் இணையவுள்ளதாக கடந்த காலங்களில் பல்வேறு கதைககள் பேசப்பட்டதே. இன்னும் யார் இந்தப் பக்கத்திற்கு வர இருக்கிறார்கள்?

இன்னும் பலர் வரவிருக்கின்றார்கள். அவர்கள் தற்போது பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். அவர்கள் விரைவில் இணைந்து கொள்வார்கள்.

சுபாஷினி ஜயரத்ன
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

# வங்காளதேச ஆட்சி மாற்றம் மேற்குலக நலனுக்கானதா?



தென்னாசிய பிராந்திய அரசியலில் பங்களாதேஷ் முன்னர் இலங்கைத்தீவு அடைந்திருந்ததைப் போன்று அரசியல் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இலங்கை தீவானது பொருளாதாரத்தை மையப்படுத்தி அத்தகைய நெருக்கடியை எதிர்கொண்ட போதும், பங்களாதேஷ் பலமான பொருளாதாரக் கட்டமைப்பை கொண்டிருந்த போதும், மேற்குலக நாடுகளின் கட்டுப்பாட்டுக்குள் செயல்பட முடியாத சூழலில் நெருக்கடி மிக்க அரசியலை அதன் ஆட்சியாளர்கள் எதிர் கொண்டனர். இதன் விளைவையே முன்னாள் பிரதமர்ஷேக் ஹசீனா சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்து சமுத்திரப் பிராந்தியம் இந்தோ பசுபிக் தந்திரோபாயம், குவட், கட்டமைப்பிலும், சீனாவின் பட்டி மற்றும் பாதை முன்முயற்சியிலும் ஏறக்குறைய மூழ்கிப்போயிருக்கின்ற பிராந்தியமாக அல்லது பிராந்தியங்களில் ஒன்றாக காணப்படுகின்றது. இதில் பிரதானமாக மேற்கு வல்லரசுகளும் ஆசியாவின் இரு பிரதான வல்லரசுகளும் மோதுகின்ற மைய பிரதேசமாக இந்து சமுத்திரம் காணப்படுகிறது. பங்களாதேஷ் மீதான நெருக்கடி என்பதும் இந்து சமுத்திர அரசியலின் நீட்சியாகவே காணப்படுகிறது. இக்கட்டுரையும் அத்தகைய முயற்சியின் பிரதிபலிப்புகளை தேடுகின்ற விதத்தில் வடிவமைக்கப்படுகிறது.

பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கம் பதவியேற்ற பின்னர் இந்து மதத்தவருக்கு எதிரான பகைமை தீவிரமடைந்து வருகின்றது. இதுவரை இருநூறுக்கு மேற்பட்ட கலவரங்கள் நிகழ்ந்துள்ளதாகவும், இந்துக்கள் கொல்லப்படுவதும் அவர்கள் சொத்துக்கள் திருடப்படுவதும் பாரிய நெருக்கடியாக இடைக்கால அரசாங்கம் எதிர்கொண்டிருக்கிறது. இடைக்கால அரசாங்கத்தின் தலைவராக பதவி ஏற்றுள்ள நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் இந்துக்கள் மீதான வன்முறையைக் கைவிடுமாறும் அமைதியான வழியிலும் சமாதானபூர்வமாகவும் பிரச்சினைக்குரிய தீர்வை எட்ட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால் இந்துக்கள் மீதான வன்முறையில் பாரிய அழிவுகளையும் புலப்பெயர்வுகளையும் ஆரம்பித்திருப்பதோடு இதுவரையில் பலர் கொல்லப்பட்டும் பலர் காணாமல் போயும் உள்ளதாக தெரியவருகிறது. இராணுவத்தால் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. இந்துக்கள் மீதான வன்முறை, பிராந்திய அரசியலில் குறிப்பாக இந்திய அரசியலில் அதிகமான நெருக்கடியை உருவாக்கியுள்ளது. முன்னாள் பங்களாதேஷ் பிரதமர் தஞ்சமடைந்திருக்கும் தேசமாக இந்தியா இருப்பதும் இந்தியாவில் ஓர் இந்து மத ஆட்சி முறை இருப்பதும் பங்களாதேஷ் வன்முறைக்கு பின்னால் இருக்கக்கூடிய வலுவான காரணங்களாக கருதப்படுகிறது. ஆனாலும் பங்களாதேஷ் வன்முறை என்பது ஒரு தனித்துவமான சர்வதேச அரசியல் விடயத்தோடு பின்னிப்பிணைந்ததாகவும் இந்து சமுத்திர அரசியலோடு ஒன்றிணைந்து இருப்பதாகவும் அடையாளப்படுத்தப்படுகிறது. அதனை விரிவாக நோக்குவது அவசியமானது

முதலாவது மாணவர்களுடைய எழுச்சி பிரதமர் ஷேக் ஹசீனாவினுடைய ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்தது. மாணவர்கள் தீவிர எதிர்ப்புகளை காட்டியதோடு, பிரதமர் அலுவலகத்தை முற்றுகையிடவும் வழியமைத்தது. இலங்கையில் எழுச்சி பெற்ற அரகலய புரட்சி போன்று ஒரு புரட்சியை பங்களாதேஷ் பல்கலைக்கழக மாணவர்கள் திட்டமிட்டிருந்தனர். அதன் விளைவாக ஆட்சியை விட்டு ஹசீனா வெளியேறியது மட்டுமல்ல, இராணுவம் ஆட்சியை கைப்பற்றியதும், மீண்டும் பங்களாதேஷ் ஒரு நெருக்கடி மிக்க சூழலுக்குள் அகப்பட்டுள்ளது. அத்தகைய நிலையில் இதனை எதிர்கொள்ளுகின்ற விதத்தில் அமைதியையும் சமாதானத்தையும் உறுதியான ஒரு ஆட்சியையும் கட்டமைக்கும் விதத்தில் நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் இடைக்கால ஆட்சியை பொறுப்பேற்கின்ற நிலை ஏற்பட்டது. முகமது யூனுஸ் நோபல் பரிசு பெற்றவர் என்பது மட்டுமின்றி அத்தகைய பரிசுக்கு பின்னால் இருக்கக்கூடிய மேற்குலகமும் அதன் தேவைப்பாடுகளும் ஹசீனாவினுடைய ஆட்சி மீதான குழப்பத்திக்கு பின்னால் இருந்த காரணி என்ற உரையாடல் அல்லது விவாதம் தவிர்க்க முடியாததாக எழுந்துள்ளது. பங்களாதேஷ் மக்கள் நீண்ட வரலாற்று ரீதியான புரட்சி தொடர்பில் ஆழமான கரிசனை கொண்டவர்கள். மட்டுமின்றி இராணுவ ஆட்சிக்குள்ளும் அடக்குமுறைகளுக்கும் அகப்பட்டு எழுந்துவந்த ஒரு தனித்துவமான மக்களாக இனம் காணப்படுகின்றனர். புரட்சியை மாணவர்கள் முன்னெடுக்கின்ற போது அதனை எதிர்கொள்ள இந்த விதத்தில் ஆட்சி முறையில் இலகுவான ஒரு மாற்றத்தை மேற்கொள்ளவும் அதற்கு வழி விடவும், வங்காளதேச இராணுவம் உதவியுள்ளது. இது அந்த மக்களின் அல்லது இராணுவத்தின் ஆட்சியினுடைய உறுதிப்பாட்டை ஏற்படுத்துகின்ற விதத்துக்கான அரசியல் கலாசாரமாக புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஆனால் அத்தகைய சூழல் ஒர் ஆரோக்கியமான ஆட்சியை கட்டமைப்பதற்கான சூழலை இடைக்கால அரசின் மூலம் நிறுவ முயன்றது. இத்தகைய இடைக்கால அரசு மேற்கு நாடுகளுடைய ஒத்துழைப்பில் உருவானது என்ற விவாதம் பங்களாதேஷ் மக்கள் மத்தியில் மட்டுமின்றி சர்வதேச மட்டத்திலும் அவதானிக்கப்படுகின்ற ஓர் அம்சமாகவே விளங்குகிறது.

இரண்டாவது பங்களாதேஷின் புதிய அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அதன் மீதான விமர்சனத்தை முன்னாள் பிரதமர் ஹசீனா முன்வைக்கின்ற போது அமெரிக்காவே தன்னுடைய ஆட்சியை கலைத்ததற்கான பின்னணியில் இருந்த நாடு என்று குறிப்பிட்டார். பங்களாதேஷுக்கு சொந்தமான செயின்ட் மார்ட்டின் என்ற தீவினை அமெரிக்கா கோரியதாகவும்; தனது அரசாங்கம் அதனை வழங்க மறுத்ததன் பிரதிபலிப்பாகவே தன்னுடைய ஆட்சி கலைக்கப்பட்டது எனவும் ஹசினா இந்தியாவில் இருந்து வெளிப்படுத்தியுள்ளார். இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் சீனாவுக்கும் இடையில் ஒரு நீண்ட உறவு முறையும் முரண்பாடும் புவி தொடர்ச்சியும் பரஸ்பரம் அதிக குழப்பங்களை ஏற்படுத்துகின்ற விதத்தில் காணப்பட்டது. இதனால் இத்தகைய குழப்பங்களை சரி செய்து கொள்வதற்கு எடுக்கப்பட்ட ஒரு நகர்வாக கூட உரையாடல் அல்லது விமர்சனம் எழுந்திருந்தது. ஆனால் ஷேக் ஹசினாவில் அமெரிக்கா பற்றிய அதிர்ச்சிகரமான உரையாடல்கள் தகவல்கள் பங்களாதேஷினுடைய அரசியலில் இந்தியா, சீனா மட்டுமன்றி அமெரிக்காவும் ஒரு முக்கிய சக்தி என்பதை கோடிட்டுக் காட்டியது. இதனால் இந்து சமுத்திர அரசியலில் பங்களாதேஷினுடைய கடந்த கால அணுகுமுறைகள் சீனா சார்ந்து இந்தியா சார்ந்த வடிவமைக்கப்பட்டு இருந்தது என்பதும் அதிலிருந்து ஒரு மாற்றத்தை இந்து சமுத்திரம் சார்ந்து அமெரிக்கா முன்னெடுக்கின்ற போது அதனை எதிர்கொள்ள வேண்டிய தேவைப்பாடு பங்களாதேஷுக்கு தவிர்க்க முடியாமல் உள்ளது. இத்தகைய சூழலுக்கு இந்து சமுத்திரம் மீது அமெரிக்கா கொண்டிருக்கின்ற கரிசனையும் அதன் போட்டியாளர்களுமே அடிப்படை காரணமாக தென்படுகின்றது. இத்தகைய அனுபவமே இலங்கை தீவிலும் கடந்த காலங்களில் ஏற்பட்டது இலங்கை தீவினுடைய அரசியல் அறகலய என்று அழைக்கப்பட்ட போராட்டமாக அமைந்த போதும் அதனுடைய விளைவை மேற்குலக நலன் விரும்பிகளே கைப்பற்றுகின்ற சூழல் ஏற்பட்டது. எனவே இத்தகைய சூழலுக்கான பின்புலம் ஒன்றை முகமது யூனுஸிடைய இடைக்கால தெரிவு சாத்தியப்படுத்தி இருக்கின்றது. வெள்ளை மாளிகை ஹசினாவினுடைய குற்றச்சாட்டை நிராகரித்த போதும் நடைமுறையில் பங்களாதேஷில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்கள் சுதேச அரசியலின் இருப்பையும் ஆட்சிமுறையினுடைய அடிப்படையில் தகர்ப்பதாகவே காணப்படுகிறது. ஆகவே அந்த நோக்கு நிலையில் பங்களாதேஷினுடைய ஆட்சியானது மேற்கு நலனுக்கு அகப்பட வேண்டிய தேவைக்குள் நகருகின்றது. இதில் இந்தியா சீனா மேற்கொள்ள இருக்கின்ற உத்திகளை பொறுத்தே பங்களாதேஷினுடைய எதிர்காலம் கட்டமைக்கப்பட உள்ளது.



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

மூன்றாவது பங்களாதேஷினுடைய புரட்சியானது, மாணவர்கள் ஆட்சி மாற்றத்தை திட்டமிட முயன்ற போதும் அத்தகைய ஆட்சி மாற்றம் மேற்குலக நலன் விரும்பிகளின் ஆட்சியாகவே மாறி இருக்கின்றது. இதனால் மாணவர்களுடைய புரட்சி நீண்ட காலமாக வளர்ந்து இருந்த இந்துக்கள் மீதான வன்முறையாக திசைதிருப்பல் வடிவம் கொண்டுள்ளது. இத்தகைய வடிவத்தின் ஊடாக புரட்சி தன்னுடைய போக்கினை திசை திருப்பவும் புதிய வழிமுறைகள் உடனாக பிரச்சினைக்கு உரிய தீர்வை எட்டவும் அல்லது பிரச்சினைக்குரிய நிலைத்திருப்பை கட்டமைக்கவும் மேற்குலக நாடுகள் திட்டமிடுவதாக தெரிகின்றது. இதில் இந்தியாவினுடைய அணுகுமுறை தற்போது வரைக்கும் எந்தவிதமான வெளிப்படுத்தலையும் கொண்டிருக்காதுள்ளது. இது ஒரு அபாயமான அரசியல் சூழலாகவே தென்படுகின்றது. இந்து முத்திரம் நோக்கிய போட்டித் தன்மையில் அதன் விளிம்பு நாடுகளும் அதனுடைய மையப் பகுதிகளை கொண்டு இருக்கின்ற நாடுகளும் ஒவ்வொரு சர்வதேச சக்திகளாலும் கையாளப்படுகின்ற துயரம் தவிர்க்க முடியாதாக மாறி உள்ளது

எனவே இந்த சமுத்திர அரசியலின் விளிம்பில் சிக்கியுள்ள அரசுகளின் பட்டியலில் பங்களாதேஷும் ஒன்றாக மாறியுள்ளது பங்களாதேஷினுடைய இருப்பு உறுதித்தன்மை, பொருளாதார பலம் என்பன அந்த தேசத்தில் நெருக்கடியையும் ஆட்சிக் குழப்பத்தையும் ஏற்படுத்தவில்லை. மாறாக இட ஒதுக்கீடு என்ற ஒரு அம்சம் மாணவர்களுடைய எழுச்சியை தூண்டியதோடு, அது தற்போது இந்துக்கள் மீதான திசை திருப்பலாக மாறி உள்ளது. இந்தப் புரட்சி ஆனது எந்தவிதமான நியாயப்பாடுகளையும் தெளிவான உத்திகளையும் கொண்டிராத அணுகுமுறையுடன் நகருகின்றது. இது படிப்படியாக தெனாசிய நாடுகளை ஸ்திரமற்றதாக்குவதும் குழப்பத்துக்கு உள்ளாக்குவதும் அதன் மூலம் மேற்குலக நலனை நிறைவு செய்து கொள்வதுமான உத்தியாகக் காணப்படுகிறது.



# இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல்கள்

## ஒரே பார்வையில்...

**இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள்**

01. திலித் சுசந்த ஜயவீர
02. சரத் மனமேந்திர
03. அபூபக்கர் முஹம்மட் இன்பாஸ்
04. ஏ. எஸ். பி. லியனகே
05. பாணி விஜேசிறிவர்தன
06. பிரியந்த புஸ்பகுமார விக்ரமசிங்க
07. அஜந்த டி சொய்சா
08. பத்தரமுல்லே சீலரதன தேரர்
09. சரத் பொன்சேகா
10. நுவன் சஞ்ஜீவ போபகே
11. ஹிட்டிஹாமிலாகே தொன் ஒஷல லக்மால் அனில் ஹேரத்
12. ஜனக பிரியந்த குமார ரத்நாயக்க
13. கே. கே. பியதாச
14. மயில்வாகனம் திலகராஜா
15. சிறிபால அமரசிங்க
16. பாக்யசெல்வம் அரியனேந்திரன்
17. சரத் கீர்த்திரத்ன
18. கே. ஆனந்த குலரத்ன
19. நாமல் ரஜபக்ஷ
20. அக்மீமன தயாரத்ன தேரர்
21. கே. ஆர். கிசான்
22. கொல்கம்பள ராலலாகே சமிந்த அனுருத்த
23. விஜேயதாச ராஜபக்ஷ
24. அனுர சிட்னி ஜயரத்ன
25. சிறிதுங்க ஜயசூரிய
26. மஹிந்த தேவகே
27. முஹம்மது இல்யாஸ்
28. லக்ஸ்மன் நாமல் ராஜபக்ஷ
29. எண்டனி விக்டர் பெரேரா
30. கீர்த்தி விக்ரமரத்ன
31. சஜித் பிரேமதாச
32. ரணில் விக்கிரமசிங்க
33. மரக்கலமானகே பிறேமசிறி
34. லலித் டி சில்வா
35. பீ. டப்ளிவ். எஸ். கே. பண்டாரநாயக்க
36. டீ. எம். பண்டாரநாயக்க
37. அனுர குமார திசாநாயக்க
38. அகம்பொடி பிரசங்க சுரஞ்ஜீவ அனோஜ் டி. சில்வா
39. அனுருத்த ரணசிங்க ஆராச்சிகே ரொசான்



**★ 1988 ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர்கள் மூவர்.**
**★ 1999 மற்றும் 2005 இரண்டு ஜனாதிபதி தேர்தல்களிலும் வேட்பாளர்கள் எண்ணிக்கை 11 பேர்**
**★ 2010இல் 22 வேட்பாளர்கள்.**
**★ 2015இல் 19 வேட்பாளர்கள்.**
**★ 2019இல் 35 வேட்பாளர்கள்.**

நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி முறை அரசியலமைப்பில் உள்ளீர்க்கப்பட்டதன் பின்னர், இந்நாட்டில் முதற்தடவையாக 1982இல் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டது. 1978இல் தேர்தல் இல்லாமல் இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகிய ஜே. ஆர். ஜயவர்தன மற்றும் பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் ஹெக்டர் கொப்பகடுவ ஆகியோர் பிரதான வேட்பாளர்களாக போட்டியிட்டனர். இந்த ஜனாதிபதி தேர்தலில் ஜே. ஆர். ஜயவர்தன 52.91% வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றதோடு, எதிரணி வேட்பாளர் ஹெக்டர் கொப்பேகடுவ 39.07% வாக்குகளைப் பெற்றிருந்தார்.

பிரதான வேட்பாளர்களைத் தவிர, ஜே.வி.பியை பிரதிநிதித்துவப்படுத்திய ரோஹன விஜேவீர, இலங்கை தமிழ் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்திய குமார் பொன்னம்பலம் மற்றும் சமசமாஜ கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய கொல்வின் ஆர்.டி.சில்வா ஆகியோர் முறையே மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் இடங்களைப் பெற்றனர்.

பொதுவாக, இலங்கை அரசியல் கடந்த ஆறு தசாப்த காலத்தினுள் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிகளை பிரதானமாகக் கொண்ட கட்சிக் கட்டமைப்பினாலேயே தீர்மானிக்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் மற்ற கட்சிகளும் அந்தக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்தாலும், இரண்டு பிரதான கட்சிகளாக இந்தக் இரு கட்சிகளுமே இருந்தன.

எனினும், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அது மாறியதோடு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகிய பொதுஜன பெரமுன, அந்தத் தேர்தலில் முன்னிலை பெற்றது. மக்கள் விடுதலை முன்னணியும் அந்தத் தேர்தலில் வரலாற்றில் முதற்தடவையாக கூட்டணி அமைத்து தேர்தலில் போட்டியிட்டது.

பொதுவாக, இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில், மிக அதிக அளவிலான வேட்பாளர்கள் போட்டியிடுவது, அண்மைக்காலமாக காணக்கூடிய ஒரு தனித்துவமான போக்காகும்.

ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக போட்டியிட இரண்டு வழிகள் உள்ளன. அது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளராக போட்டியிடுவது அல்லது சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுவதாகும்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியில் இருந்து போட்டியிடும் வேட்பாளர்கள் ரூபா 50,000 ஐ வைப்புத் தொகையாகவும், சுயேச்சை அல்லது பிற அரசியல் கட்சிகளில் இருந்து போட்டியிடும் வேட்பாளர்கள் ரூபா 75,000ஐ பாதுகாப்பு வைப்புத் தொகையாகவும் தேர்தல் அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.

ஒருபுறம், பிரதான வேட்பாளர்கள் அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கத்துடன் போட்டியிடுவதோடு, ஏனைய சிலர் மாற்றுக் கருத்துக்களின் அடிப்படையில் ஜனாதிபதி வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர்.

இதனிடையே, மற்றொரு சிறப்புக் குழுவினர் பிரதான வேட்பாளர்களுக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்காக போட்டியிடுகின்றனர்.

1988 ஜனாதிபதித் தேர்தலில் மூன்று வேட்பாளர்கள் மட்டுமே போட்டியிட்டனர். இந்த நாட்டில் மிகக் குறைவான வேட்பாளர்களைக் கொண்ட ஜனாதிபதித் தேர்தல் அது. 1994ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு சுயேச்சை வேட்பாளர்கள் போட்டியிட்டனர். 1999 மற்றும் 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் தலா 13 வேட்பாளர்கள் போட்டியிட்டிருந்தனர்.

2010 ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்திருந்தது.

14ஆம் பக்கம் பார்க்க..

அனுராதா சேனாரத்ன
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

## ஜனாதிபதி பதவியைக் கேட்போர்

# 2025ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை எவ்வாறு தயாரிப்பர்?

அரசாங்கத்தின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டச் செயற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பொருளாதாரம் நெருக்கடியான நிலையில் இருந்த போதிலும், அரசு ஊழியர்களுக்கு 10,000 ரூபாவினை வழங்கி, பொருளாதாரம் மேம்படும் போது இன்னும் கூடுதல் நிவாரணம் வழங்கப்படும் என்று அரசாங்கம் கூறியது. அதனடிப்படையில், பொருளாதாரம் படிப்படியாக முன்னேற்றம் அடையும் போது, அரச ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிபுணர் குழுவொன்றை நியமித்தார். அதன்படி நிபுணர் குழுவின் பரிந்துரைகளை 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்துடன் நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன்படி, எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அனைத்து அரச ஊழியர்களின் சம்பளம் 24% இல் இருந்து 35% ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

அதேபோன்று 2025ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கருதி மூன்று வருட காலத்திற்கு வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை 25,000 ரூபாவாக அதிகரிக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதனடிப்படையில், அரசாங்கத்தின் கீழ் மட்ட அரச ஊழியரின் மாதச் சம்பளம் 55,000 ரூபாவாக அதிகரிக்கும். அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 5,018 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இத்தொகையினை ஈட்டிக் கொள்வதற்காக, சர்வதேச நாணய நிதியம் வரவு செலவுத்திட்டத்திற்கு உதவி செய்வதற்கு ஒப்பந்தம் செய்துள்ளதோடு, சர்வதேச நாணய நிதியம் 700 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க உள்ளது.உலக வங்கி 400 மில்லியன் வழங்கவுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 300 மில்லியன் டொலர்கள் கிடைக்கும். இதனடிப்படையில் கிடைக்கப்பெறவுள்ள கடன் நிவாரணம் 3,655 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

இதனடிப்படையில் அரசாங்கத்தின் 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட ஆயத்தங்கள் இவ்வாறே இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலின் மூலம் நாட்டை ஆட்சி செய்வதற்கு அதிகாரம் கோரும் ஏனைய அரசியல் கட்சியினர், இன்னும் 100 நாட்களில், அதாவது ஜனவரி 1ஆம் திகதி முதல் இந்நாட்டின் பொருளாதாரத்தை நிர்வகிப்பதற்கான வரவு செலவுத் திட்டத்தை எவ்வாறு சமர்ப்பிப்பார்கள் என தினகரன் அவர்களிடம் வினவிய போது அவர்கள் தெரிவித்த கருத்துக்களை இங்கு தருகின்றோம்.

## மூலோபாய திட்டமிடலுடன் கூடிய வரவுசெலவுத் திட்டம் அவசியம்

**திலித் ஜயவீர, சர்வ சக்தி கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர்**



நாங்கள் முன்வைத்துள்ள வேலைத்திட்டத்தினுள் மூலோபாய திட்டங்கள் அடங்கியுள்ளன. இனிமேல், வரவு செலவுத்திட்டத்தை முன்வைப்பதாக இருந்தால், அந்த மூலோபாய திட்டங்களுக்கு வெளியே சென்று எதுவும் செய்ய முடியாது. இவ்வளவு காலமும் இந்த நாட்டின் வரவு செலவு திட்டம் அன்றைய கால கட்டத்துக்கு ஏற்பவே முன்வைக்கப்பட்டது. அதில் எந்த திட்டங்களும், எதிர்கால நோக்குகளும் இல்லை.

இதுவரை காலமும் நாட்டின் அனைத்து நிறுவனங்களுக்கும், ஒவ்வொரு துறைக்கும் ஏற்படும் பாதிப்பு குறித்து சரியான புரிதல் இல்லாமல் நாட்டின் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் இதற்கு, மூலோபாய திட்டமிடலுடன் கூடிய ஒரு திட்டம் அவசியம்.

தற்போதுள்ள முறைப்படி வரவு செலவுத் திட்டத்தை தொடர்ந்து தயாரித்தால் இந்த நாடு மேலும் அதல பாதாளத்திற்கு செல்லும். அவ்வாறு சென்றால் கடனை செலுத்த முடியாது. கடன் வலையில் சிக்கிக் கொள்ளும் நிலையே ஏற்படும்.

## சில்லறைக் கடையைப் போன்று நாட்டின் பொருளாதாரத்தைக் கையாள முடியாது

**கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ, ஜனாதிபதி சட்டத்தரணி, தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர்**



அடுத்த வரவு செலவுத்திட்டம் தொடர்பில் இதுவரை யாரும் சரியாகக் கணக்கிடவில்லை. வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையினை ஈடுகட்ட தற்காலிக தீர்வுகள் பயன்படுத்தப்பட வேண்டும். எனினும், நாடு விழுந்துள்ள படுகுழியில் இருந்து மீள வேண்டுமானால், முறையான நிதிக் கொள்கை இருக்க வேண்டும். தற்போதுள்ள விவசாயக் கொள்கை, கைத்தொழில் கொள்கை, நிதிக் கொள்கையை மாற்றாமல் இந்த நாட்டை ஒருபோதும் மீட்க முடியாது. இதனை ஒரே யடியாக செய்ய முடியாது. நிதிக் கொள்கை முற்றிலும் மாற்றப்பட வேண்டும். அந்நிய செலாவணி முறைகேடுகளால் தான் நாடு இந்த நிலைக்குள்ளானது. இதை நான் கணக்கு விபரங்களுடன் பாராளுமன்றத்தில் முன்வைத்தேன். அதனை யாரும் விவாதிக்க முன்வரவில்லை. 2006ஆம் ஆண்டு முதல் அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் முறையாகப் பின்பற்றப்படாததால் நாட்டுக்குக் கிடைக்கவேண்டிய அந்நிய செலாவணி கிடைக்காமல் போனது. எனவே முதலில் நாட்டுக்கு அந்நிய செலாவணியைக் கொண்டு வருவதற்கான முறையான அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

## இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவோம்


**ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார**



நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பாக பாரிய திட்டம் செயல்படுத்தப்படும். இது தொடர்பாக நாங்கள் ஏற்கனவே விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளோம். அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்காக நாம் செயற்பட்டு வருவதோடு, இந்த நாட்டில் சமூக சந்தை பொருளாதார அமைப்பை உருவாக்குவோம். அதேபோன்று இந்த சமூக சந்தைப் பொருளாதார அமைப்பின் கீழ், சகலரும் சமத்துவமாக வாழும் பொருளாதாரத்தை உருவாக்குவோம். தற்காலிகமாக சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. வாழ்க்கைச் செலவு உயர்ந்தால் மக்கள் வாழ முடியாது. தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை நவதாராளவாதக் கொள்கையாகும். ஆனால், நிவாரணங்களை வழங்கும் பொருளாதார முறைக்குப் பதிலாக, மக்கள் சொந்தக் காலில் நிற்கக்கூடிய பொருளாதாரத்தை நாங்கள் ஏற்படுத்துவோம். கைத்தொழில், தொழிநுட்ப உற்பத்தி மற்றும் முதலீடுகளை அதிகரிப்பதன் மூலம் உள்ளூர் கைத்தொழில்களை மேம்படுத்துவதுடன் எதிர்காலத்தில் இந்நாட்டில் பாரிய பொருளாதார மாற்றமும் உருவாக்கப்படும்.

## நிதி கிடைப்பதற்கு ஏற்பவே சம்பளம் அதிகரிக்கப்படும்

**தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா**



தேர்தலுக்கு முன் அனைவரும் வாக்குறுதிகளை வழங்கினாலும், தேர்தலுக்குப் பின் அந்த வாக்குறுதிகள் அனைத்தும் வெவ்வேறு கதைகளைக் கூறி மீறப்படுகின்றன. தேசிய மக்கள் சக்தியாகிய நாம் வாக்குறுதிகளை வழங்கி அரசியல் செய்வதில்லை. நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான திட்டம் எங்களிடம் உள்ளது. நாட்டின் மிகவும் ஏழை மக்களுக்கு இப்போது வழங்கப்படும் நிவாரணங்கள் அவர்கள் வாழப் போதுமானதாக இல்லை. ஏழை எளிய மக்களுக்கு கூடுதல் நிவாரணங்களை வழங்க வேண்டும். மேலும், மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரிச்சுமையை குறைக்க வேண்டும். நாங்கள் ஏற்கனவே இதனைக் கூறியுள்ளோம். தற்போதுள்ள உழைக்கும் போதான ஒரு இலட்சம் ரூபா வரி இரண்டு இலட்சம் ரூபாவாக உயர்த்தப்படும். அதன்பின்னர், கண்டிப்பாக எமது நாட்டின் கைத்தொழிலாளர்கள், தொழிலதிபர்களுக்குப் புதிய தொழில்கள் மற்றும் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்காக விசேட சலுகைகள் வழங்கப்படும். அவ்வாறில்லாமல் பொருளாதாரத்தை மீட்டெடுப்பது சாத்தியமில்லை.

தற்போதைய அரசாங்கம் எந்தவிதப் பொறுப்புக்களும் இல்லாமல் சம்பளத்தை அதிகரிப்பதாகக் கூறினாலும் அது நடைமுறைச்சாத்தியமானதாக இல்லை. வரிச்சுமையினைக் குறைத்து பொருட்களின் விலைகளைக் குறைத்து மக்களின் வாழ்க்கைச் சுமையினைக் குறைக்க முடியும். அதன் பின்னர் நிதி கிடைப்பதற்கேற்ப சம்பளத்தை அதிகரிக்க முடியும். கண்டிப்பாக அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

## வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு விரைவாக நடவடிக்கை மேற்கொள்வோம்

**பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான்ன**



அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதால் நாட்டின் வாழ்க்கைச் செலவு குறைந்து விடாது. 15 இலட்சம் அரச ஊழியர்களால் நிர்வகிக்கப்படுவது 15 இலட்சம் குடும்பங்களேயாகும்.

இலங்கையில் 61 இலட்சம் குடும்பங்கள் வாழ்கின்றன. எனவே உணவுகள், பொருட்கள் மற்றும் சேவைகளை அனைவருக்கும் வழங்கக்கூடிய பொருளாதாரத்தை உருவாக்குவதே எமது கொள்கையாகும். வாழ்க்கைச் செலவு தொடர்பில் அரசாங்கம் நியாயமான முறையில் தலையிட வேண்டும். அதற்காக அரசாங்கத்திற்கு இருக்கும் இடத்தினை நாம் அதிகூடியளவில் பயன்படுத்துவோம். தனியார் துறை, கூட்டுறவுச் சேவைகள் இதனுள் இருக்க வேண்டும். அதே போன்று, தற்போதுள்ள வர்த்தக முறையின் கீழ், தனித்து நிற்க முடியாமல், வெளியாரின் ஒத்துழைப்பு இல்லாமல் சொந்தமாக வாழ்க்கையை நடத்த முடியாத ஒரு சமூகம் உள்ளது.

விசேட தேவையுடையவர் முதல் முதியோர் வரை நோய்வாய்ப்பட்டவர்கள் வரை. அரசாங்கம் என்ற வகையில் நாம் தலையிட்டு அவர்களைக் காப்பாற்ற வேண்டும். வாக்குகளைப் பார்க்காமல், இதனை ஒரு அரசாங்கத்தின் பொறுப்பாக நாங்கள் செய்கிறோம்.

எம். எஸ். முஸப்பிர்

# ஜனாதிபதி ரணிலின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் அநுராதபுரத்தில்....





















படம்: ரஞ்ஜித் அஸங்க

# உயர் கல்வியில் புதிய மாற்றம்

## மாணவர்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவது எவ்வாறு? பல்கலைக்கழக விரிவுரையாளர் மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு

'இலங்கையின் உயர்கல்வியை அபிவிருத்தியடைந்த தேசத்திற்கு மாற்றியமைத்தல்' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளர் மாநாட்டில், விரிவுரையாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு ஜனாதிபதி இவ்வாறு பதிலளித்திருந்தார்.

**கேள்வி:** ஜனாதிபதி அவர்களே நாம் தற்போது 2024 – 2034 ஆம் தசாப்தத்தில் இருக்கின்றோம். ஆனால் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் 2023 – 2033 க்குரியது என சொல்லப்பட்டுள்ளது. முக்கியமாக இது, இலங்கையில் நடைமுறைப் படுத்தப்படும் பத்தாவது கல்விச் சீர்திருத்தமாகும். அந்தவகையில் இந்த புதிய கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பாக உங்களிடம் கேட்பதற்கு இரண்டு முக்கிய விடயங்கள் உள்ளன.

முதலாவது, ஒட்டு மொத்தக் கல்விச் செயற்பாடுகளும் மத்திய அரசிடமிருந்து விடுவிக்கப்பட்டு மாகாண சபைகளுக்கு பொறுப்பளிக்கப்படுகின்றனவா?

இரண்டாவது, இலங்கையில் தற்போது 17 தேசிய அரச பல்கலைக்கழகங்கள் காணப்படுகின்றன. இந்தப் பல்கலைக்கழகங்களை தொடர்ந்து முன்னோக்கி கொண்டு செல்வதற்கு, மாணவர் விகிதத்தின்படி பெறப்படும் ஒதுக்கீடுகள் குறித்து, புதிய கல்விச் சீர்திருத்தங்களில் ஏதாவது முடிவு எடுக்கப்பட்டுள்ளதா?

**பதில் :** பாடசாலை கல்வி தேசிய கொள்கைகளைக் கொண்டுள்ளது. 13ஆவது திருத்தத்தின் கீழ் தேசிய கல்வி நிறுவன ஆசிரியர் கல்வியைத் தவிர, பாடசாலை மற்றும் பாடசாலை நிர்வாகம் ஆகியவை மாகாண சபைகளின் கீழ் உள்ளன. ஆகையால் ஒவ்வொரு மாகாணமும் அரசியலமைப்பின் கீழ் மாகாண கல்விச் சபையை நிறுவ வேண்டும். நாம் அதை செய்ய வேண்டும். இங்கு மத்திய அரசுக்கும் இந்த நிறுவனங்களுக்கும் இடையே இழுபறி நிலை உள்ளது. எனவே இந்த முறையை மாற்றி அதனை நாம் மேம்படுத்த வேண்டும். ஏனைய நாடுகளும் அதையே செய்கின்றன. இங்கிலாந்து ஒரு கூட்டாட்சி நாடு அல்ல. இவை அனைத்தும் மாகாண சபையால் அல்ல, பிராந்திய சபையினாலேயே செயற்படுத்தப்படுகின்றது. பல நாடுகளில், இது உள்ளூர் சபைகளால் கட்டுப்படுத்தப்படுகிறது. மாகாண சபையின் ஊடாக பாடசாலைக்கு அதிகாரத்தை வழங்கலாம் என நான் பார்த்தேன். அனைத்து பாடத்திட்டங்களும், பரீட்சை திணைக்களமும் இங்கு செயற்படுத்தப்படுகின்றன. இவற்றை நாம் முறையாக செய்யாவிடின் பாடசாலைகளை எங்களால் மேம்படுத்த முடியாது.

இதனை நாம் நடைமுறைப்படுத்துவதென்பது புதிய விடயமல்ல.

தேசிய பல்கலைக்கழகம் பற்றி, பணத்தை எவ்வாறு அனுப்புவது, அந்த சதவீதம், எதிர்காலத்தில் என்ன செய்யப் போகின்றோம் என்பது தொடர்பாக நாம் கலந்தாலோசிக்க வேண்டியது அவசியமாகும். ஒரு மாணவனுக்காக பணத்தை செலுத்துவோமோ? அல்லது அந்த தொகை மாணவனுக்கே வழங்கப்படுமா? விருப்பமான அரச பல்கலைக்கழகமொன்றை தெரிவு செய்ய முடியுமா? போன்ற காரணங்கள் உள்ளன. பணத்தை வழங்குகின்றோம். இந்தப் பணத்தை பயன்படுத்துவதற்கான சிறந்த வழிவகைகள் என்ன என்பதை நாம் கண்டறிய வேண்டும்.

மேலும், அரசியலமைப்பின் கீழ் மாகாண சபைகள், பட்டம் வழங்கும் நிறுவனங்களையும் ஆரம்பிக்கலாம். பல்கலைக்கழக மானியக் குழுவின் கீழ் உள்ள, புதிய ஆணையம் ஒப்புதல் அளிக்குமாயின் ஒருவர் பல்கலைக்கழகமொன்றையும் ஆரம்பிக்க முடியும். அந்த பல்கலைக்கழகங்கள், தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும் அனைத்து பல்கலைக்கழகங்களும் இந்த ஆணையத்தின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். இதற்கும் மேலாக, தங்களைத் தாங்களே ஆதரித்து, தங்கள் சொந்த வேலையைச் செய்து பணம் சம்பாதிக்க அனுமதிக்கிறோம். நிச்சயமாக நாம் அனுமதிக்க வேண்டும். மாகாண சபை விரும்பினால் அரசாங்கத்திற்கு உதவட்டும். வடமத்திய மாகாண சபை ஏன் ரஜரட்ட பல்கலைக்கழகத்திற்கு உதவ முடியாது? ஊவா மாகாண சபை ஏன் ஊவா வெல்லஸ்ஸவிற்கு உதவ முடியாது? இதற்கு சிறந்த முறையை தெரிவு செய்ய வேண்டும்.

**கேள்வி :** நான் கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பிரேமதாஸ. தேசிய உயர்கல்விக்கான மேம்பாட்டு ஆணையத்தை செயற்படுத்துவதற்கான காலக்கெடு என்ன?

**பதில்:** ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவை வழங்குவதற்கு முன், இதற்கு பொது விவாதமொன்று நடத்துவது அவசியம். அதற்கு பின்னர், பாராளுமன்றத்தில் விவாதித்து நிறைவேற்ற வேண்டும். இதனை நடைமுறைப்படுத்துவதற்கு அதிக நேரம் எடுக்காது. எனினும் மிகவும் சர்ச்சைக்குரிய பல்வேறு முன்மொழிவுகள் மீதான பொது விவாதத்துக்கு சில காலம் தேவை என நான் நினைக்கிறேன்.

**கேள்வி:** நான் BMS பல்கலைக்கழகத்தின் மிட்செல் ஜெயவர்த்தன. எனது கேள்வி மனஅழுத்தம் பற்றியது. இலங்கையில் வருடாந்தம் சுமார் 3,000 பேர் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்று தோன்றுகிறது. அவர்களில் பெரும்பாலோர் பல்கலைக்கழகம் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆவர். புதிய சீர்திருத்தங்களின் கீழ் அதற்கான தேசிய கொள்கை அல்லது யோசனை செயல்முறை ஏதேனும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா?

**பதில் :** இளைய தலைமுறையினர் மத்தியில் மனநலம் ஒரு பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது. குறிப்பாக இந்த தொழில்நுட்ப யுகத்தில், பல நகர்ப்புற மக்கள் மன அழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றனர். எனவே, இதில் கவனம் செலுத்த வேண்டும். அதைச் சமாளிக்க, மருத்துவத் துறை, கல்வித் துறை என இரு துறைகளிலும் நிறைய முயற்சிகள் எடுக்க வேண்டியிருக்கும்.

**பதில் :** நான் முதலில் அவர்களின் உணவில் கவனம் செலுத்துகிறேன். அவர்கள் ஆரோக்கியமான உணவு உண்டு ஆரோக்கியமாக இருக்கின்றார்கள் என்பதை உறுதிசெய்ததன் பின்னர், ஏனையவற்றில் கவனம் செலுத்த முடியும்.

**கேள்வி :** நான் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலிருந்து ரவீந்திர சந்திரசாரி. பெருந்தோட்ட மாணவர்களின் கல்வித் தேவைகள் குறித்து உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றேன். இம் மாணவர்களுக்கு தமிழ் மொழியில் தொழில்நுட்ப அறிவியல், கணிதக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி தேவைப்படுகின்றது. குறைந்தபட்சம் ஒரு தொழிற்பயிற்சி நிறுவனமாவது, இரத்தினபுரியிலும் தெனியாயவிலும் நிறுவப்படவேண்டும். இவை தமிழ் மொழியில் ஆரம்பிக்கப்பட்டால் நல்லது. அதன் மூலம் அவர்களின் கல்வியை மேம்படுத்துவதுடன் எதிர்காலத்தையும் மேம்படுத்த முடியும்.

**பதில் :** இந்தப் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது, அவற்றைச் செய்ய முடியும். புதிய முறைமையை நாம் அறிமுகப்படுத்தும்போது, தொழிற்கல்லூரிகள் எங்கு இருக்க வேண்டும் என்பதை மாகாண சபையில் தீர்மானிக்க முடியும்.

அது ஒரு பிரச்சினையாக இருக்கும் என நான் நினைக்கவில்லை. ஆனால் அதற்கான முக்கிய மையங்கள் இருக்க வேண்டியது அவசியம். வணிக நகரங்களை உருவாக்கி பொருளாதாரத்தை பலப்படுத்தும் போது அந்த விடயங்கள் உங்களுக்கு கிடைக்கும். அதற்காக நாம் உழைக்க வேண்டும்.

**கேள்வி :** நான் கிழக்கு எட்ஜ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் கனக சிங்க. தற்போது அரச பல்கலைக்கழகம் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினை மாணவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதாகும். இது தொடர்பாக UGC மற்றும் CVCD உடனும் நாம் கலந்துரையாடினோம்.

பல்கலைக்கழக மாணவர்களின் பொருளாதார நிலைமை காரணமாக பல்கலைக்கழகத்திற்கு வெளியே தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக்கொள்ள முடியாதுள்ளது. இம் மாணவர்களுக்கு மஹபொல உதவித்தொகையுடன் 2000 அல்லது 2500 ரூபா நிவாரண கொடுப்பனவாக வழங்கப்படுமாயின் , அவர்கள் தகுதியான தங்கமிடத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

**கேள்வி :** நான் ரோஹறன். நுண்கலை பல்கலைகழகத்தின் துணைவேந்தர். உயர்கல்வியை சீர்திருத்தும் செயற்பாட்டில் படைப்பாக்கக் கலைகளின் இடம் பற்றியே என் கேள்வி அமைந்துள்ளது. தற்போது, நம் நாட்டில் தொழில்நுட்பத்தில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. மேலும் படைப்பு கலை ஒருங்கிணைக்கப்பட வேண்டும். எனவே, நாம் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என பரிந்துரைக்க விரும்புகிறேன்.

**பதில் :** படைப்புக் கலைக்கான சந்தை உருவாக்கப்பட வேண்டும் என நினைக்கிறேன். இலங்கையில் இது குறைவாகவே காணப்படுகின்றது. கலைத் துறைக்கு சந்தையில் கேள்வியில்லையென்றால் கலையைக்கூட பராமரிக்க முடியாமற் போகும். கலாமன்றங்கள் இங்கு எத்தகைய பங்கை வகிக்க முடியும் என்பதை நாம் ஆராய வேண்டும்.




> நான் முதலில் கவனம் செலுத்துவது மக்களின் உணவில், அவர்கள் உணவு உண்டு ஆரோக்கியமாக இருக்கின்றார்கள் என்பதை உறுதிசெய்ததன் பின்னர், ஏனையவற்றில் கவனம் செலுத்த முடியும்.

> படைப்புக் கலைக்கான சந்தை உருவாக்கப்பட வேண்டும் என நினைக்கிறேன். இலங்கையில் இது போதியளவு இடம்பெறுவதில்லை.

> குறிப்பாக இளைய தலைமுறையினர் மத்தியில் இன்று மனநலம் பாரிய பிரச்சினையாகியுள்ளது. இந்த தொழில்நுட்ப யுகத்தில், பெரும்பாலான நகர்ப்புற மக்கள் மன அழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றனர். எனவே, இதில் கவனம் செலுத்த வேண்டும்.

> வடமத்திய மாகாண சபையால் ரஜரட்ட பல்கலைக்கழகத்திற்கு உதவ முடியாதது ஏன்? ஊவா வெல்லஸ்ஸவிற்கு ஊவா மாகாண சபையால் உதவ முடியாதது ஏன்? இதற்கு சிறந்த முறையை தெரிவு செய்ய வேண்டும்.

## இலங்கையின் ஜனாதிபதித்...

*(13ஆம் பக்க தொடர்..)*

அந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை 22 ஆகும். இது 2015இல் 19 ஆகக் குறைந்த போதும், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இம்முறை, 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்காக 40 வேட்பாளர்கள் வைப்புத் தொகையினை செலுத்தியிருந்த போதிலும், அவர்களுள் 39 வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். அந்த 39 வேட்பு மனுக்களும் தேர்தல் செயலகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன்படி இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இவ்வருட ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன், வரலாற்றிலேயே அதிகளவான வேட்பாளர்கள் இந்த வருட ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

தேர்தலின் முடிவில் இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார்.

இவ்வருட ஜனாதிபதித் தேர்தலுக்கான பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. 1982ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 8,145,015 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததோடு, 2024ஆம் ஆண்டில் அது 17,140,280 ஆக அதிகரித்துள்ளது. மேலும், 2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலுடன் ஒப்பிடுகையில், இந்த வருடத்தில் புதிய வாக்காளர் பதிவுகள் 1,148,184 ஆக அதிகரித்துள்ளன.

அதனடிப்படையில் இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே.க தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுகிறார். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளரான முன்னாள் நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஆகியோர் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதாக அறிவித்துள்ளனர். பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக நாமல் ராஜபக்ஷவும் இத்தேர்தலில் போட்டியிடுகின்றார். ஜனாதிபதி ஒருவர் சுயேச்சை வேட்பாளராக போட்டியிடுவது வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி வேட்பாளராக இதற்கு முன்னர் 1999 மற்றும் 2005ஆம் ஆண்டுகளில் போட்டியிட்டுள்ளதோடு, இம்முறை அவர் மூன்றாவது முறையாக போட்டியிடுகிறார். இந்த நாட்டிலேயே அதிக முறை பிரதமராக பதவி வகித்த, நிறைந்த அனுபவங்களைக் கொண்ட ஒரு தலைவராகவும் அவர் உள்ளார்.

சஜித் பிரேமதாச இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதோடு, அவர் இரண்டாவது முறையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறார். 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த அவர், தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாக இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, சஜித் பிரேமதாசவைப் போன்று தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் களமிறங்கியுள்ளார். ஜனாதிபதித் தேர்தலில், சஜித் பிரேமதாச, ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராகப் போட்டியிட்ட கோட்டாபய ராஜஷபக்சவிடம் 13 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளால் தோல்வியடைந்திருந்தார்.

# Fresenius Medical Care Lanka உடன் கைகோர்க்கும் பவர்

உலகின் தலைசிறந்த சுகாதார பராமரிப்பு தயாரிப்புகளையும், தீர்வுகளையும் இலங்கை சமூகத்தாருக்கு தொடர்ந்து பெற்றுக் கொடுக்கும் முயற்சியின் அங்கமாக, நாட்டின் முன்னணி பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் ஒன்றாக பவர் என அறியப்படும் ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிடெட், ஜேர்மன் நாட்டு பல்தேசிய மருத்துவ சாதனங்கள் நிறுவனத்தின் இலங்கைப் பிரிவான Fresenius Medical Care Lanka (Private) Limited உடன் பங்காண்மை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது.

இலங்கையின் மாபெரும் மற்றும் சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற மருந்துப் பொருட்கள் வர்த்தக நாமங்களை ஒழுக்கமான ரீதியிலும், நம்பிக்கையை வென்ற வகையிலும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அறியப்படும் பவர், Fresenius Medical Care Lanka தயாரிப்புகளை விநியோகிக்கும் செயற்பாடுகளை, தனது பரந்த வலையமைப்பு மற்றும் நவீன டிஜிட்டல் கட்டமைப்பு மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும் வியாபார மாதிரிகளினூடாக தொடர்ந்தும் முன்னெடுக்க பங்களிப்பை வழங்கும்.

இந்த மூலோபாய பங்காண்மையானது, பகிரப்பட்ட பெறுமதிகள் மற்றும் உறுதியளிக்கும் இணைவுகள் போன்றவற்றினூடாக வலுவூட்டப்பட்டு, நோயாளர்களுக்கு மேம்படுத்திய பெறுமதியை பெற்றுக் கொடுக்கும். இலங்கையில் சிறுநீரக அழற்சி நோய் பெருமளவில் காணப்படும் நிலையில், டயல்சிஸ் தீர்வுகளை அணுகுவது முக்கியமானதாகும்.

புகழ்பெற்ற முன்னோடிகளான பவர் மற்றும் Fresenius Medical Care Lanka ஆகியவற்றுக்கிடையிலான இந்த கைகோர்ப்பினூடாக, இந்த சுகாதார பராமரிப்பு தேவையை வினைத்திறனான வகையில் நிவர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

# கட்டுமானத் துறையில் உயர்தரம்; Swisstek Ceylon PLC, சமரி இணைவு

50 வருடங்களுக்கும் அதிக வரலாற்றைக் கொண்ட, இலங்கையின் கட்டுமானத் துறையில் முன்னோடியாக விளங்கும் Swisstek Ceylon PLC நிறுவனம், இலங்கை மகளிர் தேசிய கிரிக்கெட் அணியின் உத்வேகமான தலைவியும், உலகின் முன்னணி மகளிர் கிரிக்கெட் வீராங்கனையுமான சமரி அத்தபத்துவுடன் ஒரு அற்புதமான பங்காளித்துவத்தை அறிவித்துள்ளது.

இந்நிறுவனம் Tile Adhesive மற்றும் Tile Grout ஆகிய உற்பத்திகளில் சந்தையில் முன்னணியில் திகழ்வதோடு, அதன் சந்தைப் பிரிவில் SLS சான்றிதழைப் பெற்ற முதலாவது வர்த்தக நாமமாகவும் விளங்குகின்றது. இவை உயர் தரத்தைப் பேணுவதற்காக நிறுவனம் கொண்டுள்ள உறுதிப்பாட்டை எடுத்துக் காட்டுகிறது. இலங்கையின் மீண்டுவரும் நிர்மாணத் துறையை வெற்றியை நோக்கி கொண்டு செல்வதற்கும், வாழ்விடங்களில் நீண்ட தரம் மற்றும் ஆயுளில் கவனம் செலுத்தும் ஒரு நிறுவனம் எனும் வகையில் கட்டுமானம், புனரமைப்பு நடவடிக்கைகளில் முக்கிய முடிவுகளை எடுப்பதிலான விடயங்களில் முன்னின்று ஈடுபடுவதில் ஆண், பெண் இருபாலர்களையும் வலுவூட்டுவதற்கும், ஆண்களை அதிகம் கொண்ட தொழில்துறையில் செல்வாக்கு கொண்ட பெண் ஒருவரைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த முயற்சியில் துணிச்சலான நடவடிக்கையை நிறுவனம் எடுத்து வருகிறது.




தலைமைத்துவம், சிறந்து விளங்குதல், முடிவெடுத்தல் ஆகியவற்றில் முக்கிய விடயங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம், சமரி அத்தபத்து மற்றும் Swisstek Ceylon PLC நிறுவனம் ஆகிய இரு தரப்பினரும் அந்தந்த துறைகளில் மிக உயர்ந்த தரத்தை அமைத்துள்ளனர்.

# இலங்கையில் Casio வின் அமுலாக்க நடவடிக்கை

ஜப்பானைத் தலைமையிடமாகக் கொண்ட Casio Computer Co. Ltd, இலங்கை சந்தையில் அதிகரித்து வரும்Casio வின் போலிப் பிரச்சினைகளை எதிர்த்துப் போராடுவதற்கும் அதன் நாமத்தை பாதுகாப்பதற்கும் Casio குழுமத்தின் IPஅமுலாக்கக் கொள்கையின் ஒரு பகுதியாக, இலங்கையில் ஒரு குறிப்பிடத்தக்க அமுலாக்க நடவடிக்கையை சமீபத்தில் மேற்கொண்டது.

Casio இந்தியாவுடன் இணைந்து மேற்கொண்ட இச் சமீபத்திய ஒருங்கிணைந்த முயற்சி, மார்ச் 2024 இல் இலங்கையில் உள்ள மிகப்பெரிய சில்லறை விற்பனை நிலையத்திற்குரிய மூன்று இடங்களில் ஒரே நேரத்தில் கொழும்பு குற்றப்பிரிவு சோதனைகள் மேற்கொண்டது. போலி Casio கடிகாரங்கள், முதன்மையாக GSHOCK டைம்பீஸ்கள் இதன் போது கண்டுபிடிக்கப்பட்டதோடு. இந்த நடவடிக்கையின் விளைவாக பல போலி கடிகாரங்கள் கைப்பற்றப்பட்டது மற்றும் குற்றம் சாட்டப்பட்ட நிறுவனத்தின் பிரதிநிதிகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக காவலில் வைக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து, இந்த வழக்கில் குற்றத்தை ஒப்புக்கொண்ட நிறுவனத்திற்கு அபராதமும்; விதிக்கப்பட்டது.

Casio இந்தியாவின் சட்டப் பிரிவுத் தலைவர் குர்மீத் சிங் கூறுகையில், 'Casioவில், போலிகளை ஒழிக்கவும், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அசல் Casio தயாரிப்புகளை அணுகுவதை உறுதி செய்யவும் நாங்கள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். இதுபோன்ற செயல்கள் நுகர்வோர் நலன்கள் மற்றும் பிராண்ட் ஒருமைப்பாட்டிற்கான எங்களின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. போலி விற்பனையாளர்களுக்கு எதிராக விரைவான நடவடிக்கைகளை எடுப்பதில் ஒத்துழைத்த அமலாக்க அதிகாரிகளுக்கு நாங்கள் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்" என்றார்.



# இலங்கை இதய நோயியல் வைத்தியர் நிறுவகத்துக்கு குருதி அழுத்த கண்காணிப்பு கருவிகள் அன்பளிப்பு

Terumo Corporation அதன் விநியோக பங்காளரான ஹேமாஸ் சேர்ஜிகல் அன்ட் டயக்னொஸ்டிக்ஸ் (பிரைவட்) லிமிடெட் உடன் இணைந்து, Nissei DS11 குருதி அழுத்த கண்காணிப்பு கருவிகளை இலங்கை இதய நோயியல் வைத்தியர் நிறுவகத்துக்கு அன்பளிப்பு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. புத்தாக்கமான மருத்துவ தீர்வுகளினூடாக, சமூகங்களுக்கு வலுவூட்டல் மற்றும் இருதய சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பு போன்றவற்றை இந்த நடவடிக்கை எடுத்துக் காட்டியுள்ளது.

புகழ்பெற்ற இருதய சிகிச்சை நிபுணரான வைத்தியர். டானியா பெரேராவினால் இந்தத் திட்டம் வழிநடத்தப்பட்டதுடன், இலங்கையில் இருதய நோய்கள் மற்றும் பக்கவாதம் போன்றவற்றுக்கு எதிரான போராட்டத்தின் முக்கிய மைல்கல்லாகவும் அமைந்துள்ளது. Nissei DS11 குருதி அழுத்த கண்காணிப்பு இயந்திரம், குருதி அழுத்த கண்காணிப்பு தொழில்நுட்பத்தில் முன்னோடியாக திகழ்வதுடன், பயன்படுத்த இலகுவானதாகவும், துல்லியமான பெறுபேறுகளை வழங்குவதாகவும் அமைந்துள்ளது. இந்த நவீன சாதனம் ஜப்பானில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இரத்தஅழுத்தத்துக்கான ஐரோப்பிய சங்கத்தின் சான்றிதழையும் பெற்றுள்ளது. உயர் சிகிச்சை துல்லியத்தன்மை மற்றும் தங்கியிருக்கும் திறனை வழங்குகின்றது. உயர் தரம் வாய்ந்த அளவீட்டு சாதனங்களை தயாரிப்பதில் 60 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள Nissei, சுகாதார பராமரிப்பு இனங்காணல்களில் துல்லியத்தன்மை மற்றும் நுணுக்கத்தன்மைக்கான தனது ஒப்பற்ற அர்ப்பணிப்பை மீள உறுதி செய்துள்ளது.



# 'மூலதனச்சந்தை மாஸ்டர்ஸ்' இறுதிப்போட்டிகள்

பாடசாலைகளுக்கு இடையேயான "மூலதனச்சந்தை மாஸ்டர்ஸ்" எனப்படும் மூலதனச்சந்தை கழக வினா விடை போட்டிகள் மாகாண மட்டத்தில் வெற்றிகரமாக நிறைவடைந்தன.

இவை நாடு முழுவதும் நிறுவப்பட்டுள்ள மூலதனச்சந்தை கழகங்களிலிருந்தான இளம் பங்குபற்றுநர்களின் திறமை மற்றும் போட்டி மனப்பான்மையினை எடுத்துக் காட்டின.

"மூலதனச்சந்தை மாஸ்டர்ஸ்" போட்டிகளை இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் கொழும்பு பங்குப்பரிவர்த்தனை ஆகியன கல்வி அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகத்துடன் கூட்டிணைந்து ஒழுங்குசெய்தன.

மாகாண மட்டத்திலான போட்டிகள் மிகவும் எதிர்பார்ப்புடன் காணப்படும் தேசிய மட்டத்திலான போட்டிக்கான மேடையினை அமைத்துள்ளன.

தொகுதி 03 இற்கான போட்டியில் மத்திய மாகாணத்திலுள்ள 11 முதன்மையான பாடசாலைகள் பங்குபற்றியதுடன் இது கண்டியிலுள்ள சம்பத் மண்டபத்தில் ஆகஸ்ட் 02, 2024 இல் இடம்பெற்றது.

இதில் தர்மராஜ கல்லூரி – கண்டி வெற்றியாளராக தேர்ந்தெடுக்கப்பட்டது. தொகுதி 04 போட்டியில் மேற்கு, தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலுள்ள 38 பாடசாலைகள் பங்குபற்றின. இது உலக வர்த்தக மையத்தில் ஆகஸ்ட் 05, 2024 இல் இடம்பெற்றது.

தொகுதி 04 போட்டியின் ஒட்டுமொத்த வெற்றியாளர்களாக ஆனந்தா கல்லூரியும் றோயல் கல்லூரியும் தெரிவு செய்யப்பட்டதுடன் இவ்விரண்டு பாடசாலைகளும் மேல் மாகாணத்தின் கூட்டு வெற்றியாளர்களாக பிரகடனப்படுத்தப்பட்டன.

# "ஆண்டின் சிறந்த மொபைல் App" விருதை சுவீகரித்தது அமானா தகாபுல் இன்சூரன்ஸ்

இலங்கையின் வேகமாக வளர்ந்து வரும் மற்றும் அதிகளவு விருதுகளை சுவீகரித்த நிறுவனங்களில் ஒன்றாகத் திகழும் அமானா தகாபுல் இன்சூரன்ஸ், "இலங்கையின் ஆண்டின் சிறந்த மொபைல் App" விருதை இன்சூரன்ஸ் ஏசியா விருதுகள் 2024இல் சுவீகரித்திருந்தது. வாடிக்கையாளர் அனுபவங்களை மேம்படுத்துவதற்கு நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக இந்த கௌரவிப்பு அமைந்துள்ளது.

இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு ஜுலை 9ஆம் திகதி சிங்கப்பூர் மரீனா பே சான்ட்ஸ் இல் நடைபெற்றது.

பிராந்தியத்தின் சிறந்த காப்புறுதி நிறுவனங்களின் புத்தாக்கமான பங்களிப்புகள் மற்றும் தொழிற்துறையில் கொண்டிருக்கும் தலைமைத்துவ சாதனைகளை கொண்டாடியிருந்தது.

அமானா தகாபுல் நிறுவனத்தின் டிஜிட்டல் மாற்றியமைப்பு மூலோபாயத்தின் அங்கமாக அறிமுகம் செய்யப்பட்ட மோட்டார் காப்புறுதி app கௌரவிக்கப்பட்டிருந்தது. பாவனையாளர்களுக்கு ஒப்பற்ற, பாவனையாளரை மையப்படுத்திய அனுபவத்தை பெற்றுக் கொடுப்பதில் நிறுவனம் காண்பிக்கும் அர்ப்பணிப்பு இந்த app இனூடாக பிரதிபலிக்கப்பட்டுள்ளதுடன், காப்புறுதித் துறையில் அதன் தலைமைத்துவம் மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.



அமானா தகாபுல் ஜெனரல் பிரதம நிறைவேற்று அதிகாரி சிவா கார்த்திகன் கருத்துத் தெரிவிக்கையில், "எமது மொபைல் app க்கு இந்த விருதைப் பெற்றுக் கொண்டுள்ளதையிட்டு நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம் என்றார்.

# Honor Magic 6 Pro ஸ்மார்ட்போனை வெளியிட்டது சிங்கர்

SINGER ஸ்ரீலங்கா பிஎல்சி, Junior Magic 6 Pro பிரமாண்ட வெளியீட்டின் மூலம் நாட்டில் முதன்மையான ஸ்மார்ட்போன் சாதனங்களுக்களுக்கிடையே புதியதோர் தடம் பதித்துள்ளது.Honor வரிசையில் ஸ்மார்ட்போன் கண்டுபிடிப்பு மற்றும் செயல்திறனின் உச்சத்தை இந்த சாதனம் பிரதிபலிப்பதோடு, அதன் அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் பயனாளர்களை மையமாகக் கொண்ட வடிவமைப்பிற்காகவே புகழ்பெற்றுள்ளது.



போட்டித்திறன் வாய்ந்த உயர் நிலை ஸ்மார்ட்போன் சந்தையில் ஒரு அற்புதமான புதிய வருகையாக, Honor Magic 6 Pro ஆனது, நாடு முழுவதும் உள்ள ஸ்மார்ட்போன் பயனாளர்களிடையே சிறந்த வரவேற்பை பெறும் என்பது உறுதி

SINGER குழும நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரி விஜேவர்தன கருத்துத் தெரிவிக்கையில், Honor உடனான எமது கூட்டாண்மையானது, உலகத் தரத்திலான தொழில்நுட்பத்தை இலங்கைக்குக் கொண்டுவருவதில் SINGER அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது. Honor Magic 6 Pro, அதன் ஒப்பற்ற அம்சங்கள் மற்றும் செயல்திறனுடன், உயர் நிலை ஸ்மார்ட்போன் பிரிவில் குறிப்பிடத்தக்கதொன்றாகும். இந்த புதுமையான சாதனத்தை எங்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், மேலும் இது சந்தையில் புதியதோர் தரத்தை அடையும் என்று நம்புகிறோம்."

Honor Magic 6 Pro இன் முக்கிய சிறப்பம்சமாக, புகழ்பெற்ற நுகர்வோர் மின்னணு சோதனை மற்றும் மதிப்பீடு நிறுவனத்தின், ஐந்து DXOMARK தங்க லேபிள்களின் சாதனையுடன், உலகத் தொழில் துறையில் இந்தப் பாராட்டைப் பெறும் முதல் ஸ்மார்ட்போன் இதுவாகும்.

DXOMARK, Magic 6 Pro கமரா, பேட்டரி, ஆடியோ, செல்ஃபி மற்றும் டிஸ்ப்ளே என அனைத்து மதிப்பிடப்பட்ட வகைகளிலும் தற்போது சந்தையில் உள்ள சிறந்த சாதனங்களை தட்டி தகர்த்திடும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

# காபன் நடுநிலை சான்றிதழை 3ஆவது ஆண்டாகவும் வென்ற Ex–Pack Corrugated Cartons PLC நிறுவனம்

காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதிலும், அதற்கு எதிராக போராடுவதிலும் பங்களிப்பு வழங்கும் வகையில், இலங்கையின் முன்னணி அலைவுநெளிவுள்ள பொதித் தயாரிப்புகள் உற்பத்தியாளரும், Aberdeen Holdings (Pvt) Ltd இன் துணை நிறுவனமுமான ExPack Corrugated Cartons PLC க்கு, தேசிய தூய உற்பத்தி நிலையத்திடமிருந்து (NCPC) தொடர்ச்சியான மூன்றாவது வருடமாகவும் காபன் நடுநிலை சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. அதனூடாக, நிலைபேறாண்மையை முன்னெடுத்துச் செல்வதில் காண்பிக்கும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை மீள உறுதி செய்துள்ளது.

தாம் இயங்கும் தொழிற்துறையில், காபன் நடுநிலையை எய்துவது என்பது சவால்கள் நிறைந்த விடயமாகும்.

இந்த சான்றளிப்பில் ExPack நியமத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், ஏனையவர்களுக்கும் பின்தொடர முன்மாதிரியானதாக அமைந்துள்ளது.

சிறந்த தொழிற்துறை செயன்முறைகளை பின்பற்றுவதில் Expack இன் தொடர்ச்சியான முயற்சிகளினூடாக, காபன் வெளியீடு குறைந்துள்ளதுடன், முழு செயற்பாடு



களையும் உள்வாங்கி வருடாந்த பச்சைஇல்ல வாயு (GHG) இலக்குகளை எய்துவதற்கு வழிகோலியுள்ளது.

ExPack இன் வலு மற்றும் நீர் நுகர்வு, கழிவு முகாமைத்துவம், போக்குவரத்து மற்றும் இதர தொடர்புடைய நுகர்களின் அடிப்படையில் GHG மதிப்பாய்வை NCPC மேற்கொண்டிருந்தது.

# முறைசார் பால் வழங்கல் சங்கிலியில் பெண்களை உள்ளடக்கும் செயல்திட்டம்

இலங்கையிலுள்ள முன்னணி பால் தயாரிப்புக்களுக்கான உற்பத்தி நிறுவனமான Pelwatte Dairy Industries Limited, " பால் உற்பத்தி செய்யும் பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்காக முறைசார் பால் வழங்கல் சங்கிலியில் பெண்களை உள்ளடக்குதல்" (Inclusion of Women in the Formal Dairy Supply Chain for Economic Empowerment of Women Farmers) என்ற தலைப்பில் புத்தாக்கமான செயற்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. 2022 ஒக்டோபரில் ஆரம்பிக்கப்பட்ட இம்முயற்சி, பால் உற்பத்தி செய்யும் பெண்களை வலுவூட்டி, உள்நாட்டு பாலுற்பத்தி தொழிற்துறையின் ஆற்றல்களை மேம்படுத்தி, நிலைபேணத்தக்க விவசாய மற்றும் பால் உற்பத்தி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதே இதன் நோக்கம். Solidaridad Asia Network இன் ஆதரவுடன் இச்செயற்திட்டத்திற்கு கனேடிய அரசாங்கம் நிதியுதவி அளிப்பதுடன், சமூகபொருளாதார அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற வலுவான சர்வதேச கூட்டாண்மையை வெளிக்காண்பிக்கும் வகையில் இது அமைந்துள்ளது.



# வளர்ச்சியடைந்த பாரதம் : மோடியின் கனவு நனவாகுமா?

இந்தியா ஒரு நோக்கு

வாராந்த அலசல்

நந்தவனம் சந்திரசேகரன்



உலகின் மிகப்பெரிய உற்பத்தி மையமாக இந்தியாவை உருவாக்க வேண்டும். அதற்கு இந்தியர்கள் அனைவரும் தங்களை அர்ப்பணிக்க வேண்டும். பிரிட்டிஷ் அரசை எதிர்த்து 40 கோடி மக்கள் இரத்தம் சிந்தி, இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தனர். இன்று 140 கோடி மக்களாக இருக்கும் நாம், ஒன்றுபட்டால் 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்கலாம் என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி, 78 ஆவது சுதந்திர தினத்தன்று நாட்டு மக்களுக்கு வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

இது வரவேற்கக் கூடிய விடயம் என்றாலும், இந்தியா தற்போது பொருளாதாரத்தில் மட்டுமல்லாமல் அறிவியல் உட்பட பல்வேறு துறைகளில் முன்னேறி வருகிறது. கடந்த சில வருடங்களாக இயற்கை பேரிடர்களில் மக்கள் இழப்புகளை சந்தித்தாலும் அனைத்திலும் மீண்டெழுந்து விடுகின்றனர். பொருளாதார நெருக்கடி பலமிழக்கச் செய்தாலும். தொலைநோக்குப் பார்வையால் விரைவில் முன்னேற்றப் பாதைக்கு திரும்பி விடுகிறார்கள் என்பதும் உண்மை.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க பிரதமர் மோடியால் முடியுமா? என்ற கேள்வியும் தற்போது எழத்தொடங்கியுள்ளது. அவர் நீண்ட தூரம் பிரதமர் பதவியில் பயணிக்க முடியுமா? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. பிரதமர் மோடிக்கு சரியான எதிர்ப்பாளர் யார் என்ற கேள்வி இருந்தது. ஆனால், இப்போது பா.ஜ.கவில் மோடியின் இடத்தை யார் நிரப்புவார்கள் என்றும் கேட்கப்படுகிறது.

மூன்றாவது முறையாக பிரதமாராகப் பதவியேற்றுள்ள நரேந்திர மோடி, அடுத்த ஆண்டு 75 வயதைத் தொடுகிறார். பா.ஜ.கவில் 75 வயதுக்கு மேல் உள்ள தலைவர்களுக்கு எந்தவிதமான முக்கியத்துவமும் கொடுக்கப்படுவதில்லை. டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் மே 2024 திகார் சிறையில் இருந்து பிணையில் வெளியே வந்து பா.ஜ.க பற்றி பல குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். அதில் முக்கியமான ஒன்று மோடிக்குப் பிறகு பா.ஜ.கவில் யார் பிரதமராக வருவார்? என்பது தான்.

இந்தக் கேள்விக்கு பா.ஜ.கவில் இருந்து திருப்திதரும் வகையில் எந்தவொரு பதிலும் வரவில்லை, அமித்ஷா அல்லது யோகி ஆதித்ய நாத் இந்த இருவரில் ஒருவருக்கு அந்த வாய்ப்பு போகலாம் என்றாலும் நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு போதிய இடம் கிடைக்காமல், 400ஐ தாண்டும் என்ற கனவும் உடைந்து விட்டது.

இது பா.ஜ.கவுக்குள்ளேயே சலசலப்பையும் உண்டாக்கியது. இது பா.ஜ.க வில் புதிய வாரிசு பற்றிய விவாதங்களுக்கும் வழி வகுத்தது. பா.ஜ.க.வுக்குள் நரேந்திர மோடியின் அரசியல் வாரிசாக யார் இருக்க முடியும். இதில் ஆர் எஸ் எஸ் பங்கு என்னவாக இருக்கும் என்ற குழப்பமும் எழுந்துள்ளது.

இதில் ஆர் எஸ் எஸ்ஸின் பங்கும் முக்கியமானது. ஏனெனில் அரசியல் நிபுணர்களின் கூற்றுப்படி பா.ஜ.க பலவீனம் அடையும்போதெல்லாம். கட்சியில் ஆர்.எஸ்.எஸ். பங்கு அதிகரித்திருக்கிறது. யோகி ஆதித்ய நாத், அமித்ஷா ஆகியோருக்கு இடையே அரசியல் பனிப்போர் நடப்பதாகவும், இது அரசியல் வாரிசு என்பதற்கு தடையாக இருக்கும் என்றும் அரசியல் நோக்கர்கள் கருத்துக் கூறி வருகின்றனர்.

பா.ஜ.க.வின் கொள்கைப் படி 75 இல் ஓய்வு எங்கிருந்து தொடங்குகிறது என்று பார்த்தோமானால். நரேந்திரமோடி 2014ஆம் ஆண்டு பிரதமரானபோது. எல். கே. அத்வானி. முரளி மனோகர் ஜோஷி போன்ற உயர்மட்டத் தலைவர்களுக்கு நாடாளுமன்றக் குழுவிலோ அல்லது அமைச்சரவையிலோ இடம்கொடுக்கவில்லை காரணம், அப்போது அவர்கள் 75 வயதைக் கடந்திருந்தனர். 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அமித்ஷா "தி வீக்" ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில் 75 வயதுக்கு மேல் உள்ளவர்கள் யாருக்கும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப் படவில்லை என்று தெரிவித்திருந்தார். இது கட்சியின் முடிவு என்றும் தெரிவித்திருந்தார்

ஒரு காலத்தில் நரேந்திரமோடியின் தேர்தல் வியூகத்தை வகுப்பவராக இருந்த பிரசாத் கிஷோரும் இந்த ஆட்சியை உருவாக்குவது வழி நடத்துவது நரேந்திர மோடிதான். எனவே அவர் இந்த விதியைப் பின்பற்றுவாரா? என்று ஒரு நேர்காணலில் கேள்வி எழுப்பியுள்ளார். பா.ஜ.கவின் சித்தாந்த ஆதரவாளர் டாக்டர் சர்வோகமல் தத்தா பிபிசியில் தனது கருத்தை தெரிவிக்கும் போது 75 வயதைத் தாண்டிய பிறகு ஓய்வைப்பற்றி பரிசீலிக்க வேண்டுமா இல்லையா? என்பது பிரதமரைச் சார்ந்தது. அவர் தானாக முன்வந்து முடிவெடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்க வேண்டாம். இது அவரது தனிப்பட்ட கருத்தாக இருக்கும். இதில் அமைப்பு அல்லது சித்தாந்த அழுத்தம் எதுவும் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்

முடிவை நரேந்திரமோடியே தன்னிச்சையாக எடுக்கலாம் என்ற முடிவுக்கு வந்தாலும், அரசியல் வாரிசு தேவையாகவும் இருக்கிறது. பா.ஜ.க.வைச் சேர்ந்த சங்கம் சரணம் கச்சாமி என்ற நூலை எழுதிய ஆசிரியர் இது பற்றி கூறும்போது இங்கே நம்பர் ஒன் இடத்திற்கான போட்டி நடக்கவில்லை. ஆனால், அந்த நபருக்கான தேடுதல் தொடங்கியிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். ஆர் எஸ் எஸ் அமைப்பைப் பற்றி நான் புரிந்துகொண்டது என்னவென்றால். அவர்கள் தொலைநோக்கு முடிவுகளை நம்பியுள்ளனர். வெளிப்படையாகவே பிரதமர் மோடியைத் தவிர வேறு தலைமையையும் அந்த அமைப்பு தேடிக்கொண்டு தான் இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்

இதிலிருந்து ஒன்றை நாம் புரிந்து கொள்ளவேண்டியது என்ன வென்றால் நரேந்திர மோடிக்கு இணையான ஒரு தலைமையைத்தேட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது என்பதே உண்மை.

ஒருவர் வானத்தில் எவ்வளவு உயரத்திற்கு சென்றாலும் மீண்டும் பூமிக்குத்தான் வர வேண்டும், என்பது போல, பிரதமர் மோடி தனது 75 ஆவது வயதுக்குப் பிறகு என்ன முடிவு எடுக்கப்போகிறார் என்ற எதிர்பார்ப்பு அரசியல் மட்டத்தில் எழத் தொடங்கியுள்ளது.

இவ்வாறான சூழலில், வளர்ச்சியடைந்த பாரதத்தை யார் முன்னெடுத்துச் செல்வார்கள் என்ற கேள்வி எழுவதையும் தவிர்க்க முடியவில்லை. 2020இல் இந்தியா வல்லரசாகும் என்ற கனவோடு முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் தொலைநோக்குப் பாதையில் கடமையாற்றினார், ஆனால் அவரது மறைவிற்குப் பிறகு அதை யாரும் முன்னெடுக்கவில்லை. அப்துல் கலாமின் வல்லரசு இலக்கை கடந்து நான்கு வருடமாகி விட்டது. இதேபோல நரேந்திர மோடிக்குப் பிறகு யார் முன்னெடுப்பார்கள். என்ற கேள்விக்கு விடை கிடைக்குமா? விடை தெரியாத வினாவாகவே பிரதமரின் 78 ஆவது சுதந்திர தின உரையைப் பார்க்க முடிகிறது.

# கரும்புத் தோட்டங்களும் தமிழர்களும்...

## மொரீசியஸ் முதல் ரீயுனியன் வரை...

மாத்தளை சோமு

1



கைப்பேசிக்குள் உலகம் அடங்கிவிட்டது என்று பெருமிதமாகச் சொல்வது கேள்வியை எழுப்பியது, மொரீசியஸ் பயணம். இணையம், புலனம் (WHATSUP) மின் அஞ்சல் என பல ஊடகங்கள் இருந்த போதும் எல்லாவற்றையும் எத்தனை பேர் பார்க்கிறார்கள்? அவரவர், அவரவர்களுக்கு விருப்பமானதையே பார்க்கிறார்கள். அவர்கள் பார்க்காதது, அறியாதது நிறைய இருக்கின்றது. மொரீசியஸ் ஒரு தீவு, அங்கு தமிழர்கள் வாழ்கிறார்கள். அந்தத்தீவுக்கான (மொரிஷியஸின்) இலங்கையின் கௌரவ தூதராக கொழும்பில் பிரபலமான தொழிலதிபர் தெ. ஈஸ்வரன் இருந்தார். அங்கு தமிழாராய்ச்சி மாநாடும் நடந்திருக்கிறது என்பன மட்டுமே பலருக்குத் தெரியும். தெரியாதது அங்கு நிறைய உண்டு என்பதை மொரீசியஸ் பயணம் எனக்குச் சொல்லியது.

பத்தாம் நூற்றாண்டு வரை இத்தீவு பெயரில்லாமல் பூர்வீக மக்கள் குடியிருப்பு இல்லாமல் இந்தியப் பெருங்கடலில் அனாதையாகக் கிடந்தது. 31 மைல் நீளமும், 28 மைல் அகலமும் 2040 சதுர கி.மீட்டர் பரப்பளவும் கொண்ட இத்தீவை முதன் முதலில் கண்டவர்கள் அரேபியக் கடலோடிகள். 9ஆம் நூற்றாண்டின் இறுதியில் வந்த அவர்கள் ஜலண்ட்டினா அரோபி (ISLAND DINA AROBI) எனப் பெயரிட்டனர். ஆனால் அவர்கள் அங்கு குடியிருப்புகளை ஏற்படுத்தவில்லை. வேறு நாடுகளுக்குக் கடல் பயணம் மேற்கொண்ட போது இத்தீவில் தங்கிப் போயிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

போர்த்துகேயர்கள் 15ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தீவுக்கு வந்து அதற்கு இல்ஹாடோசெம் (IIHADOCEME) எனப் பெயரிட்டார்கள். அதன் அர்த்தம் அன்ன (பறவை)த்தீவு என்பதாகும். ஆனால் அவர்களும் இங்கு குடியேறவோ, குடியேற்றவோ முனையவில்லை. இந்தியா, ஜாவா பகுதிகளுடனான தங்கள் வர்த்தகத்தைப் பாதுகாப்பதில் ஆர்வம் காட்டியதில் அவர்கள் இத்தீவை ஒரு தங்கும் நிலமாகப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

1598இல் இத்தீவிற்கு விஜயம் செய்த முதல் டச்சுக்காரர் வைபிரண்ட் வார்விஜிக் (WYBRANT WARWIJICK) என்பவர், தீவின் பெயரை டச் ஸ்டான்ட் ஹோல்டர் மொரிட்ஸ் (DYTCH STANDHOLDER MAGRITS) எனப் பெயர் மாற்றினார். அது மொரீசியஸ் ஒப் நஸாக் (MAUR ICE OF NASSAG) அல்லது ஒரேஞ்சின் இளவரசன் (PRINCE OF ORANGE) என்றும் சொல்லப்படுகின்றது. முதலில் அவர்கள் தீவை ஆக்கிரமிக்கவில்லை. ஆனால் தீவில் வாழ்ந்த டோடோ என அழைக்கப்படும் பறவை (400 ஆண்டுகளுக்கு முன் அழிந்து போன DOTO பறவை), பன்றிகள், காட்டு ஆடுகள், ஆமைகள், காட்டு விலங்குகள் ஆகியவற்றை வேட்டையாடினார்கள். கருங்காலி மரங்களை வெட்டியெடுத்தார்கள்.

1630இல் பிரெஞ்சுகாரர், மற்றும் ஆங்கிலேயர் தீவை ஆக்கிரமிப்பதைத் தடுக்க, தென்கிழக்கில் துறைமுகம் அமைத்து, தீவில் டச்சுக்காரர்கள் குடியேறினார்கள். அவர்களைப் பராமரிக்கவும், தீவின் பொருட்களைப் ஒல்லாந்து நாட்டிற்கு அனுப்பவும் இருபது பேர் கொண்ட




குழுவோடு சைமன்ஸ் கூயர் என்ற ஆளுநரை ஹாலாந்து நாட்டு அரசு அனுப்பி வைத்தது.

1638இல் டச்சுக்காரர்கள் துறைமுகத்தைப் பாதுகாக்க ஒவ்வொரு மூலையிலும் கொத்தளங்கள் மற்றும் பீரங்கிகளுடன் ஒரு சதுர மரக்கோட்டை கட்டப்பட்டது. சைமன்ஸ் கூரியரின் நிர்வாகத்திற்குப் பின்னர் வான்டெர்ஸ்டெல் ஆளுநரானார். அவர் கரும்பு கன்றுகள் உட்பட பல்வேறு விதைகள், பழங்கள் ஆகியவற்றைக் கொண்டு வந்தார். கூடவே முயல்கள், செம்மறி ஆடுகள், வாத்துகள், புறாக்கள், மான்கள் என்பன வந்திறங்கின. பிற்காலத்தில் சர்க்கரை உற்பத்தியில் முக்கிய நாடாக இருந்ததிற்குக் காரணமான கரும்பு வந்திறங்கியதும் இந்த ஆண்டில் தான்.

அதிகமான கருங்காலி மரங்கள் காடுகளில் இருந்ததைக் கண்டு, அவற்றை வெட்ட பக்கத்தில் இருக்கும் மடகஸ்கார் தீவிலிருந்து 105 கறுப்பர்களை அடிமைகளாகக் கொண்டு வந்தார் அப்போதைய ஆளுநர். அவர் பதவியேற்ற மூன்று ஆண்டு காலத்தில் விவசாயத்தில் முழுக்கவனம் செலுத்தினார். ஆனால் 1644 இல் தீவைத் தாக்கிய சூறாவளியால் பயிர்கள் சேதமடைந்தன. அதனைத் தொடர்ந்து உருவான வறட்சியாலும், எலிகள், குரங்குகள் போன்ற உயிரினங்களால் விவசாயம் பாதிக்கப்பட்டதாலும் சோர்வடைந்த டச்சுக்காரர்கள் தீவைக் கைவிட்டபோதும் 1710இல் திரும்பவும் இத்தீவில் மீண்டும் குடியேற முயன்றனர். இம்முறை தச்சர்கள், கொல்லர்கள், தோல் பதனிடுபவர்கள், மதுபானம் தயாரிப்பவர்கள் ஆகியோரைக் குடியேற்றினார்கள். ஆனால் அதிர்ஷ்டம் அவர்களுக்கு இல்லை. மீண்டும் சூறாவளி, பயிர் உண்ணும் பூச்சிகள் பிரச்சினை காரணமாகத் தீவைக் கைவிட்டனர்.

டச்சுக்காரர்கள் தீவை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் மனிதர்கள் இல்லாத தீவானது. 1715இல் கெப்டன் கில்லும் டு ஃப் ரெஸ் னே டிஆர் செல் என்பவரும் தீவைக் கைப்பற்றி 'ஐல்டி பிரான்ஸ்' எனப் பெயர் சூட்டிப் பிரான்சுக்குச் சொந்தமாக்கினார். 1715இல் சில வேலைகளுக்கு (SKILL WORKERS) தேவையான 169 பேரை பிரெஞ்சுகாரர்கள் பாண்டிச்சேரியிலிருந்து கொண்டு வந்தார்கள். அவர்களில் தமிழரும் அடங்குவர். பின்னர் தீவுக்குப் பிரான்ஸிலிருந்தும் போர்பன் தீவிலிருந்தும் மக்கள் குடியேறினர். காட்டு நிலங்கள் அழிக்கப்பட்டு புகையிலை, சோளம், நெல் என்பன பயிரிடப்பட்டன. ஆனால் அவையும் சூறாவளியால் அழிந்தன.


1734இல் சிறந்த கடல் வர்த்தகரான பேர்னாட் மாஹே டீ லாபோர்டொன்ன என்பவர் தீவின் ஆளுநராக பிரான்ஸ் அரசால் நியமிக்கப்பட்டார். அவர் தீவின் தலைநகரை வடமேற்குப் பகுதிக்கு மாற்றினார். அவர் காலத்தில் வீதிகள், இராணுவ வைத்தியசாலைகள் என்பன அமைக்கப்பட்டன. மொசாம்பிக் நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட அடிமைகள் மூலம் கரும்பு, கோதுமை, அரிசி, கோப்பி, பருத்தி என்பன பயிரிடப்பட்டன.

1767இல் கிழக்கிந்திய (டச்சு) கம்பனியிடமிருந்து தீவை பிரான்ஸ் தன் வசமாக்கி மொலுக்காஸில் இருந்து மிளகு, இலவங்கப்பட்டை செடிகளையும், பிலிப்பைன்ஸிலிருந்து மசாலாப் பொருட்களையும் கொண்டு வந்தது. இதனிடையே மொரீசியஸைக் கைப்பற்ற ஆங்கிலேயர்கள் பல முயற்சிகளைச் செய்த போதும் அது வெற்றியளிக்கவில்லை. 1810இல் பிரிட்டிஷார் மொரீசியஸைப் பெரிய படையோடு ஆக்கிரமித்தனர். அது பிரெஞ்சுக்காரர்கள் சரணடையும் வரை நீண்டது.

ஆங்கிலேயர் தீவைக் கைப்பற்றியவுடன் உள்ளூர் மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக அவர்களின் மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள், சமயம் என்பன மதிக்கப்படும் என உத்தரவாதம் அளித்து அவர்களைத் தம் வசப்படுத்தினர். இந்தச் சிறிய தீவை ஆங்கிலேயர்கள் கைப்பற்றுவதற்கு முக்கிய காரணமே இங்கிலாந்திலிருந்து இந்தியா வரையிலான முக்கிய கடல் போக்குவரத்தை அச்சுறுத்தும் பிரெஞ்ச் மற்றும் நாடுகளிலிருந்து பாதுகாப்பதாகும்.

1815இல் இத்தீவு 'இலே டிபிரான்ஸ் மொரீஸியஸ்' என்ற





பெயரோடு உடன்படிக்கை மூலம் பிரிட்டனுக்கு வழங்கப்பட்டது. தீவின் முதல் பிரிட்டிஷ் ஆளுநராக சேர் ரொபர்ட் பார்க்கர் நியமிக்கப்பட்டார். அவர் சமூக பொருளாதார மாற்றங்களைக் கொண்டு வந்தார். 1833இல் அடிமைமுறை ஒழிக்கும் சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அது 1835இல் மொரீசியஸில் நடைமுறைக்கு வந்தது.

இதனைத் தொடர்ந்து பிரிட்டிஷ் இராணுவத்தில் மொரீசியஸ் தமிழர்கள் சேர்ந்திருக்கிறார்கள். கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியாவிலிருந்து குறிப்பாகத் தமிழர்களையும் அழைத்து வந்தார்கள். அவர்கள் கப்பல்களில் இறங்கிய இடமே தலைநகர் போர்ட்லூயிஸில் அமைந்துள்ள ஆப்ரவாசி ஜாட் (AAPRAVASI) ஆகும். (ஜாட் என்றால் நதிக்கரை).

1968இல் மொரீசியஸ் மார்ச் 12ஆம் நாள் சுதந்திரம் பெற்றது. 1992இல் குடியரசாக மாறியது. மொரீசியஸ் ஒரு பன்முக கலாசார சமூகத்தைக் கொண்ட நாடு. பிரெஞ்சுக்காரர்கள் தீவைக் கைப்பற்றியிருந்த காலத்தில் ஆபிரிக்கா மற்றும் ஆசியாவில் இருந்து அடிமைகளை அழைத்து வந்தனர். ஆங்கிலேயர்கள் இந்தியத் தொழிலாளர்களை அழைத்து வந்தனர்.

இன்று அவர்களே மூதாதையர்களைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். வெவ்வேறு மதங்கள், வெவ்வேறு மொழிகள், வெவ்வேறு பண்பாடுகள் என்பன மொரீசியஸ் என்ற நாட்டுக்குள் இணைந்து, பிணைந்து இருக்கின்றன.

மொழி என்று பார்க்கிற போது ஆங்கிலம், பிரெஞ்ச், தமிழ், இந்தி, சீனம் ஆகிய மொழிகளைச் சேர்ந்த மக்கள் மொரீசியஸில் இருந்த போதும் 'கிரியோல்' (CREAE) மொழியிலேயே பேசுகிறார்கள். இதன் எதிரொலி ரியூனியன் தீவிலும் உண்டு. கிரியோல் மொழி எவருக்கும், எந்த நாட்டிற்கும் சொந்தமானதல்ல. இது 1720இல் உருவானது. அக்காலத்தில் உருவான ஐரோப்பியப் பேரரசுகளும், அடிமை வணிகமும், கடலோர வர்த்தகமும் இம்மொழியை உருவாக்கியுள்ளன. இதில் பிரெஞ்சு, ஆங்கிலம், டச்சு, மடகஸ்கார் மொழி, இந்தி, கோவா, தமிழ், இந்தோனேசிய ஜாவா, அக்கால மலாயா ஆகிய மொழிச் சொற்களின் கலப்பிருக்கின்றது. இன்று மொரீசியஸில் ஆங்கிலம், பிரெஞ்ச், இந்தி, சீனம், தமிழ் மொழிகள் இருந்த போதும் எல்லோரும் பேசும் கிரியோல் மொழியை தேசிய மொழியாக ஏற்க வேண்டிய கட்டாயம் மொரீசியஸிக்கு ஏற்பட்டுள்ளது.

மொரீசியஸ் நினைவுகளோடு போர்ட்லூயிஸில் தரை இறங்கிய விமானத்தில் என்னோடு வந்த புருசோத்தமன், வழக்கறிஞர் மதியழகன் ஆகியோரோடு வெளியே வந்து டாக்ஸியில் தங்கும் ஓட்டலுக்குப் போனோம். அந்த டாக்ஸியை மொரீசியஸ் மகாத்மா காந்தி இன்ஸ்டிடியூட்டின் விரிவுரையாளர் ஸ்டீபன் நாராயண பிள்ளை ஏற்பாடு செய்திருந்தார். அவரோடு தொடர்பு கொண்டது தனிக்கதை.

எனது மொரீசியஸ் பயணம் பற்றித் தகவல் அனுப்பிய போதும் இவர் மட்டுமே பதில் அனுப்பினார்.காலையில் சில நாட்களுக்கு முன் பதிவு செய்ய ஹோட்டல் நிர்வாகியை அணுகிய போது அவர் சொன்ன வாடகைத் தொகை மிக அதிகமானது என்பதை மூவருமே அறிந்தோம்.

ஓர் இரவு தங்கியதற்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு தமிழ் தெரிந்த டாக்ஸி டிரைவரைத் தேடினோம். டாக்ஸி ஸ்டாண்டில் பல்வேறு இனத்து ஓட்டுநர்கள் இருந்தார்கள்.

அவர்களில் தமிழரைப் போல் ஒருத்தர் இருந்தார். அவரோடு பேசினோம். அவர் தமிழர் தான். பெயர் வீரன். ஆனால் தமிழ் பேசத் தெரியாதவர்.

**(தொடரும்)**





# விவாகரத்து பெற்ற குடும்பங்களில் பிள்ளைகளின் கல்விச் சமூகமயமாக்கல்

சமூகமயமாக்கலுக்கான படிமுறைகள் என்பது மனிதனின் இறப்புவரை நீண்டதாக காணப்படுகின்றது. எந்தவொரு குழந்தையும் பிறப்பிலேயே சமூகமயமாக்கலுக்கு உட்பட்டுவிடுவதில்லை. பகுத்தறிவு ரீதியான சிந்தனை ஒரு பிள்ளையிடம் வளர ஆரம்பிக்கும் போது முதலில் தான் பிறந்த குடும்பத்தில் இருந்து சமூகமயமாக்கலுக்கான அடிப்படையை பிள்ளை பெற்றுக்கொள்கின்றது இதனாலேயே குடும்பத்தை சமூகமயமாக்கலுக்கான முதன்மை முகவர் என அடையாளப்படுத்துகின்றனர்.

ஒரு பிள்ளை தாயின் வயிற்றில் கருவாகி வளர ஆரம்பிக்கும்போதே சூழலை உணரக்கூடிய திறன் கொண்டதாக வளர்கின்றது. இத்திறன் சிறப்பாக அமைவதற்கு தாயின் ஆரோக்கியமான உடல் உள நலம் என்பது இன்றியமையாததாகின்றது. இதன் மூலமே பிள்ளைக்கு சமூகமாயமாக்கலுக்கான அடிப்படை தூண்டுதல்கள் வழங்கப்படுகின்றன. மேலும் படிப்படியாக பிள்ளை தான் வளரும் குடும்ப சூழல் மூலமாகவே சமூகம் பற்றிய அறிவையும் அறிமுகத்தையும் பெற்றுக்கொள்கிறது.

சமூகத்தில் காணப்படுகின்ற குடும்பங்கள் தனிக் குடும்பமாகவும். சில இடங்களில் கூட்டுக் குடும்பங்களாகவும்; காணப்படுகின்றன. இதனால் சமூகங்களின் சமூகமயமாக்கல் விகிதங்களும் எல்லா குடும்பங்களும் ஒரே மட்டமானதாகக் காணப்படுவதில்லை. குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை, அறிவுத்திறன் மற்றும் நடத்தைகளிலேயே சமூகமயமாக்கல் விகிதங்களும் தங்கியுள்ளது. உதாரணமாக தாய், தந்தை மற்றும் சக குடும்ப உறுப்பினர்கள் கல்வியில் தேர்ச்சிமிக்கவர்களாகவும் சமூகத்தோடு நெருங்கிய தொடர்புள்ளவர்களாகவும் காணப்படும் போது, இவ்வாறான குடும்பத்தில் வளரும் பிள்ளையின் சமூகமயமாக்கல் திறனானது விரைவில் அப்பிள்ளையிடம் தூண்டப்படுகின்றது. எனவே இவ்வாறான சூழலில் வளரும் பிள்ளைகள் விரைவாக சமூகம் பற்றியும், கூறப்படும் விடயங்கள் பற்றியும் புரிந்துணர்வை பெறக்கூடியவர்களாக செயல்படுவர். இத்தகைய பின்புலமற்ற குடும்பங்களில் வளரும் பிள்ளைகள் சமூகமயமாக்கல் திறனை அடைய சற்று காலதாமதம் ஏற்படுகிறது.

ஒரு பிள்ளை குடும்பத்தில் இருந்தே எவ்வாறு பேச வேண்டும்?, யாருடன் பேச வேண்டும்; போன்ற மொழி ரீதியான பேச்சுக்களையும் விதிமுறைகள், மதிப்புகள் மற்றும் சமூகப் பாத்திரங்கள் தொடர்பில் கற்றுக்கொள்கின்றது. அதேபோல எவ்வாறு சரியான முறையில் நடந்து கொள்ள வேண்டும்?, எது சரி, எது தவறு என்ற விமர்சனரீதியான வேறுபாடுகள் பற்றிய தெளிவுபடுத்தல்களும், மற்றும் பிறருடன் எவ்வாறு பழக வேண்டும் என்பது தொடர்பான சமூகமயமாக்கலுக்கான பல்வேறு அடிப்படைகளையும் பெற்றுக்கொள்கின்றது. இதன் பின்னரே ஏனைய சமூகமயமாக்கல் முகவர்களாகிய பாடசாலை, சம வயது குழுக்கள், சமூக ஊடகங்கள் போன்றன மூலம் சமூகமயமாக்கலுக்கு உட்படுகின்றது.

அந்த வகையில் ஒரு பிள்ளை குடும்பம் எனும் முதலாம் நிலை சமூகமயமாக்கல் முகவரிடமிருந்து இருந்து அடுத்த கட்டமாக பாடசாலை எனும் சமூகமயமாக்கல் முகவருக்குள் பிரவேசிக்க ஆரம்பிக்கின்றது. பாடசாலைகளில் வெறுமனே கல்வி அறிவு மாத்திரம் போதிக்கப்படாமல் மாணவர்களின் தனிப்பட்ட மற்றும் சமூக வளர்ச்சிக்கு அவசியமான சமூகத்திறன்கள், மதிப்புகள் மற்றும் அணுகுமுறைகள் போன்றனவும் வழங்கப்படுகின்றன. வகுப்பறைகளில் பாடங்கள் மூலமும், இணைப்பாடவிதான செயற்பாடுகள், போட்டி நிகழ்வுகள் மூலமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு குடும்பங்களில் சமூகமயமாக்கல் உரிய வகையில் இடம்பெறவும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மேம்படவும் பெற்றோரின் பங்களிப்புகள் மிக மிக அவசியமாகும்.

தந்தையும் தாயும் பிள்ளையின் கற்றல் செயல்பாடுகளுக்கு உதவுபவர்களாகவும் கண்காணிப்பவர்களாகவும் செயற்படும்போதே பிள்ளையை கற்றலில் முன்னேற்ற முடியும். இன்று சமூகத்தில் பெரும்பாலான குடும்பங்களில் மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கைகளின்போது பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர். இதற்குப் பிரதான காரணம் அண்மைக்காலமாக குடும்பங்களில் அதிகரித்து வரும் பெற்றோரின் விவாகரத்து ஆகும்.

ஆரோக்கியமான கணவன் மனைவி உறவே ஒரு சிறந்த குடும்பத்தை கட்டமைப்பதற்கு அடிப்படையாகும். குடும்பத்தின் தலைவனும், தலைவியும் ஒற்றுமையாக காணப்படும் போதே ஆரோக்கியமான குடும்ப சூழலையும் முறையான திட்டமிடலுடன் கூடிய மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வழிமுறைகளை உருவாக்க முடியும். குடும்பம் எனும் நிறுவனத்தைக் கொண்டு நடத்துவதற்கு கணவன் மனைவியின் புரிந்துணர்வுடனான நிர்வாகம் அவசியமாகின்றது. ஆனால் கணவன் மனைவி விவாகரத்து செய்வதினால் குடும்பம் எனும் நிறுவனத்தின் நிர்வாகக் கட்டமைப்பு பல வழிமுறைகளிலும் பாதிக்கப்படுகின்றது.

குறிப்பாக அவர்களின் பிள்ளைகளின் மனவெழுச்சிகள் மற்றும் சிறப்பான எதிர்காலம் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது.

விவாகரத்துப் பெறும் ஆணும் பெண்ணும் தமது துன்ப வாழ்வுக்கு விடுதலை கிடைத்து விட்டதாக கருதி தமது விருப்பத்திற்கு ஏற்ப இன்னுமொரு துணையை நாடி திருமணம் செய்து கொண்டு வாழ்கின்றனர். ஆனால் இவர்கள் விவாகரத்துச் செய்யும்போது அவர்களுக்கு பிள்ளைகள் காணப்படின் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் அவர்களது பிள்ளைகளே. விவாகரத்துப் பெற முடிவு செய்யும் தம்பதியினர் தமது பிள்ளைகளது எதிர்காலம் பற்றி சிந்திப்பதில்லை.

விவாகரத்து பெறும் பெற்றோரின் பிள்ளைகள் பெரும்பாலும் தாயின் பொறுப்பிலேயே ஒப்படைக்கப்படுகின்றனர்.

எவ்வாறாயினும் அந்த குறித்த பிள்ளையின் தாய் இன்னொருவரை திருமணம் செய்யாது அல்லது வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்பை பெறுவதற்காக செல்லாது பிள்ளைகளின் எதிர்கால நலனை கருதி பிள்ளைகளுக்கு துணையாகவும் வழிகாட்டியாகவும் செயற்பட்டால் அதனால் பிள்ளைகளுக்கு சவால்கள் ஏற்படும் வாய்ப்புகள் குறைக்கப்படும்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் தனது குடும்பப்பின்னணி காரணமாக தாழ்வு மனப்பான்மையை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை விவாகரத்தான பெற்றோரின் பிள்ளைகளுக்கு ஏற்படுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக வகுப்பறையில் ஆசிரியர் அல்லது சக மாணவர்கள் தனது பெற்றோரைப் பற்றி கேட்கும்போது அவர்களுக்கு தனது நிலைப்பாடு பற்றிக்கூற பிள்ளை வெட்கப்படுதல், சமூகத்தில் பெற்றோர் பாதுகாப்பில் காணப்படாத பிள்ளைகளுக்கு நிலவும் மதிப்பின்மை போன்ற பல்வேறு சவால்களினால்; பிள்ளைகள் தமது மாணவப்பருவம் முதலில் பல்வேறு மன உளைச்சல்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

அது மட்டுமின்றி நெறி பிறழ்வான நிலைமைகளில் மாட்டிக் கொள்ளுதல், போதை, களவு, வன்முறை போன்றவற்றில் ஈடுபடுதல் மற்றும் பொறுப்பாளர்களின் கட்டுப்பாடுகள் இன்மையால் சுதந்திரம் அதிகமாக கிடைப்பதன் மூலம் தவறான பாதைகளில் நேரத்தை செலவிடுதல் தவறான நபர்களுடன் தொடர்புகளை பேணல் போன்ற பல்வேறு பாதிப்புகளை விவாகரத்தான பெற்றோரின் பிள்ளைகள் எதிர்நோக்குகின்றனர்.

கல்விதான் ஒரு மனிதனுக்கு எல்லாவற்றையும் விட முக்கியமான அழியாத நிலையான செல்வமாகும் அதன் நன்மைகள் மாணவர்களுக்கு பெற்று கொடுக்கப்பட வேண்டும் என்பதே கல்வியின் நோக்கம். அண்மைக்காலத்தில் இலங்கை நாட்டில் ஒருநாளில் 400 விவாகரத்துகள் இடம்பெறுவதாக தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

2024 ஆம் ஆண்டு நிலவரப்படி இலங்கையில் விவாகரத்து விகிதம் 1000பேருக்கு 0.15 ஆக உள்ளது. எவ்வாறாயினும் விவாகரத்துக்களினால் பிள்ளைகள் மத்தியில் ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்கள் என்பது அளவிடப்பட முடியாததாகவே காணப்படுகின்றது.

எனவே விவாகரத்தான பெற்றோர்களின் பிள்ளைகளின் கற்றல் சவால்களை குறைப்பதற்கு பாடசாலை மட்டத்திலும், ஆசிரியர்கள் மற்றும் சமுதாயத்தின் ஒருங்கிணைந்த முயற்சிகள் மூலம் இத்தகைய குழந்தைகளுக்கு நல்ல கல்வி மனநிலை மற்றும் வாழ்வுத்தரத்தை மேம்படுத்தக்கூடிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதன் மூலம் கற்றல் ஆர்வம் இருந்தும் கற்றலுக்கான சூழல் மற்றும் தேவையான வளங்கள் இல்லாத காரணத்தினால் கற்றலை இடைநடுவே கைவிடும் மாணவர்களின் கல்வித்தரத்தினை மேம்படுத்துவதன் ஊடாக கல்வித்துறைக்கு தகுதியான மாணவர்களை உள்வாங்கிக் கொள்ளல் என்பதோடு பெற்றோரின் விவாகரத்தினால் உளவியல், உடலியல் ரீதியாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் துன்பங்களுக்கும் சிறந்த தீர்வாக அமையும்.

மீராசாகிப் பாதினா ரீமா
இரண்டாம் வருட கல்வியியல்
சிறப்புக் கற்கை மாணவி,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

# இலங்கையில் வெளியான முதல் தமிழ் சிறுகதைத் தொகுப்பு எது?

*'தினகரன்' வாரமஞ்சரியின் கடந்த ஜூலை 28ஆம் திகதியன்றைய பதிப்பில் தி. ஞானசேகரன் ஐயா வாராந்தம் தொடராக எழுதிவரும் "ஈழத்து நவீன இலக்கிய ஆளுமைகள்" பற்றிய 8ஆம் அங்கக் கட்டுரையில், "ஈழத்தின் முதலாவது சிறுகதை தொகுப்பினை வெளிக் கொணர்ந்த எழுத்துலகச் சிற்பி" எனும் தலைப்பில் தொட்டுக்காட்டிய தகவல் பிழையானது. எழுத்துலகச் சிற்பி வெளிக் கொணர்வதற்கு (1958) முன்னமே, தமிழில் சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது. அதன் விபரம் வருமாறு:*

*தலைநகர் கொழும்பின் இதயமாக அமைந்துள்ள வாழைத்தோட்டம் எனும் பகுதி (புறக்கோட்டை பிரதான பஸ் நிலையத்தை அடுத்துள்ள பகுதி) தமிழ் வளர்ந்த திண்ணை. இலங்கையில் முதல் நாளிதழ் 'தினத்தபால்' 1928 இல் மலர்ந்தது.*

*வாழைத்தோட்டத்தில் தொடர்ந்து பத்துக்கும் மேற்பட்ட தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவந்துள்ளன. அவ்வாறே ஈழத்து முதல் தமிழ்ச் சிறுகதைத் தொகுதியும் 1950 இல் இங்கிருந்தே வந்துள்ளது.*

*வாழைத்தோட்ட வாசியான ஐதருஸ் அப்பா என்பவர் (அப்பா என முதியவர்களை முஸ்லிம்கள் அழைப்பர்) ஐந்து சிறுகதைகளை எழுதி, 'ஐதர்ஷா கதைகள்' எனும் சிறுகதை தொகுதியை 1935 இல் வாழைத்தோட்டத்தில் வெளியிட்டார். அச்சுக்கலை அவ்வளவாக வளர்ந்திராக அக்காலப் பிரிவில் 'ஐதர்ஷா கதைகள்' கல்லச்சுக் (ரோனியோ) கலையில் வெளிவந்தது.*

*அச்சுக்கலை வளர்ந்த நிலையில் 'முசீமா' எனும் புனைப்பெயர் கொண்ட முஹம்மது மீராசா சாஹுல் ஹமீத் என்பவர் 'இரு உலகங்கள்' எனும் நாமத்தில் 1950 இல் முதல் சிறுகதைத் தொகுதியை வாழைத்தோட்டத்தில் வெளியிட்டார். அடுத்த ஆண்டு 1951 இல் எச்.எம்.பி. முஹிதீன் 'தங்கச் சுரங்கம்' எனும் சிறுகதைத் தொகுதியை வெளியிட்டார். இது சோஷலிக நாடுகளின் கதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைப் பரப்பு ஏடான 'தேசாபிமானி' யின் ஆசிரியரான எச்.எம்.பி. முஹிதீன் அதன் பின் 'தாரவை', 'ஐதர்ஷா கதைகள்', 'அபியுக்தன்', 'உம்மத்', 'நாளை நமதே' முதலிய பத்திரிகைகளின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.*

*ஈழத்தின் முதற் தமிழ் சிறுகதைத் தொகுதிகளான 'இரு உலகங்கள்' (1950), 'தங்கச் சுரங்கம்' (1951) இரண்டையும் தந்த 'முமீசா' எச்.எம்.பி.முஹிதீன் ஆசிரியர் மறைந்த இ. சிவகுருநாதனுடன் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் ஒன்றாகப் பயின்ற வகுப்புத் தோழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது வாழ்ந்து வரும் தமிழ் மண் மானா மக்கீன் பிரஸ்தாப இரு எழுத்தாளர்களையும் அவர்கள் வெளியிட்ட மேற்படி சிறுகதைத் தொகுதிகளையும் நன்கறிவார்.*

*பத்திரிகை ஜாம்பவான் எஸ்.டி. சிவநாயகம் ஆசிரியராகப் பணியாற்றிய "சிந்தாமணி" யில் வாழைத்தோட்டம் வளர்த்த தமிழ் இலக்கியம் கட்டுரையில் மேற்படி சிறுகதைத் தொகுதிகளை பற்றி நான் எழுதிய ஆக்கங்களை பழைய வாசகர்கள் நன்கறிவர்.*

*பிரஸ்தாப தகவலின் உண்மைத் தன்மையை அறிய விரும்புவோர் பழஞ்சுவடிகள் திணைக்களத்தை அணுகலாம்*

*கலாபூஷணம் எஸ்.ஐ.நாகூர் கனி*

## வாழ்ந்து மடி

*இயன்றவரையில்
இயங்கு
விழுந்து கிடக்காமல்
எழுந்து நட
கனவுகளைத் தேடு
காலையில் ஓடு
கடமைகளை செய்
காலத்தில் விதை
கரம் கொடு
கைத்தட்டப்பழகு
எதிர்பார்க்காதே
இருப்பதை கொடு
வழிகாட்டு
வலைந்து கொடுக்காதே
புன்னகை சிந்து
பூக்களைக் கொஞ்சு
பகை உடை*

*நட்பை பலமாக்கு
நன்றி மறவாதே
நல்லதை செய்து விடு
வானத்தை வசமாக்கு
வரலாற்றில் வாழ்
காலம் இருக்கிறது
கற்றுக் கொள்
விமர்சனம் தவிர்
வாழ்த்தி மகிழ்
நான் தொலைத்திடு
நல்லவை கேள்
தோல்விகள் சுமந்து கொள்
தொலை நோக்கு
வாழ்வை இனிதாய்
வாழ்ந்து மடி*

*நந்தவனம்
சந்திசேகரன்*


**பெயின்டர் சிறுவர் இல்லம் – நுவரெலியா**

நூற்றாண்டு வீழா கொண்டாட்டம்

(காலம் சென்ற அருட் தந்தை ஆனோல்ட் கிரிம்லி பெயின்டர் அவர்களால் 17.09.1924 தாபிக்கப்பட்டது)

**நன்றி நவிலல் ஆராதனை**

**காலம் - 17 செப்டெம்பர் 2024**
**நேரம் - காலை 10 மணி**
**இடம் - புனித திரித்துவ தேவாலயம்**
**நுவரெலியா**

**அனைத்து பழைய மாணவர்கள் ஊழியர்கள் கொடை வள்ளல்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**தலைவர் மற்றும் நம்பிக்கையாளர்**
**இல. 64, கெமுனு மாவத்தை,**
**நுவரெலியா இலங்கை.**

**மின் அஞ்சல்:**
**paynter@sltnet.com**
**RSVP - 31.08.2024**






## அறிவித்தல்

வரையறுக்கப்பட்ட சுகாதார சேவை பண சேமிப்பு மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான கூட்டுறவுச் சங்கம் 2024.08.24 முதல் எதிர்வரும் மூன்று வருட (03) காலத்திற்கு கௌரவ தலைவர், கௌரவ உப தலைவர், கௌரவ பொருளாளர் மற்றும் கௌரவ பணிப்பாளர்கள் எட்டுப்பேர் (08) உட்பட முழுப் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் பதினொரு பேரை (11) தேர்ந்தெடுப்பதற்கான வேட்புமனுக்களைக் கோரல்

2024.07.28ம் திகதி சிலுமின, தினகரன், சண்டே ஒப்சர்வர் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மூலம் வேட்புமனுக்கள் கோரப்பட்ட போதிலும் குறித்த பதவிகளின் அளவுக்கு மாத்திரம் அங்கீகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் கிடைத்துள்ளமையினால் 2024.08.24ம் திகதி பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த, வாக்கெடுப்பு விடயங்கள் நடைபெற மாட்டாது அத்துடன், 47ஆவது ஆண்டு நிறைவு மகாசபை மாத்திரம் நடைபெறுமென இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

**ஏ.ஐ.ஏ.அதிகாரி**
**பிரதான வாக்கெடுப்பு அதிகாரி,**
**கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்**
**இல.330, யூனியன் பிளேஸ்,**
**கொழும்பு - 02**



**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்**

## பதவி வெற்றிடங்கள்

பல்கலைக்கழக வைத்தியசாலை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் பின்வரும் பதவிக்காக தகுதிவாய்ந்த நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. (நிரந்தர அடிப்படை)

**Full Time - Permanent Basis**

- **Post of Consultant Radiologist**
- **Post of Management Assistant - Grade III (Non - Technical)**

சரியாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டு "நிறைவேற்றுப் பணிப்பாளர், பல்கலைக்கழக வைத்தியசாலை, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், வேரஹெர" என்ற முகவரிக்கு 2024.09.02 க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பித்த பதவியை கடித உறையின் இடதுபக்க மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்ப படிவம் மற்றும் ஏனைய தகவல்களை பின்வரும் வலையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். (**www.kdu.ac.lk**) / தொ.பேசி இல. 011-2044555.

**www.kdu.ac.lk**



**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

**தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்**

| ஒப்பந்த இல. | ஒப்பந்தப் பெயர் | தற்செயலான செலவுகள் சகிதம் பொறியியலாளரின் மதிப்பீடு (ரூ. மில்) | விலைக் கோரல் பிணை முறி (ரூபா மில்.) | ஒப்பந்தக் காலம் (நாட்காட்டி நாட்கள்) |
|---|---|---|---|---|
| RDA/SP/1000KM/WP/001 | கொழும்பு மாவட்டத்தில் வாகனம் ஓடக்கூடிய மற்றும் பாதுகாப்பான நிலைமைக்கு வீதிகளை மேம்படுத்துதல் (பொதி 01) | 191 | 2.5 | 60 |
| RDA/SP/1000KM/WP/002 | கொழும்பு மாவட்டத்தில் வாகனம் ஓடக்கூடிய மற்றும் பாதுகாப்பான நிலைமைக்கு வீதிகளை மேம்படுத்துதல் (பொதி 02) | 186 | 2.5 | 60 |

மேற்கூறிய வேலைகளுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 ஆகஸ்ட் 19ஆம் திகதி முதல் 2024 செப்டெம்பர் 09ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் www.rda.gov.lk இணையதள பக்கங்களை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் அமைச்சுப் பெறுகைக் குழு,**
**போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு, பெறுகைப் பிரிவு,**
**7ஆம் மாடி, ''மஹநெகும மஹமெதுர",**
**216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல**

# மரத்தால் விழுந்தவனை...



மாலை நேரமானதுமே பண்டாரவளை நகரில் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடிவிடுவது வழக்கம். இன்றும் அப்படித் தான். நேரம் இரவு ஏழரை மணியைத் தாண்டியிருந்தது. இன்று மாதக் கடைசி, இன்று தான் எங்களுக்குச் சம்பள நாள். மனேஜர் காசை எண்ணிக் கொடுக்க, அவருக்கு நன்றி கூறிவிட்டு வீதியில் இறங்கி நடக்க ஆரம்பித்தேன்.

வழமையை விட கூட்டம் இன்று சற்றே அதிகமாக இருந்தது. அவர்களிடையே நுழைந்து நானும் வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தேன். எங்கள்; வீடு ஹெலமுதுனையில் பஸ் டிப்போவிற்குப் பின்னால் இருந்தது. அப்படி இப்படியென்று மாநகரசபை மைதானத்தைக் கடந்துவிட்டேன். எதிரே இருப்பது சிங்களத்தில் "தொக வெலந்த பொல" எனக் கூறப்படுகின்ற மரக்கறிகள் விற்கப்படும் பாரிய நிலையமாகும். அங்கே மூட்டைகள் தூக்கும் தொழிலாளர்கள் பெருமளவில் இருப்பார்கள்.

அங்கிருந்து ஹெலமுதுனை அரச வைத்தியசாலை வரை சுமார் ஐநூறு யார் தூரம் வீடு வாசல் எதுவும் கிடையாது. இரவில் சன நடமாட்டமும் அரிதாகவே இருக்கும். இதனை சாதகமாகக் கொண்டு அங்கே திருடர்கள் நடமாட்டமும் அதிகரித்திருந்தது. யாரென்றாலும் அந்த வழியே நடந்து செல்ல சற்றே அச்சமாகத்தான் இருக்கும். இப்போது நானும் அந்தக் குறிப்பிட்ட இடத்தினை நெருங்கியிருந்தேன். மாதம் முழுவதும் உழைத்து சேகரித்த பணம்; பத்திரமாக இருப்பதை உறுசெய்வதற்காக காற்சட்டைப் பைக்குள் கைகளை விட்டேன். மனேஜர் கொடுத்த ஐம்பதாயிரம் ரூபாவும் பத்திரமாக அப்படியே இருந்தது. எப்படியாவது இந்த இடத்தை வேகமாகக் கடந்துவிட வேண்டும் என்ற எண்ணம் மாத்திரம் மனதில் மேலிட்டிருந்தது. உடனே சற்றே வேகமாக நடக்க ஆரம்பித்தேன்.

திடீரென வீதியோரத்திலிருக்கும் கானுக்குள் இருந்து யாரோ முனகும் சத்தம் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். கானுக்குள் ஒரு மனித உருவம் கிடப்பது அந்த இருட்டிலும் நன்றாகத் தெரிந்தது. அது யாராக இருக்கும்?, அருகில் சென்று பார்க்கலாமா வேண்டாமா? என குழம்பிக் கொண்டே கையடக்கத் தொலைபேசியில் மின்னொளியை உருவாக்கி கானுக்கு அருகில் மெல்ல நகர்ந்தேன். அந்த உருவம்; எனக்கு நன்கு பழக்கப்பட்ட உருவம். மரக்கறி நிலையத்தில் மூட்டை சுமக்கும் வேலு, எங்களது பக்கத்துத் தெருவில்தான் வசிக்கிறான். இவனுக்கு மூன்று குமர்களும், மூன்று சிறுவர்களும் இருக்கிறார்கள். தலை கால் தெரியாத அளவு நன்றாகக் குடித்துவிட்டு அங்கே கிடந்திருக்கிறான்.

அவனை இங்கே இப்படியே விட்டுவிட்டுப் போவதா?, இவன் இங்கே கிடந்து இறந்து போனால் இவனது குடும்பம் என்னாகும்?, இப்படியெல்லாம் யோசித்துப் பார்த்தேன். அவனை அப்படியே விட்டுச்செல்ல மனமில்லாமல் அவனை அணுகி, அவனது வலக் கையைப் பிடித்து இழுத்துத் தூக்கி உட்கார வைத்தேன். அவன் மெல்ல எழும்ப முயற்சித்தான். நானும் அவனுக்கு உதவினேன். ஒருவழியாக அவனை இழுத்து வந்து அவனது வீட்டில் சேர்த்தேன். அப்படியே என் பொழுதும் முடிந்து போனது.

மறுநாள் காலையில் வேலுவின் மனைவி எங்கள் வீட்டின் வாசலில் வந்து நின்றாள். அவள் எதற்காக வந்திருக்கிறாள் என்பதையறியாது அவளை அணுகிக் காரணம் கேட்டேன். "ஐயா, அவுரூட்டு சல்லி இருபதாயிரம் ஒங்க கிட்ட இருக்காம். வாங்கிட்டு வரச்சொன்னாருங்க" என்றாபள். எனக்கு கை, கால் ஓடவில்லை. என்னிடமிருப்பதோ நேற்று வாங்கிய சம்பளப் பணம் மாத்திரமே. வீட்டுச் செலவிற்கே அது போதுவதில்லை. அத்தோடு மகளின் டியுசன் காசும் மேலதிகமாய் ஒட்டிக்கொண்டிருக்கிறது. இவரது கேள்வி மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தாற்போல் இருந்தது எனக்கு. என் மூளையும் வேலை செய்ய மறுத்தது.

என் மனைவி அருகில் வந்து என்னையும், வேலுவின் மனைவியையும் மாறி மாறி பார்த்துக்கொண்டிருந்தாள். நிலைமை மோசமடையப் போவதையெண்ணி மெதுவாக உள்ளே சென்றேன். சம்பளப் பணத்திலிருந்து இருபதாயிரம் ரூபாவை எடுத்து வந்து அவளிடம் கொடுத்தேன். அவளும் அவ்விடம் விட்டு நீங்கினாள். என் மனைவியும் என்னை முறைத்தபடியே வீட்டிற்குள் சென்றாள்.

என்ன செய்வது, நானோ குடும்பத் தலைவன் ஆகிற்றே!. எந்த இடுக்கண், தொல்லைகள் வந்தாலும் அதைச் சுமந்தாக வேண்டுமே. நான் செய்த நன்மை என்னைத் தேடி துரத்தி வந்துள்ளது என வருந்திக் கொண்டே அடுத்த நாள் உழைப்பிற்காக புறப்பட ஆரம்பித்தேன்.

இரா மோசஸ்

**உங்கள் சிறுகதைகளை 1300 சொற்களுக்கு மேற்படா வண்ணம் எழுதி, sirukathaithinakaran@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள். மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையிலும் அதிகமான சொற்களைக் கொண்ட சிறுகதைகள் பிரசுரிக்கப்பட மாட்டாது. அதேபோல நூல் விமர்சனங்களை 600 சொற்களுக்கு மேற்படாமலும் எழுதி அனுப்பி வையுங்கள்.**

**_ஆர்_**

# பணம் எத்தனையும் செய்யும்

ஐக்கிய அமெரிக்காவில் ஒரு வங்கிக்கிளையினுள் நுழைகின்றார் மூதாட்டியொருவர். வங்கியினுள் வரிசையிற் காத்திருந்த அவர் தனது சந்தர்ப்பம் வந்ததும் அவர் தன் வங்கிக்கணக்கின் தரவு அட்டையை எதிரே உட்கார்ந்திருந்த வங்கிப்பணிப் பெண்ணிடம் நீட்டியவாறு "தயவுசெய்து என் கணக்கிலிருந்து பத்து டொலர் பணத்தை எனக்குப் பெற்றுத்தாருங்கள்" என்று வினயமாகக் கேட்டார். அந்தப் பெண் வயதான இம்மூதாட்டியை சற்றும் பொருட்படுத்தாத வண்ணம் ஓர் ஏளனச் சிரிப்புடனும் கேவலப் பார்வையுடனும் "மன்னிக்கவும், நூறு டாலருக்குக் குறைவான தொகையை மீளப்பெறுவதாயின் எங்கள் ஏ.ரீ.எம் இயந்திரத்தை பயன்படுத்துங்கள்" எனச்சொல்கிறார்.



என்னிடம் ஏ.ரீ.எம் அட்டை இல்லை அம்மணி, எனக்கு தேவைப்படும் பணத்தொகையினை இவ்விடத்தில் ஏன் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை நான் அறிந்துகொள்ள முடியுமா?" மிகவும் தாழ்மையுடன் கேட்கின்றார் அம்மூதாட்டி. வங்கிப்பணிப்பெண் சற்றே கோபத்துடன் இம்மூதாட்டியின் வங்கித் தரவட்டையை மீள நீட்டியவாறு "இது எங்கள் வங்கியின் ஒரு சட்டம். ஏ.ரீ.எம் அட்டையொன்று இல்லையென்றால் அதைப்பெற்றுக் கொள்ளுங்கள். பின்னர் ஏ.ரீ.எம் இயந்திரத்தைப் பயன்படுத்தி பணத்தை மீளப்பெறுங்கள்" என்று கடுகடுப்பாய்ச் சொன்னவள் என்னிடம் வேறு ஏதாவது அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறதா? வழிவிடுங்கள் பின்னால் நிறையப்பேர் வரிசையிற் காத்திருக்கின்றார்கள்" தன்னையும் அங்கு நடப்பதையும் பலர் பார்த்துக்கொண்டிருப்பதை மூதாட்டி காண்கிறார். சில நொடிகள் அங்கு நிசப்தமாய் நின்றவர் தனது வங்கித் தரவட்டையினை அதே பெண்ணிடம் மீண்டும் நீட்டியவராய்

"தயவுசெய்து எனது கணக்கில் இருக்கும் முழுத்தொகை எவ்வளவு என்று என்னால் அறிந்து கொள்ளலாமா?" எனக்கேட்டார்.

வேண்டா வெறுப்போடு சலிப்புடன் அட்டையை வாங்கி அப்பணிப் பெண்ணின் கண்கள் ஆச்சரியத்தால் விரிகின்றன. சற்று நேரத்தில் கோபம் தணிந்தவளாய் மிகப்பணிவான குரலில் "உங்கள் கணக்கில் மொத்தமாக மூவாயிரம் பில்லியன் டொலர் பணம் இருக்கிறது மெடம்" என்றாள் வங்கியினுள் வரிசையில் நின்றோர் மட்டுமன்றி ஏனைய பணியாட்கள்கூட இது கேட்டு அதிர்ந்தேவிட்டனர்.

உங்களுக்குத் தேவையான தொகையை இவ்விடத்திலேயே பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்கிறேன், உங்கள் கணக்கிலிருந்து எவ்வளவு பணம் பெற்றுக்கொள்ள வேண்டுமெனச் சொல்லுங்கள் மெடம்" என்றார் பணிப்பெண்.

மூதாட்டி அமைதியாக "என் கணக்கிலிருக்கும் முழுத்தொகையான மூவாயிரம் பில்லியன் டொலரை எனக்குப்பெற்றுத் தாருங்கள்" என்றார்.

வங்கி முழுதும் அமைதியில் ஆழ "மன்னிக்கவும் மெடம், இச்சமயம் எங்கள் கிளையில் அந்தளவு பெரிய தொகை இருப்பிலில்லை, கொஞ்சம் காத்திருங்கள் நான் மேலாளருடன் பேசிவிட்டு வருகிறேன்" என்று தாழ்மையான தொனியில் சொல்லிவிட்டு தன் இருக்கையை வாடிக்கையாளர் வரிசையின் பக்கம் நகர்த்தி மூதாட்டியை அதில் அமரவும் சொன்னாள்.

உட்கார மறுத்த மூதாட்டி" யாருடைய ஆசனமும் எனக்குத் தேவையில்லை, என் பணத்தை தாமதியாது தந்துவிட்டாற்போதும்" என்று பழையபடி வரிசையிற் காத்திருக்கலானாள். மேலாளரை நோக்கி நகர்ந்த பணிப்பெண் சிறிது நேரத்தில் மீண்டும் மூதாட்டியிடம் வருகையில் வங்கி மேலாளரும் வந்தார்

அவர் மூதாட்டியிடம்

மிகப்பணிவாக" மெடம் உங்கள் பணத்தை முழுவதுமாகத் தருவதற்கு இப்போது இந்தக்கிளையில் பணமில்லை மெடம், தலைமைக் கிளையிலிருந்து வரவழைத்தே தரமுடியும். தயவுசெய்து மெடம் உங்கள் பணத்தை நாளை வந்து பெற்றுக்கொள்ளுங்கள். எல்லா நடைமுறைகளையும் நாளை நிச்சயமாக பூர்த்திசெய்து வைக்கின்றோம்." என்றார்."

என் கணக்கிலிருந்து எனக்கு இப்போது வீடு செல்லவும் நாளை மீள வரவும் டெக்சிக்குத் தேவையான இருநூறு டாலரை இப்போது பெற்றுத்தாருங்கள், நான் சென்று நாளை இதேநேரம் வருகிறேன்.

நாளைய தினமாவது என்னை ஏமாற்றிவிடாமல் என் பணத்தை மீளப்பெற வந்த வாடிக்கையாளரைப்போல் நடத்திவிடுங்கள்"

என்று மிகப்பணிவாக வேண்டினாள் மூதாட்டி. மேலாளரதும் வங்கிப்பணியாட்களதும் பெருமூச்சுக் காற்றால் வங்கி நிறைந்தது. அங்கிருந்தோர் வாய்மூட மறந்தோராய் நின்றிருக்க, மூதாட்டி தன் கணக்கிலிருந்த இருநூறு டொலர் பணத்தையும் தரவட்டையையும் பெற்றுக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

**ஹொரொவ்பொத்தான அகமட் இம்தியாஸ்.**

# ஒத்திசைந்து வாழ ஒற்றது செய்யாதோ?

தேவை இருக்கிறது
தேடிய போது எனக்கு
பெரும் வியப்பானது.
பெரியவர்களா இவர்கள்?

நேற்று நல்ல மழை
நேத்தி செய்யலாம்.
வயல் உழுது வந்து
வரம்பு சீராக்கலாம்.

எல்லாம் நல்லபடியாக
எள்ளு விதைக்க நடந்தது.
தடுத்து விட்டார் வந்து
தரை இனி இல்லை உனக்கு.

மூத்தவர் அவர் என்று
மூன்று முறை ஓதி
பழக்கத்தில் வந்து விட
பள்ளியில் கற்றுவித்தார்.

ஏட்டுக் கல்வி இன்று
ஏணியாகவில்லை பார்.
மண்ணில் விதைக்க
மனம் துணிந்தால் போதும்.
நம் நாட்டில் தான்
நமக்கு பயன் இல்லை.
வெளிநாட்டில் வேலை
வெற்றி பெற வைக்குமா?

கல்வி முறை மாற
கனவு கண்டேன்.
காற்றடிக்க தூற்றும்
காலம் இன்றும் இருக்க.
பாட்டுப் பாடி களனி
பாவையர் சூட பூக்கும்.
ஊற்றெடுத்து நிலம்
ஊர் உண்ண கசியும்.
இல்லை இனியொரு
இடி விழும் சூழல்.
துன்பம் தொலைந்திட
துணி நெய்திடுவார்.


ஆயுதம் ஏந்தி இனி
ஆர்ப்பரிக்காது முடிப்பார்.
அன்பை விதைத்து
அறுவடை செய்யாரோ?
சின்ன வயதில்
சிணுங்கிடாது வளர்ந்திட
சீக்கிரம் ஒரு தொழில்
சீராக கற்றிட செய்யாரோ?

சொல்லி வளர்த்து
சொன்னபடி நடந்திட
வாழ்வொன்று வாழ்ந்து
வாய்ப்பை ஆக்காரோ?

போற்றிப் புகழும்
போர்க் குணம் கொண்டு
உடுக்கது தாளம் போல
உடைமை கொள்ள மாறாதோ?
ஔவை சொன்ன வேதம்
ஔடதம் போல இருக்க
ஒத்திசைந்து கற்று தம்
ஒற்றுமை பறைசாற்றாரோ?

**அன்புடன் நதுநசி.**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல:134



திரு/திருமதி.செல்வி ..............................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..............................................
..............................................
..............................................
.............................. ..............................
திகதி கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 134
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 134

### இடமிருந்துவலம்

1. ஒருவருக்குச் செய்யும் நன்மை அல்லது உதவி'
5, இரண்டு
7. நகைப்பு
8. உடம்பு (குழம்பியுள்ளது)
9. கறிக்கு சுவை சேர்ப்பது
10. இவர் ஒரு திரைப்பட நடிகர் (குழம்பியுள்ளது)
11. தன்மை இடத்துப் பன்மைச் சொல் ( திரும்பியுள்ளது)
13. இது மிருகங்களுக்கு உண்டு
14. பல வருடங்களுக்கு முன்னர் பாடசாலை மாணவர்களுக்கு இதுதான் ஆரம்ப வகுப்பு
17. பழைமை அல்லது காலத்தால் முற்பட்டது
18. மயானம்
21. கம்பராமாயண கதாபாத்திரங்களுள் ஒன்று
23. காய்கறி வகைகளுள் இதுவும் ஒன்று
24. வெற்றிலை பாக்கு (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. குறிப்பிட்ட சூழ்நிலைக்குப் பொருத்தமானது அல்லது சரியானது
2. குதிரை
3. பெண்கள் அணிவது
4. ஒன்றைப் பற்றிய தவறான தகவல் அல்லது வதந்தி (குழம்பியுள்ளது)
5. சிறு உயிரினம் பறக்கும் தன்மையுடையது
6. அவலட்சணம்
8. வேகம் மிகுந்த காற்று (குழம்பியுள்ளது)
12. பேச்சாற்றல்
13. ஒருவருக்குப் பின்னர் அவரது சொத்துகளுக்கு உரிமையானவர்
15. நிசப்தம்
16. உணவு
19. தாங்கமுடியாத அல்லது அதிகமான தீவிர நிலை (குழம்பியுள்ளது)
20. வீட்டுக் கதவுகளை இலகுவில் திறந்துகொள்ள முடியாதபடி பாதுகாப்பளிக்கும் சாதனம் (தலைகீழ்)
22. திருமணச் சடங்கின்போது முக்கியமாகத் தேவைப்படும் மங்கலப் பொருள் (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 133

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. தீவிரம்
4. கோதுமை
7. வதம்
8. வள்ளல்
9. மனம்
10. மூதுரை
11. பட்சி
13. நிகர்
14. கடுகு
16. சதா
17. வலி
18. கனவான்
20. பலி
22. சிதிலம்
23. அல்லி

**மேலிருந்து கீழ்**

1. தீவனம்
2. விதம்
3. மரம்
4. கோள்மூட்டு
5. துவரை
6. மைல்
8. துளசி
11. பகலவன்
12. நாகு
13. நிதானம்
15. கப்பல்
16. சகதி
19. வாசி
21. அலி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :133

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **அனுராதா பாக்கியராஜா** 88 1/1 பஸல்ஸ் ஒழுங்கை, வெள்ளவத்தை | **கே.எம்.எம். பாரூக்,** 16/1 ஸ்ரீ தம்மிஸார இடம், கும்பியன்கொட, மாத்தளை | **ரதி சிவசீலன்** நீர்வேலி வடக்கு, யாழ்ப்பாணம் |

### பாராட்டு பெறுவோர்

1. **கே. புண்ணியநேசன்** காரைதீவு
2. **எம்.ஏ. சித்தீக்,** அக்கரைப்பற்று
3. **எஸ். ருக்ஷிதா** தலவாக்கலை
4. **ஏ. புஹாரி** உக்குவளை
5. **எம். பாசிர்** ஹாலிஎல
6. **ந.கிரிசாந்த்** மட்டக்களப்பு
7. **எம். டபிள்யூ. எம். நவாஸ்,** துல்ஹிரிய
8. **நஸ்ரினா நஸார்** கொழும்பு 10
9. **எம்.ஏ. அத்தாஸ்** மாத்தறை
10. **ஏ.சீ. ஸ்ரீதரன்** கொழும்பு 06

# சியபத பினான்ஸ் பிஎல்சி
# பெறுமதிமிக்க ஏல விற்பனை

டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள் உட்பட 89 வாகனங்கள்
2024 ஆகஸ்ட் 24 ஆம் திகதி சனிக்கிழமை அன்று மு.ப. 10.00க்கு

சியபத பினான்ஸ் வாகன கூடம்,
இல. **344,** சிறிமங்கலவத்தை, மாம்பே, பிலியந்தலை.

பரீட்சிப்பது ஆகஸ்ட் 21, 22 மற்றும் 23 ஆகிய திகதிகளில் பிலியந்தலை வாகன நிலையத்தில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை

பிலியந்தலை கூடம் **: 0117 605245 / 076 8905692** (அஜித்)

| VEHICE NO. | MODEL | YEAR |
|---|---|---|
| | **MOTOR CAR** | |
| 14-0XXX | NISSAN,SUNNY | 1983 |
| 14-4XXX | TOYOTA,COROLLA | 1983 |
| 13-2XXX | FORD,LASEL GL | 1984 |
| 13-3XXX | FORD,LASER | 1984 |
| 15-1XXX | TOYOTA,COROLLA | 1984 |
| 15-7XXX | TOYOTA,AE 80 - COROLLA | 1985 |
| 17-3XXX | TOYOTA,E-AT 150 CORONA | 1987 |
| 15-4XXX | HONDA,CIVIC SEDAN | 1988 |
| WP-GD-6XXX | NISSAN AVENIR MOTOR CAR | 1997 |
| 301-8XXX | HONDA,CIVIC | 2000 |
| CP-JQ-6XXX | NISSAN,AD WAGON | 2001 |
| WP-KI-0XXX | MARUTI,800 | 2008 |
| NW-KT-5XXX | MAZDA RX8 | 2008 |
| WP-KU-9XXX | TATA,NANO | 2012 |
| WP-CAF-9XXX | MICRO,PANDA LC 1.0 | 2015 |
| | **MOTOR JEEP** | |
| WP-CAM-2XXX | MITSUBISHI DLA-GG2W OUTLANDER | 2013 |
| | **MOTOR VAN** | |
| 53-0XXX | TOYOTA,TOWNACE | 1987 |
| 54-1XXX | NISSAN,LARGO | 1988 |
| 250-0XXX | NISSAN,VANETTE | 1991 |
| UP-GA-0XXX | NISSAN,VANETTE | 1995 |
| SG-PA-2XXX | MAZDA KC-SR5AV | 1999 |
| CP-HV-8XXX | HYUNDAI,GRACE H100M | 1999 |
| CP-PB-6XXX | MAZDA,LE-DG62V | 2002 |
| WP-PD-8XXX | DAIHATSU,LE S320V | 2007 |
| | **MOTOR TRUCK** | |
| WP-LC-7XXX | MITSUBISHI,GD-U61T | 2002 |
| WP-PA-7XXX | CHANGAN,SC1030S | 2006 |
| SP-PP-4XXX | MAHINDRA,BOLERO MAXI TRUCK | 2010 |
| SP-PU-4XXX | FOTON,BJ1010VOJA3-2 | 2012 |
| CP-PT-4XXX | MAHINDRA,MAXXIMO | 2012 |
| SG-PV-9XXX | LANKA ASHOK LEYLAND,DOST LX | 2013 |
| CP-PY-4XXX | MAHINDRA,BMT PLUS VX | 2014 |
| EP-LL-2XXX | FOTON,BJ1036V3JB3 R | 2014 |
| WP-DAA-9XXX | DFSK,EQ1020DR | 2015 |
| CP-DAE-8XXX | BRILLIANCE SHINERY,SY1020DB3AJI | 2015 |
| WP-DAD-8XXX | FOTON,BJ1008V0JA3-2 | 2016 |
| | **MOTOR LORRY** | |
| WP-LH-8XXX | LANKA ASHOK LEYLAND COMET TIPPER 1613 | 2010 |
| WP-LJ-6XXX | TATA,LPK 1615 | 2012 |
| EPLK-7XXX | LANKA ASHOK LEYLAND,1613 COMET TIPPER | 2013 |
| | **MOTOR BIKE** | |
| NC-BBZ-8XXX | YAMAHA,FAZER | 2014 |
| | **THREE WHEELER** | |
| CP-QD-6XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2005 |
| WP-QD-9XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| CP-QF-8XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| WP-QG-2XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| WP-QH-8XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| SG-QI-7XXX | BAJAJ,AUTO RE 2 STROKE | 2006 |
| WP-QJ-4XXX | BAJAJ,AUTO AR4S | 2007 |
| WP-QJ-9XXX | BAJAJ,AUTO AR4S | 2007 |
| WP-QO-1XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| SP-QQ-5XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| CP-QQ-9XXX | BAJAJ,AUTO AR4S | 2008 |
| WP-QS-4XXX | BAJAJ,BAJAJ 4S | 2009 |
| CP-QT-7XXX | BAJAJ,BAJAJ 4 S | 2009 |
| CP-QT-9XXX | BAJAJ,BAJAJ 4 S | 2009 |
| CP-QU-0XXX | BAJAJ,BAJAJ 4 S | 2009 |
| CP-QU-0XXX | BAJAJ,BAJAJ 4 S | 2009 |
| SG-QU-4XXX | BAJAJ,BAJAJ 4S | 2009 |
| CP-QV-2XXX | BAJAJ,BAJAJ 4 S | 2009 |
| CP-QV-6XXX | BAJAJ,BAJAJ 4 S | 2009 |
| WP-QX-9XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| NC-QZ-6XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| WP-QZ-7XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| WP-YA-1XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| CP-YA-1XXX | BAJAJ,AR4S UG | 2010 |
| NC-YG-4XXX | BAJAJ,RE 205 | 2010 |
| CP-YH-7XXX | BAJAJ,RE 205 | 2010 |
| CP-YL-3XXX | BAJAJ,RE 205 | 2011 |
| SG-YL-4XXX | BAJAJ,RE 205 | 2011 |
| WP-YM-8XXX | BAJAJ,RE205 | 2011 |
| WP-YN-0XXX | BAJAJ,RE 205 | 2011 |
| CP-YP-0XXX | BAJAJ,RE 205 | 2011 |
| WP-YP-0XXX | BAJAJ,RE 205 | 2011 |
| WP-YR-0XXX | BAJAJ,RE 205 | 2011 |
| WP-YS-4XXX | BAJAJ,RE205 | 2011 |
| NP-YT-6XXX | BAJAJ,RE 205 | 2011 |
| WP-YS-8XXX | BAJAJ,RE 205 | 2011 |
| WP-YW-3XXX | BAJAJ,RE 205 | 2012 |
| UP-YW-7XXX | BAJAJ,RE 205 | 2012 |
| WP-AAA-4XXX | BAJAJ,RE 205 | 2012 |
| WP-AAC-4XXX | BAJAJ,RE 205 | 2012 |
| WP-AAD-0XXX | BAJAJ,RE 205 | 2012 |
| WP-AAK-5XXX | BAJAJ,RE 205 | 2013 |
| CP-AAG-9XXX | BAJAJ,RE 205 | 2013 |
| WP-AAU-6XXX | BAJAJ,RE | 2014 |
| UP-AAU-7XXX | PIAGGIO,APE | 2014 |
| SG-ABA-4XXX | BAJAJ,RE | 2015 |
| WP-ABB-0XXX | BAJAJ,RE | 2015 |
| WP-ABC-6XXX | BAJAJ,RE | 2015 |
| NC-ABF-5XXX | BAJAJ,RE | 2015 |
| SG-ABK-7XXX | BAJAJ,RE | 2016 |

சியபத பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்திற்கு அறவிடப்பட வேண்டிய கடன் தொகையை அறவிடுவதற்காக அவர்களின் கடனாளிகள் சார்பில் மேலுள்ள வாகன ஏல விற்பனை நடத்தப்படுகிறது.

**விற்பனை நிபந்தனைகள்:**

- உடன் நுழைவு ஏல விற்பனை நிறைவின்று ரூபா 2,000 மீளளிக்கப்படாத அனுமதிச் சீட்டாகவும், ரூபா 10,000 மீளளிக்கக்கூடிய வைப்புத் தொகையாகவும் அறவிடப்படும்.
- கொடுப்பனவு சந்தியல் இறக்கப்பட்ட உடன் குறித்த விலைனது பெறுமதியில் மீளளிக்கப்படாத 25% அடிப்படை வைப்பு ஒன்றை ஆரம்பத்தில் செலுத்த வேண்டும் என்பதோடு, எஞ்சிய 75% தொகையை 2024 ஆகஸ்ட் 28 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00க்கு முன்னர் சியபத பினான்ஸ் பிஎல்சி, சியபத கோபுரம், 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08 இல் அமைந்துள்ள தலைமை அலுவலகத்திற்கு அல்லது எந்த ஒரு கிளைக்கும் பணமாக செலுத்தி வாகனத்தை அகற்றிக்கொள்ள வேண்டும்.
- எந்த ஒரு வாகனம்/ வாகனங்களை முன் அறிவித்தல் இன்றி ஏல விற்பனையில் இருந்து அகற்றிக்கொள்ளும் உரிமை முகாமைத்துவம் வசமானது.
- ஏலதாரரின் முடிவு இறுதி முடிவாகும்.

ஏ என் அல்கெவத்த ஒக்ஷனியர்(ர்)
**A N ALGEWATHTHA AUCTIONEER**
No.323, Janajayacity, Rajagiriya.
m. +94 71 790 5 790
e. algewaththaauctioneer@gmail.com
**www.lankaauction.lk**



**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**


# கொள்வனவு அறிவித்தல்

## இலங்கை கடற்படை
### பாதுகாப்பு அமைச்சு

**இலங்கை கடற்படைக்கு 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்குமான களஞ்சியப் பொருட்களை விநியோகித்தல் தொடர்பாக உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், வழங்குனர்கள், ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் கேள்வி கோருதல்**

1. இலங்கை கடற்படைத் திணைக்களத்தின் கொள்வனவு குழுத் தலைவரினால் இலங்கை கடற்படைக்கு 2025 **ஜனவரி மாதம் 01 ஆம் திகதியில் இருந்து 2025 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி** வரைக்குமான காலப்பகுதிக்கு கீழே குறிப்பிடப்படும் வேறு வேறு களஞ்சியப் பொருட்கள் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்களையோ ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் விநியோகிப்பதை உறுதி செய்யக்கூடிய இலங்கையின் வர்த்தக நிறுவனங்கள், இறக்குமதியாளர்கள் உற்பத்தியாளர்கள், ஒப்பந்தக்காரர்கள் போன்ற வழங்குனர்களிடமிருந்து விலைகள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் சமர்ப்பிக்கும் விலைகளின் செல்லுபடியாகும் காலம் 2025 **ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் 2025 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி** வரையிலாகும்.
   (அ) தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களினால் குறித்த களஞ்யப் பொருட்கள் ராகம, வெலிசரையிலுள்ள இலங்கை கடற்படை கப்பல் மஹசென் நிறுவனத்தில் உள்ள இடைநிலை களஞ்சியச் சாலைக்கு ஒப்படைக்க வேண்டும்.
   (ஆ) இது தொடர்பாக கரிசனை காட்டுபவர்கள் ஒவ்வொரு வகையறாவுக்குமான மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமான ரூபா **5,000.00** ஐ காசாக நிதிப் பணிப்பாளர், இலங்கை கடற்படைத் தலைமையகம், த.பெ. எண் 593, கொழும்பு 01. என்பவரிடம் செலுத்தவும். விண்ணப்ப படிவங்கள் **2024 ஆகஸ்ட் மாதம் 20 திகதயில் இருந்து 2024 செப்டம்பர் மாதம் 24 ஆம் திகதி வரை** வாராந்த வேலை நாட்களில் காலை **10.00 மணி தொடக்கம் 14.00 மணிக்கும்** இடைப்பட்ட காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பொது களஞ்சிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்ப்பிக்க வேண்டும்.

2. 2025 ஆம் ஆண்டுக்கு ஒவ்வொரு நிறுவனத்துக்குமான தேவைகளின் அளவுகள் மற்றும் விபரங்கள் ஒவ்வொரு வகையறாவின் கீழும் தேவைப்படும் அளவுகள் விண்ணப்படிவத்துடன் வழங்கப்படும்.

**கேள்விப்பத்திர இலக்கங்களும் ஒவ்வொரு வகையறாவும்**

| விடயங்களின் வகைப் படுத்தல் இலக்கங்கள் | விடயங்களின் வகைப படுத்தல் விடய விபரம் | முடிவுத் திகதியும் பத்திரங்களை திறக்கும் திகதியும் நேரமும் |
|---|---|---|
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/01/ஆர்சீ/2025 | அனைத்து வகையான பெட்டரிகள் | 2024 செப்டம்பர் 25, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/02/ஆர்சீ/2025 | சுற்றுக்கம்பிகள் (ருவைெவபெ ரவசநள) | 2024 செப்டம்பர் 25, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/03/ஆர்சீ/2025 | வீட்டினுள் பாவிக்கும் மின் வயர்கள் | 2024 செப்டம்பர் 25, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/04/ஆர்சீ/2025 | பொறுத்திகள் - ஆறவைடா (MCB, MCCB, RCCB) | 2024 செப்டம்பர் 25, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/05/ஆர்சீ/2025 | குளியலறை உபகரணங்கள் | 2024 செப்டம்பர் 25, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/07/ஆர்சீ/2025 | டயர் மற்றும் டியூப் வகைகள் | 2024 செப்டம்பர் 25, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/08/ஆர்சீ/2025 | கொன்டியுட் மற்றும் உதிரிப்பாகங்கள் | 2024 செப்டம்பர் 25, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/09/ஆர்சீ/2025 | உருக்குக்கம்பி (கட்டிட நிர்மாணம்) | 2024 செப்டம்பர் 25, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/10/ஆர்சீ/2025 | கைதொழிலுக்கு பாவிக்கப்படும் வாயு (Industrial gases) | 2024 செப்டம்பர் 25, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/11/ஆர்சீ/2025 (கோப்பு எண் 01) | கட்டிட கட்டுமானத்துக்காக பயன்படுத்தப்படும் பொருட்கள் - மென்மையான இரும்பு மற்றும் கால்வனேற்றப்பட்ட பொருட்கள் | 2024 செப்டம்பர் 25, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/11/ஆர்சீ/2025 (கோப்பு எண் 02) | கட்டிட கட்டுமானத்துக்காக பயன்படுத்தப்படும் பொது பொருட்கள்- கதவுகள் மற்றும் ஜன்னல்களுக்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் பாகங்கள் | 2024 செப்டம்பர் 25, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/11/ஆர்சீ/2025 (கோப்பு எண் 03) | கட்டிட கட்டுமானத்துக்காக பயன்படுத்தப்படும் பொது பொருட்கள் | 2024 செப்டம்பர் 25, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/12/ஆர்சீ/2025 | தும்பரவு செய்யும் உற்பத்திப் பொருட்கள் | 2024 செப்டம்பர் 25, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/13/ஆர்சீ/2025 | தொலைப்பேசி கம்பி வகைகள், ட்ரொப்வயர், தொலைபேசி உதிரிப்பாகங்கள் | 2024 செப்டம்பர் 25, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/14/ஆர்சீ/2025 | அலுவலக காகிதாதிகள் | 2024 செப்டம்பர் 26, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/15/ஆர்சீ/2025 | அச்சுக்கடதாசி மற்றும் கோப்பிகள் | 2024 செப்டம்பர் 26, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/16/ஆர்சீ/2025 | உள்நாட்டு பலகை வகைகள் | 2024 செப்டம்பர் 26, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/17/ஆர்சீ/2025 (கோப்பு எண் 01) | பொது பொறியில் உடமைகள் | 2024 செப்டம்பர் 26, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/17/ஆர்சீ/2025 (கோப்பு எண் 02) | பொது பொறியில் உடமைகள் | 2024 செப்டம்பர் 26, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/17/ஆர்சீ/2025 (கோப்பு எண் 03) | பொது பொறியில் உடமைகள் | 2024 செப்டம்பர் 26, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/18/ஆர்சீ/2025 | ஒட்டும் உருளைக் கம்பிகள் (ருநடனiபெ நடநஉவசழனந) | 2024 செப்டம்பர் 26, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/19/ஆர்சீ/2025 | பிவிசி குழாய் உதிரிப்பாகங்கள் | 2024 செப்டம்பர் 26, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/20/ஆர்சீ/2025 | ஒட்டுப்பலகை வகைகள் உள்நாட்டு வெளிநாட்டு | 2024 செப்டம்பர் 26, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/21/ஆர்சீ/2025 | பொதுவான வர்ணங்கள் | 2024 செப்டம்பர் 26, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/22/ஆர்சீ/2025 | பொதுவான வர்ணங்கள் | 2024 செப்டம்பர் 26, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/23/ஆர்சீ/2025 | பெயாரின் வகைகள் | |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/24/ஆர்சீ/2025 | மின் குமிழ்கள் | 2024 செப்டம்பர் 26, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/25/ஆர்சீ/2025 | சிலிகின் (ளுடைiஉழநெ ளநயடயவெ) | 2024 செப்டம்பர் 26, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/26/ஆர்சீ/2025 | மோட்டார் வாகன வர்ணங்கள் | 2024 செப்டம்பர் 27, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/27/ஆர்சீ/2025 | அச்சிடும் பெபொருட்கள் | 2024 செப்டம்பர் 27, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/28/ஆர்சீ/2025 | வெளிநாட்டு பலகை வகைகள் | 2024 செப்டம்பர் 27, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/29/ஆர்சீ/2025 | ஜ ஆர் பீ கண்ணாடி துரும்பு | 2024 செப்டம்பர் 27, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/30/ஆர்சீ/2025 (கோப்பு எண் A) | வாகன பொருட்கள் | |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/30/ஆர்சீ/2025 (கோப்பு எண் B) | வாகன பொருட்கள் | 2024 செப்டம்பர் 27, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/30/ஆர்சீ/2025 (கோப்பு எண் C) | வாகன பொருட்கள் | 2024 செப்டம்பர் 27, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/30/ஆர்சீ/2025 (கோப்பு எண் D) | வாகன பொருட்கள் | 2024 செப்டம்பர் 27, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/30/ஆர்சீ/2025 (கோப்பு எண் E) | வாகன பொருட்கள் | 2024 செப்டம்பர் 27, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/30/ஆர்சீ/2025 (கோப்பு எண் 02) | வாகனங்களுக்குள் பயன்படுத்தப்படும் தரைவிரிப்புகள், கவர்கள் மற்றும் துணிகள் | 2024 செப்டம்பர் 27, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/33/ஆர்ச/2025 | நீர் சுத்திகரிப்பு நிலயங்களுக்காக பயன்படுத்தப்படும் பாகங்கள் | 2024 செப்டம்பர் 27, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/34/ஆர்சீ/2025 | சீமெண்ட் (50 கிலோ) | |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/36/ஆர்சீ/2025 | கருங்கள் மற்றும் மணல் | 2024 செப்டம்பர் 27, 1000 மணி |
| எஸ்எல்என்/எஸ்ஓஜீ/37/ஆர்சீ/2025 | ஸ்மார்ட் ஐடிகளுக்கான அச்சிடும் பொருட்கள் | 2024 செப்டம்பர் 27, 1000 மணி |

3. ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் தகமைகளை பூர்த்தி செய்ய வேண்டும். (விலைகளை விமர்சிக்கும் போது இவ்விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.)
   i. பொது களஞ்சியப் பொருட்கள் கப்பல்கள், படகுகள் மற்றும் கடற்படை நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் வண்ணப்பூச்சுகளை சமமான திறன் கொண்டு அரச / தனியார் நிறுவனங்களுக்கு சிறப்பான முறையில் விநியோகித்தமை தொடர்பான 2 வருட அனுபவம்.
   ii. நிலையான மூலதன வசதிகள்.
   iii. ஒழுங்காக வரி செலுத்தியமைக்கான அறிக்கை
   iv. போதுமான தொடர்பாடல் வசதிகள் (தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, தொலைநகல், மின் அஞ்சல்)
   v. போதுமான களஞ்சிய சாலை வசதிகள்
   vi. போதுமான தொழிலாளர் மற்றும் அலுவலக வசதிகள்
   vii. போதுமான வகையில் போக்குவரத்து வாகன வசதிகள்
   viii. வர்த்தக நிறுவனமாக பதிவு செய்து கொண்டுள்ள சான்றிதழ் அல்லது நிறுவன ரீதியாக ஒன்றிணைந்து செயற்பட்டமை தொடர்பான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 3 வருடத்துக்கு மேற்பட்ட காலப்பகுதியில் தொடர்ந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கான சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

4 விண்ணப்பதாரிகள் விலைகளை சமர்ப்பிக்கப்படும் போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) செலுத்துபவராக பதிவு செய்த இலக்கத்தை சமர்ப்பித்தல் கட்டாயமாகும். இவ்வாறு பதிவு செய்து கொள்ளாத விண்ணப்பதாரிகள் வரி விலக்களிக்கப்பட்டமை தொடர்பாக இறை வரித் திணைக்கள ஆணையாளரின் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் மேற்குறித்த தேவைகளை பூர்த்தி செய்யாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5 விண்ணப்பதாரிகள் விலைகளை சமர்ப்பிக்கப்படும் போது கடித அட்டையின் இடது பக்கம் மேல் மூலையில் **"இலங்கை கடற்படைக்கு 2025 ஆம் ஆண்டுக்கான களஞ்சியப் பொருட்களை விநியோகிப்பதற்கான ஒப்பந்த விலைகளை சமர்ப்பித்தல்"** (விடய விபரம்: எஸ்எல்என்/எஸ்ஓஜீ/...../ஆர்சீ/2025 கேள்விப்பத்திரப்பெட்டியில் (டெண்டர்) விண்ணப்பங்கள் திறக்கும் திகதி/ நேரம் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் கீழ் காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். அல்லது குறித்த கேள்விப்பத்திரப்பெட்டியில் (டெண்டர்) இட வேண்டும்

**தலைவர்,**
**திணைக்களக் கொள்வனவுக் குழு,**
**இலங்கை கடற்படை,இலங்கை கடற்படை தலைமையகம்,**
**த.பெ. எண் 593, கொழும்பு 01.**

6 குறித்த நேரம் முடிவடைந்த உடனேயே கேள்விப்பத்திரம் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், அவை திறக்கப்படாமலேயே திருப்பிக் கொடுக்கப்படும். விண்ணப்பதாரிக்கோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கோ கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் இந்த சந்தர்ப்பத்திற்கு சமூகமளிக்க முடியும்.

7 உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விலைகோரல் ஆவணங்கள், உரிய எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை ஏற்றல் அல்லது நிராகரித்தல் கேள்விச் சபைச் தலைவரின் அதிகாரத்துக்குட்பட்டது.

8 தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடல் தொடர்பாக பதிவுத் தபாலில் அறிவிக்கப்படும்.

9 கேள்விப் பத்திர விண்ணப்பங்களை எதுவித கொடுப்பனவுகளும் இன்றி **பணிப்பாளர் நாயகம் (வழங்கல் மற்றும் சேவைகள்), இலங்கை கடற்படைத் தலைமையகம், கொழும்பு 01.** என்னும் இடத்தில் பரிசீலிக்க முடியும்.

10. மேலதிக விபரங்களுக்குத் பணிப்பாளர் நாயகம் வழங்கல் மற்றும் சேவைகள், இலங்கை கடற்படைத் தலைமையகம், **த.பெ. எண் 593, கொழும்பு 01.** பணிப்பாளர் வழங்கல் மற்றும் சேவைகள், **தொலைபேசி 076 3037619** மூலம் தொடர்பு கொள்ளவும்.

11. இக்குறிப்பிட்ட ஒவ்வொரு வகையறாவுக்குமான விலைக்கோரல் தொடர்பான விபரங்களை கடற்படையின் இணையத்தளமான **www.navy.lk.** யிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**திணைக்களக் கொள்வனவுக் குழு,**
**இலங்கை கடற்படை,**
**கொழும்பு 01.**

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்**

**போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு**

# பெறுகை அறிவித்தல்

**(விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாளை நீடித்தல்)**

| திகதி: | 2024 ஆகஸ்ட் 18 |
|---|---|
| தலைப்பு | மின்னணு கட்டணம் அறவிடல் முறைமையை (EFCS) சொந்தமாக உருவாக்குதல் மற்றும் செயற்படுத்தலுக்கான பெறுகை முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP) |

2024 ஜுலை 14ஆம் திகதி பத்திரிகையில் பிரசுரமான மேற்கூறிய பெறுகை தொடர்பான அறிவித்தலை பார்வையிடுமாறு இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

முன்பு அமைக்கப்பட்ட விலைமனுக்களை வழங்குதல் மற்றும் விலைமனுக்களை முடிவுறுத்தல் திகதிகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

| விபரம் | முன்பு அமைக்கப்பட்ட திகதி மற்றும் நேரம் | திருத்தப்பட்ட திகதி மற்றும் நேரம் |
|---|---|---|
| விலைமனுக்கள் வழங்கப்படுதல் | 2024-07-15ஆம் திகதி முதல் 2024-08-27ஆம் திகதி 15.00 மணித்தியாலம் வரை | 2024-09-04ஆம் திகதி 15.00 மணித்தியாலம் வரை |
| விலைமனுக்கள் முடிவுறுத்தப்படுதல் | 2024-08-28ஆம் திகதி 14.00 மணித்தியாலத்தில் | 2024-09-05ஆம் திகதி 14.00 மணித்தியாலத்தில் |
| விலைமனுக்கள் திறக்கப்படுதல் | 2024-08-28ஆம் திகதி 14.00 மணித்தியாலத்தில் | 2024-09-05ஆம் திகதி 14.00 மணித்தியாலத்தில் |

முன்மொழிவுகளை ஒப்படைக்க வேண்டிய முகவரி:

**தலைவர்**
**அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு,**
**போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு,**
**7ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்லை, இலங்கை.**

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டியவர்:

**சிரேஷ்ட உதவிச் செயலாளர் (அபிவிருத்தி)**
**போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு,**
**7ஆவது மாடி, செத்சிறிபாய,**
**கட்டம் II, பத்தரமுல்லை.**
**தொலைபேசி: 011 2187229/ 011 2587394**
**மின்னஞ்சல்:** sas.dev@transport.gov.lk **இணையதளம்:** www.moth.gov.lk

**தலைவர்**
**அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு,**
**போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு,**
**7ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் II,**
**பத்தரமுல்லை, இலங்கை.**

---

**எல்பிட்டிய பிளாண்டேஷன்ஸ் பிஎல்சி**

# கேள்வி அறிவித்தல்

பின்வரும் வாகனங்கள்.'.மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்வதற்காக கேள்விச் சபையினால் முத்திரையிடப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

| வகுதி | தோட்டம் | தயாரிப்பு மற்றும் மாதிரி | பதிவிலக்கம் |
|---|---|---|---|
| Lorry | Devitura Estate, Elpitiya. 0914 943 036 | TATA 1510 | LL-4xxx |
| | | Batta (Dimo) | LG-1xxx |
| | New Peacock Estate, Pussellawa. 0814 945 056 | Daihatsu | 41-7xxx |
| | Fernlands Estate, Punduloya. 0514 925 011 | Daihatsu | 41-7xxx |
| Ambulance | Dunsinane Estate Punduloya. 0514 925 001 | Toyota Hiace | 41-4xxx |
| Hand Tractor | New Peacock Estate, Pussellawa. 0814 945 056 | Farmers | SH-9xxx |
| Trailers & Trailer Bowsers | Bentota Estate, Elpitiya. 0914 943 033 | | 45-9xxx |
| | | | 44-9xxx |
| | | | 46-3xxx |
| | | | 44-1xxx |
| | Devitura Estate, Elpitiya. 0914 943 036 | | 46-3xxx |
| Motorcycle | Sheen Estate, Punduloya. 0514 925 006 | Pulsar - 10 | MW-5xxx |
| | Fernlands Estate, Punduloya. 0514 925 011 | Pulsar - 150 | HP-3xxx |
| | Meddakumbura Watagoda 0514 925 019 | Demark 150CC | BAL-9xxx |
| | | Pulsar - 180 | MW-5xxx |
| | | Pulsar - 180 | MW-5xxx |
| | | Pulsar - 180 | TY-8xxx |
| | | Yamaha DT 175 | 153-8xxx |
| | | Yamaha DT 175 | 153-8xxx |
| | Nayapane Estate, Pussellawa. 0814 945 061 | Pulsar - 180 | MW-5xxx |
| | New Peacock Estate, Pussellawa. 0814 945 056 | Pulsar | HP-3xxx |
| | Devitura Estate, Elpitiya. 0914 943 036 | Yamaha DT 175 | 153-8xxx |

அனைத்து கேள்விகளும் முத்திரையிடப்பட்ட தபாலுறையில் உள்ளிடப்பட்டு ''வாகனங்களின் விற்பனை'' என இடது பக்க மேல் மூலையில் குறிக்கப்பட்டு 2024-09-06ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இணை முகாமைத்துவப் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர், எல்பிட்டிய பிளாண்டேஷன்ஸ் பிஎல்சி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

கேள்வி ஆவணங்கள் 2024-09-06ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 8.30 மணிக்கும் பி.ப. 4.00 மணிக்குமிடையில் இயைபுடை தோட்டங்களுக்கு ஒவ்வொரு வாகனத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமான 1000.00 ரூபாவையும் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையாகிய 5000.00 ரூபாவையும் செலுத்திய பின்னர் பெற்றுக்கொள்ளலாம்.

உரித்தான பெருந்தோட்டங்களின் பொது முகாமையாளர்/ பிரதிப் பொது முகாமையாளர்/ சிரேஷ்ட முகாமையாளர்/முகாமையாளருடனான சந்திப்பு முன்னேற்பாடுடன் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரையும் வாகனங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுக்களை தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம்.

எவ்வாறாயினும், எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுவையும் ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்குமான உரிமையை எல்பிட்டிய பிளாண்டேஷன்ஸ் பிஎல்சி கொண்டுள்ளது.

**இணை முகாமைத்துவப் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அலுவலர்,**
**எல்பிட்டிய பிளாண்டேஷன்ஸ் பிஎல்சி,**
**9 ஆம் மாடி, அய்கென் ஸ்பென்ஸ் கோபுரம் 01,**
**305, வொக்ஷால் வீதி, கொழும்பு-02.**
**தொலைபேசி : 0114–693000**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு IFB

**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் (SAPP)**

**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

**விதை உருளைக்கிழங்குத் திட்டத்திற்காக உருளைக்கிழங்கு விதைகளை வழங்கல், விநியோகம் மற்றும் கையளித்தல்**

**Ref. No. SAPP/PRO/4P/2024/46**

சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டத்தின் (SAPP) செலவை நோக்கி விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திடம் (IFAD) இருந்து இலங்கைக்கு நிதி கிடைக்கப்பெற்றிருப்பதோடு உருளைக்கிழங்கு விதைகளின் கொள்வனவுக்கு இந்த நிதியின் பகுதியை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு IFAD நிதியை பயன்படுத்துவதற்கும் IFAD இன் அங்கீகாரம், நிதி ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கிய, அதேபோன்று IFAD இன் விதிகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்கியதாக இருத்தல் வேண்டும். IFAD மற்றும் அதன் அதிகாரிகள், முகவர்கள் மற்றும் பணியாளர்கள் SAPP தொடர்பாக எந்தவொரு தரப்பினராலும் கொண்டு வரப்படும் அனைத்து வழக்குகள், நடவடிக்கைகள், உரிமைகோரல்கள், கோரிக்கைகள், இழப்புகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றிலிருந்து பாதிப்பில்லாதவர்களாக இருக்க வேண்டும்.

1. உருளைக்கிழங்கு விதைகளின் பெறுகை மற்றும் உருளைக்கிழங்குத் திட்டத்தின் விவசாயிகளுக்கு வழங்குவதை SAPP இதில் உள்ளடக்கியுள்ளது. ஒக்டோபர் முடிவுக்கு முன்னர் உருப்படிகளை விநியோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

2. கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள விபரத்தின்படி உருளைக்கிழங்கு விதைகளின் பெறுகைக்கு தகுதிபெற்றவர்களிடம் ("விலைமனுதாரர்கள்") இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

| விலைமனு இல. | உருப்படியின் பெயர் | அளவு | விநியோகக் காலம் | விலைமனு பிணை பெறுமதி (ரூபா) | விலைமனு பிணை செல்லுபடி |
|---|---|---|---|---|---|
| 1 | உருளைக்கிழங்கு விதைகள் | 40,050 கி.கி. | 2024 ஒக்டோபர் 30 இற்கு முன் | 300,000.00 | 2025.01.17 |

இந்தப் பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட சேவைகள் தொடர்பிலான மேலதிக விபரங்கள் இந்த விலைமனு ஆவணத்தில் தேவைகளின் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

3. இந்த IFB பதிலளிக்க விரும்பும் அனைத்து தகுதியுடைய விலைமனுதாரர்களுக்கும் திறந்துள்ளது. பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட சேவைகளை வெற்றிகரமாக வழங்குவதற்கான தமது திறனை மேம்படுத்துவதற்கு விலைமனுதாரர்கள் தகுதியுடைய நிறுவனங்களுடன் இணையலாம் என்பதோடு அது விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுள்ளது.
4. விநியோக அட்டவணையின்படி நகரில் அமைந்துள்ள இடங்களுக்கு உருளைக்கிழங்கு விதைகளின் பெறுகை மற்றும் விநியோகம் மேற்கொள்ளப்படல் வேண்டும். அது ஒற்றை ஒப்பந்தம் ஒன்றாக வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
5. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதோடு மதிப்பீட்டு நடைமுறை www.ifad.org/project-procurement என்ற IFAD இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள IFAD பெறுகை கையேட்டுக்கு அமைய விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்டவாறு NCB நடைமுறையில் ஒப்பந்தம் வழங்குவதற்கு முன்னர் விபரக்குறிப்பை சரிபார்த்தல் உட்பட, தகைமைகள் மற்றும் கடந்த கால செயல்திறனை சரிபார்த்தல் மற்றும் மீளாய்வு ஒன்றுக்கு உட்படுத்தல் ஆகியவை உள்ளடங்கும்.
6. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024.08.27 ஆம் திகதி மு.ப. 11.00 இற்கு ராஜகிரிய, நாவல வீதி, இல. 212/A, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்ட அலுவலகத்தில் இடம்பெறும்.
7. ஆர்வம் கொண்ட மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்கள் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை வேலை நாட்களில் 011-2448031 என்ற தொலைபேசி இலக்கம் அல்லது procurement@sapp.lk என்ற மின்னஞ்சல் முகவரியில் சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்ட, பெறுகை நிபுணரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2024.08.20 ஆம் திகதி தொடக்கம் 2024.09.05 ஆம் திகதி பின்வரும் முகவரியில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
8. மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ. ரூபாவை செலுத்தி 2024.08.20 ஆம் திகதி தொடக்கம் 2024.09.05 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 இற்கு இடையே வேலை நாட்களில் ராஜகிரிய, நாவல வீதி, இல. 212/A, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்ட (SAPP) அலுவலகத்தின் திட்டப் பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும். கட்டணத்தை SAPP நிதிப் பிரிவில் மேற்கொள்ளல் வேண்டும்.
9. விலைமனுக்களை 2024.09.06 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் ராஜகிரிய, நாவல வீதி, இல. 212/A, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்ட அலுவலக, பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவது அல்லது கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட ஒற்றை உறையில் "அசல்" மற்றும் "நகல்" என்று குறிப்பிட்டு இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனு சமர்ப்பிக்கும் இறுதித் திகதி அல்லது கொள்வனவாளரால் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு நீடிக்கப்பட்ட திகதியில் இருந்தும் 120 நாட்களுக்கு (2025.01.03 ஆம் திகதி வரை செல்லுபடியானது) விலைமனு செல்லுபடியாக இருத்தல் வேண்டும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
10. விலைமனுவை கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் IFB (Bid Ref.SAPP/PRO/GDS/2024/46) இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் பந்தி இலக்கம் 02 இல் (அட்டவணை) குறிப்பிடப்பட்டதும் இலங்கையில் இயங்குகின்ற மற்றும் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட எந்த ஒரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்டதுமான விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
11. மின்னணு விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது என்பதை கருத்தில் கொள்ளவும்.

**மேல் குறிப்பிடப்பட்ட முகவரியானது,**
**நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர்**
**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் (SAPP)**
**இல. 212/A, நாவல வீதி, ராஜகிரிய.**
**தொலைபேசி இலக்கம் +94 11 2431 426**

---

# கேள்விக்கோரல்களுக்கான அழைத்தல்

**கட்புல மற்றும் ஆற்றுக்கலைகள் பல்கலைக்கழகம்**

**சுகாதார சுத்திகரிப்பு சேவை வழங்கல் (2024 /2025)**

01. பின்வரும் இடப்பரப்புகளுக்கு சுகாதார சுத்திகரிப்பு சேவையை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கட்புல மற்றும் ஆற்றுக்கலைகள் பல்கலைக்கழகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரைக்குறியிடப்பட்ட கேள்விக்கோரல்களை அழைக்கின்றார்.

| இல. | விளக்கம் | இல. 3 (ii) இற்கான தகைமை (ரூபாவில்) | கேள்விப் பிணை (ரூபாவில்) | ஆவணக் கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| UVPA/CW/01/CS/2024/01 | அல்பேர்ட் கிறசென்ட் இடப்பரப்பிற்கான சுகாதார சுக்திகரிப்பு சேவைகள் | 17,000,000.00 | 170,000.00 | 5,000.00 |
| UVPA/CW/01/CS/2024/02 | ஹோட்டன் பிளேஸ் இடப்பரப்பிற்கான சுகாதார சுக்திகரிப்பு சேவைகள் | 10,000,000.00 | 100,000.00 | 3,500.00 |
| UVPA/CW/01/CS/2024/03 | இராஜகிரிய பெண்கள் விடுதிக்கான சுகாதார சுத்திகரிப்பு சேவைகள் | 10,000,000.00 | 100,000.00 | 3,500.00 |
| UVPA/CW/01/CS/2024/04 | தெஹிவளை ஆண்கள் விடுதி மற்றும் தெஹிவளை பெண்கள் விடுதிகளுக்கான சுகாதார சுத்திகரிப்பு சேவைகள் | 7,000,000.00 | 70,000.00 | 2,500.00 |

02. கேள்விக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான கேள்விக்கோரல் மூலம் நடாத்தப்படும்.

03. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:
   i. இலங்கையில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள இயைபுள்ள வியாபார பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   ii. கடந்த ஐந்து வருடங்களில் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (பெசேவ நீங்கலாக) ஒப்பந்தமொன்றின் தொகைக்காக அல்லது அதற்கு மேலானதிற்காக அரசாங்க நிறுவனமொன்றில் திருப்திகரமான சுகாதார சுத்திகரிப்பு சேவையை வருடமொன்றிற்கு ஒரு ஒப்பந்தத்தில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   iii. ஒரு வருட கால எல்லைக்கு ஆகக்குறைந்தது 25 சுகாதார சுத்திகரிப்பு ஆளணியருக்கு மாதாந்த ஊசேநி மற்றும் ஊசேநநி ஆகியவற்றை சீரான முறையில் செலுத்தியதற்கான சான்று.

04. கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் பிரதான வேலைகள் பிரிவில் கேள்விக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

05. 2024.08.18 ஆம் திகதியிலிருந்து 2024.09.09 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஆவணக் கட்டணத்தை செலுத்திய பின்னர், கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் பிரதான வேலைகள் பிரிவின் பிரதி பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

06. 2024.09.10 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பூர்த்தியாக்கப்பட்ட விலைமனுக்கள் தலைவர், பெறுகைக் குழு, பதிவாளர் மே/பா., கட்புல மற்றும் ஆற்றுக்கலைகள் பல்கலைக்கழகம், இல. 21, அல்பேர்ட் கிறசென்ட், கொழும்பு-07 என முகவரியிடப்பட்டு நிருவாக கட்டிடம், 2 ஆம் மாடி, பொது நிருவாக கிளையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். ஒப்பந்தப் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியன சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.)

7. தாமதமான/ பூர்த்தியாக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விலைமனுதாரர்கள் அல்லது சமுகமளித்திருக்கும் அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

8. விலைமனுக்கள் 2024.12.09 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

9. ஒவ்வொரு விலைமனுவும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தொகைக்கு சமமான தொகையுள்ள விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் 2025.01.05 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும்.

10. 2024.09.03 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு பல்கலைக்கழக நிருவாக கட்டிடத்தின் 5 ஆம் மாடியின் நலன்புரி சபை அறையில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

**பதில் கடமையாற்றும் பதிவாளர்,**
**கட்புல மற்றும் ஆற்றுக்கலைகள் பல்கலைக்கழகம்,**
**இல. 21, அல்பேர்ட் கிறசென்ட்,**
**கொழும்பு-07.**
**18.08.2024**

Looking for Your Life Partner..,
Gather with,
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Pay online and save your precious time
WE ACCEPT
BANK OF CEYLON BOC Acc. No. 000000377 Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343




## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

எடுத்த வேலையை எப்பாடுபட்டாவது செய்து முடிப்பீர்கள். அடுத்தவர் சுமத்திய வீண் குற்றச்சாட்டுகளில் இருந்து சாமர்த்தியமாக விடுபடுவீர்கள். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும் அதைச் சமாளித்து முன்னேறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளில் அலட்சியம் காட்டாமல் செயற்படுவது நல்லது. குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும், குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன் மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. பிள்ளைகளை அவர்களின் போக்கிலேயே விட்டுப் பிடிப்பது நன்மை தரும். பெண்கள் மற்றவர்களால் ஏற்படும் தொல்லைகளில் சிக்காமல் இருக்க கவனமாக செயற்படுவது நல்லது. மாணவர்கள் மிகவும் கவனமாக படிப்பது கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும். .

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம்)**

வீண்செலவு ஏற்பட்டாலும் அதைச் சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். சரியான நேரத்தில் தூங்க முடியாத சூழ்நிலை உருவாகும். தொழில் வியாபாரத்தில் பணத்தேவை ஏற்படலாம். கடன் விவகாரங்களில் கவனமாக செயற்படுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஓய்வு இல்லாமல் பணியாற்ற வேண்டியிருக்கும். இயந்திரம், நெருப்பு, ஆயுதத்தை பயன்படுத்துவோர் மிகவும் கவனமாக இருப்பது அவசியம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகி விடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம். பிள்ளைகளுக்காக கூடுதல் செலவு செய்ய வேண்டி இருக்கும். பெண்கள் மற்றவர்களின் வேலைகளுக்காக அலைய நேரிடும். மாணவர்கள் ஏனையவற்றில் கவனத்தை சிதற விடாமல் படிப்பில் கவனம் செலுத்துவது அவசியம்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எல்லாவற்றிலும் சாதகமான பலன் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி வேகம் பிடிக்கும். எதிர்பார்த்த ஆர்டர் கிடைக்கும். லாபம் கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயல்திறன் அதிகரிக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும், பதவி உயர்வும் கிடைக்கும். புதிய வேலை தேடுபவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும். திருமணம் தொடர்பான பேச்சுகள் சாதகமாக முடியும். வீடு, வாகனம் வாங்குவது அல்லது புதுப்பிப்பதில் நாட்டம் அதிகரிக்கும். பெண்கள் எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிப்பர். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை நீங்கும்.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

பிரச்சினைகளை சமாளிக்கும் திறமை அதிகரிக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல், ஆர்டர் கிடைப்பதில் தாமதம் போன்றவை ஏற்பட்டாலும், தொழில் வியாபாரம் சீராக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைபளு, கூடுதல் பொறுப்புகள் உண்டாகலாம். குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வதன் மூலம் எல்லா பிரச்சினைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற்கொள்வீர்கள். உறவினர்கள், அக்கம் பக்கத்தினரிடம் வீண் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு எடுத்த காரியம் தடைபட்டு பின்னர் நல்லபடியாக நடந்து முடியும். மனதில் எதைப் பற்றியாவது சிந்தித்த வண்ணம் இருப்பர். மாணவர்களுக்கு கல்வியில் சீரான போக்கு காணப்படும். கூடுதல் மதிப்பெண் பெற மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றிபெறும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

எந்தக் காரியத்திலும் வேகம் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகளில் சாதகமான நிலை காணப்படும். தான தர்மம் செய்யவும், ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரலாம். பயணத்தின் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் நிதானமான போக்கு காணப்படும். வியாபார போட்டிகள் இருந்தாலும் அதனால் பாதிப்பு இருக்காது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது. எதிர்பாராத இடமாற்றம், சிலருக்கு உத்தியோக மாற்றம் உண்டாகலாம். கணவன் மனைவிக்கிடையே திடீர் மனவருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயற்பாடுகள் மனதுக்கு திருப்தி அளிப்பதாக இருக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். பெண்களுக்கு எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். மாணவர்களுக்கு தடைகளை தாண்டி கல்வி கற்க செய்யும் முயற்சிகள் வெற்றி பெறும்.

## கன்னி

**(உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தடங்கல் ஏற்பட்டு நீங்கும். வழக்கு விவகாரங்களில் தாமதமான போக்குக் காணப்படும். நிர்ப்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும்போது கவனம் தேவை. உத்தியோகத்தில் வேலைகளை சரியாக முடிக்க வேண்டுமே என்ற கவலை உண்டாகும். சக ஊழியர்களிடம் கவனமாக பேசுவது நல்லது. குடும்பத்தினரால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. கணவன், மனைவிக்கிடையே மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயற்பாடுகளில் கவனம் தேவை. ஆயுதங்களை பயன்படுத்தும்போது கவனம் தேவை. பெண்கள் தேவையற்ற சில காரியங்களை செய்ய வேண்டி இருந்தாலும் அதன் மூலம் நன்மை உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

மங்கள காரியங்களில் இருந்து வந்த தடைகள் அகலும். வேலைப் பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். வயிறு தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு நீங்கும். அக்கம்பக்கத்தினரிடம் சில்லறை சண்டைகள் ஏற்பட்டு சரியாகும்.தொழில் வியாபாரத்தில் பங்குதாரர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்கள், மேலதிகாரிகளுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். இயந்திரங்கள், ஆயுதங்கள், நெருப்பு ஆகியவற்றை கையாளும் தொழிலாளர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களால் திடீர் பிரச்சினைகள், அதனால் வாக்குவாதம் உண்டாகும். கணவன், மனைவி விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். பெண்களுக்கு வீண் அலைச்சல், வேலைப் பளு அதிகரிக்கும். மாணவர்கள் அடுத்தவரை பற்றிய விமர்சனங்கள், கிண்டல், கேலி பேச்சுகளை தவிர்த்து கல்வியில் கவனம் செலுத்துவது நல்லது.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

கொடுக்கல், வாங்கலில் இருந்த சிக்கல்கள் தீரும். தடைப்பட்ட காரியங்களில் இருந்த தடை நீங்கி நன்றாக நடந்து முடியும். எதிர்த்து செயல்பட்டவர்கள் விலகிச் சென்று விடுவார்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். போட்டிகள் குறையும். கடன் பிரச்சினை கட்டுக்குள் இருக்கும். உத்தியோகத்தில் உழைப்புக்கு ஏற்ற நல்ல பலன் கிடைக்கும். குடும்பத்தில் உங்களுக்கு எதிராக பிரச்சினையை உண்டாக்கியவர்கள் தானாகவே அடங்கி விடுவார்கள். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு உண்டாகும். பெண்களுக்கு எந்த ஒரு சின்ன வேலைக்காகவும் மிகவும் பாடுபட வேண்டி இருக்கும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாக கிடைக்கும். மாணவர்கள் சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொண்டு படிப்பது நல்லது. வகுப்பில் கவனத்தை சிதற விடாமல் பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

மற்றவர்கள் ஒப்படைத்த வேலையை பொறுப்போடு செய்து முடிப்பீர்கள். மனச் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களை அனுசரித்து செல்வதன் மூலம் வீண் பிரச்சினை வராமல் தடுக்கலாம். தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். வாடிக்கையாளர்களிடம் நிதானமாகப் பேசுவது நல்லது. எதிர்பார்த்த பணம் கைக்கு வருவதில் தாமதம் ஏற்படலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகம் பற்றி யாருடனும் விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது. பதவி உயர்வு, சம்பள உயர்வு தாமதப்படலாம். குடும்பத்தினரின் செயல்பாடுகள் உங்களுக்கு டென்ஷன் தருவதாக இருக்கலாம். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகளிடம் அனுசரித்து செல்வதும், அவர்கள் போக்கில் விட்டுப் பிடிப்பதும் நல்லது. பெண்கள் கோபத்தை கட்டுப்படுத்துவது நன்மை தரும். மாணவர்கள் மிகவும் பொறுமையுடனும், கவனமாகவும் பாடங்களை படிப்பது அவசியம்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

சுணங்கிக் கிடந்த காரியங்கள் மீண்டும் வேகம் பெறும். அடுத்தவர்களது செய்கை உங்களுக்கு கோபத்தை ஏற்படுத்தலாம். எனவே நிதானமாக இருப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். மருந்து, இரசாயனம் போன்ற தொழில்களில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான காரியங்களில் ஈடுபடும்போது அவசரப்படாமல் நிதானமாக செயற்படுவது காரிய வெற்றியை உண்டாக்கும். எளிதில் மற்றவர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்பட வாய்ப்பு உண்டு. குடும்பம் தொடர்பான கவலைகள் ஏற்படும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மனதில் ஆன்மிக எண்ணங்கள் ஏற்படும். வாழ்க்கைத் துணை மூலம் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர், நண்பர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் கூடும். எந்த பிரச்சினையையும் சமாளிக்கும் திறமை பெண்களிடம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த போட்டி குறையும்.

## கும்பம்

**(அவிட்டம் 3ஆம் 4ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

நீண்ட நாட்களாக தடைப்பட்ட காரியத்தை செய்து முடிப்பீர்கள். மனதில் சஞ்சலம் ஏற்பட்டாலும் அதிர்ஷ்டம் உண்டாகும். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருந்தாலும் கொள்கைக்காக பாடுபடுவீர்கள். அடுத்தவர் சொல்வதை நம்பும் முன் அதைப்பற்றி ஆலோசனை செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஒரே குறிக்கோளுடன் இருப்பதை விட்டு வாடிக்கையாளர் தேவை அறிந்து செயற்படுவது முன்னேற்றத்திற்கு உதவும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் துணிச்சலாக வேலைகளை செய்து வெற்றி பெறுவார்கள். சக ஊழியர்கள், மேலதிகாரிகளால் நன்மையும் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை அகலும். வாழ்க்கைத் துணையின் ஆதரவு இருக்கும். பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். பெண்கள் அதிகம் பேசுவதை தவிர்த்து செயலில் வேகம் காட்டுவது நல்லது. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைய கூடுதல் கவனத்துடன் படிப்பர். ஆசிரியர், சக மாணவர் மத்தியில் நன்மதிப்பு உண்டாகும்.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

அனுபவத்தையும், திறமையையும் கொண்டு காரியங்களை திறம்பட செய்து முடிப்பீர்கள். மனதில் தைரியம் உண்டாகும். வீண்வாக்குவாதங்களால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் சாதூரியமான பேச்சின் மூலம் தங்களது வியாபாரத்தை லாபகரமாக செய்வார்கள். தேவையான பண உதவியும் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிக உழைப்பும், அதற்கேற்ற பலனும் உண்டாகும். எதிர்பார்ப்புகளை குறைத்துக் கொள்வது நன்மை தரும். குடும்பத்தில் கலகலப்பு உண்டாகும். விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும். அக்கம்பக்கத்தினரிடமும் உறவினர்கள், நண்பர்களிடமும் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு மனதில் தைரியம் உண்டாகும். அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற கூடுதல் உழைப்பு அவசியம்.

# படைப்பாற்றலும் செயல்திறனும் மிக்க பேராளுமை செங்கை ஆழியான்






ஈழத்து இலக்கிய வரலாற்றில் புனைகதைத் துறையிலும் இலக்கியச் செயற்பாடுகளிலும் பேராளுமையாகத் திகழ்ந்தவர் செங்கை ஆழியான். ஈழத்து நாவல் வரலாற்றில் செங்கை ஆழியானுக்கு ஓர் உன்னத இடமுண்டு. இவர் நாற்பத்தாறு நாவல்களை எழுதியுள்ளார். இவற்றில் யானை என்ற நாவல் *The Feast* என்ற மகுடத்தில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. காட்டாறு நாவல் 'வன மத கங்க" எனச் சிங்களத்தில் மொழிபெயர்ப்பு நாவலாக வெளிவந்துள்ளது. பிரளயம் (1976) காட்டாறு (1977) மரணங்கள் மலிந்தபூமி (2000) என்பன தேசிய சாகித்திய மண்டலப் பரிசினைச் சுவீகரித்துக் கொண்டன. இவரது வாடைக் காற்று நாவல் திரைவடிவம் பெற்றது. இவரது பத்துக் குறுநாவல்கள் அடங்கிய தொகுதி 'ஆயிரமாயிரம் ஆண்டுகள்" என்ற மகுடத்தில் வெளியாகியுள்ளது. செங்கை ஆழியான் பல்வேறு பிரதேச சமூகங்களை ஈழத்து நாவல் இலக்கியத்துக்கு அறிமுகம் செய்துள்ளார். மீனவர்கள், சலவைத் தொழிலாளர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரது சமூகப் பிரச்சினைகளை அணுகியுள்ள அவரது படைப்புகளில் சமூகப் பார்வை சிறப்புற அமைவதை அவதானிக்கலாம். ஈழத்து எழுத்தாளர்களுள் போர்க்கால நிகழ்வுகளை அதிகளவில் இலக்கியமாக்கியவர் செங்கை ஆழியான் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

சிறுகதைத் துறையில் செங்கை ஆழியான் சுமார் 160 கதைகள்வரை எழுதியுள்ளார்.

சிங்களப் பத்திரிகைகளான ராவய, சிலுமின, லங்காதீப முதலிய பத்திரிகைகளில் இவரது சிறுகதைகள் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன. இதுவரை இவரது ஐந்து சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் 'இரவுநேரப் பயணிகள்" என்ற தொகுதி வடக்கு கிழக்கு மாகாணப் பரிசினைப் பெற்றது. 'யாழ்ப்பாண இராத்திரிகள்" என்ற தொகுதி இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசினையும் தமிழ்நாடு லில்லி தேவநாயகம் நினைவு சிறப்புப் பரிசினையும் பெற்றது. இரவுநேரப் பயணிகள் என்ற தொகுதி 'ராத்திரி நொன சாய்" எனச் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

செங்கை ஆழியானின் சிறுவர் புதினங்களாக பூதத்தீவுப் புதிர்கள், ஆறுகால் மடம் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன.

செங்கை ஆழியான் ஐம்பதுக்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களை எழுதியுள்ளார். இவரது புனைகதை சாராப் படைப்புகளாக 'இருபத்து நான்கு மணிநேரம், 'மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது, 'களம் பல கண்ட கோட்டை", 'சுனாமி" ஆகியவை வெளிவந்துள்ளன.

செங்கை ஆழியான் பல தொகுப்பு நூல்களை வெளிக்கொணர்ந்துள்ளார். சம்பந்தன் சிறுகதைகள், மறுமலர்ச்சிச் சிறுகதைகள், முன்னோடிச் சிறுகதைகள், சிரித்திரன் சுந்தரின் நானும் எனது கார்ட்டூன்களும், ஈழகேசரிச் சிறுகதைகள், முனியப்பதாசன் சிறுகதைகள், புதுமைலோலன் சிறுகதைகள், மல்லிகைச் சிறுகதைகள், சிங்களச் சிறுகதைகள் என்பன இவற்றுள் அடங்கும்.


பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் ஞானம் சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணலில் செங்கை ஆழியானின் தொகுப்பு முயற்சிகள் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"பல்கலைக்கழகத்தில் செய்யவேண்டிய ஒரு ஆராய்ச்சிக்கான முழுத்தளத்தையும் இத்தொகுப்பு முயற்சிகளின் மூலம் செங்கை ஆழியான் செய்திருக்கிறார். ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குப் பங்களித்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் செய்த பணிகளையும் படைப்பாளிகளின் படைப்பாக்க முயற்சிகளையும் இலக்கியச் செல்நெறியில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்குகளையும் அறிந்துகொள்ள இத்தொகுப்புகள் உதவுவதோடு வரலாற்றுத் தவறுகளைச் சரிசெய்வதற்கும் பெரும் பங்காற்றியுள்ளன."செங்கை ஆழியானின் ஆய்வு நூல்களாக ஈழத்தவர் வரலாறு, நல்லைநகர் நூல், யாழ்ப்பாண அரச பரம்பரை, *Jaffna Dynasty*, ஈழத்துச் சிறுகதை வரலாறு, சுருட்டுக் கைத்தொழில் என்பன வெளிவந்துள்ளன. மகாவம்சத்தை தமிழில் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். யாழ்ப்பாணதேசம், பூதத்தம்பி என்னும் சிறிய நூல்களும் இவரால் எழுதப்பட்டுள்ளன. இவற்றுள் ஈழத்துச் சிறுகதை வரலாறு இவரது ஆய்வு முயற்சிகளின் மகுடமாகக் கருதப்படுகிறது.

ஈழத்துச் சிறுகதை வரலாறு நூலுக்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் வழங்கிய அணிந்துரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"ஈழத்துச் சிறுகதை வரலாற்றைத் தெளிவாகவும் விரிவாகவும் முதன்முறை எழுதிவெளியிட்டவர் என்ற பெருமையினைச் செங்கை ஆழியான் பெற்றுக்கொள்கிறார். தன்னுடைய ஆக்கங்களுள் ஒரு துறையாகிய சிறுகதையின் வரலாற்றை முழுமையாக நோக்கியது வியக்கத்தக்க விடயமல்ல. அது தற்செயல் நிகழ்ச்சியுமல்ல. எங்கள் நாட்டில் ஆக்க இலக்கியகாரர்களில் பெரும்பாலோர் விமர்சகர்களாகவும் உள்ளனர். இந்தவகையில் ஆக்கஇலக்கியகாரராகிய செங்கை ஆழியான் விமர்சகராகவும் நின்று ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றை நோக்கியுள்ளார்."

க.குணராசா என்ற இயற்பெயர் கொண்ட செங்கை ஆழியான் 25.01.1941இல் வண்ணார்பண்ணையில் கந்தையா அன்னம்மா தம்பதியினருக்கு எட்டாவது மகனாகப் பிறந்தவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையிலும், இடைநிலைக்



கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும், உயர்கல்வியை பேராதனைப் பல்கலைக் கழகத்திலும் பெற்றார்.

புவியியல் சிறப்புப் பட்டதாரியான இவர், பின்னர் முதுகலைமாணிப் பட்டத்தையும் கலாநிதிப் பட்டத்தையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்றார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயிலுங்காலத்தில் செங்கை ஆழியான் சிறுகதைத் துறையிலேயே கவனஞ் செலுத்தி வந்தார். தாம் எழுதியதோடு பிறரையும் எழுதத் தூண்டி நின்றார். செம்பியன் செல்வனோடு இணைந்து பல இலக்கியச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்தார். பல்கலைக்கழகச் சூழலில் நூல் வெளியீட்டுக்கென ஓர் அமைப்பை செம்பியன் செல்வனுடனும் நவ ஜோதியுடனும் இணைந்து இவர் உருவாக்கினார். பல்கலைக்கழக வெளியீடு என்ற பெயரில் அமைந்த இந்த அமைப்பின் மூலம் கதைப் பூங்கா, விண்ணும் மண்ணும், காலத்தின் குரல்கள் ஆகிய சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்தன. இத்தொகுதிகள் மூலம் பல புதிய எழுத்தாளர்கள் ஈழத்துத் தமிழிலக்கிய உலகிற்கு அறிமுகமானார்கள்.

இவ்வாறு அன்றைய காலகட்டத்தில் பலர் தமது ஆற்றல்களை இனங்கண்டு வெளிக்கொணர செங்கை ஆழியான் ஓர் உந்து சக்தியாகச் செயற்பட்டார். இத்தகைய செயற்பாட்டினை அவர் தொடர்ந்தும் தனது எழுத்துலக வாழ்க்கை முழுவதிலும் ஆற்றி வந்துள்ளார். தனது பல்கலைக்கழக வாழ்க்கைக்குப் பின்னர் யாழ். இலக்கிய வட்டத்துடன் இணைந்து பல்வேறு இலக்கியச் செயற்பாடுகளை ஆற்றியதுடன் புதிய தலைமுறைகள் இலக்கிய உலகில் அடியெடுத்து வைப்பதற்குத் தூண்டு கோலாக அமைந்தார். யாழ். இலக்கிய வட்டத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும், பின்னர் அதன் தலைவராகவும் விளங்கினார். இலங்கை இலக்கியப் பேரவையின் தலைவராகவும் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவராகவும் பதவி வகித்துள்ளார். செங்கை ஆழியான் தொழில்ரீதியாகப் பல பதவிகளை வகித்தவர். 1964 – 1971வரை ஆசிரியராகக் கடமையாற்றியவர். 1971இல் இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் சித்திபெற்று 2001இல் ஓய்வு பெறும்வரை உயர் நிர்வாக சேவை அதிகாரியாகப் பல பதவிகள் வகித்தவர். காரியாதிகாரி, உதவி அரசாங்க அதிபர், பிரதிக் காணி ஆணையாளர், பிரதேசச் செயலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர், வட பிராந்திய ஆணையாளர், மாநகர ஆணையாளர் என அவர் வகித்த பதவிகள் அவரால் பெருமையுற்றன.

செங்கை ஆழியான் ஓர் புவியியற் பட்டதாரி என்றவகையில் பேராதனைப் பல்கலைக்கழகப் பயிற்சியாளராகவும், கொழும்புப் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளராகவும் பின்னர் ஆறு ஆண்டுகள் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். அக்காலத்தில் கொழும்புத் துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை வருகைதரு விரிவுரையாளராகவும் இருந்து நூற்றுக்கணக்கான புவியியலாளர்களை உருவாக்கியுள்ளார். ஐம்பதுக்கும் மேற்பட்ட புவியியல் நூல்களை மாணவர்களுக்கென எழுதியுள்ளார்.

செங்கை ஆழியான் ஞானம் சஞ்சிகைக்கு ஒரு விரிவான தொடர் பேட்டியை அளித்துள்ளார்.


அப்பேட்டி அவரது 50 வருடகால இலக்கியச் செயற்பாடுகளைப் பதிவுசெய்வதோடு ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சிப்போக்கின் ஒரு வெட்டுமுகத்தை வெளிக்காட்டுவதாகவும் அமைந்தது.

செங்கை ஆழியானின் பணிகளைப் பாராட்டி பல நிறுவனங்கள் அவருக்குப் பட்டங்கள் விருதுகள் வழங்கிக் கௌரவித்துள்ளன. 'இலக்கியச் செம்மல்", 'புனைகதைப் புரவலர்", 'ஆளுநர் விருது", 'கம்பன் கழக விருது" என்பன இவற்றுட் சிலவாகும். இலங்கை அரசின் இலக்கியத்திற்கான 'சாகித்தியரத்தினா' அதியுயர் விருது இவருக்கு 2009இல் வழங்கப்பெற்றது.


செங்கை ஆழியானின் மனைவி கமலாம்பிகை ஓர் ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர், இவர்களுக்கு ரேணுகா, பிரியா, ஹம்சா என மூன்று பெண்பிள்ளைகள்.

ஈழத்து எழுத்தாளர்களில் அதிக படைப்புகளைத் தந்தவர், அதிக இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர், அதிக உயர் பதவிகளை வகித்தவர், அதிக கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர் செங்கை ஆழியான்.

செங்கை ஆழியான் தனது 75ஆவது வயதில் அமரரானார்.




# படித்ததும் பகர்வதும் 204



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### பெண் பிள்ளைகள் கவனம்!



பெற்றோர்கள் தங்களது பெண் பிள்ளைகள் மீது அதிக கவனம் செலுத்த வேண்டிய காலமாக இன்றைய நவீன காலம் மாறியுள்ளது. பாடசாலைகளுக்குச் செல்லும் பெண் பிள்ளைகள் முதல் தொழிலுக்கு செல்கின்ற பெண் பிள்ளைகள் வரை எல்லா தரப்பு பெண்கள் மீதும் இத்தகைய கவனம் இப்போது அத்தியசியமாகிறது. பாடசாலை, தனியார் வகுப்புகள், உயர் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், தொழில் புரியும் இடங்கள் என பல்வேறு இடங்களுக்கு, பல தரப்பட்ட விடயங்களுக்காக தமது பெண் பிள்ளைகளை அனுப்ப வேண்டிய கட்டாய நிலை இன்றைய பெற்றோர்களுக்கு உள்ளது. எனினும் இவ்வாறு செல்கின்ற பெண் பிள்ளைகளின் பாதுகாப்பு பற்றி பல்வேறுபட்ட விடயங்களில் அச்சம் கொள்ளவும் அதனால் அதிக கவனம் எடுக்கவும் வேண்டிய தேவை முன்னெப்போதும் இல்லாதவாறு இப்போது பல மடங்கு அதிகரித்து காணப்படுகிறது. பல்வேறு சூழ்நிலைகளினால் எண்ணங்களும், மனங்களும் விகாரமடைந்துள்ள, ஒழுக்க விழுமியங்கள் இல்லாத ஆண்களால் பெண்கள் பலதரப்பட்ட தொல்லைகளுக்கு, குறிப்பாக பாலியல் தொல்லைகளுக்கு ஆளாகும் பயங்கர நிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இது கவலைக்குரிய விடயமாகும். பலதரப்பட்ட, மோசமான, விகாரமான, பொருத்தமற்ற சமூக வலைத்தலங்களினாலும், ஊடகங்களினாலும், வேறுபல காரணங்களினாலும் பல ஆண்கள் தமது ஒழுக்க கட்டுப்பாட்டை மீறி, ஒருவித விகாரமான, பயங்கரமான, மோசமான மனத்தாக்கங்களுக்கு உட்பட்டு, தவறு செய்கின்ற நிலை அதிகரித்து காணப்படுவதால் பெண் பிள்ளைகளின் பாதுகாப்பு பற்றி கூடுதலான கவனம் எடுக்க வேண்டிய தேவை உருவாகியுள்ளது எனலாம்..

அண்மைக் காலங்களில் வெளிவருகின்ற பல செய்திகள் பெண் பிள்ளைகளுக்கு எதிராக செய்யப்படுகின்ற இத்தகைய மோசமான, விகாரமான, கொடூரமான, கொடுமையான பாலியல் துஷ்பிரயோகங்களை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுவனவாக இருக்கின்றன. இவற்றைப் பார்க்கும் போது பெரும் அச்ச நிலையே தோன்றுகின்றது. இவற்றை நன்கு கருத்தில் கொண்டு, இத்தகைய நிலைமைகளிலிருந்து தம் பெண் பிள்ளைகளை பாதுகாத்து கொள்வதற்காக ஒவ்வொரு பெற்றோரும் பொருத்தமான, முன்னெச்சரிக்கையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது இப்போதைய மிக முக்கிய தேவையாகும். எனவே இது விடயத்தில் பெண் பிள்ளைகளை பெற்றுள்ள பெற்றோர்கள் அனைவரும் அதி கூடிய பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்,

## சரித்திரத்தில் ஒரு சம்பவம்

### வெள்ளை நிற ஆங்கிலேயர்!



இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் சர்வாபள்ளி இராதாகிருஷ்ணன், ஒரு முறை இங்கிலாந்து சென்றிருந்த வேளை அங்கு நடைபெற்ற விசேட விருந்து ஒன்றில் கலந்து கொண்டார்.

அப்போது அந்நிகழ்வில் பேசிய ஆங்கிலேயர் ஒருவர், "இறைவனுக்கு ஆங்கிலேயர்கள் மீதுதான் அன்பு அதிகம். அதனால்தான் அவன் மிகவும் இரசித்து, ஆங்கிலேயர்களை அழகிய வெள்ளை நிறத்தில் படைத்திருக்கிறார்" என்று தற்பெருமையோடு பேசினார்.

அந்த ஆங்கிலேயர் பேசி முடித்ததும், அடுத்துப் பேசத் தொடங்கினார் டாக்டர் இராதாகிருஷ்ணன். அவர் தனது உரையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

"இறைவன் ஒரு நாள் ரொட்டி சுட ஆசைப்பட்டு ரொட்டி சுடத் தொடங்கினார். முதல் ரொட்டியைச் சுட்டார். அது சரியாக வேகவில்லை. அதனால், சில பேர் வெள்ளையாகப் பிறந்தார்கள். இரண்டாவதாக, ஒரு ரொட்டியைச் சுட்டார். அது, அதிக நேரம் சுடப்பட்டதால் கருகிப் போனது. அதனால் சில பேர் கறுப்பாகப் பிறந்தார்கள். இறைவன் இப்படி இரண்டு ரொட்டியைச் சுட்ட பிறகு, தான் பெற்ற அனுபவத்தால் அடுத்த ரொட்டியை மிகவும் கவனமாகச் சுட்டார். அது அரை வேக்காடாகவுமில்லாமல், கறுத்தும் போகாமல் சரியான பக்குவத்தில் வந்தது. அதன் காரணமாக, இந்தியர்கள் அதிகக் கறுப்புமில்லாமல், அதிக வெள்ளையுமில்லாமல் சரியான நிறத்தில் பிறந்தார்கள்"

அதைக் கேட்டதும், மண்டபத்தில் கரகோஷம் பெரிதாக ஒலித்தது. கூட்டத்திலிருந்த அனைவரும் வாய்விட்டுச் சிரித்தனர். முதலில் பேசிய ஆங்கிலேயரின் முகம் சுருங்கிப் போனது.

## நூலகத்துக்கு ஒரு நூல்

### முத்துக்கள் ஆயிரம்

ஆசிரியர், எழுத்தாளர், தொகுப்பாளர், கவிதாயினி என பன்முக ஆளுமைமிக்க மஸீதா அன்ஸார் தந்துள்ள ஆயிரம் பொன்மொழிகள் அடங்கியுள்ள தொகுப்பு நூல் "முத்துக்கள் ஆயிரம் (பொன் மொழிப் பேழை)". சிறியவர்கள், மாணவர்கள் மட்டுமன்றி அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையிலான இந்நூல் அனைத்து நூலகங்களிலும், குறிப்பாக பாடசாலை நூலகங்களில் இருக்க வேண்டிய ஒரு நூல் என்றால் மிகையல்ல.

தர்காநகர் ஆசிரியர் பயிற்சிக் கலசாலை முன்னாள் உப பீடாதிபதி, இலக்கிய வாரிதி, தாஜுல் உலூம் கலைவாதி கலீல் இந்நூல் பற்றியும், நூலாசிரியர் பற்றியும் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"மஸீதா படைத்தளிக்கும் இந்த நூல் ஒரு பொன்மொழிப் பேழையாகும். பல வருடங்களாக தான் ஆசிரியப் பணியில் இருந்த காலந்தொட்டு சேகரித்து வந்த பல்லாயிரக்கணக்கான பொன்மொழிகளில் ஓராயிரத்தை மட்டுமே நூலுருவாக்கியுள்ளார். இன்னுமிரண்டு நூல்கள் வெளியிடும் அளவுக்கு இவரிடம் பொன்மொழிகள் நிறைந்துள்ளன. இவர் ஓர் ஆசிரியையாக இருந்தமையினாலும் சதா தேடும் மனோநிலையில் வாழ்ந்து வந்தாலும் இத்தகைய பொன்மொழிகளை நிறையவே மஸீதாவால் திரட்ட முடிந்தது."

மாதிரிக்காக இந்நூலில் இடம்பெற்றுள்ள பொன் மொழிகளில் சில இங்கே.....


★ அமைதியாக இருக்க வேண்டிய சமயத்தில் பேசவும் கூடாது. பேசவேண்டிய நிலையில் அமைதியாக இருக்கவும் கூடாது – ஹாஸ்லிட்

★ எந்தவொரு அரசியல்வாதியும் சுயநலம் இல்லாத கொள்கையை இலட்சியமாகக் கொள்வதில்லை. – பெர்னாட்ஷா

★ உண்மையான பெரிய மனிதனுக்கு முதல் அடையாளம் எல்லோரிடமும் மிகவும் பணிவாக இருத்தலே ஆகும். – ஜோன் ரஸ்கின்

★ நம்முடைய எல்லாக் குறைகளையும் கண்டறிந்து அதை நம்மிடம் சொல்பவனும் பிறரிடம் அதனை மறைப்பவனுமே உண்மையான நண்பன் – சேகர்

★ என்றென்றும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் தான் கடவுள் மனிதனுக்கு சுதந்திரம் வழங்கி இருக்கிறான். – ஜோன் பில்பாட்கறன்



★ இலட்சிய மனிதன் பிறருக்கு தான் நன்மை செய்வதில் சந்தோஷமடைகின்றான். அனால் பிறர் தனக்கு உபகாரம் செய்வதைப் பார்த்து வெட்கமுறுகின்றான். பிறர் மீது அன்பு செலுத்துவது மென்மையின் அடையாளமாகும். ஆனால் அதைப் பிறரிடமிருந்து பெறுவது தாழ்மையின் அடையாளமாகும். – அரிஸ்டோட்டில்

★ எதிர்காலத்தைப் பற்றி நீ சிந்திக்காவிட்டால் உனக்கு எதிர்காலம் என்ற ஒன்றே இருக்காது. – ஜோன்கேல்ஸ்வொர்த்தி

★ எவரிடம் பேசுகிறோம் எவரைப் பற்றிப் பேசுகிறோம் எப்படிப் பேசுகிறோம் எப்பொழுது பேசுகிறோம் என்பதில் விழிப்பாக இருந்தால் கவலைப்பட வேண்டி இருக்காது. – நோரிஸ்

★ உங்கள் தவறை உணர்ந்து திருத்திக் கொள்ள வேண்டும் என்று உறுதிக்கு வந்து விட்டீர்களா? அப்படியானால் அந்த மனமாற்றமே உங்களை நல்லவராக மாற்றும். – ஸ்டோன்

**நூல்: முத்துக்கள் ஆயிரம் (பொன் மொழிப் பேழை), நூலாசிரியை: மஸீதா அன்ஸார், பக்கங்கள்: 116, விலை: ரூபா. 250/=, தொடர்புகளுக்கு: 0776672639**

## சிந்தனை செய் மனமே

### விவசாயியும் வேட்டைக்காரனும்!

ஒரு கிராமத்தில் ஏழை விவசாயி ஒருவன் இருந்தான். அவனுக்கு பக்கத்து வீட்டில் ஒரு வேட்டைக்காரன் வசித்து வந்தான். அவனிடம் வேட்டை நாய்கள் சில இருந்தன. இந்நாய்கள் அடிக்கடி வேலி தாண்டிச் சென்று, அந்த விவசாயியின் ஆட்டுக்குட்டிகளை துரத்துவதும் கடித்து குதறுவதுமாக இருந்தன.

இதனால் வருத்தமுற்ற விவசாயி, வேட்டைக்காரனிடம், "உன் நாய்களை கொஞ்சம் கட்டிப்போட்டு வைத்துக் கொள்; அவை அடிக்கடி வந்து என் ஆடுகளை தாக்கி காயப்படுத்துகின்றன" என்று கேட்டான். ஆனால் வேட்டைக்காரன் அதை சட்டை செய்யவே இல்லை. "செவிடன் காதில் ஊதிய சங்கு போல" அவை எந்த பயனும் தரவில்லை!

இந்நிலையில் மீண்டும் ஒரு முறை இதேபோல நாய்கள் வேலி தாண்டி வந்து பட்டிக்குள் புகுந்து ஆட்டுக் குட்டிகளைக் கடித்துக் குதறின. மீண்டும் சற்று கோபத்துடன் வேட்டைக்காரனிடம் புகார் செய்தான் விவசாயி. ஆனால் வேட்டைக்காரன் கோபத்துடன், "இதோ பார். ஆட்டை துரத்துறது கடிக்கிறது இதெல்லாம் நாயோட சுபாவம்; அதுக்கெல்லாம் நான் ஒன்னும் செய்யமுடியாது; உன்னால முடிஞ்சதை பார்த்துக்கோ" என்றான் எகத்தாளமாக.

இதனால் ஊர் பஞ்சாயத்து தலைவரை சென்று சந்தித்த விவசாயி, வேட்டைக்காரனின் நாய்களால் தான் படும் துன்பத்தை எடுத்துக் கூறி, ஏதேனும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். விவசாயிக்கும் வேட்டைக்காரனுக்கும் இடையே உள்ள பிணக்கை பற்றி விசாரித்து தெரிந்து கொண்ட பஞ்சாயத்து தலைவர், விவசாயியிடம் "என்னால் பஞ்சாயத்தைக் கூட்டச் செய்து அந்த வேட்டைக்காரனைத் தண்டித்து, அபராதம் விதித்து அவனது நாய்களை கட்டிப்போடச் செய்ய முடியும். ஆனால் நீ தேவையின்றி இதனால் ஒரு எதிரியை சம்பாதிக்க நேரிடும். நீ வாழ்வது உன் சொந்த வீடு. பக்கத்து வீடு அவனுக்கு சொந்தமானது. இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் தினசரி பார்க்க வேண்டும். அப்படியிருக்கையில் பக்கத்து வீட்டுக்காரன் நண்பனாக இருப்பதில் உனக்கு விருப்பமா அல்லது எதிரியாக இருப்பதில் விருப்பமா?" என்று கேட்டார். பஞ்சாயத்து தலைவர் சொல்வதில் உள்ள யதார்த்தத்தை புரிந்து கொண்ட விவசாயி, "அண்டை வீட்டுக்காரனை ஒரு நண்பனாக பார்ப்பதில் தான் தனக்கு விருப்பம்" என்றான்.

"சரி உன் ஆட்டுக் குட்டிகள் பத்திரமாக இருக்கவும், வேட்டைக்காரனும் நண்பனாக இருக்கவும் நான் ஒரு யோசனை சொல்கிறேன், கேட்பாயா?" என்று கேட்டார்.

"நீங்கள் எதைச் சொன்னாலும் கேட்கிறேன்" என்றான் விவசாயி.

இதையடுத்து, பஞ்சாயத்து தலைவர் சில விஷயங்களை அவரிடம் சொன்னார். வீட்டுக்கு வந்த விவசாயி, பஞ்சாயத்து தலைவர் தன்னிடம் சொன்னவற்றை செய்தான். அதன் படி தனது பட்டியில் இருக்கும் ஆட்டுக் குட்டிகளில் மிகவும் அழகான இரண்டு குட்டிகளை எடுத்துச் சென்று, வேட்டைக்காரனின் இரண்டு மகன்களுக்கும் விளையாடவென தலா ஒன்று வீதம் பரிசளித்தான். குழந்தைகளுக்கு தாங்கள் விளையாட புதிய தோழர்கள் கிடைத்ததில் மிகவும் மகிழ்ச்சி. இருவரும் அந்த ஆட்டுக் குட்டிகளுடன் விளையாடி மகிழ்ந்தனர்.



தன் குழந்தைகளின் புதிய தோழர்களான ஆட்டுக் குட்டிகளைப் பாதுகாக்க, வேட்டைக்காரன், தனது நாய்களை சங்கிலியால் கட்டிப்போட வேண்டியிருந்தது. யாரும் சொல்லாமலே அவன் அந்த நாய்களை சங்கிலியால் கட்டிப்போட்டான்.

விவசாயி தனது மகன்களுக்கு ஆட்டுக்குட்டிகளை பரிசளித்ததால், பதிலுக்கு தானும் அவனுக்கு ஏதேனும் பரிசளிக்க விரும்பி, காட்டிலிருந்து தான் கொண்டு வந்திருந்த சில அரிய பொருட்களை விவசாயிக்கு பரிசளித்தான் வேட்டைக்காரன். இதனால் இருவரிடையே நல்லுறவு வளர்ந்து, நாளடைவில் இருவரும் நல்ல நண்பர்களாகி விட்டனர்.

நம்மிடம் நியாயம் இருக்கிறது என்றோ, நம்மிடம் வலிமை இருக்கிறது என்றோ வீணாக நாம் எதிரிகளை சம்பாதித்துக் கொள்ளவே கூடாது! மாறாக நல்ல நோக்கத்தோடு விட்டுக் கொடுத்து நடப்பதால் எப்போதும் நன்மையே விளையும்!

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**




37

ஜனரஞ்சக எழுத்தாளர்
**மொழிவாணன்**

# ம்... வெளிவருமா கஜூ மரத்து பிணத்தின் மர்மம்! அதனால் யாருக்கு ஏற்படப் போகிறது தர்மம்!

சிறிது நேரம் வரையில்,

இன்ஸ்பெக்டரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த துர்கா,

"அப்போ அந்த பாண் இறாத்தலும் சாடின் டின்னும் காணாமல் போனது!" மெதுவாகக் கேட்டாள்!

"ம் அதையும் நான்தான் எடுத்தேன். ஆனால் சாடின் டின்னும் பாணும் காணாமல் போனதைப் பார்த்து நீங்கள் ரொம்பவும் பயந்துட்டீங்க என்று நான் உணர்ந்து கொண்டதனால் தான் நீங்கள் என்னை அடையாளம் கண்டு கொள்வீர்கள் என்று நினைத்து ஜன்னல் கண்ணாடி வழியாக உங்களைப் பார்த்துச் சிரித்தேன் எங்க என்னை பார்த்ததும் இன்னும் பயந்து போய் கத்துன கத்துல மயங்கியே விழுந்துட்டீங்க! ம் அதற்கு நானா மிஸ் குற்றவாளி" என்றார், இன்ஸ்பெக்டர்

சில மர்மங்களுக்கு விடைகொடுத்தபடியே!

"அது சரி நீங்க எப்போ இந்த துப்பாக்கி முனை பங்களாவுக்குள் வந்தீங்க?" புருவங்களை வில்லாக்கியபடியே கேட்டாள் துர்கா!

"நீங்கள் இங்கு வருவதற்கு முன்பே நான் வந்துவிட்டேன். பேபி நோனாவின் நடவடிக்கைகளைக் கவனிக்கும்படி சிரஞ்சீவி சேரிடம் இருந்து எனக்கு தகவல் கிடைத்ததும் நான் மருதானைக்குப் போனேன். அவள் புகையிரத நிலையத்திற்குப் போய்விட்டதாக தகவல் கிடைத்தது. அதனால் நானும் அங்கே போனேன். அங்கே அவள் பண்டாரவளைக்குப் போவதற்காக டிக்கட் எடுப்பதைப் பார்த்துவிட்டு நானும் அவளைப் பின் தொடர்ந்து இங்கே வந்து ஒளிந்து கொண்டேன்" என்றார்.

இப்போது,

எல்லோரும் காலை தேநீரைக் குடித்துவிட்டார்கள்.

கைக்கடிகாரத்தைப் பார்த்தார் சிரஞ்சீவி.

"ம் இப்போது மணி ஆறாகிவிட்டது!" என்று சொல்லிவிட்டு,

"தோமஸ் இன்னும் வரவில்லையல்லவா?" என்று கேட்டார்.

"தோமஸா! நாங்கள் இங்கே இருப்பதும் அவருக்கு எப்படித் தெரியும்?" வியப்புடன் கேட்டாள் துர்கா.

"நீங்கள் இங்கே இருப்பது அவருக்குத் தெரியும்! முன்தினம் இரவு சொலமனின் கழுத்தை நசுக்கும்போது அதைத் தெரிந்து கொண்டார்.

இப்போது,

துர்காவின் மேனியில் ஒருவித பரபரப்பு ஏற்பட்டது!

"ஆமாம் எந்த நேரத்திலும் அவர் இங்கே வரலாம் அதுவரை, இதுவரையில் விடை தெரியாமல் இருக்கும் சில மர்மங்களைப் பற்றி நான் உங்கள் எல்லோருக்கும் சொல்லி விடுகிறேன்!" என்று சொல்லிவிட்டு,

சுருட்டொன்றை எடுத்து பற்ற வைத்துக் கொண்டார்,

இரண்டு மூன்று முறை புகையை வெளியே விட்டு விட்டு,

மர்மங்களை தெளிவுபடுத்த ஆரம்பித்தார்!

"இதுவரையில நடைபெற்ற மர்மங்கள் எல்லாவற்றிற்கான பதில்களையும் நான் கண்டு பிடித்துவிட்டேன். ஆனாலும் ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் எனக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை! அதாவது இதுவரையில் நடைபெற்ற சம்பவங்களுக்கெல்லாம் என்ன காரணம் என்பதைத்தான் என்னால் கண்டு பிடிக்க முடியாதுள்ளது! ஆனாலும் அங்கு போனபிறகு அதையும் நான் கண்டு பிடித்து விடுவேன்! சமீப காலமாக விஜயராகவனும், சொலமனும் ஒருவருக்கொருவர் பயந்து கொண்டே வாழ்ந்திருக்கிறார்கள், என்பதை நான் தெரிந்து கொண்டேன். அதற்கான காரணத்தைக் கண்டுபிடித்துவிட்டால் நடைபெற்ற சம்பவங்களுக்கான காரணமும் புரிந்து விடும்!" சொல்லி விட்டு,

சுற்றும் முற்றும் ஒருமுறை பார்த்துக் கொண்டார்.

பிறகு, மீண்டும் ஆரம்பித்தார்.

"நான் இப்போது இங்கே சொல்லப் போவது எனது கற்பனைக் கதையல்ல. அவர்கள் இருவரிடமிருந்தும் பெற்றுக் கொண்ட தகவல்களை வைத்து நான் மேற்கொண்டு வந்த விசாரணைகளின் முடிவுதான் இது!"

"ஒரு வாரத்திற்கு முன்பு, வார இறுதி விடுமுறையைக் கழிப்பதற்காக இங்கே வரும்படி எனக்கு செல்வராகவனிடமிருந்து அழைப்பொன்று வந்ததும், எனக்கு அதில் ஒரு சந்தேகம் ஏற்பட்டது. பொலிஸ் சேவையில் இருந்து நாங்கள் இருவரும் ஓய்வு பெற்றபின், எங்களுக்குள் கடிதத் தொடர்போ நேரில் சந்தித்துப் பேசுவதோ நடக்கவில்லை. வேலையில் இருந்த சமயத்தில் எங்களுக்குள் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு பெரிதாக உறவு



எதுவும் இருக்கவில்லை! அதற்குக் காரணம் அவருடைய நடவடிக்கைகள் எனக்குப் பிடிக்காமல் போனதுதான். குற்றவாளிகளை தண்டிக்கும் விஷயத்திலும் அவர் சட்டத்திற்கு புறம்பாகவே நடந்து கொண்டார்!"

சொல்லிவிட்டு,

துர்காவின் முகத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கவனித்தார்.

அவள் முகத்தில் எந்தவித மாற்றமும் தெரியவில்லை.

மீண்டும் பேச ஆரம்பித்தார் சிரஞ்சீவி.

"இப்போ நாங்கள் ஓர் எடுத்துக் காட்டுக்காக தோமஸின் வழக்கை கொஞ்சம் பார்ப்போமே!"

"அப்போ அந்த தோமஸும் பயங்கரமானவர்தானா?" வியப்புடன் கேட்டாள் துர்கா.

அவள் இப்படிக் கேட்டதும்,

சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு, மீண்டும் தன் பேச்சைத் தொடர்ந்தார்.

"அவருடைய இளமைக் காலத்தில் சில கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து சின்னச் சின்ன ஏமாற்று வேலைகளைச் செய்து பொலிசில் மாட்டிக் கொண்டு சிறிது கால தண்டனையும் அனுபவித்திருக்கிறார். விடுதலையாகி வெளியே வந்த அவர் மீண்டும் அதே நண்பர்களுடன் சேர்ந்து கொண்டதால் அவருடைய வாழ்க்கைப் பயணமே மாறிவிட்டது. அந்த காலகட்டத்தில் தான் அவர்களுடன் சேர்ந்து, திட்டமிட்டு பெரிய பெரிய ஏமாற்று வேலைகளைச் செய்து மாட்டிக் கொண்டு நீண்டநாள் சிறைக்குச் சென்றார். இந்த வழக்குகளுக்கெல்லாம் உணர்வுடன் செயல்பட்டவர் செல்வராகவன் என்பதை பொலிஸ் குறிப்பேடுகளில் இருந்து நான் தெரிந்து கொண்டேன். அவர் அப்படிச் செய்திருப்பது கெட்ட எண்ணத்துடன் தான் என்பதையும் நான் புரிந்து கொண்டேன். ஒரு அழகான பெண்ணைத்தான் அவர் திருமணம் செய்து கொண்டுள்ளார். அந்த அப்பாவிப் பெண்ணுக்கு தனது கணவன் ஒரு வஞ்சகன் என்பது தெரியாது. இன்னும் சொல்லப் போனால் சேகர் என்ற பொய்ப் பெயரில்தான் அவளைத் திருமணம் செய்திருக்கிறார்.

இதைக் கேட்டதும், துர்காவின் விழிகள் வியப்பால் விரிந்தன.

"சேகரா! அப்போ நீங்கள் பேசுவது எனது எனது!" மேலும் பேச முடியாமல் தடுமாறினாள் துர்கா.

"ஆமாம் உங்கள் அம்மாவைப் பற்றித் தான்!"

"அப்படியானால் தோமஸ் எனது அப்பா என்றா சொல்லுறிங்க?" ஆச்சரியத்தை அள்ளிக் கட்டிக் கொண்டு கேட்டாள் துர்கா.

"உண்மைதான் தோமஸ்தான் உங்கள் அப்பா! இவை எல்லாம் நடந்துமுடிந்த சம்பவங்கள் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் துர்கா. அவர் செய்த தவறுகளுக்காக அவர் நிறையவே அனுபவித்துவிட்டார். போனது போகட்டும். அதேபோல் அவர் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கும் சொத்தெல்லாம் வஞ்சகத்தால் சம்பாதித்தவை அல்ல என்பதை என்னுடைய தேடல்களின் மூலம் கண்டு பிடித்துவிட்டேன்! உங்களுடைய தூரத்து உறவினர் ஒருவருடைய சொத்தும் அவருக்குக் கிடைத்தது!"

இப்போது,

துர்கா பலமாக மூச்சுவிட்டுக் கொண்டிருந்தாள்.

அவளுடைய அழகான விழிகளும்,

புன்னகை தவழும் முகமும்,

சிரஞ்சீவியின் பக்கமே திரும்பியிருந்தன.

அவள் மனம் எண்ணியது.

"அப்பாவே இல்லாமல் இருப்பதை விட,

கெட்டவராக இருந்தாலும் அப்பா என்று ஒருவர் இருப்பது எவ்வளவோ மேல் அல்லவா!"

"தோமஸின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு பல காரியங்களைச் செய்தது போலவே அவருடைய மனைவியையும் விவாகரத்து செய்ய வைத்து செல்வராகவனே திருமணம் செய்து கொண்டார். அக்காலகட்டத்தில் துர்கா சிறிய பிள்ளையாக இருந்தாள்!"

"ம் இப்போது தான் எனக்கும் புரிகிறது. நான் தோமஸின் மகள் என்பதனால் தான் செல்வராகவன் என்னை வெறுத்திருக்கிறார்" சிந்தித்தபடியே சொன்னாள் துர்கா.

"சிலவேளை அப்படியும் இருக்கலாம் எது எப்படி இருந்தாலும் தோமஸ் சிறையில் இருந்து விடுதலையாகி வெளியே வந்து உலாவிக் கொண்டிருப்பதை செல்வராகவன் விரும்பவில்லை! அதனால்தான் அவரை மீண்டும் சிறைக்கு அனுப்பினார்!

"செல்வராகவனும் சொலமனும் பொலிஸ் சேவையில் இருந்து ஓய்வு பெற்றபின் இருவரும் சேர்ந்து பிஸ்னஸ் செய்வதாக பகிரங்கப்படுத்தினார்கள். உண்மையில் அவர்கள் செய்த பிஸினசினால் நிறையவே சம்பாதித்ததாகக் கேள்வி. இதற்கிடையே பியன்கல என்ற கிராமத்தில் இருவருமே இரண்டு காணிகளை வாங்கி வீடுகளை கட்டிக் கொண்டு நட்புடனேயே அங்கே வாழ்ந்திருக்கிறார்கள்!

"இந்த காலகட்டத்தில் கொழும்பில் உள்ள ஒரு விடுதியில் தங்கி இருந்து தனது படிப்பை கவனித்துவந்தாள் துர்கா. ஆனாலும் துர்காவின் அம்மாவின் மரணத்திற்குப் பிறகு துர்காவை தனது வீட்டிற்கு அழைத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை செல்வராகவனுக்கு ஏற்பட்டது!"

"இந்த சந்தர்ப்பத்தில் துர்கா அழகிய ஒரு பெண்ணாக வளர்ந்திருந்ததை அவளைப் பார்த்ததும், அவள் மீது பைத்தியமாகி காதலில் விழுந்தார் சொலமன். அவளைத் தனக்குத் திருமணம் செய்துவைக்கும்படி செல்வராகவனிடம் கேட்டார் சொலமன். ஆனால், அப்படி செய்ய முடியாதென்று மறுத்துவிட்டார் செல்வராகவன்.

இதனால்,

இருவருக்கும் இடையில் மனஸ்தாபம் ஏற்பட்டது.

(தொடரும்...)

# சிறுவர் உலகம்

சுகந்தி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 127

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | | 07 | | 08 | |
| 09 | 10 | 11 | 12 | | 13 |
| 14 | 15 | 16 | | 17 | 18 |
| | 19 | | 20 | 21 | |
| 22 | 23 | 24 | 25 | | |

பெயர் ..............................................

வகுப்பு ..............................................

தொலைபேசி இல ..............................................

பாடசாலை பெயர் ..............................................

வதிவிட முகவரி ..............................................

..............................................

.............................. ..............................................

மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) மனிதனின் உணவுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற மீன், இறால் ஆகிய நீர்வாழ் உயிரினங்களைப் போன்று இதுவும் ஒரு உயிரினம். ஆனால் இது மீனின் இனம் அல்ல.

(4) புவியின் உபகோள் இது.

(7) வீட்டில் உயரமான இடங்களில் ஏதாவது வேலை செய்ய வேண்டுமானால், உயரத்தில் ஏறிக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற உபகரணம்.

(11) உடலின் மேல்பகுதியில் வன்மையான ஓடு கொண்ட உயிரினம். மனிதனின் மெதுவான வேகத்துக்கு உவமையாக, இப்பிராணியின் இடப்பெயர்வு வேகம் கூறப்படுகின்றது.

(13) இன்றைய உலகில் மனிதன் நிம்மதியாக வாழ்வதற்கு இது தேவை. இது இன்றேல் இவ்வுலகில் வாழ்வது சிரமம். பொருள் இல்லார்க்கு இவ்வுலகு இல்லை.

(16) நம் ஒவ்வொருவருக்கும் முதல் தெய்வம் இவர். இவரைப் போல் ஒரு தெய்வம் இல்லை. (தலைகீழான சொல்)

(18) நாட்டில் மக்களுக்கான சேவைகள் சீராக நடைபெறுவதற்கும், மக்களுக்காக அரசாங்கம் சீராக இயங்குவதற்கும் நம் ஒவ்வொருவரின் வருமானத்துக்கு ஏற்ப அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய சிறுதொகைப் பணம் இது. (தலைகீழான சொல்)

(21) தொழிலாளர்கள் செய்கின்ற தொழிலுக்காக, அவர்களுக்குவழங்கப்படுகின்ற ஊதியத்தை இவ்வாறு குறிப்பிடுவர். (தலைகீழான சொல்)

### மேலிருந்து கீழ்

(1) தந்திரமான புத்தி கொண்ட பிராணி எனக் கூறப்படுவது இம்மிருகம். நாயின் தோற்றத்தையுடைய காட்டு மிருகம். இலங்கைக் காடுகளிலும் வாழ்கின்றது.

(3) இச்சொல்லுக்கு புத்தகம், நூல் என்றும் ஒத்தபொருள் சொற்கள் உள்ளன. (தலைகீழான சொல்)

(5) முக்கனியில் இரண்டாவது இது. (தலைகீழான சொல்)

(8) மரத்தளபாட வேலைகளிலும், படங்களை சுவரில் தொங்க வைப்பதற்கும் இது அவசியம். சுத்தியலும் அவசியமாகிறது. (தலைகீழான சொல்)

(10) கர்வம், அகங்காரம், மமதை என்றெல்லாம் கூறக்கூடிய சொல்.

(12) விளையாட்டுகளில் ஈடுபடுகின்ற களம்.

(13) குதிரையின் ஒத்தபொருள் சொல்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 126

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. ஓடம் 04. நெல் 09. யன்னல்
14. மனம் 17. இலை 20, தேரை 22. பாமரன்

**மேலிருந்து கீழ்**

01. ஓவியம் 03. மனனம் 04. நெய்
10. மன்னன் 13. மாலை 17. இரை 20. தேன்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 125

### பாராட்டு பெறுவோர்

1. **ஆலாம் எம். பயாஸ்**
தரம் 05, வெடியவெல ம. வித்தியாலயம்,
இல. வெடியவெல, நாகொல்லகொட.

2. **அன்சிகா சஹ்ரத்**
தரம் 03B, பெபல்ஸ் அகடமி,
இல. 14, வடிகான் வீதி, பாலமுனை 03.

3. **எம்.ஏ. ஆக்கிபா ஸைனப்**
தரம் 08, 'ஆலிப்' சர்வதேச பாடசாலை,
இல. 41B, முஸ்லிம் வீதி தர்கா நகர், வெலிப்பன்னை.


4. **டி. அபிஜித்**
தரம் 06, விபுலானந்த மத்திய கல்லூரி,
இல. 100, உடையார் வீதி, காரைதீவு 02.

5. **எம்.எம். ஆஹில்**
தரம் 01A, ஒக்ஸ்போட் கல்லூரி,
இல. 366, நாங்கல்ல, துல்ஹிரிய.

6. **எம்.ஆர். முஹம்மது யூசுப்**
தரம் 05A, லலித் அத்துலத்முதலி கல்லூரி,
இல. 44/40, இந்திரஜோதி வீதி, இரத்மலானை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 127
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**புகழ்: வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா யாக்கை பொறுத்த நிலம்**

*தெளிவுரை :*
புகழ் பெறாமல் வாழ்வைக் கழித்தவருடைய உடம்பைச் சுமந்த நிலம், வசையற்ற வளமான பயனாகிய விளைவு இல்லாமல் குன்றிவிடும்.

## தந்திரமான குற்றவாளி?

அமெரிக்க இரகசிய சேவையில் ஊடுருவி நாட்டின் பல தகவல்களை திருடியதாக "நரி" என்ற புனைப்பெயர் கொண்ட ஒருவர் தனது 19 வயதில் சிறையில் வைக்கப்படுகிறார்.

மகன் சிறைக்கு சென்ற பின்னர், இவரது தந்தையான முதியவர் தனியாக வசித்து வந்துள்ளார். ஒரு நாள், அவர் தனது தோட்டத்தில் உருளைக்கிழங்கை பயிரிட விரும்பியுள்ளார். ஆனால், அவரது முதுமை காரணமாக அவ்வாறு செய்ய அவருக்கு வலிமை இல்லை.

பின்னர் அவர் சிறையில் இருக்கும் தனது மகனுக்கு ஒரு செய்தியை அனுப்பியுள்ளார். என் அன்பு மகனே, தோட்டத்தை உழுது உருளைக்கிழங்குகளை பயிரிட எனக்கு உதவ நீ இப்போது என்னுடன் இருந்திருக்க விரும்புகிறேன். இப்போது எனக்கு உதவ யாரும் இல்லை என்று எழுதியுள்ளார்.

அதன் பின்னர் தந்தைக்கு மகனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது:

"அப்பா, தயவு செய்து தோட்டத்தில் தோண்டாதீர்கள், ஏனென்றால் நான் முக்கியமான ஒன்றை மறைத்து வைத்துள்ளேன், நான் சிறையிலிருந்து வெளியே வந்ததும், அது என்னவென்று உங்களுக்குச் சொல்கிறேன்".

கடிதத்தில் எழுதப்பட்டிருந்த தகவலை அறிந்து கொண்ட பொலிஸார் ஒரு மணி நேரத்திற்குள், இரகசிய பொலிஸாரும் இராணுவமும் அந்த வீட்டை சுற்றி வளைத்தன.

அவர்கள் அந்த காணியை அங்குலம் அங்குலமாக தோண்டி, எல்லாவற்றையும் அகற்றினர். ஆனால் எதுவும் கிடைக்கவில்லை.

ஒரு வாரம் கழித்து, தந்தைக்கு ஒரு புதிய கடிதம் வந்தது.

அப்பா, நிலத்தை பொலிஸார் நன்றாக உழுதிருக்கிறார்கள் என்று நம்புகிறேன், இப்போது நீங்கள் உருளைக்கிழங்கை பயிரிடலாம். உங்களுக்கு வேறு ஏதாவது தேவைப்பட்டால், எனக்கு தெரியப்படுத்துங்கள். நான் உங்களுடன் இருக்க முடியாது, ஆனால் எந்த வகையிலும் உங்களுக்கு ஆதரவளிக்க என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன் என்றான்.

# இவ்வார மழலை



கிருக்ஷிதா


சசிகுமார் – சசிகலா

சிறுவர் சித்திரங்கள்



க. கிஷாலன்
தரம் 09, லசாலி ஆங்கில பாடசாலை, கொ. 13.

## Orange பழத்தின் பெயரா நிறத்தின் பெயரா ?



ஒரேஞ் என்ற பெயர் முதலில் பழத்திற்கு வந்ததா அல்லது நிறத்திற்கு வந்ததா? இந்த பெயர் முதன்முதலில் ஒரேஞ் பழத்திற்கு தான் வந்தது. 1300களில் ஒரேஞ் பழத்திற்கு இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. Orange என்ற வார்த்தையின் தொன்மையை ஆராய்ந்தால், orenge என்ற பிரெஞ்ச் வார்த்தையிலிருந்து வந்தது தான் orange. இந்த பிரெஞ்ச் வார்த்தையின் மூலம் அரபிக், செரிபியன் என கலக்கப்பட்டு கடைசியில் n ?ranga என்ற சமஸ்கிருத வார்த்தையில் வந்து நிற்கிறது.

ஒரேஞ் நிறத்திற்கு இந்தப்பெயர் சூட்டப்பட்டது 1500களில் தான். பெயரில்லாமல் (அல்லது "yellowred" என்றபெயரில்) இருந்த நிறந்திற்கு ஒரேஞ் பழம் பிரபலமானதற்குப் பின் ஒரேஞ் என்ற பெயர் வைக்கப்பட்டது. ஒரேஞ் வண்ணத்திற்கு நம் சிந்தனைகளை ஒருங்கிணைக்கும் சக்தி இருக்கிறது.

## அறிந்து கொள்வோம்

★ குதிரைகள் நீர் பருகும் நீர் நிலைகளில் இருந்து நீரை அருந்துங்கள். ஏனென்றால் குதிரை ஒருபோதும் அசுத்தமான நீரை பருகாது.

★ பூனை தூங்கும் இடத்தில் உங்கள் படுக்கையை இடுங்கள். அமைதி தராத இடத்தில் பூனை உறங்காது.

★ புழு துளைத்த கனிகளை உண்ணுங்கள். நச்சுக் கனிகளை புழு துளைக்காது.

★ பூச்சிகள் உட்கார்ந்திருக்கும் காளானை தைரியமாக உணவாக எடுத்துக் கொள்ளுங்கள். விஷக் காளான்கள் மீது பூச்சிகள் உட்காராது.

★ முயல்கள் குழி பறிக்கும் இடத்தில் மரத்தை நடலாம். மரம் செழிப்பாக வளரும்.

★ பறவைகள் வெப்பத்தை தவிர்க்க ஓய்வெடுக்கும் இடத்தில் உங்களுக்கான நீர் ஊற்றினை தோண்டுங்கள்.

## பாவேந்தர் பாரதிதாசன் (1891 - 1964)



புதுச்சேரியில், வணிகராயிருந்த கனகசபை முதலியாரின் மகன் பாரதிதாசன். இவரது இயற்பெயர் கனக சுப்புரத்தினம்.

பாரதிதாசன் ஒரு சிறந்த தமிழ் ஆசான். இளவயதிலே கவிதை புனையும் ஆற்றலுடையவராக இருந்தார். இவரது முதல் பாடலை பாரதியார் பாராட்டியுள்ளார்.

பாரதியாருடன் பத்து வருடத் தொடர்பு கொண்டவர். பாரதியாரை தாசனாகவே கொண்டார். இவரது பாடல் தொகுப்பு 1938ஆம் ஆண்டு வெளியிடப்பெற்றது. அடுத்து, குடும்ப விளக்கு (1-5), பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இசை அமுது ஆகிய கவிதைத் தொகுப்புக்கள் வெளிவந்துள்ளன. பாரதிதாசன் கவிஞராக மாத்திரமன்றி விடுதலைப் போராட்டத்திலும் பங்கேற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

1946ஆம் ஆண்டு, பாரதிதாசனுக்கு 'புரட்சிக் கவி' என்று பட்டமளித்து 25,000 ரூபா பொற்கிழி வழங்கப் பெற்றது. இவரது 'பிசிராந்தையார்' என்னும் நாடகத்திற்கு சாகித்திய அகடமி 5000 ரூபா பரிசு வழங்கியது. 1990ஆம் ஆண்டு பாரதிதாசனின் படைப்புக்களை தமிழக அரசு நாட்டுடைமை ஆக்கியது.

பாவேந்தர் பாரதிதாசனைப் பற்றிப் பலரும் அறியாதிருப்பது துரதிஷ்டமே!

சாரணா கையூம்...

## நான்கு மூக்குகளை கொண்ட உயிரினம் நத்தை



## நதிகளின்...

| தற்காலப் பெயர் | பழங்காலப் பெயர்கள் |
|---|---|
| மல்வத்த ஓயா | கதம்பநதி/அருவி ஆறு |
| மகாவலி கங்கை | மகாவாலுக நதி |
| மாணிக்க கங்கை | கப்பரகந்த நதி |
| களனி கங்கை | கல்யாணி நதி |
| கலா ஓயா | கோணா கங்கை |
| தெதுறு ஓயா | ஜஜ்ரா நதி |
| கிரிந்தி ஓயா | கரிந்தி ஓயா |
| அம்பன் கங்கை | கார கங்கை |

சாரணா கையூம்...

## மின்னலின் மாயம்

# ஒரே மனிதரை நான்கு முறை தாக்கிய அதிசயம்





முதலாம் உலகப்போர் நடைபெற்ற காலத்தில், இங்கிலாந்தைச் சேர்ந்த இராணுவ மேஜர் வோல்டர் சம்மர் போர்ட் (wal ter summerford) என்பவர், போரில் ஈடுபட்டிருந்த சமயத்தில் அவரை மின்னல் தாக்கியது. அதில் அவரது கால்கள் முடங்கிப் போயின.

அதன் பின்னர் அவர் கனடாவிற்கு குடிபெயர்ந்தார். அங்கு அவர் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது இரண்டாவதாகவும் அவரை மின்னல் தாக்கியது.

இதில், அவரது உடலின் வலது பகுதி முடங்கிப்போனது.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இவற்றில் இருந்து குணம்பெற்ற வோல்டர் சம்மர் போர்ட், ஒருமுறை பார்க் ஒன்றில் நடந்துகொண்டிருக்க, மின்னல் அவரை மூன்றாவது முறையாகவும்தாக்கியது.

இந்தத் தடவை அவர் முற்றிலுமாக முடங்கிப்போனார்.

அடுத்துவந்த இரண்டு ஆண்டுகளில் இறந்துபோன அவரை, கல்லறைத்தோட்டம் ஒன்றில் அடக்கம் செய்தார்கள்.

நான்கு ஆண்டுகள் கழித்து, அவரது கல்லறையையும் விட்டுவைக்காத மின்னல், நான்காவது முறையாகவும் கல்லறைக்குள் இருந்த அவரை தாக்கியது.



# மரியானா ஆழி

பூமியை விட்டு வேறு கோள்களுக்கு சென்ற மனிதர்களால், இதுவரை இந்த மரியானா ஆழி'க்கு மட்டும் செல்ல முடியவில்லை. அந்த பகுதிக்கு சென்றால் மரணம் தான் முடிவு என்பதால் யாரும் செல்லுவதில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இந்த 'மரியானா ஆழி'யை 'சேலஞ்சர் டீப்' என்றும் அழைக்கிறார்கள். இது ஒரு கடல் பகுதி. உலகிலே அதிகமான ஆழம் கொண்ட கடல் பகுதி. சராசரியாக கடலின் ஆழம் 4 கி.மீ. இருக்கும். ஆனால், இந்த பகுதியில் கிட்டத்தட்ட 11 கி.மீ. வரை இருக்குமாம்.

கடல் நீரின் அழுத்தம் காரணமாகவே மனிதனால் இந்த இடத்திற்குச் செல்ல முடிவதில்லை. கடலில் 10 மீற்றர் ஆழத்திற்கு சென்றால் இந்த அழுத்தம் 2 மடங்கு இருக்கும். அதுவே 20 மீற்றர் என்றால் 3 மடங்கு இருக்கும். 30 மீற்றர் ஆழத்தில் 4 மடங்கும், 4 கி.மீ. கடல் ஆழத்தில் 400 மடங்கும் இருக்கும்.

இது நம்மை படுக்க வைத்து 50 சீமெந்து மூடைகளை மேலே அடுக்குவது போல் அழுத்தம் கொண்டது.

இதுவே 10,000 மீற்றர் ஆழத்தில் 1,100 மடங்கு இருக்கும். அப்படியானால் அந்த இடத்தில் மனிதனின் உடலை நீர் ஊடுருவிச் செல்லும். இதனால் மரணம் ஏற்படும். மேலும் கடலில் 800 மீற்றர் ஆழத்திலே இருள் சூழ்ந்து இருப்பதால் எதையும் பார்க்க முடியாது.

இங்கு விசித்திரமான பல நீர்வாழ் உயிரினங்கள் இருக்கின்றன. இவைகளை உலகின் வேறு கடல் பகுதிகளில் பார்க்க முடியாது. அப்படிப்பட்ட கடல் பகுதியிலும் மனிதர்கள் இருவர் சென்று வந்தனர்.

ஜாக் பிக்கார்ட் மற்றும் லெப்டனென்ட் டான் வால்ஷ் என்பதுதான் அவர்களது பெயர். இதில் ஜாக் பிக்கார்ட் ஒரு கடல் ஆராய்ச்சி நிபுணர். வால்ஷ் கடற்படை அதிகாரி. 1960 ஜனவரி 23ஆம் 'ட்ரீயெஸ்ட்' என்ற நீர்மூழ்கிக் கலம் ஒன்றில் இந்தப் பயணத்தை மேற்கொண்டார்கள். 11,000 மீற்றர் ஆழத்தில் ஏற்படும் நீரின் அழுத்தத்தை கணக்கிட்டு அதனை தாங்கும் வண்ணம் மிக வலுவான இரும்புக் கூண்டு ஒன்றை உருவாக்கினார்கள். 59 அடி நீளமும், 11 அடி அகலமும் கொண்ட இந்தக் கலத்தில் நான்கு நாட்கள் பயணம் செய்து இந்த ஆழத்தை அடைந்தார்கள். இந்தக் கூண்டில் பொருத்தப்பட்ட கனத்த கண்ணாடி சாளரம் வழியாக சக்தி மிக்க ஒளியைப் பீச்சி, அந்த வெளிச்சத்தில் நிலத்தைப் பார்த்தனர்.

சமீபத்தில் 'டைட்டானிக்' பட இயக்குனர் ஜேம்ஸ் கெமரூன் இந்த ஆழ்கடல் பகுதியில் சில குறிப்பிட்ட ஆழம் வரை பயணித்திருக்கிறார்.

எந்த மனிதனும் எப்படிப்பட்ட பாதுகாப்பு உடை அணிந்தும் இந்த மர்ம பிரதேசத்தில் காலடி பதிக்க முடியாது என்பதே மறுக்க முடியாத உண்மை.

# விளையாட்டு





# டெஸ்ட் பருவம் ஆரம்பம்

இலங்கை அணி ஒருநாள் உலகக் கிண்ணம் மற்றும் டி20 உலகக் கிண்ணம் என்று அண்மைக் காலத்தில் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்டில் அவதானம் செலுத்தி வந்த நிலையில் தற்போது சவாலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் கவனம் செலுத்தப் போகிறது.

அடுத்த ஒன்றரை மாதங்களில் இலங்கை அணி இங்கிலாந்துக்கு எதிரான மூன்று டெஸ்ட் போட்டிகள், நியூசிலாந்துக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகளில் அடுத்தடுத்து ஆடப்போகிறது. அதிலும் இங்கிலாந்துக்கு எதிராக இங்கிலாந்து மண்ணில் டெஸ்ட் போட்டியில் ஆடுவதென்பது பிரத்தியேகமாக சவால் மிக்கது.

எதிர்வரும் ஓகஸ்ட் 21 ஆம் திகதி ஆரம்பமாகும் முதலாவது டெஸ்ட் போட்டி மான்செஸ்டர், ஓல்ட் டிரபர்ட் மைதானத்தில் நடைபெறப்போகிறது. தொடர்ந்து இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி பிரபலமான லண்டன், லோர்ட்ஸ் மைதானத்தில் ஓகஸ்ட் 29 ஆம் திகதி ஆரம்பமாகிறது. மூன்றாவது டெஸ்ட் போட்டி செப்டெம்பர் 06 தொடக்கம் 10 ஆம் திகதி வரை லண்டன், கென்னிங்டன் ஓவலில் நடைபெறப்போகிறது.

இத்தோடு நிற்காது, நாடு திரும்பும் இலங்கை அணி ஒரு வாரம் கழித்து நியூசிலாந்துடன் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடும். காலியில் நடைபெறும் இந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளில் முதல் ஆட்டம் செப்டெம்பர் 18 ஆம் திகதியும் இரண்டாவது போட்டி செப்டெம்பர் 26 ஆம் திகதியும் ஆரம்பமாகின்றன.

இதிலே தற்போது ஆரம்பமாகப்போகும் இங்கிலாந்து தொடர் என்பது சவாலான. சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் டெஸ்ட் தர வரிசையில் தற்போது 03 ஆவது இடத்தில் இருக்கும் இங்கிலாந்து அணியை அதன் சொந்த மண்ணில் எதிர்கொள்வதென்பது சாதாரணமானதல்ல.

அதுவும் கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளின் பின்னரே இலங்கை அணி இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடர் ஒன்றில் ஆடப்போகிறது. 2016 ஆம் ஆண்டு மே, ஜூனில் இங்கிலாந்து சென்று மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடிய அஞ்சலோ மத்தியூஸ் தலைமையிலான இலங்கை அணி தொடரை 0–2 என இழந்தது.

இலங்கைக்கு டெஸ்ட் வரம் கிடைத்த ஆரம்ப காலத்தில் இங்கிலாந்து மண்ணில் டெஸ்ட் போட்டி ஒன்றில் ஆடுவதென்பது பெரும் கனவாகத்தான் இருந்து வந்தது. ஆரம்பத்தில் மிஞ்சிப்போனார் ஒரு டெஸ்ட் போட்டிதான் இலங்கைக்கு கிடைக்கும். ஆனால் 1998 ஆம் ஆண்டு முத்தைய முரளிதரன் அந்த மரபை உடைத்த பின்னரே இலங்கைக்கு இங்கிலாந்து மண்ணில் மூன்று டெஸ்ட் போட்டிகள் கிடைக்கின்றன.

1998 இல் ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் ஆடச் சென்ற அர்ஜுன ரணதுங்க தலைமையிலான இலங்கை அணி அந்தப் போட்டியில் 10 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. முத்தையா முரளிதரன் இரண்டு இன்னிங்ஸ்களிலும் மொத்தமாக 16 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

அதற்குப் பின்னரே இங்கிலாந்து மண்ணில் இலங்கை அணிக்கு மூன்று டெஸ்ட் போட்டிகள் கிடைக்கின்றன. என்றாலும் அதன் பின் இலங்கை அணியால் இதுவரையில் இரண்டே இரண்டு டெஸ்ட் போட்டிகளில் தான் இங்கிலாந்து மண்ணில் வெற்றிபெற முடிந்திருக்கிறது. ஒட்டுமொத்தமாக இங்கிலாந்து மண்ணில் இதுவரை 18 டெஸ்ட் போட்டிகளில் ஆடி இருக்கும் இலங்கை அணி 3 இல் வென்று 8 போட்டிகளில் தோல்வியை சந்தித்திருப்பதோடு 7 ஆட்டங்களை சமநிலை செய்திருக்கிறது.

இங்கிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் என்பது தற்போது முன்னரை விடவும் மாறுபட்டது. பாஸ்போல் கிரிக்கெட் என்று புதிய பாணியில் கிரிக்கெட் ஆடுகிறது.



வழக்கமாக டெஸ்ட் போட்டிகள் என்றால் பந்துகள் வீணாகிப்போனாலும் பரவாயில்லை, விக்கெட்டை காத்துக் கொண்டு ஓட்டங்களை சேர்த்து வெற்றி எப்படிப்போனாலும் ஆட்டத்தை சமநிலை செய்ய வேண்டும் என்று ஆடும் ஆட்டமாகவே தொன்று தொட்டு இருந்து வருகிறது.

இந்த பாஸ்போல் கோட்பாடு ஒட்டு மொத்த டெஸ்ட் பாரம்பரியத்துக்கே சவால் விடுப்பது போன்றது. அதாவது வேகமாக துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை எடுப்பது, அதிரடியாக பந்துவீச்சுகளை மேற்கொண்டு ஆட்டத்தை வெல்வதற்காக ஆடுவதே இந்தப் போட்டித் தந்திரமாகும்.

எனவே இலங்கை அணிக்கு இந்தப் போட்டித் தந்திரம் புதிய நெருக்கடியையும் புதிய எதிர்பார்ப்பையும் தரப்போகிறது. இங்கிலாந்தை எதிர்கொள்ளப்போது இலங்கை அணி இந்த பாஸ்போல் கோட்பாட்டை எதிர்கொள்வதற்கு தயாராக இருப்பது நல்லது.

என்றாலும், மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்டை விடவும், டெஸ்ட் கிரிக்கெட்டில் இலங்கை அணி அதிக அனுபவம் பெற்ற, ஸ்திரமான அணியாகவே இருக்கிறது. டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்டிருக்கும் திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், கசுன் ராஜித்த, பிரபாத் ஜயசூரிய போன்ற வீரர்கள் முக்கியமானவர்கள்.

இவர்களுடன் டெஸ்ட் அணியின் புதிய தலைவர் தனஞ்சய டி சில்வா, துடுப்பாட்டத்தில் தொடர்ந்து சோபித்து வரும் பத்தும் நிசங்க போன்ற வீரர்கள் இங்கிலாந்து மண்ணுக்கு பழகிக் கொண்டால் சாதிக்க முடியும்.

இலங்கை அணி கடைசியாக சொந்த மண்ணில் இந்தியாவுக்கு எதிராக டி20, ஒருநாள் போட்டிகளில் ஆடும்போது பிரத்தியேக டெஸ்ட் வீரர்களான திமுத் கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ், தனஞ்சய டி சில்வா போன்ற வீரர்கள் முன்கூட்டியே இங்கிலாந்து சென்று டெஸ்ட் போட்டிக்கு தயாராகும் வேலையை பார்த்தார்கள்.

அதேபோன்று இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்காகவே அங்குள்ள சூழல் மற்றும் எதிரணியை எதிர்கொள்ளும் வகையில் இங்கிலாந்து முன்னாள் துடுப்பாட்ட வீரர் இயன் பெல் இலங்கை அணியின் துடுப்பாட்ட பயிற்சியாளராக நியமிக்கப்பட்டிருக்கிறது. இதனை ஒரு தந்திரோபாயமான நகர்வொன்றாக பார்க்கலாம்.

இந்த நிலையில் இங்கிலாந்து டெஸ்ட் அணித் தலைவர் உபாதைக்கு உள்ளாகி இந்த டெஸ்ட் தொடரில் இருந்து வெளியேறி இருப்பது இங்கிலாந்துக்கு பாதகமானது. அதனை இலங்கை சாதகமாக பயன்படுத்திக் கொள்ளவும் முடியும்.

இலங்கை அணியின் இடைக்கால பயிற்சியாளராக செயற்படும் சனத் ஜயசூரியவின் வருகை அணியில் மாற்றங்களை ஏற்படுத்தி இருப்பது தெரிகிறது. இந்தியாவுக்கு எதிராக 27 ஆண்டுகளின் பின்னர் இலங்கையால் ஒருநாள் தொடர் ஒன்றை வெல்ல முடிந்ததன் பின்னணியில் பயிற்சியாளராக அவரது செல்வாக்கு அதிகமாக இருக்கும்.

இந்தப் போக்கு இங்கிலாந்திலும் இலங்கைக்கு கைகொடுக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இங்கிலாந்து தொடரை அடுத்து நாடு திரும்பும் இலங்கை அணி சொந்த மண்ணில் நியூசிலாந்தை எதிர்கொள்வதும் சவாலானது தான். இந்தத் தொடருக்கு முன்கூட்டியே தயாராகி இருக்கும் நியூசிலாந்து அணி அதிக சுழற்பந்து வீச்சாளர்களை உள்ளடக்கிய அணி ஒன்றை அறிவித்திருக்கிறது.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு முன்னர் இந்தியாவில் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக நியூசிலாந்து ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் ஆடப்போகிறது. இந்தப் போட்டி இந்திய துணைக் கண்டத்தில் ஆடுவதற்கான பரீட்சயத்தை நியூசிலாந்துக்கு தருவதாக இருக்கும்.

நியூசிலாந்து அணியை இதுவரை சொந்த மண்ணில் 17 போட்டிகளில் எதிர்கொண்டிருக்கும் இலங்கை அணி அதில் 7 இல் வென்று 5 இல் தோற்றிருப்பதோடு 5 ஆட்டங்கள் சமநிலை பெற்றிருக்கின்றன. எனவே, நியூசிலாந்துக்கு எதிராக சாதிப்பதற்கான சாத்தியம் இலங்கைக்கு அதிகம் உள்ளது.

இந்த இரண்டு டெஸ்ட் தொடர்களும் ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்சில் பட்டியலில் இடம்பெற்றிருப்பதால் வெறுமனே டெஸ்ட் தொடர் என்பதற்கு அப்பால் முக்கியத்துவம் வாய்ந்த போட்டிகளாக உள்ளன.

ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன்சிப் புள்ளிப் பட்டியலில் இலங்கை அணி தற்போது 4 போட்டிகளில் 2 வெற்றி, 2 தோல்விகளுடன் 24 புள்ளிகளை பெற்று 4 ஆவது இடத்தில் உள்ளது. இந்தப் புள்ளிப் பட்டியலில் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகளே அடுத்த ஆண்டு ஜூன் மாதத்தில் லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடைபெறப்போகும் உலக டெஸ்ட் சம்பியன்சிப் இறுதிப் போட்டியில் ஆட தகுதி பெறும்.

இந்த இலக்கை எட்டுவதற்கு இலங்கை அணிக்கு இந்த இரண்டு டெஸ்ட் தொடர்களும் முக்கியமானது.

எஸ்.பிர்தௌஸ்...





# பாரிஸ் ஒலிம்பிக்: பதக்கங்களின் கதை



பாரிஸில் இரண்டு வாரங்களுக்கு மேலாக நடைபற்ற 33 ஆவது ஒலிம்பிக் போட்டியில் வழக்கம் போல அமெரிக்கா அதிக பதக்கங்களை வென்றபோதும் சீனா அதற்கு சரிசமமாக நின்றது. இரு நாடுகளும் தலா 40 தங்கப்பதக்கங்களை வென்றதால், இம்முறை ஒலிம்பிக்கின் வெற்றியாளரை தீர்மானிக்க வெள்ளி பதக்கங்களை எண்ண வேண்டி இருந்து.

எனவே, வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களில் அமெரிக்கா தான் முன்னிலை பெற்றது. அமெரிக்கா ஒட்டுமொத்தமாக 126 பதக்கங்களை வென்றதோடு, 100க்கும் அதிகமான பதக்கங்களை வென்ற ஒரே நாடும் அமெரிக்கா தான். அடுத்ததாக சீனா மொத்தம் 91 பதக்கங்களை வென்றது.

ஒலிம்பிக் என்பது சாதாரணமாக, விளையாட்டாக மாத்திரம் எடுத்துக்கொள்ள முடியாது. அதற்கு அரசியல், பொருளாதார, சமூக காரணங்கள் இருக்கின்றன. அமெரிக்கா முதல் இடத்தில் இருக்கிறது என்பது அது உலகில் இன்னும் ஆதிக்கம் மிக்க நாடு என்பது தான் பொருள். முன்னரெல்லாம் சோவியட் ஒன்றியம் பின்னர் ரஷ்யா ஒலிம்பிக்கில் அமெரிக்காவுக்கு சரிக்கு சமமாக இருந்த நிலையில் தற்போது சீனா போட்டியாக வந்திருப்பதை இந்தப் பின்னணியில் தான் பார்க்க வேண்டும்.



**அமெரிக்கா–சீனா போட்டி**

ஒலிம்பிக் போட்டியின் கடைசி நாள் வரை தங்கப் பதக்கம் வெல்வதில் அமெரிக்காவுக்கு சீனாவுக்கும் கடும் போட்டி இருந்தது. கடைசி நேரம் வரை சீனா ஒரு தங்கப்பதக்கத்தால் முன்னிலையில் இருந்தபோதும் கடைசி போட்டியான பெண்களுக்கான கூடைப்பந்து போட்டியில் அமெரிக்கா தங்கம் வென்றதன் மூலம் இதனை சமன் செய்ய முடிந்தது.

சீனா டைவிங் போட்டிகளில் ஆதிக்கம் செலுத்தியதோடு துப்பாக்கிச் சுடுதல், மேசைப்பந்து மற்றும் பளுதூக்கல் போட்டிகளில் தங்கங்களை அள்ளியது. அமெரிக்கா வழக்கம்போல் தடகளத்தில் நிகரற்ற அணியாக இருந்து வருகிறது. அது தடகளத்தில் மொத்தம் 14 தங்கங்களை வென்றதோடு அனைவரும் எதிர்பார்க்கும் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் அமெரிக்காவின் நோஹ் லைல்ஸ் தங்கம் வென்றார்.

தவிர, நீச்சல், ஜிம்னாஸ்டிக்கிலும் அமெரிக்காவின் ஆதிக்கத்தை பார்க்க முடிந்தது. கூடைப்பந்தில் அதுவும் பெண்கள் கூடைப்பந்தில் அமெரிக்காவை எதிர்க்க ஆளில்லை. அமெரிக்க ஆடவர், மகளிர் அணிகள் பிரான்ஸை வீழ்த்தியே தங்கம் வென்றதோடு அதிலும் மகளிர் அணி தொடர்ந்து எட்டாவது முறையாக ஒலிம்பிக் தங்கத்தை வென்றது.

என்றாலும் எதிர்வரும் ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு இடையிலான போட்டி இதனைவிடவும் தீவிரம் அடையக்கூடும். அது விளையாட்டுக்கு அப்பால் உலக அரசியலையே புரட்டிப்போடுவதாக இருக்கும்.

**நிறைவேறா கனவு**

அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் தங்கங்களை அள்ளியபோதும் ஒலிம்பிக் பதக்கம் என்பது உலகின் பெரும்பாலான நாடுகளுக்கு இன்றும் நிறைவேறாத கனவாக இருக்கிறது. இலங்கையை எடுத்துக் கொண்டாலும் நூற்றாண்டுகள் பழைமையாக ஒலிம்பிக் வரலாற்றில் இதுவரை இரண்டு பதக்கங்களையே வெள்ள முடிந்தது. இம்முறை ஆறு வீர, வீராங்கனைகள் ஒலிம்பிக்கில் பங்கேற்றபோதும் அவர்கள் முதல் சுற்றை தாண்டுவதே போராட்டமானது.

இம்முறை ஒலிம்பிக் போட்டியில் 200க்கும் அதிகமாக நாடுகள் பங்கேற்றன. அதிலே 65 நாடுகள் ஒரு பதக்கத்தைக் கூட வெல்லவில்லை என்பதோடு ஐந்து நாடுகள் வரலாற்றில் முதல் பதக்கத்தை வென்றன. அல்பேனியா, கபோ வெர்டே, டொமினிகா மற்றும் செயின்ட் லூசியா ஆகியவை அந்த நாடுகளாகும். பொட்ஸ்வானா, டொமினிகா, செயின்ட் லூசியா மற்றும் குவான்தமாலா ஒலிம்பிக்கில் முதல் முறை தங்கம் வென்றன. பொட்ஸ்வானா மற்றும் குவான்தமாலா 2012 ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் போட்டியிலேயே முதல் ஒலிம்பிக் பதக்கத்தை வென்ற நிலையில் அதனை தங்கமாக மாற்றியிருப்பது நல்ல முன்னேற்றம்தான்.

இதுவே பிலிப்பைன்ஸை எடுத்துக் கொண்டால் அது 1928 ஆம் ஆண்டு முதல்முறை வெண்கலப் பதக்கத்தை வென்றநிலையில் அது முதல் தங்கத்தை வென்றது 92 ஆண்டுகள் கழித்து 2020 ஆம் ஆண்டிலாகும். என்றாலும் 103 நாடுகள் இன்னும் தனது முதல் தங்கத்தை வெல்ல எதிர்பார்த்திருக்கின்றன.

எமது அண்டை நாடான பாகிஸ்தானின் அர்ஷாத் நதீம் ஈட்டி எறிதலில் தங்கம் வென்றார். இது ஒலிம்பிக் தடகளப் போட்டியில் பாகிஸ்தான் வென்ற முதல் தங்கமாக இருந்தது. என்ன பரிதாபம் என்றால் ஒட்டுமொத்த தெற்காசியாவும் வென்ற ஒரே தங்கம் இது தான். இம்முறை இந்தியாவும் பெரிதாக சோபிக்கவில்லை. இந்தியாவால் ஒரு வெள்ளி மற்றும் ஐந்து வெண்கலம் என்று மொத்தமாகவே ஆறு பதக்கங்களை தான் வெல்ல முடிந்தது.

அதாவது உலக மக்கள் தொகையில் சரியாக கால் பங்கு மக்கள் தொகையை கொண்டிருக்கும் தெற்காசியாவினால் வெல்ல முடிந்த மொத்த பதக்கங்களுமே இவ்வளவு தான்.

**உண்மையான வெற்றியாளர்கள்**

பாரிஸ் ஒலிம்பிக்கில் அமெரிக்கா, சீனா அதிக பதக்கங்களை வென்றிருக்கக் கூடும். ஆனால் மக்கள் தொகையுடன் ஒப்பிட்டால் இந்த நாடுகள் பின்தள்ளப்பட்டுவிடும். மக்கள் தொகையின்படி பார்த்தால் அமெரிக்கா வென்ற 126 பதக்கங்கள் என்பது நாடுகள் தரப்படுத்தலில் 48 ஆவது இடத்திலேயே இருக்கிறது. அந்த நாடு ஒரு மில்லியன் மக்களுக்கு 0.37 பதக்கங்களையே வென்றிருக்கிறது. இதுவே சீனா ஒரு மில்லியன் மக்களுக்கு 0.06 பதக்கங்களை வென்று இன்னும் பின்தங்குகிறது.

ஆனால் நியூசிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகள் தமது மக்கள் தொகைக்கு ஏற்ப ஒலிம்பிக்கில் தொடர்ச்சியாக பதக்கங்களை வெல்லும் நாடுகளாக குறிப்பிடலாம். அவுஸ்திரேலியா இம்முறை பதக்கப்பட்டியலில் 18 தங்கங்களுடன் மொத்தம் 53 பதக்கங்களை வென்று நான்காவது இடத்தை பிடித்தது.

குறிப்பாக நீச்சல் போட்டிகளில் அவுஸ்திரேலியா எப்போதுமே பிரத்தியேகமாக தெரியும். அதன் அதிக பதக்கங்கள் நீச்சலிலேயே கிடைக்கிறது. இம்முறை அது நீச்சலில் 7 தங்கங்களுடன் மொத்தம் 18 பதக்கங்களை வென்றதோடு அது அமெரிக்காவுக்கு மாத்திரமே பின்னிற்கிறது. அவுஸ்திரேலியாவை பொறுத்தவரை அது ஒரு மில்லியன் மக்கள் தொகைக்கு 1.99 பதக்கங்களை வென்றிருக்கிறது.

அதேபோன்று நெதர்லாந்து இம்முறை 15 தங்கங்களுடன் மொத்தமாக 34 பதக்கங்களை வென்று 6 ஆவது இடத்தை பிடித்ததோடு அது ஒரு மில்லியன் மக்கள் தொகைக்கு 1.92 பதக்கங்களை வென்றது. இதுவே நியூசிலாந்து 10 தங்கங்களுடன் 19 பதக்கங்களை வென்றது. அந்த நாட்டின் மொத்த மக்கள் தொகையே 5.124 மில்லியன் தான். அதாவது நியூசிலாந்து ஒரு மில்லியனுக்கு 3.80 பதக்கங்களை வென்றிருக்கிறது.

என்றாலும் மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தால் பாரிஸ் ஒலிம்பிக்கில் முதல் இடம் பிடிக்கும் நாடு மேற்கிந்திய தீவுகளில் இருக்கும் குட்டி நாடான கிரனடா தான். இந்த தீவு நாடு இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது. இத்தனைக்கும் இந்த நாட்டின் மொத்த மக்கள் தொகையே இரண்டு இலட்சத்தை கூட எட்டவில்லை. அதாவது இந்த நாடு ஒரு மில்லியனுக்கு 15.76 பதக்கங்களை வென்றிருக்கிறது.

இரண்டாவது இடத்தில் இருக்கு டொமினிக்காவின் கதையும் இது தான். கரீமியன் பிராந்தியத்தில் இருக்கும் இந்த நாட்டின் தீ லாபொன்ட் பெண்களுக்கான முப்பாய்ச்சல் போட்டியில் தங்கம் வென்றார். இது அந்த நாடு பெற்ற ஒரே பதக்கம் என்றாலும் அது பெறுமதி மிக்கது. ஏனென்றால் டொமிக்காவின் மொத்த மக்கள் தொகையே கிட்டத்தட்ட 73 ஆயிரம் இருக்கும். அதாவது அந்த நாடு ஒரு மில்லியன் மக்கள் தொகைக்கு 13.63 பதக்கங்களை வென்றிருக்கிறது.

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒகஸ்ட் மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram

# செந்தூரம்

2024 ஓகஸ்ட் 18 ஞாயிற்றுக்கிழமை





## "இனிய நந்தவனம்" இதழின் இலங்கை வெளியீடு

பக்கம் : 05



## ஹாசிம் உமர் பௌண்டேசனின் மடிக் கணனி

பக்கம் : 11



## யார் இந்த நடிகை?

பக்கம் : 08-09



## விடத்தல் தீவு நிமாலின் அபாரம்

பக்கம் : 12

# எழுதப் படிக்கத் தெரியாத ஆசிரியர்

அமெரிக்காவின் நியூ மெக்சிகோவைச் சேர்ந்த ஜோர் கோர்கோரன் பாடசாலைக் கல்வியை முடித்து, பட்டப் படிப்பையும் பெற்று, 1960களில் ஆசிரியர் பணியில் சேர்ந்து 17 ஆண்டுகள் சேவையாற்றியவர். ஆனால் அவரால் எழுதப் படிக்கத் தெரியாது என்பது ஆச்சரியமான செய்தி.

இந்த பரம ரகசியத்தை உலகுக்கே மறைத்து வாழ்ந்தது, அதுவும் ஆசியரியராக பணியாற்றியது எப்படி சாத்தியமானது. சிறு வயதில் வாசிக்கத் தெரியாததால் படிக்காத பிள்ளைகளுடன் ஒதுக்கி வைக்கப் பட்ட கோர்கோரன் வாசிப்பதற்கு எத்தனை முயன்றாலும் அது அவருக்கு கைவரவே இல்லை, அதற்காக அவர் தனது கல்வியை கைவிடவும் இல்லை.



பாடசாலை பருவத்தை இப்படியே கழித்த அவர் உயர் கல்வி மற்றும் பல்கலைக்கழகத்தில் சித்தி பெற்று முன்னேறுவதற்கு எல்லா தந்திர வேலையையும் பார்த்திருக்கிறார். ஒன்று படிக்கின்ற நண்பர்களுடன் சேர்ந்து பயிற்சியில் சித்தி பெற உதவி பெற்றிருக்கிறார், இல்லையென்றால் ஆசிரியர் வீட்டுக்கே சென்று வினாத்தளை திருடி பரீட்சையில் சித்தி பெற்றிருக்கிறார்.

எவ்வாறோ அவர் பட்டப்படிப்பை முடித்தபோதும் கல்லூரியில் வெற்றிடம் வர, ஆசிரியராக இணைந்திருக்கிறார். பெரும்பாலும் உடற்கல்வி, சமூகவியல் போன்ற பாடங்களை கற்பிப்பவராக இருந்திருக்கும் அவர் வகுப்பில் நன்றாக வாசிக்கக் கூடிய மாணவர்களை பயன்படுத்தி அவர்களுக்கு தெரியாமல், பாடம் கற்பிப்பதற்கு உதவியை பெற்றிருக்கிறார்.

என்றாலும் தனக்கு எழுத வாசிக்கத் தெரியாது என்பதை மறைத்து அசிரியராக பணியாற்றுவது ஒரு கொடிய அனுபவம் என்று குறிப்பிடுகிறார் கோர்கோரன்.

'நான் எத்தனை பயத்தில் இருந்தேன் என்பது எனக்கு இப்போதும் ஞாபகம் இருக்கிறது. என்னால் வருகை இடாப்பை கூட வாசிக்க முடியாது. மாணவர்களுக்கு அவர்களின் பெயரைக் கூறச் சொல்லி அடையாளம் காண்பேன். ஆரம்பத்திலேயே ஓரிரு மாணவர்களை அடையாளம் கண்டு நன்றாக வாசிக்கக் கூடியவரை உதவிக்கு பயன்படுத்திக் கொள்வேன்.

ஆசிரியர் கூட்டம் எனக்கு அதிகம் அச்சம் தருவது. அந்தக் கூட்டம் அது வாரத்துக்கு ஒருமுறை நடக்கும். சில நேரம் அதிபர் ஆசிரியர்களை கூப்பிட்டு தமது கருத்துகளை பலகையில் எழுதச் சொல்வார். என்னை கூப்பிடுவாரோ என்ற அச்சத்திலேயே நான் எப்போதும் இருப்பேன்.

அதற்காக மாற்றுத் திட்டம் ஒன்றையும் நான் வகுத்து வைத்திருந்தேன். என்னை அதிபர் அழைத்தால் இரண்டு அடி முன்னே சென்றுவிட்டு நெஞ்சை பிடித்துக்கொண்டு விழுந்து விடுவதாக தீர்மானித்திருந்தேன். அப்போது அவர்கள் 911 அவசர தொலைபேசியை அழைப்பார்கள். என்ன ஆனாலும் மாட்டிக்கொள்ளாமல் இருக்க நான் உறுதியாக இருந்தேன். ஒருபோதும் நான் மாட்டிக்கொள்ளவும் இல்லை' என்று பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்கு அவர் அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

ஆசியர் பணியில் இருந்து விடைபெற்ற பின்னர் தான் அவர் தனது பரம ரகசியத்தை வெளியுலகுக்கு கூறினார்.




## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# பசியோ பசி..

பிரான்ஸில் வாழ்ந்த டெராரே என்பவர் போல் சாப்பிட உலகில் யாருக்குமே முடியாது. அசாதாரண பசியால் இடைவிடாமல் ஊருக்கே தேவையான சாப்பாட்டை ஒரே ஆளாக சாப்பிடுவார். இதனால் சாப்பிட கொடுக்க முடியாமல் பெற்றோரே வீட்டை விட்டு துரத்திவிட்டார்கள்.

டெராரே 1772 ஆம் ஆண்டு பிறந்தவர். நம்ப முடியாது சாப்பாட்டு பழக்கம் அவரை 25 வயது வரை தான் உயிர் வாழச் செய்தது. அவரை பற்றிய மருத்துவக் குறிப்புகள், சமகால பதிவுகள் அவரது கதை பொய்யல்ல என்பதை உறுதி செய்யப் போதுமானவை.



வீட்டில் இருந்து துரத்தப்பட்டவர் ஆரம்பத்தில் சின்னதாக வேலை பார்த்தார், திருடினார் என்றாலும் தனது பசியை கட்டுப் படுத்த முடிவில்லை. இதனால் பிரான்ஸ் வீதிகளில் தான் உண்பதையே காட்சிப் படுத்தி சம்பாதிக்க ஆரம்பித்தார். பலகை துண்டுகள், கற்கள், உயிருடன் விலங்குகள் மற்றும் கூடை நிறைய ஆப்பிள் என்று எல்லாவற்றையும் ஒரே மூச்சில் சாப்பிடுவார் அல்லது விழுங்கிவிடுவார்.

அப்போது ஐரோப்பிய கூட்டணி நாடுகளுக்கும் பிரான்ஸுக்கு போர் வெடித்தபோது பிரான்ஸ் புரட்சிப் படையில் இணைந்தார் டெராரே. இராணுவத்தில் கொடுக்கும் சாப்பாடு அவரது பசியை தீர்க்க போதுமாக இல்லை. மற்றை வீரர்களைவிட நான்கு மடங்கு உணவு கொடுத்தாலும் அது போதவில்லை. கிடைக்கும் அனைத்தையும் சாப்பிடுவார், குப்பையில் இருந்து பொறுக்கி சாப்பிடுவார். அவரது பட்டினி நாளுக்கு நாள் மோசமடைந்தது.

கடுமையான சோர்வு மற்றும் அவரது பயங்கர உணவுப் பழக்கத்தை தீர்ப்பதற்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 15 பேர் சாப்பிடக்கூடிய உணவை ஒரே இடத்தில் இருந்து சாப்பிட்டு முடிப்பார். உயிருடன் பூனைகள், பாம்புகள், பல்லிகள் மற்றும் நாய்க்குட்டிகளை சாப்பிடுவதோடு விலாங்கு மீன்களை மெல்லாமல் விழுங்கி விடுவார்.


இத்தனை சாப்பிட்டாலும் அவரது உடல் பெருக்கவே இல்லை. அதற்காக மனநலம் பாதிக்கப்பட்டவராகவும் இல்லை. ஆனால் அலட்சியமாக இருப்பார்.

பின்னர் பிரான்ஸ் இராணுவத்தில் ஓர் தபால்காரராக அல்லது உளவு வேலைக்கு பயன்படுத்தப்பட்டார். எதிரிப்படைகளுக்கு இடையே பிரான்ஸ் படைகளுக்கு செய்திகளை எடுத்துச் செல்வது தான் வேலை. ஆனால் முதல் முயற்சிலேயே சிக்கிக்கொண்டார். என்றாலும் அடிவாங்கிய பின் உயிர்தப்பி திரும்பிவிட்டார்.


தனது உணவுப் பழக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு மருத்துவர்களின் உதவியை நாடினார். என்றாலும் மருத்துவர்களால் அவர் சாப்பிடுவதை நிறுத்தவே முடியவில்லை.

மருத்துமனையில் இருக்கும் குப்பைகளை சாப்பிடுவது, மற்ற நோயாளிகளின் இரத்தத்தை குடிப்பது, உச்சகட்டமாக பிரேத அறையில் இருக்கும் பிணங்களை சாப்பிடும் அளவு நிலைமை மோசமானது. கடைசியில் ஒரு வயது குழந்தையை அவர் சாப்பிட்டதாக சந்தேகம் ஏற்பட மருத்துவமனையில் இருந்தே துரத்தப்பட்டார்.

டெராரே அனைத்தையும் சாப்பிட்ட பின் அவர் பலூன் போல் ஊதிவிடுவார். குறிப்பாக அவரது வயிறு பெருத்துவிடும். பின்னர் கழிப்பறைக்குச் சென்று கிட்டத்தட்ட அனைத்தையும் கழித்து விடுவார் என்று அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் குறிப்பிடுகிறார்கள்.




நான்கு ஆண்டுகளின் பின்னர் காச நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு கடைசியில் உயிரிழந்தார்.


தேர்தல் கொமடி
தலைவர் டென்ஷனா இருக்கிறாரே.... எலக்ஷன்னல சீட்டு கிடைக்காதுன்னா...! இல்ல கிடைச்சுடுன்னு
முதல் எண்ணிக்கையில் தோற்றாலும் மறு எண்ணிக்கையிலாவது தலைவரை வெற்றி பெறச் செய்யுமாறு தொகுதி மக்களை கேட்டுக் கொள்கிறேன்.
த லைவரைப் பாராட்டி பேச வந்து கொண்டிருந்த பேச்சுமுத்துவுக்கு காசு கொடுத்து திருப்பி அனுப்பியதை வன்மையாக கண்டிருக்கிறேன்.
நீங்க குற்றவாளின்னு தீர்ப்பளித்து, தீர்ப்பை தள்ளி வைக்கிறேன். குற்றத்தைத் தள்ளி வைக்க முடியாதா எசமான்?
கூட்டணியில் எங்களுக்கு நான்கு தொகுதிகள் ஒதுக்கிய தலைவருக்கு நன்றி தெரிவிக்கும் அதேநேரத்தில் கள்ள ஓட்டு போட்டு எங்களை ஜெயிக்க வைக்கும் பொறுப்பும் அவருடையதே என்று நான் வலியுறுத்துகிறேன்.
வ ரும் தேர்தலில் நாங்கள் தான் வெற்றி பெறுவோம் என்று கருத்துக் கணிப்பு கூறுவதால், ஊழல் இல்லாத ஆட்சி அமைப்போம் என்று நாங்கள் கூறியதை வாபஸ் பெறுகிறோம்.
மாடு இளைச்சு கிட்டே இருக்கு டாக்டர் ..... என்ன கொடுக்கலாம்? பால், வெண்ணெய், நெய், முட்டை... இதிலே எது வேணும்ன்னாலும் கொடுக்கலாம்.
எலக்ஷன்ல என்ன சொல்லி வாக்கு கேப்பீங்க? ஏதாவது பொய்யை சொல்லித்தான்
நம்ம தலைவருக்கு நட்டு கழன்றிருச்சி என்று நினைக்கிறேன். ஏன்? பொதுக் கூட்டத்தில பேசும் போதுசிறையிலஅவர்வாங்கிய நன்னடத்தை சான்றிதழைக் காட்டி வாக்கு கேக்குறாரு?
இந்த ஆட்சியை அகற்றியே தீர வேண்டும். எதுக்கு தலைவரே? நாம உழைக்க வேணாமா?
தலைவர் ஏன் வளர்ப்பு நாயை வித்துட்டாரு? அதுக்கு பயந்துகிட்டுத்தான் கூட்டணிக்கு யாரும் வந்து கதவை தட்டவில்லை என்று கவலைப்படுறார்.

# கனடாவில் தமிழர் தெருத்திருவிழா

கனடிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் ஆண்டுதோறும் நிகழும் உலகின் மிகப் பிரம்மாண்ட தமிழர் தெருத்திருவிழாவான தமிழர் தெருவிழா இந்த ஆண்டு ஒரு தசாப்தகால கொண்டாட்டமாக மார்க்கம் வீதியை ஆகஸ்ட் மாதம் 24ஆம் 25ஆம் திகதிகளில் அலங்கரிக்க உள்ளது. 2015இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த கொண்டாட்டம் காலப்போக்கில் தமிழர்களின் தனி அடையாளமாகவே மாறிப்போனது. கடந்த ஆண்டு வரலாறு காணாத மக்கள் கூட்டத்தால் நிறைந்த தமிழர் தெருவிழாவில் அண்ணளவாக 275,000 பேர் ஆர்வமாக கலந்து கொண்டனர். இந்த ஆண்டு தமிழர் தெருவிழா 300,000ற்கும் அதிகமான மக்களை ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மொழி சார்ந்த பெருமையும் தனித்துவமும் உலகின் மிக நீண்ட கால கலை பண்பாட்டு நாகரீக வரலாறு கொண்ட எம்மவர்களின் கலை கலாச்சாரம் உணவுப் பழக்கங்களை ஒரு பன்முகத்தன்மை வாய்ந்த நாட்டில் உள்ள அனைவரும் அறியும் வண்ணம் ஊர் கூடி கொண்டாடும் இந்த தமிழர் தெருவிழாவில் ஒவ்வொரு ஆண்டும் புதுமையான சிறப்பான பல அம்சங்கள் இடம்பெற்று வருகின்றது. அந்தவகையில் பத்தாவது ஆண்டாக நிகழவிருக்கும் இவ்வாண்டு கொண்டாட்டத்தில் நம்மவர் பெருமை கூறும் பல அம்சங்கள் இடம்பெற உள்ளது. அவற்றுள் மிக முக்கியமானது தாயகத்தில் உள்ள எமது உறவுகளின் சிறுதொழில் உற்பத்திகளை ஊக்குவிக்கவும் சந்தைப்படுத்த உதவவும் என ஒரு காட்சியறை உருவாக்கப்படவுள்ளது.

இலங்கையில் தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு பிராந்தியங்கள் சிறுதொழில் உற்பத்திகளில் சிறந்த உற்பத்தியாளர்களைக்கொண்ட வளம்மிக்க பிராந்தியங்கள் என்றாலும் யுத்தத்தின் பின்னர் அவர்களின் உற்பத்தி திறனிலும் சந்தைப்படுத்தலிலும் பல சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த உற்பத்திப்பொருட்களை சர்வதேச சந்தைக்கு எடுத்துச்செல்லும் முகமாக இலங்கையில் வடக்கு தொழில் துறை சம்மேளனத்துடன் இணைந்து இந்த உள்ளூர் உற்பத்திகள் காட்சியறையை தமிழர் திருவிழாவில் உருவாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது. இதன்போது வடக்கு தொழில்துறை சம்மேளனத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள உள்ளனர். ஆரோக்கியமான கூட்டுமுயற்சியில் ஈடுபட விரும்புபவர்கள் தமிழர் தெருவிழாவில் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளலாம்.




தமிழர்களாக நாங்கள் பெருமைப் பட்டுக்கொள்ள பல வரலாற்று நிகழ்வுகள் உண்டு. அவற்றில் பலவற்றை நம் இளைய தலைமுறையினருக்கு கொண்டு சேர்க்க வேண்டிய கடப்பாடையும் தமிழர் தெருவிழா தன் நிகழ்ச்சிநிரல்களில் ஆண்டாண்டாக தொடர்ந்து வருகின்றது.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் கப்பல் கட்டுமானத்தில் சிறந்த இடமாக திகழ்ந்தது. நம் முன்னோர்கள் திறமையான கப்பலோடிகள் என்பதோடு அவர்கள் தாமாகவே பாய்மர படகுகளை உருவாக்கினர். இந்த கட்டுமான அழகு மேற்கத்தேய கடலோடிகளையும் ஈர்த்தது. இந்த வரலாற்றுக்கு சான்றாக இருக்கும் ஒரு பெயர்தான் அன்னபூரணி அம்மாள் கப்பல். 1937 ஆம் ஆண்டு, ஐந்து வீரத் தமிழ் கடலோடிகள் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவுக்கு தாம் செய்த பாய்மரக்கப்பலில் பயணம் செய்தனர். எந்த நவீன உபகரணங்களும் இல்லாமல், அவர்கள் ஒரு எளிய பாய்மரக் கப்பலில் உலகின் மிக ஆபத்தான அட்லாண்டிக் பெருங்கடலைக் கடந்தனர். 10 ஆவது ஆண்டு தமிழர் தெருவிழாவில் இந்த அன்னபூரணி அம்மாள் கப்பலின் நெடிய வரலாற்றுப்பயணமும் அதன் 27 வருட கால செயற்பாடுகளும் காட்சியப்படுத்தப்படவுள்ளது. இதில் மிக முக்கியமாக அன்னபூரணி அம்மாள் பாய்மாரைக் கப்பல் மாதிரி ஒன்றும் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட உள்ளது. வரலாறுகளை மறக்கும் எந்த இனமும் தன்னை தகவமைத்துக்கொள்ள முடியாது. நாம் அனைத்து துறைகளிலும் அனைத்து வகையிலும் சிறந்தவர்களாகவே இருந்து இருக்கின்றோம் என்பதை மீண்டும் ஒருமுறை தமிழர் தெருவிழா பறைசாற்றவுள்ளது.

இவற்றை விடவும் இந்த ஆண்டு பின்னணிப்பாடகர் ஸ்ரீனிவாஸ் உற்பட சரிகமபா புகழ் மாதுலானி, ஜீவன், தாயக பாடகர் கந்தப்பு ஜெயந்தன் இவர்களோடு கனடிய பாடகர்கள், கலைஞர்கள் என அனைவரையும் உள்ளடக்கிய கலை, இசைக்கொண்டாட்டங்களும் அரங்கேறவுள்ளன. நம் கலை மிக விரிந்தது. பறை, சிலம்பாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், கோலாட்டம், கும்மி, பொய்க்கால் குதிரை, பரதநாட்டியம், நாட்டுக்கூத்து என ஆரம்பித்து நவீன கலை நடன அம்சங்களும் தமிழர் தெருவிழாவில் இடம்பெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

இவைமட்டுமல்லாது கனடாவில் உள்ள தமிழர்களின் வியாபார சாவடிகள், உணவுச்சாலைகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தன்னார்வ நிறுவனங்கள் என நூற்றிற்கும் மேற்பட்ட சாவடிகளையும் இவ்வாண்டு தெருவிழாவில் எதிர்பார்க்க முடியும். குழந்தைகள், இளைஞர்கள் என அனைவரும் மறக்க முடியாத அனுபவத்தை பெறுவதற்கான விளையாட்டு திடலும் தமிழ்த் தெருவிழாவில் ஒரு அம்சமாக அமையவுள்ளது. உலகின் ஆதிக்குடிகளான தமிழர்கள் காதலும், வீரமும், கொண்டாட்டமும் கொண்ட நீண்ட நெடிய வரலாற்றை கொண்டவர்கள்.

உலகிற்கு பலவகைகளில் கலையையும் பண்பாட்டையும் கொடுத்தவர்கள். தமிழர் தெருவிழா தமிழர்களின் பெருமையாக இவ்வாண்டும் சிறந்த கோடைகால கொண்டாட்டமாக இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. நம் மொழி நடந்து வந்த பாதையில் ஒருமுறை நடந்து பார்க்க அனைவரையும் தமிழர்த் தெருவிழா அழைக்கின்றது.

# அவுஸ்திரேலியா சிட்னியில் சர்வதேச சிலப்பதிகார மாநாடு



அவுஸ்திரேலியா தலைநகரான சிட்னியில் 2024 நவம்பர் 30, டிசம்பர் 1 ஆகிய இரு திகதிகளிலும் மூன்றாவது சர்வதேச சிலப்பதிகார மாநாடு நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டை சிட்னி கலை இலக்கிய மன்றத்தின் தலைவர் டாக்டர் இரத்தின மகேந்திரன் தலைமையேற்று நடத்தவுள்ளார். இதில் உலக அளவில் தமிழறிஞர்களும் பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் பங்கேற்கின்றனர். மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர்களான முனைவர் மோ. பாட்டழகன், முனைவர் மா. பத்மபிரியா ஆகியோர் மாநாட்டுக்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். மாநாட்டில் பங்கேற்க விரும்புகிறவர்கள் +91 9380417307, +91 9486862263 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# சிலை செய்த சிற்பிக்குக் கலாசாலையில் கௌரவம்



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உள்ள சரஸ்வதிதேவி திருவுருவச் சிலையை இலவசமாகப் புனரமைத்து வர்ணம் பூசிய கலாசாலையின் பழைய மாணவரும் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய ஆசிரியருமாகிய செகராசசிங்கம் செந்தில்வேல் கலாசாலைச் சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அண்மையில் அண்மையில் இடம்பெற்ற பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப் பத்திரம் வழங்கும் நிகழ்வின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தி. யோன்குயின்ரஸ், கலாசாலையின் முன்னாள் அதிபர் வீ. கருணலிங்கம், தற்போதைய அதிபர் ச.லலீசன் ஆகியோர் இவருக்கான கௌரவத்தை வழங்கினர்.

இச்சிலையின் புனரமைப்புப் பணிக்கான நிதி அனுசரணையை இந்த மாதம் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறவுள்ள சேவை உதவியாளர் ஐ. ரவிச்சந்திரன் வழங்கினார்.

இச்சரஸ்வதி தேவியின் திருவுருவச் சிலை 2003 ஆம் ஆண்டில் அப்போதைய அதிபர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தியின் தலைமையில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியால் திறந்து வைக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

# "இனிய நந்தவனம்" இதழின் இலங்கை வட மாகாண சிறப்பிதழ் வெளியீடு




இனிய நந்தவனம் இலங்கை வட மாகாண சிறப்பிதழ் அண்மையில் முல்லைத்தீவு விசுவமாடு நகரில் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதன் முதலாவது பிரதியை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர், அறிவிருட்ஷம் பணிப்பாளர் (துரித கல்வி சமூக மேம்பாடு) I. M. சறைஸுக்கு வழங்கி வெளியிட்டு வைத்தார். நந்தவனம் ஆசிரியர் சந்திரசேகரன், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், விழா ஏற்பாட்டாளர் கவிஞர் யோ. புரட்சி, "தமிழ் விருட்சம்" என்ற அமைப்பின் தலைவர் சி. சந்திரகுமார் கண்ணன் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

(படங்கள் மாங்குளம் நிருபர் தவசீலன்)

# காலத்தை வென்றவை இலக்கியங்கள் - கவிஞர் வாழைத்தோட்டம் வஸீர்

**கேள்வி : உங்களைப் பற்றிய அறிமுகத்தோடு இலக்கிய உலகில் எத்தனையாம் ஆண்டு காலடி எடுத்து வைத்தீர்கள் என்பவைகளையும் கூறுங்கள்?**

பதில்: நான் கொழும்பு வாழைத்தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவன். உம்மு சல்மா அஹ்மத் மொஹிதீன் தம்பதியினருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தேன். எனக்கு நான்கு சகோதரர்கள், நான்கு சகோதரிகள். மனைவியின் பெயர் இஸ்ஸதுல் மஸாஹிரா.

எங்களுக்கு ஒரு மகளும், இரண்டு மகன்களும் இருக்கின்றார்கள்.

கொழும்பு மிகுந்து மாவத்தை முஸ்லிம் அரசினர் பாடசாலை (தற்போது அல் ஹிக்மா கல்லூரி) யில் எனது கல்வி ஆரம்பமானது.

1972 ஆம் ஆண்டு எனது தந்தையின் மறைவிற்குப் பிறகு எனது பாடசாலை வாழ்க்கை முற்றுப் பெற்றது. ஆமாம் 1973 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை எழுதி விட்டு பாடசாலையை விட்டு வெளியேறினேன். பாடசாலையில் கற்கும் காலத்திலேயே பாடசாலை சஞ்சிகைகளுக்கு ஆக்கங்கள் எழுதி இருக்கிறேன். பாடசாலைப் போட்டிகளிலும் பங்குபற்றி இருக்கிறேன்.



அன்றைய கலை, இலக்கிய ஆர்வம் என்னை இலக்கிய உலகிற்கு அழைத்துச் சென்றது. 1980 ஆம் ஆண்டு முதல் சிறுகதையோடு இலக்கிய உலகிற்குள் பிரவேசித்தேன்.

சிறுகதையோடு ஆரம்பித்த எனது இலக்கிய பயணம் 1982 ஆம் ஆண்டு கொழும்பில் இயங்கும் தேசிய அமைப்பான வலம்புரி கவிதா வட்டத்தோடு இணைந்து பௌர்ணமி கவியரங்குகளில் இன்று வரை பயணித்துக் கொண்டிருக்கிறேன்.

**கேள்வி: இலக்கியத்தைத் தவிர்ந்த வேறென்ன விடயங்களில் உங்கள் ஆர்வம் உள்ளன? வானொலி தொலைக்காட்சியிலும் பங்கேற்ற அனுபவம் உண்டா?**

பதில்: இலக்கியம் தவிர்ந்த விடயங்கள் எனும் போது மீலாத் தினப் போட்டிகள், தமிழ்த் தினப் போட்டிகள், இஸ்லாமிய தினப் போட்டிகள் போன்ற நிறையப் போட்டிகளில் நடுவராக பணியாற்றியுள்ளேன் தொடர்ந்தும் பணியாற்றிக் கொண்டு தான் இருக்கிறேன்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையிலும் எனது சிறுகதைகள், கவிதைகள் என்பன ஒலிபரப்பாகி இருக்கின்றன. சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் தொகுத்தளிக்க முன்னாள் முஸ்லிம் சேவை பணிப்பாளர்



ஹாபிஸ் எஸ். எம். ஹனீபா தயாரித்தளித்த இளைஞர் இதயம் நிகழ்ச்சிக்கு நண்பர் கிண்ணியா அமீர் அலியுடன் இணைந்து குரல் கொடுத்தும் இருக்கிறேன்.

நேத்ரா தொலைக்காட்சி முஸ்லிம் பிரிவு ஏற்பாடு செய்த ஹஜ்ஜுப் பெருநாள் சிறப்புக் கவியரங்கு சகோதரர் தமிழ்த் தென்றல் அலி அக்பர் தலைமையில் நடைபெற்ற போது எனக்கும் பங்கேற்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தார்.

மேலும் ஒரு மீலாத் நிகழ்விலும் நேத்ரா தொலைக்காட்சியில் கவிதை வாசிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தார்.

"ஆத்மா" ஜாபீரும் நேத்ரா தொலைக்காட்சி "சாளரம்" நிகழ்ச்சியில் என்னை அழைத்து நேர்காணல் செய்து மேலும் சிறப்புச் செய்தார்.

**கேள்வி: உங்கள் ஆக்கங்கள் வெளி வந்த ஊடகங்கள் எவை? மற்றும் நீங்கள் நன்றியுடன் நினைவு கூறுவது யாரை?**

பதில்: எனது ஆக்கங்கள் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களின் மூலம் வெளியாகி இருக்கின்றன.

பத்திரிகைகளைக் குறிப்பிடும் போது சிந்தாமணி, சூடாமணி, தினபதி, தினகரன், தினகரன் வாரமஞ்சரி, வீரகேசரி, மித்திரன் வாரமலர், சுடர் ஒளி, நவமணி, விடிவெள்ளி, பார்வை, பாமிஸ் போன்ற பத்திகைகளிலும் அல் ஹஸனாத் போன்ற பல சஞ்சிகைகளிலும் மேலும் நமது அன்னை வானொலி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தனியார் வானொலிகளிலும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் நேத்ரா தொலைக்காட்சியிலும் வெளியாகி இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

நான் என்றும் நன்றியுடன் நினைவு கூறுவது மூத்த சிறுகதை எழுத்தாளர் கொழும்பு எம். ஏ. ரஹீமா, சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி, கவிமணி நஜ்முல் ஹுஸைன், மின்னும் தாரகை தந்த கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுஸைன், சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் சந்தக் கவி கிண்ணியா அமீர் அலி, தமிழ்த் தென்றல் அலி அக்பர், மர்ஹூம் கலைவாதி கலீல் போன்ற நல்லுள்ளங்களை. தனியாய் நின்று தவித்த போது துணையாய் நின்று என்னை ஏற்றி விட்டவர்கள் இவர்கள் தான் என்னுடைய ஏணிகள்.

**கேள்வி: அன்றைய இலக்கிய படைப்புகளில் பண்பாடு வழி காட்டுதல்கள் எல்லாம் இருந்து வந்துள்ளன. இன்றைய படைப்புகளும் சளைத்தவை அல்ல என்ற காலத்தை வென்ற விடயம் எதுவென கூற விரும்புகிறீர்கள்?**

பதில்: ஒழுக்க விழுமியங்களோடு சமூகத்தை உருவாக்கும் உன்னதமான நோக்கோடு தான் இலக்கியங்கள் உருவாகத் தொடங்கின. அன்று தொட்டு இற்றை வரையிலும் எந்த ஒரு இலக்கியமும் சமூகத்தில் எது விதமான ஒழுங்கீனங்களை உருவாக்கவில்லை என்பது தான் உண்மை.

இன்றைய இலக்கிய படைப்புக்கள் எல்லாமே சமகால சிக்கல்களுக்கு தீர்வு தேடக் கூடிய அல்லது தீர்ப்பளிக்கக் கூடிய கருவூலங்களாகத் தான் அமைகின்றன. அந்த வகையில் இன்றைய இலக்கியங்கள் அன்றைய இலக்கியங்களைப் போலத் தான் ஆரோக்கியமாகவே உள்ளன. காலத்தை வென்ற படைப்புகளை பேராசிரியர் தொட்டு காப்பியக்கோக்களும் காத்திரமாக படைத்துக் கொண்டு தான் இருக்கின்றனர். காலத்தை வென்றவை தான் இலக்கியங்கள்.

**கேள்வி: சிறுகதையின் வளர்ச்சி முன்பை விட இன்று எந்த அளவுக்கு யதார்த்த வாழ்க்கையுடன் ஒன்றிப் போகிறது என்று உணர்ந்து வாசித்த சிறுகதைகள் எவை?**

பதில்: இப்படித்தான் என்றில்லாமல் எப்படியும் ஒரு கதையை சுவாரஸ்யமாக எழுதுதலாம் என்பதற்கு பல உதாரணங்கள் இருந்தாலும் உமா வரதராஜன், ஆர். எம். நௌஸாத், அல் அஸூமத், திக்வெல்ல கமால், தெளிவத்தை ஜோசப், மெய்யன் நடராஜ் போன்றோர்களுடைய வித்தியாசமான பாணியில் அமைந்த சமூக யதார்த்த கதைகளைச் சுட்டலாம். உமா வரதராஜனின் "எலியம்" சிறுகதை எல்லோர் வீடுகளிலும் எலிகள் தருகின்ற தொல்லைகளை நகைச்சுவையோடு சொல்லுகிற அந்த கதை போல நடை முறை வாழ்வின் சின்னச் சின்ன பிரச்சினைகளைக் கூட கதையாகச் சொல்லி அதற்கேற்ற தீர்வைத் தருகிற கதாசிரியர்களை இன்றைய இலக்கியப் பரப்பில் காணக்கூடியதாக இருக்கின்றது.



**கேள்வி: மக்களின் மொழி நடையில் ஏற்பட்ட மாற்றமே புதுக் கவிதையின் வடிவம். சுவையும், வளமும், பொருளும் மிகுந்த புதுக் கவிதைகள் இன்று எப்படி உருவம் பெற்று வருகின்றன? அதன் ஆளுமை எப்படியுள்ளது?**


பதில்: யாப்பியல் அமைந்த ஆரம்ப கால கவிதைகளிலிருந்து சற்று மாற்றத்தை நோக்கி தமிழ் நாட்டின் மூத்த பத்திரிகை



"எழுத்து" காலம் தொடங்கிய புதுக் கவிதை கவிக்கோவின் வாணியம்பாடியின் வானம்பாடிகளுக்கூடாகவும், மு. மேத்தாவின் கண்ணீர்ப் பூக்களோடு புதுக் கவிதைகள் பூக்கத் தொடங்கின. ஈழத்தில் மேமன் கவி, சோலைக் கிளி என கவிஞர்களின் வரவும் புதுக் கவிதையின் வீச்சு மிக்க பரவலுக்கு காரணமாயிற்று. புதுக் கவிதைகளில் ஆழமான பல கருத்துக்கள் எழுசீர்களில் அமைந்த ஒரு குறளைப் போல ஆழமான கருத்துகளைச் சொல்லத் தான் செய்கின்றன. மொழி சொற்பஞ்சங்களற்ற முறையில் புதிய சொற் பிரயோகங்கள் இன்றைய புதுக் கவிதைகளை அழகு படுத்துகின்றன. வாசிப்பு தேடல் நிறைந்த நவீன கவிதை காலம். இது மொழியின் வளர்ச்சி என்று தான் சொல்ல வேண்டும்.



(07 ஆம் பக்கம் பார்க்க)



பாத்திமா நளீரா

# பொகவந்தலாவ சென் மேரிஸ் வித்தியாலயத்தில் பிரியாவிடை









பொகவந்தலாவ மமா/அவ சென் மேரிஸ் ஆரம்பப்பிரிவு தமிழ் வித்தியாலயத்தில் கடமையாற்றிய ஆசிரியை திருமதி ஆர்.எம்.ஏ. டீ. செல்வமலர் ஆசிரியர் சேவையில் 36 வருடங்கள் சேவை செய்து ஓய்வுபெற்றுள்ளார். திருமதி செல்வமலர் ஆசிரியைக்கு சென் மேரிஸ் வித்தியாலயத்தில் அண்மையில் பிரியாவிடை வைபவம் நடத்தப்பட்டது.

(கவிஞர் தாமரைச்செல்வி)



# சென் ஜோசப் வாஸ் ஆரம்பப் பள்ளி இல்ல விளையாட்டு போட்டி







கொழும்பு 14 கிராண்ட்பாஸ், சென் ஜோசப் வாஸ் ஆரம்பப் பள்ளி பாடசாலை இல்ல விளையாட்டு போட்டி சுகதாச உள்ளகரங்கில் நடைபெற்றது.

இதில் பிரதமஅதிதியாக கல்வி ராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் கலந்து கொண்டார். சிறப்பு அதிதிகளாக முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் ஜோசப் பெண்ணாண்டோவும் சுதர்சனவும் கலந்து கொண்டார்கள். பாடசாலைகளின் அதிபர்கள் சிலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

(படங்கள் : எம். நசார்)

## காலத்தை வென்றவை... (06 ஆம் பக்க தொடர்ச்சி)

**கேள்வி: அடுத்த கட்ட நகர்வாக உங்களது முயற்சி எதனுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கும்?**

பதில்: எங்கள் கால இலக்கிய வளர்ச்சியில் நாங்கள் பெறாத பல நவீன வசதிகளை இன்றைய தலைமுறையினர் நிறைய பெற்றிருப்பது அவர்கள் பெற்ற பேறு. நாங்கள் குருவைத் தேடி அலைந்தோம். இவர்களது எல்லா குருநாத ர்களும் கூகுளுக்குள் குடி இருக்கிறார்கள். இருப்பினும் குருவின்றி கற்ற வித்தை கூட வராது என்று எனது குரு கிண்ணியா அமீர் அலி அடிக்கடி கூறுவார்.

அதனால் நான் கற்று பெற்றுக் கொண்ட விடயங்களை புதியவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் ஆர்வம் எனக்கிருக்கிறது.

**கேள்வி: மக்களின் கவிஞன் என்பது லேசாக வர்ணிக்கக் கூடியதல்ல. இன்றைய கவிஞர்களின் நிலைப்பாடும் விருதுகளைப் பற்றியும் கூறுக.**

பதில்: விருதுகளைப் பற்றி சொல்வதாக இருந்தால் ஆலை இல்லாத ஊரில் இலுப்பைப் பூ சர்க்கரை. கவிஞர்களின் நிலைப்பாட்டை பாவலர் பஸீல் காரியப்பர் கூறிவிட்டாரே. ஒரு காலம் வரும் அரசியல்வாதிகளும் செல்வந்தர்களும் கவிஞர்களாகக் கணிக்கப்படுவார்கள். சில நல்ல கவிஞர்கள் அவர்களுக்கு சேவகம் புரிவார்கள். பத்தோடு பதினொன்றுகள் பூ மாலையும் பொன்னாடையும் போர்த்திக் கொள்ளும் ஒரு காலம் வரும்.

**கேள்வி: உங்களது சிறுகதைகளில் நீங்கள் ஒரு பாத்திரமாகவே மாறி எழுதிய சிறுகதைகள் எவை?**

பதில்: சீதனம் குறித்த சில கதைகள் புனைந்திருக்கிறேன். என்னையே பாத்திரமாக்கி சீதனமின்றி மணமுடிக்க வேண்டும் என்ற இலட்சியத்தை நான் நிறைவேற்றியது.

அந்த அனுபவத்தை கற்பனை கலந்து தந்திருக்கிறேன். சுய வியாபாரம் பற்றியும் எனது தொழில் அனுபவ குறிப்புகளை வைத்து கொள்ளை லாபம் தேடாத ஒரு வியாபாரியின் கதையை "தராசு" என்ற தலைப்பில் எழுதி இருக்கிறேன்.

**கேள்வி: ஒரு படைப்பாளியாக இளம் தலைமுறையினருக்கு கூற விரும்புவது என்ன?**

பதில்: "பானையில் இருந்தால் தான் அகப்பையில் வரும்" காத்திரமான படைப்புக்களை தேடிப் படிக்க வேண்டும். தீவிர வாசிப்பு இன்றி அவ்வளவு சீக்கிரத்தில் இலக்கிய உலகில் பெயரை தக்க வைக்க முடியாது.

அவசரமாக பிரபலமாக வேண்டும் என்பதை குறிக்கோளாகக் கொள்ளாமல் மூத்த படைப்பாளிகளை வழிகாட்டிகளாகக் கொண்டு அவர் தம் அறிவுரை பின்பற்றி எழுத்துப் பணியில் இலட்சியத்தோடு பயணித்தால் இலக்கை அடையலாம். எனக்கே நாற்பது வருடங்கள் ஆயிற்று.



# கவர்ச்சி விருந்தளித்த திவ்யா

குக் வித் கோமாளி நிகழ்ச்சி மூலம் புகழ்பெற்ற நடிகைகளில் ஒருவர் தான் திவ்யா துரைசாமி. இவர் பல தமிழ் திரைப்படங்களிலும் நடித்து அசத்தியுள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த 1990ம் ஆண்டு பிறந்த திவ்யா துரைசாமிக்கு வயது 34. இவர் பிரபல நிறுவனத்தில் செய்தி வாசிப்பாளராக தனது மீடியா பயணத்தை தொடங்கினார். அதன் பிறகு கடந்த 2019ம் ஆண்டு தமிழில் வெளியான ஹரிஷ் கல்யாணி "இஸ்பேட் ராஜாவும் இதய ராணியும்" என்கின்ற திரைப்படத்தின் மூலம் திவ்யா துரைசாமி நடிகையாக கோலிவுட் உலகில் களமிறங்கினார். தொடர்ச்சியாக தமிழில் "மதில்", "குற்றம் குற்றமே", "எதற்கும் துணிந்தவன்" மற்றும் "ப்ளூ ஸ்டார்" உள்ளிட்ட திரைப்படங்களில் அவர் நல்ல பல கதாபாத்திரங்கள் ஏற்று நடித்து தமிழ் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறார்.இப்பொழுது பிரபல விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வரும் "குக் வித் கோமாளி" நிகழ்ச்சியின் ஐந்தாவது சீசனில், அவர் பங்கேற்று அசத்தி வருகிறார்.

# யார் இந்த நடிகை?









தமிழ் மற்றும் தெலுங்கு சினிமாவின் முன்னணி நடிகைகளில் ஒருவராக வலம் வருபவர் நடிகை சமந்தா. சென்னை பல்லாவாரத்தில் 1987ம் ஆண்டு, ஏப்ரல் 28ம் ஜோசப் பிரபு மற்றும் தாயார் நினெட் பிரபு ஆகியோருக்கு மகளாக பிறந்தவர் தான் சமந்தா. சமந்தாவுக்கு ஜோனத், டேவிட் என்ற இரண்டு சகோதரர்கள் இருக்கின்றனர்.

ஹோலி ஏஞ்சல்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்த ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் வணிகவியல் படித்தார். எந்தவொரு சினிமா பின்னணியும் இல்லாமல் திரைத்துறையில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்து இன்று பான் இந்தியா நடிகையாக ஒருவர் மாறி உள்ளார். நாட்டின் மிகவும் வெற்றிகரமான நடிகைகளில் ஒருவராக இருக்கும் அவர், நாடு முழுவதும் உள்ள மில்லியன் கணக்கான ரசிகர்களை கொண்டிருக்கிறார்.

2010ம் ஆண்டு கௌதம் மேனன் இயக்கத்தில் வெள்ளியான விண்ணைத்தாண்டி வருவாயா படத்தின் மூலம் திரையில் அறிமுகமானவர் சமந்தா.

குறுகிய காலத்திலேயே முன்னணி நடிகையாக மாறினார் சமந்தா. தொடர்ந்து பாணா காத்தாடி, நான் ஈ, அஞ்சான், கத்தி, தங்க மகன், 24, தெறி, இரும்புத்திரை என பல ஹிட் படங்களில் நடித்தார்.

இதனிடையே தனது தனிப்பட்ட வாழ்க்கையில் பல சர்ச்சைகளை எதிர்கொண்டார் சமந்தா. முதலில் சித்தார்த்தை சமந்தா காதலித்து வந்த நிலையில் பின்னர் இந்த ஜோடி பிரேக் அப் செய்து கொண்டனர். தன்னுடன் நடித்த சக நடிகரான நாக சைதன்யாவை காதலித்து வந்த சமந்தா அவரை கடந்த 2017ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். ஆனால் இந்த திருமணம் நீண்ட காலம் நீடிக்கவில்லை. 4 ஆண்டுகளில் நாக சைதன்யாவும் சமந்தாவும் விவாகரத்து செய்து பிரிந்துவிட்டனர். தனது விவாகரத்து பல விமர்சனங்களை எதிர்கொண்டார் சமந்தா. எனினும் சர்ச்சைகளையும் வதந்திகளையும் பொருட்படுத்தாமல் வெப் சீரிஸ், படங்கள் என படு பிசியாக வலம் வருகிறார். தற்போது சிட்டாடல் என்ற வெப் சீரீஸில் சமந்தா நடித்து வருகிறார். இந்த வெப் சீரிஸின் ட்ரெய்லர் சமீபத்தில் வெளியானது. இந்த சூழலில் மீண்டும் சமந்தா நடிப்பதில் கவனம் செலுத்தி வருவதாக கூறப்படுகிறது.

# மனதை மயக்கும் மயிலாஞ்சி அனு

நடிகை அனு இமானுவேல் கருப்பு நிற உடையில்.. தாராள கவர்ச்சியுடன் எடுத்து கொண்ட லேட்டஸ்ட் புகைப்படங்கள் தற்போது வைரலாக பார்க்கப்பட்டு வருகிறது.

நடிகை அனு இமானுவேலுக்கு பூர்வீகம் கேரள மாநிலம் என்றாலும் இவர், படித்தது, வளர்த்தது எல்லாம் அமெரிக்காவில் தான். இவரின் தந்தை தங்கச்சான் இம்மானுவேல் மலையாள பட தயாரிப்பாளர் என்பதால், சிறு வயதிலேயே மலையாள படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடிக்கும் வாய்ப்பை பெற்றார்.

இதைத்தொடர்ந்து 2016 ஆம் ஆண்டு, 'ஆக்சன் ஹீரோ பிஜி' என்கிற திரைப்படத்தில் நிவின் பாலிக்கு ஜோடியாக நடித்தார். மலையாள படங்களை தொடர்ந்து தெலுங்கு, தமிழ் போன்ற தென்னிந்திய மொழிகளிலும் ஆர்வம் காட்ட துவங்கினார் அனு.

குறிப்பாக தமிழில் இயக்குனர் மிஷ்கின் இயக்கத்தில், விஷால் நடிப்பில் வெளியாகி மிகப்பெரிய வெற்றி பெற்ற 'துப்பறிவாளன்' திரைப்படத்தில் நடித்து, ஒட்டு மொத்த தமிழ் ரசிகர்களின் நெஞ்சங்களையும் கவர்ந்தார்.

இந்த படத்திற்கு பின்னர் தெலுங்கு திரையுலகில் அதிக கவனம் செலுத்தினாலும், அவ்வப்போது தமிழ் படங்களிலும் நடித்தார். அந்த வகையில் 2019 ஆம் ஆண்டு, வெளியான 'நம்ப வீட்டு பிள்ளை' படத்தில், சிவகார்த்திகேயனுக்கு ஜோடியாக நடித்திருந்தார்.



# இந்தியன் 2 படத்தில் சித்தார்த்துக்கு பதில் முதலில் நடிக்க இருந்தது யார்?



ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் நடிப்பில் வெளியான இந்தியன் 2 திரைப்படத்தில் சித்தார்த்துக்கு பதில் முதலில் நடிக்க இருந்த டாப் ஹீரோ பற்றி பார்க்கலாம்.

பிரம்மாண்ட இயக்குனர் ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் ஹீரோவாக நடித்து கடந்த 1996ம் ஆண்டு ரிலீஸ் ஆன படம் இந்தியன். தமிழ் சினிமாவின் கல்ட் கிளாசிக் படமாக கொண்டாடப்படும் அப்படத்தின் இரண்டாம் பாகத்தை சுமார் 28 ஆண்டுகளுக்கு பின் இயக்கி வெளியிட்டு இருந்தார் இயக்குனர் ஷங்கர். இந்தியன் 2 திரைப்படம் இன்றைய காலகட்டத்தில் நடக்கும் ஊழல்களை தட்டிக்கேட்கும் திரைப்படமாக எடுக்கப்பட்டு இருந்தது.இந்தியன் 2 திரைப்படத்தில் கமலுடன் சித்தார்த், பாபி சிம்ஹா, விவேக், சமுத்திரக்கனி, எஸ்.ஜே.சூர்யா, பிரியா பவானி சங்கர், ரகுல் ப்ரீத் சிங், ஜெகன் என மிகப்பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்திருந்தது. அதுமட்டுமின்றி லைகா நிறுவனமும், ரெட் ஜெயண்ட் மூவீஸ் நிறுவனமும் இணைந்து இப்படத்தை தயாரித்திருந்தது. மிகப்பெரிய எதிர்பார்ப்புடன் கடந்த ஜூலை 12ந் தேதி திரைக்கு வந்த இந்தியன் 2 திரைப்படம் பாக்ஸ் ஆபிஸில் படுதோல்வியை சந்தித்தது.கிரிஞ்சான காட்சிகள், சொதப்பலான திரைக்கதை போன்றவற்றால் தற்போது ட்ரோல் மெட்டீரியலாகவும் இந்தியன் 2 மாறி இருக்கிறது. அண்மையில் ஓடிடியில் ரிலீஸ் ஆன இப்படத்தை நெட்டிசன்கள் வச்சு செய்து வருகிறார்கள். இது ஒருபுறம் இருக்க இந்தியன் 2 திரைப்படத்தில் நடிக்க வந்த வாய்ப்பை உஷாராக மறுத்துவிட்டு எஸ்கேப் ஆன பிரபல ஹீரோ பற்றிய தகவல் வெளியாகி உள்ளது. அவர் விலகிய பின்னர் தான் சித்தார்த் அந்த ரோலில் நடித்தாராம்.அந்த ஹீரோ வேறுயாருமில்லை நடிகர் சிவகார்த்திகேயன் தான். இந்தியன் 2 படத்தில் சித்தார்த் நடித்த கேரக்டரில் முதலில் நடிக்க இருந்தது சிவகார்த்திகேயன் தானாம். அந்த சமயத்தில் 2 படங்களில் பிசியாக சிவகார்த்திகேயன் நடித்து வந்ததால் அவர் இந்தியன் 2வுக்கு நோ சொல்லிவிட்டதாக கூறப்படுகிறது. இதை அறிந்த ரசிகர்கள் நல்ல வேள சிவா தப்பிச்சிட்டாரு என கமெண்ட் செய்து வருகின்றனர்.



# சமந்தா பச்சைக் கொடி



நாக சைதன்யா நடிகை சோபிதாவை இரண்டாவது திருமணம் செய்துகொள்ள உள்ள நிலையில், சமந்தாவும் தனக்கு வந்த மேரேஜ் புரபோசலுக்கு ரிப்ளை செய்துள்ளார்.

நடிகை சமந்தாவும் நடிகர் நாக சைதன்யாவும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர் என்பது அனைவரும் அறிந்ததே. அவர்களின் திருமணம் 2017ம் ஆண்டு கோவாவில் செம்ம கிராண்ட் ஆக நடந்தது. திருமணத்துக்கு பின் நான்கு ஆண்டுகள் ஜாலியாக சென்றுகொண்டிருந்த இவர்களது திருமண வாழ்க்கை கடந்த 2021ம் ஆண்டு முடிவுக்கு வந்தது. நாக சைதன்யா உடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அவரை விவாகரத்து செய்து பிரிந்துவிட்டார் சமந்தா.விவாகரத்து ஆன அடுத்த ஆண்டே தன்னுடைய காதல் லீலைகளை ஆரம்பித்தார் நாக சைதன்யா. அவர் வீசிய வலையில் நடிகை சோபிதா துலிபாலா விழுந்துவிட்டார். இருவரும் ஒன்றாக டேட்டிங் செய்து வந்தனர். வெளிநாட்டிலும் ஜோடியாக உலா வந்த அந்த ஜோடியின் புகைப்படங்கள் வெளியாகி வைரலாகின. இதுபற்றி வாய்திறக்காமலே இருந்த நாக சைதன்யா சோபிதா துலிபாலா ஜோடி கடந்த வாரம் திடீரென நிச்சயதார்த்தம் செய்துகொண்டனர்.இந்த நிச்சயதார்த்த நிகழ்வுக்கு பின்னர், சோபிதா துலிபாலா பற்றிய பல்வேறு ஷாக்கிங் தகவல்கள் வெளிவந்தன. அவர், நாக சைதன்யாவுடன் தொடர்பில் இருந்ததை அறிந்த பின்னர் தான் சமந்தா விவாகரத்து பெற்று பிரிந்ததாகவும் கூறப்படுகிறது. ஒரு பக்கம் நாக சைதன்யா இரண்டாவது திருமணத்தால் செம்ம ஹாப்பியாக இருக்கும் நிலையில், தற்போது நடிகை சமந்தா தனக்கு இன்ஸ்டாவில் வந்த மேரேஜ் புரபோசலுக்கு ரிப்ளை செய்திருக்கிறார்.

அதில் சமந்தாவின் தீவிர ரசிகர் ஒருவர், சமந்தாவுக்கு கோடிக்கணக்கான ரசிகர்கள் இருந்தால் அதில் நானும் ஒருவன், அவருக்கு 10 ரசிகர்கள் இருந்தாலும் அதில் நானும் ஒருவன், ஒரே ஒரு ரசிகன் இருந்தாலும் அது நானாக தான் இருப்பேன். இந்த உலகமே சமந்தாவுக்கு எதிரானது என்றால் நான் இந்த உலகத்துக்கு எதிரானவன். சமந்தா நீங்கள் பீல் பண்ண வேண்டாம். உங்களுக்காக நான் இருக்கிறேன். விருப்பப்பட்டால் திருமணம் செய்துகொள்வோம் என பேசி இருக்கிறார்.

ரசிகரின் இந்த அன்பை பார்த்து நெகிழ்ந்து போன நடிகை சமந்தா, அதற்கு ரிப்ளையும் செய்துள்ளார். அதில், உங்கள் பின்னணியில் உள்ள ஜிம் என்னை கிட்டத்தட்ட சம்மதிக்க வைக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். முன்பெல்லாம் இரண்டாம் திருமணமே வேண்டாம் என கூறி வந்த சமந்தா தற்போது அதன் மீது தனக்கு விருப்பம் இருப்பதை இந்த பதிவின் மூலம் சூசகமாக வெளிப்படுத்தி இருப்பதாக நெட்டிசன்கள் கூறி வருகின்றனர்.

# ஊதியக் கொடுப்பனவில் பாலின வேறுபாடு ஏனோ?

சமூக வெளியில் தங்களை இனம் காட்ட தயங்குவதும் தங்களின் கடமை குடும்பத்தை வழிநடத்துவதும் அதாவது பொருளாதாரம் தொடர்பான செயற்பாடுகள் தவிர்த்து பிள்ளைகள் வளர்ப்பு, வீட்டு வேலைகள் செய்தல், சமைத்தல் என்பவற்றை வெளிப்படையாக செய்வதை தவிர்கிறார்கள். சமூகமும் இன்னும் அச்செயற்பாட்டுக்கு ஆதரவு கொடுக்கவில்லை என்பதே உண்மை.

காரணம் ஆண் உயர்வானவர்கள் என்கிற மாற்றுக் கருத்தை ஏற்றுக் கொள்ள மனமில்லை. அதனாலே பெண்களுக்கு குறைந்த சம்பளம் வழங்குவது மட்டுமல்ல இங்கு பிரச்சினை . மூத்த நிர்வாகம் அவர்களுக்குரிய மரியாதையையும் அளிப்பதில்லை. அமெரிக்காவில் உள்ள 500 மிகப் பெரிய நிறுவனங்களிலேயே 4 சதவீதம் பெண்கள் மட்டுமே தலைமை செயல் அதிகாரி பதவியில் உள்ளனர். தகவல் தேடலில் google சொல்கிறது. இது உண்மையெனில் பெண்களுக்கு சரிசமமான வாய்ப்புகளை அளிப்பது, பொருளாதாரம் மூலமாக அதிகாரமளிப்பது நியாயமான கோரிக்கையாக அமைவது மட்டுமல்ல, நாட்டின் பொருளாதாரமும் நல்ல வளர்ச்சியை அடையும். ஆண்களை விட பெண்களுக்கு ஊதியம் குறைவாக கொடுக்கும் முறை இன்னமும் ஏன் தொடர்கிறது என்ற கேள்வியை கேட்க வேண்டிய தேவை உள்ளது. வேலை செய்யும் இடத்தில் ஒரே மாதிரியான வேலை, நேரம் என்றிருக்கும்போது, ஆண்களை விட பெண்களுக்கு குறைவான ஊதியம் அளிப்பதை எதிர்த்து உலக அளவில் "சமமான ஊதியம், சமமான வேலை' என்ற போராட்டம் நடத்தப்பட வேண்டும். இதற்கான சட்டமியற்ற உலக தரப்பின் ஊடாக சமூகம் முன் வர வேண்டும். ஏனெனில் இது ஒரு நாட்டில் மட்டுமே நடக்கும் வேறுபாடு அல்ல. உலக ரீதியான பிரச்சினையாக உள்ளது என்பதே தேடல்களில் நான் கண்ட உண்மை. தங்களுடன் பணியாற்றும் ஆண்களுக்கு என்ன ஊதியம் வழங்கப்படுகிறது என்பதை அறிய பெண்களுக்கு உரிமை வழங்க வேண்டும். காரணம் ஊதியம் வெளிப்படையாக தெரிவிக்கப்படாமல் இரகசியம் காக்கப்படுவதால் பெண்களுக்கு சமமான மற்றும் நியாயமான ஊதியம் வழங்கப்படுகிறதா என்பது தெரியாமலே போய்விடுகிறது.



ஒரு பெண்ணுக்கு தன்னுடன் கடமை புரியும் சக ஆண்ஊழியர் ஒருவருக்கு அதிகமாக ஊதியம் வழங்கப்படுகிறது என்ற சந்தேகம் எழுந்தாலும் பெண்களால் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. உழைப்பில் மட்டும் சமத்துவமாய் வேலை வாங்கும் முதலாளித்துவம் ஊதியத்தில் பாகுபாடு காட்டுவது முறைதானோ. தொழிலாளர்களின் எண்ணிலடங்காப் போராட்டங்களின் விளைவாகத்தான் எட்டு மணி நேர வேலை நேரம் உலகம் முழுவதும் ணஉறுதிசெய்யப்பட்டது. ஒரு அரச சாஸனத்தின் மூலம் எட்டு மணி நேர வேலை என்ற கருத்தாக்கம் இருந்தாலும், 1919ல் இதற்கென ஒரு சட்டத்தை இயற்றியது ஸ்பெயின். இந்த 8 மணி நேர உழைப்பு சட்டமாக மாறிட பல நாடுகளிளும் பலவித போராட்டங்களை முன் வைத்த வரலாறுகளை வாசித்தாலே எமக்கு அத்தனை துயரம் சூழும். உழைப்புக்கேற்ற ஊதியம், பணிப் பாதுகாப்பு, வேலைக்கான அங்கீகாரம் போன்றவற்றிலும் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டாலும் ஊதியத்தில் ஆண் பெண் சமத்துவம் இல்லாமை வேதனைக் குரிய செயலாகும். உரிமைகளைப் போராடிப் பெற்றதைக் குறிக்கும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் மே 1ம் தேதியை உலகம் முழுவதும் உழைப்பாளர் நாளாகக் கொண்டாடி மகிழ்கிறார்கள். அந்த போராட்டங்கள் கூட ஆண் பெண் பேதமின்றியே நடைபெறுகிறது. உழைப்பாளர்களைக் கொண்டாடும் விதமாக உழைப்பாளர் சிலை உண்டு. ஆனால், அதில் ஓர் ஓரமாகக்கூடப் பெண்ணுக்கு இடமில்லையே! உழைப்புச் சுரண்டல் என்பது அதிகமாக பெண்களிடமே ஆரம்பமாகி பெண்களை நசுக்குறது. பெண்களின் உழைப்புக்கான அங்கீகாரம் இருக்கட்டும், உரிய ஊதியம் கிடைக்கிறதா? விவசாயத்தைப் பொறுத்தவரை பெண்களே அதிகளவு உதவியாளர்களாக சேர்க்கப்படுகிறார்கள். காரணம் ஊதியம் குறைவாக கொடுக்க முடியும் என்கிற மிகப்பெரிய காரணமே!. கட்டட வேலை, வீட்டு வேலை போன்ற முறைசாராத் தொழில்களிலும் பெண்களின் பங்களிப்பே அதிகம். குறிப்பாகக் கட்டடத் தொழிலில் மேஸ்திரி எனப்படும் ஆணைவிடச் சித்தாளாகப் பணிபுரியும் பெண்களுக்கு வேலைப்பளு அதிகம்.கடினமான சுமைகளுடன் உழைக்கும் பெண்களுக்குக் கொடுக்கப்படும் கூலி, ஆண்களைவிட பல மடங்கு குறைவு.



கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...

# ஆளுமைத்திறனில் திறமை வாய்ந்தவர்கள் பெண்களே

மனித குலத்தின் வரலாறு பெண்களிடமிருந்தே தொடங்கியது என்பது தான் முற்றிலும் உண்மை. ஆதி மனித இனத்தின் தலைமையாகப் பெண்தான் இருந்து வழி நடத்தினாள். தனக்குரிய ஆணைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையும் அவளிடமிருந்தது. காலங்கள் மாற மாற 'விழித்துக்' கொண்ட ஆண்களால் தான் அவளது தலைமைப் பொறுப்பு தட்டிப் பறிக்கப்பட்டது.

ஆளுமைத்திறன் என்பது ஒரு சிக்கலான பிரச்சினையில் மனம் தடுமாறாது அதைத் தீர்க்க முயற்சிப்பதும், கைமீறிப் போய்விட்ட விஷயங்களைத் தடுமாறாமல் கையாளுவதும் தான். இந்த விஷயத்தில் ஆண்களை விடப் பெண்கள் தான் அதிகம் திறமை வாய்ந்தவர்கள். இந்த ஆளுமைத்திறன் ஆண்களுக்கு பெரும் சவாலாக இருந்ததில் மெதுவாக பெண்களின் தலைமைப் பொறுப்பைக் கையகப்படுத்திக் கொண்டு அவர்களுக்கு நிர்வகிக்கும் திறன் இல்லை, ஆட்சி செய்யும் திறமை இல்லை என்றெல்லாம் தொடர்ந்து அவர்களின் மூளை வழியாக மரபணுக்களில் புகுத்திவிட்டார்கள். பெண்களும் இதை நம்பத் தொடங்கிவிட்டார்கள் என்பதுதான் பெரும் சோகம்.

படிப்புக்கும் ஆளுமைத் திறனுக்கும் சம்பந்தம் இல்லை. அது அவரவர் வளர்ந்த விதத்திலும், எதிர்கொண்ட பிரச்சினைகளிலும் தான் மேம்படுகிறது. இந்த ஆளுமை உணர்வு தான் சாதாரண மனிதர்களிலிருந்து தலைவர்களைத் தனித்துக் காட்டுகிறது. மற்றவர்களைக் கட்டுப்படுத்துவது மட்டுமல்ல ஆளுமை. தன்னைத்தானே முதலில் கட்டுப்படுத்துபவர்களே மற்றவர்களையும் எளிதாகக் கட்டுப்படுத்துகின்றனர். அந்த வகையில் பெண்கள் தன் ஆசைகளையும் விருப்பங்களையும் ஒடுக்குவதில் வல்லவர்கள். ஆனால்,



ஆண்கள் எளிதில் சலனப்படும் இயல்புடையவர்கள். ஆண்கள் மாங்குமாங்கென்று வேலை செய்தாலும், பெண்தான் அவற்றை ஒழுங்குபடுத்தி நிர்வகித்தாள்.

ஆதியில் ஆண்கள்தான் வேட்டைக்குப் போய் உணவு கொண்டுவந்தார்கள் என்றும், பெண்கள் வீட்டில் இருந்து பயிரிட்டு விவசாயம் கண்டறிந்தார்கள் என்றும் காலங்காலமாகச் சொல்லப்பட்டு வந்ததைச் சற்றே மாற்றிப் போட்டிருக்கிறது கடந்த வருடத்தின் கண்டுபிடிப்பு.

2020ஆம் வருடம் நவம்பர் மாதம் 4ஆம் திகதி தென் அமெரிக்காவில் உள்ள ஆண்டிஸ் மலையில் ஒன்பதாயிரம் வருடங்களுக்கு முந்தைய ஒரு சடலம் கண்டறியப்பட்டது. சோதனைக்கு உட்படுத்தியதில் அது ஒரு பெண்ணின் உடல் என்றும், வேட்டை அவளது தொழில் என்றும் அறிய முடிந்தது. இதன் மூலம் ஆண்கள் மட்டுமே வெளியே சென்று வேட்டையாடினார்கள். பெண்கள் வீட்டோடு இருந்து உணவு சேகரித்தார்கள் என்ற கருத்து மாறியது. இந்த ஆய்வினை டாவீசில் (USA) உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக ஆய்வாளர்கள் செய்திருக்கின்றனர். இது தொடர்பான ஆய்வுக் கட்டுரை, *Female Hunters of the Early Americas* என்ற தலைப்பில் Nov. 4 திகதியிட்ட in Science Advances ஆய்விதழில் வெளியாகியிருக்கிறது.

பெண் என்றாலே மெல்லியலாள் என்று பொதுப் பார்வை இருக்கிறது. ஆனால், ஆணைவிட வலுவானவள் என்ற விஷயத்தை யுகங்களாக மறைத்ததில் தான் ஆண்களின் சாமர்த்தியம் வெளிப்படுகிறது. மனதையும் எண்ணங்களையும் வலுவிழக்கச் செய்தாலே போதும். இயல்பாகவே உடலும் வலுவிழக்கும் என்ற உளவியல் ரீதியான தாக்குதலைத்தான் ஆண்கள் தொடுத்திருக்கிறார்கள்.

சங்ககாலப் பெண்கள் படிப்பறிவுடன் திகழ்ந்தார்கள். ஔவையார், வெண்ணிக் குயத்தியார், வெள்ளிவீதியார், இளவெயினி, பாரிமகளிர், காக்கைப்பாடினி, நச்செள்ளை இன்னும் எத்தனையோ மகளிர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர்.

இலக்கியங்களில் சிறந்திருந்தனர். பெண்களின் பெருமை ஓங்கியிருந்தது. என்றாலும் பிற்காலத்தில் வந்த ஆண்கள், பெண்களை முடக்க முதலில் கையிலெடுத்தது அவர்களது கல்வி பயிலும் உரிமையைப் பறித்ததுதான். பழந்தமிழகத்தில்கூட அரசாட்சியில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பெண்களின் பங்களிப்பு இருந்திருக்கிறது. சோழ இளவரசி குந்தவை, நூர்ஜஹான், ஜஹானாரா என்று நிறைய உதாரணங்கள் இருக்கின்றன. இன்னும் எத்தனையோ குடும்பங்களில் பெண்தான் முடிவெடுப்பவளாகத் திகழ்கிறாள்.

# ஹாசிம் உமர் பௌண்டேசனின் மடிக் கணனி வழங்கல்











ஹாசிம் உமர் பௌண்டேசனினால் இலவசமாக மடிக் கணனி வழங்கும் திட்டத்தின் கீழ் மூன்றாம் கட்ட நிகழ்வு அதன் ஸ்தாபகர் புரவலர் ஹாசிம் உமர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது ஜீ. நிரஞ்சன் (கொழும்பு), பாத்திமா சிலைஹா (கொழும்பு), எம். எச்.எப். ஹிஸ்னா (குருணாகல்), மஸ்லா ரூமி (பலாங்கொடை), ரீ. எம். நியாஸ் (தெஹிவளை) ஆகியோருக்கு மடிக் கணனிகள் வழங்கப்பட்டன.











மலையக கலாசார ஒன்றியத்தின் பத்தாவது ஆண்டு பூர்த்தியை நினைவு கூரும் முகமாக தபால் முத்திரை வெளியீட்டு விழாவும் சமூக செயற்பாட்டாளர் கௌரவிப்பு நிகழ்வும் கொழும்பு தமிழ்ச் சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. ஜனகன் அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகனின் அனுசரணையில் மலையக கலாசார ஒன்றியத்தின் தலைவர் கே ஜே. சிவராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்தெரிவு செய்யப்பட்ட 80 மாணவர்களுக்கான பாடசாலை பைகள், அப்பியாச கொப்பிகள் போன்ற கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

புசல்லாவை தினகரன் நிருபர் ம. நவநீதன்

# வடமாகாண செல்ல குரலுக்கான தேடல் ஜூனியர் சுப்பர் சிங்கர் வவுனியாவில்

வட மாகாண செல்ல குரலுக்கான தேடல் ஜூனியர் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் முல்லைத் தீவு மாவட்ட போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட போட்டியாளர்களுக்கு நேர்முகத் தேர்வு இல்லை. அவர்கள் நேரடியாக இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் குரல் தேர்வில் தோற்ற முடியும்.

வவுனியா மாவட்ட போட்டியாளர்கள் நேற்று சனிக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டார்கள்.

இவர்களுக்கான முதலாவது சுற்றுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறும்.

இவர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் குரல் தேர்வின் போது இசை இல்லாது பாட வேண்டும். முதலாம் சுற்றில் தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களுக்கு அதே தினமான இன்று ஞாயிற்றுக்கிழமை இரண்டாம் சுற்று நடைபெறும்.

இரண்டாம் சுற்றின் போது பக்திப் பாடல் ஒன்றும் பாரம்பரிய இசை பாடல் (கிராமிய துள்ளல் இசை பாடல் *classical music*) ஒன்றும் பாட வேண்டும்.

# பாடகி நித்யஸ்ரீ மகாதேவன், பாடகர் சத்தியபிரகாஷ் சந்தித்த சங்கவி பிலிம்ஸ் நிறுவுனர் துரைராசா சுரேஷ்

வடக்கின் செல்லக் குரலுக்கான தேடலின் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ள இலங்கைக்கு வருகை தரவுள்ள பிரபல பாடகி நித்யஸ்ரீ மகாதேவனையும் பிரபல பாடகர் சத்தியபிரகாஷையும் சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் மன்னார், பேசாலை சங்கவி தியேட்டரின் உரிமையாளருமான துரைராசா சுரேஷ் சென்னையிலுள்ள அவர்களது இல்லங்களில் சந்தித்து அழைப்பு விடுத்தபோது.....





# RTI சட்டத்தில் விளாசும் மன்னார், விடத்தல்தீவு Tea கடை முதலாளி

**பகிரங்க அதிகாரசபைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் பண்பாட்டினை பேணிவளர்த்து, அதன் மூலம் இலங்கை மக்கள் ஊழலை எதிர்த்து நிற்றல், பொறுப்புக்கூறும் தன்மை, நல்லாட்சியை மேம்படுத்துதல் போன்றவற்றில் முழுமையாக பங்கேற்றுக்கொள்ளவேண்டும் எனும் நோக்குடன் 2016ஆம் ஆண்டு, அரசியலமைப்பின் 14(அ) பிரிவில், 12ஆம் இலக்கச் சட்டமாக "தகவலுக்கான உரிமைச் சட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டபோது, இது ஊடகவியலாளர்களுக்கு வரப்பிரசாதமாக இருக்கும என்று நோக்கப்பட்டபோதிலும் காலப்போக்கில் ஊடகவியலாளர்கள் மட்டுமன்றி சாதாரண பொதுமக்களாலும் வரவேற்புப் பெறுகின்ற சட்டமாக இது மாற்றமடைந்துள்ளது.**



மன்னார் மாவட்டத்தில், விடத்தல்தீவு கிராமத்தில் 35 வருடமாக சிறிய தேநீர் கடையொன்றை நடத்திவருபவரே மரியாம் பிள்ளை சிறீ ஜெயக்குமார் (நிமால்). பத்தாம் வகுப்பு வரை மாத்திரமே கல்விகற்றுள்ள இவர், தகவலுக்கான உரிமைச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது முதல் இன்று வரை 30இற்கும் அதிகமான தகவல்பெறும் விண்ணப்பங்களை சமர்ப்பித்து பல்வேறு பகிரங்க அதிகாரசபைகளிடமிருந்து தகவல்களைப் பெற்று பொது நன்மைக்காக அவற்றைப் பயன்படுத்தி வருகிறார்.

**கே : தகவலுக்கான உரிமைச்சட்டம் தொடர்பாக நீங்கள் முதன்முதலில் எவ்வாறு அறிந்து கொண்டீர்கள்?**

சிறுவயது முதலே வானொலி கேட்பதும், பத்திரிகை வாசிப்பதும் எனக்கு மிகவும் பிடிக்கும். சிறுவயது முதல் இன்று வரை இதனையே வழக்கமாக கொண்டுள்ளேன். இச் சட்டம் தொடர்பாகவும் இவை இரண்டின் மூலமாகவே அறிந்துகொண்டேன்.

**கே : தகவல் பெறுவதற்கான உரிமையினைப் பயன்படுத்தி முதன் முதலாக நீங்கள் தகவலினைப் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பம் நினைவிருக்கிறதா?**

ஆம்!. இந்திய அரசாங்கத்தினால் வீட்டுத்திட்டமானது வழங்கப்பட்டபோது அதற்காக தெரிவுசெய்யப்பட்டோர் பட்டியலிலிருந்து எனது பெயர் விலக்கப்பட்டிருந்தது. எனவே அதற்கான காரணங்களை அறிந்துகொள்ளும் நோக்கிலேயே இவ் உரிமையை நான் முதன் முதலில் பயன்படுத்திக் கொண்டேன்.

இச் சட்டம் தொடர்பான செயன்முறை விளக்கம் அப்போது எனக்கு இன்மையால் விண்ணப்பத்தினை எப்படி நிரப்புவது? யாருக்கு அனுப்பவேண்டும்? இது தொடர்பாக எனக்குத் தெரிந்த சில சட்டத்தரணிகளிடம் ஆலோசனையைப் பெற்றுக்கொண்டேன்.

**கே : இதுவரையில் எவ்வாறான அதிகாரசபைகளிடம் தகவலுக்கான உரிமையினைப் பயன்படுத்தியுள்ளீர்கள்?**

நான் எனது தனிப்பட்ட மற்றும் கிராமம் சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை எதிர்பார்த்து அது சார்ந்த தகவல்களைப் பெறும் நோக்கில் பிரதேச சபைகள், பிரதேச செயலகம், மாவட்ட செயலகம், ஆளுநர் செயலகம், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, மாகாண சபை, சுற்றாடல் திணைக்களங்கள் போன்ற பல்வேறு அதிகாரசபைகளிடம் இவ் உரிமையைப் பயன்படுத்தி தகவல்களைப் பெற்றுள்ளேன்.

**கே : எவ்வகையான சந்தர்ப்பங்களில் தகவலுக்கான உரிமையைப் பயன்படுத்தி, தகவலைப் பெற்றுக்கொண்டீர்கள்?**

வீட்டுத்திட்டம் தொடர்பான தகவல்கள், சமுர்த்திக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள், பாதை தொடர்பான பிரச்சினையொன்றைத் தீர்ப்பதற்கு தேவைப்பட்ட தகவல்கள், மீனவர்களுக்கான மானிய மண்ணெண்ணை விடயத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குத் தேவைப்பட்ட தகவல்கள், விவாகப் பதிவாளர் பெற்றுக்கொள்ளும் பணம் தொடர்பான விபரங்கள், தெருவோர வீதி விளக்குகள் ஒளிராமைக்கான காரணங்கள், இறைச்சி வகைகளின் நிர்ணய விலை தொடர்பான தகவல்கள் என பல்வேறு தகவல்களை இவ் உரிமையைப் பயன்படுத்திப் பெற்றுக்கொண்டேன்.





"மாலை நேரங்களில் என்னுடைய தேநீர் கடையில் கூடும் ஆண்கள், தேநீர் அருந்தி கொண்டே நாட்டு நடப்புக்களைப் பேசுவார்கள். அதிலிருந்தே தகவலுக்கான தேவைகளை கண்டுகொள்கிறேன்".

**கே : தகவலுக்கான உரிமையைப் பயன்படுத்தி, தகவலைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் தங்களுக்கு மறக்கமுடியாத அனுபவமாகக் காணப்படுவது?**

ஒருமுறை தகவல் பெறுவதற்கான 1ஆம் இலக்க விண்ணப்பப்படிவத்தைப் பயன்படுத்தி பிரதேச செயலகத்திடம் தகவல் ஒன்றினைக் கோரியிருந்தபோது அதற்கு அவர்கள் வழங்கியிருந்த பதில் திருப்திகரமானதாக இருக்கவில்லை. எனவே 10ஆம் இலக்க விண்ணப்பத்தினைப் பயன்படுத்தி குறித்தளிக்கப்பட்ட அதிகாரிக்கு மேன்முறையீடு செய்திருந்தேன். அவர் வழங்கிய தகவலிலும் திருப்தியின்மையால் ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு செய்தேன். பின்னர் ஆணைக்குழுவின் பணிப்பாளர் zoom செயலி மூலம் என்னையும், குறித்தளிக்கப்பட்ட அதிகாரியையும் தொடர்புகொண்டு எனக்கான சரியான தகவல்களை உடனடியாக வழங்குமாறு கூறியதையடுத்து எனக்கான தகவல்கள் கிடைக்கப்பெற்றன. இதை என்னால் மறக்க முடியாது.



**கே : பொதுமக்களுக்குத் தேவைப்படும் தகவல்கள் எவையென நீங்கள் எவ்வாறு அறிந்துகொள்கிறீர்கள்?**

கிராமத்தின் மீது அக்கறை கொண்ட பொதுமகன் நானென்ற வகையில் எவ்வாறான தகவல்களை பெறுவதன்மூலம் சில பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் என்பதை நான் அறிந்துள்ளேன்.

இவற்றிற்கு அப்பால் மாலை 5 மணி ஆகிவிட்டாலே எனது தேநீர் கடையில் கிராமத்தினைச் சேர்ந்த ஆண்கள் பலர் கூடிவிடுவார்கள். அவர்கள் கிராமத்தில் நிலவும் பிரச்சினைகள், அன்றைய நாளில் நடந்த சுவாரஸ்யங்கள், நாட்டு நடப்பு என்பவற்றைப் பற்றி பேசுவது வழக்கம். அவர்கள் மூலமாகத்தான் பல கதைகள், பல தகவலுக்கான தேவைகள் என்னை வந்தடைகின்றன.

**கே : தகவலுக்கான உரிமையை நீங்கள் பயன்படுத்துவதைப் பற்றி கிராம மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள்?**

கிராம மக்கள், குறிப்பாக எனது கடைக்கு வருகின்ற ஆண்களுக்கு நான் இந்த உரிமையினை அடிக்கடி பயன்படுத்திக்கொள்வது தொடர்பாக அதிகம் தெரிந்திருக்கிறது. அதனால் யாதாயினும் பிரச்சினைகள், குழப்பங்கள் எழும்போது அதற்கென யாதேனும் தகவல்கள் தேவைப்படுகையில் "நிமால் அண்ணனிட்ட போனால் எல்லாத் தகவல்களும் எடுக்கலாம்" என்று சொல்லிக் கொள்வதுண்டு. அதே சமயம் சிலர் இவ் உரிமையினை நான் பயன்படுத்துவது தொடர்பாக கேலிப்பேச்சுக்களை பேசுவதுமுண்டு.

எவ்வாறிருப்பினும் இது எனக்கு மாத்திரமல்லாமல் அனைத்துப் பிரஜைகளுக்குமான உரிமை என்பதனை பொதுமக்கள் அனைவருக்கும் விளங்கவைப்பதற்கு நான்; முயற்சித்து கொண்டிருக்கிறேன்.


**கே : பொதுமக்கள் தகவல் அறியும் உரிமையினை மேலும் வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நீங்கள் வழங்கும் சிபாரிசுகள் எவை?**

எனக்குத் தற்போது 60 வயதாகிறது. அத்துடன் நான் பெரியளவில் கல்வியறிவுடையவனும் அல்ல. வானொலி மற்றும் பத்திரிகை மூலமாக கேட்டும், வாசித்தும் அறிந்துகொண்ட விடயங்களைக் கொண்டே இந்த உரிமையினை பயன்படுத்தி பல பிரச்சினைகளுக்கான காரணங்களைக் கண்டறிந்துள்ளேன்.

அப்படியென்றால் கல்விகற்ற மற்றும் இலத்திரனியல் அறிவுடைய இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் இவ் உரிமையினைப் பயன்படுத்துவதன் மூலமாக பாரிய மாற்றங்களுக்கு வழிசெய்ய முடியும்.

அத்துடன் கிராம மட்டங்களில் தொழிற்படும் சிறு சிறு அமைப்புக்களும் இவ் உரிமையைப் பயன்படுத்துதல் மூலமாக கிராமங்களிலுள்ள பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றுக்கு தீர்வு பெற்றுக் கொள்ள செயலாற்ற வேண்டும்.

நேர்கண்டவர்
கிரிஜா அருள்பிரகாசம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



# மெகா ஸ்டார் மம்முட்டியின் நடிப்பில் உருவான கடுகண்ணாவ ஒரு யாத்திரை குறிப்பு திரைப்படம்







மெகா ஸ்டார் மம்முட்டியின் நடிப்பில் உருவான "கடுகண்ணாவ" ஒரு யாத்திரைக் குறிப்பு திரைப்படம் Zee5ல் கடந்த 15ம் திகதி வெளியிடப்பட்டது.

"மனோரதங்கள்" என்ற தலைப்பில் வெளிவரும் இந்த 9 கதைகளையும் கேரளாவின் ஞான பீட விருது பெற்ற எழுத்தாளர் எம்.ரீ.வாசுதேவன் நாயர் எழுதியுள்ளார்.

இந்த 9 கதைகளிலும் மம்முட்டி, மோகன்லால், பஹத் பாசில், பிஜு மேனன், சித்திக் போன்ற பல பிரபலங்கள் நடித்துள்ளனர்.

இந்த கதைகளை இந்திய சினிமாவின் மிகச்சிறந்த இயக்குனர்களான பிரியதர்ஷன், ரஞ்சித் பாலகிருஷ்ணன் மற்றும் பலர் இயக்கியுள்ளனர்.

இந்த மிகப்பெரிய படைப்பில் மெகா ஸ்டார் மம்முட்டியுடன், இலங்கை ஊடக பிரபலமான ஷியா ஹுல் ஹசன் நடித்துள்ளார்.

கேரளாவின் ஞான பீட விருது பெற்ற எழுத்தாளர் வாசுதேவன் நாயரை கௌரவிக்கும் வகையில், இந்த படத்திற்கு எந்தவொரு நடிகரும் சம்பளத்தை பெற்றுக் கொள்ளவில்லை என்பது விசேட அம்சமாகும்.



இந்தியாவின் மிகச் சிறந்த திரை படைப்பில் இலங்கை கலைஞரும், ஊடக பிரபல்யமுமான ஷியா ஹுல் ஹசன் நடித்துள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்.

திரைப்படத்தில் இலங்கைக்கு வருகைத் தரும் மம்முட்டியுடன் பயணம் செய்யும் வகையில், ஷியா ஹுல் ஹசனின் காட்சி அமைந்துள்ளதாக தெரிய வருவதுடன், அது இந்த திரைக் கதையின் முக்கிய திருப்பு முனையாக இருக்கும் என அறிய முடிகின்றது. கடுகண்ணாவை – ஒரு யாத்திரை குறிப்பு திரைப்படத்தில் படப்பிடிப்புக்கள் அண்மையில் இலங்கையில் இடம்பெற்றிருந்தன.இந்த திரைப்படத்தின் படிப்பிடிப்புக்களை இலங்கையில் நடத்துவதற்கு ஐங்கரன் மீடியா சோலிசன் பிரைவட் லிமிட்டட் ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தது. இந்நிலையில் இந்த திரைப்படத்தில் மிக முக்கியமான கதாபாத்திரத்தில் இலங்கை கலைஞரான ஷியா உல் ஹசன் நடித்துள்ளார்.

"ஷியா" ஏற்கனவே தொலைக்காட்சி நாடகங்கள், வெப் தொடர்கள் மற்றும் தொலைக்காட்சி ரியாலிட்டி நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக இயக்கி அனுபவம் பெற்றிருப்பதுடன் பல்வேறு தொடர்களிலும் நடிகராகவும் தன்னுடைய ஆற்றலை வெளிப்படுத்தி இருக்கக்கூடியவர். கடுகண்ணாவை – ஒரு யாத்திரை குறிப்பு திரைப்படம் விரைவில், நெட்பிலிக்ஷ் இணைய வழி செயலி ஊடாக வெளியிடப்படுவது குறிப்பிடத்தக்கது.

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181








Arunasalam Letchumanan

உங்கள் செல்பி படங்களை அனுப்ப வேண்டிய முகவரி
இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தை
கொழும்பு 10






கிராமிய கலைகள் ஒன்றியத் தலைவர் விஜய்

# அம்பை: பெண் எழுத்தின் விரி கோணம்



தமிழில் கூர்ப்புறும் புதுமைப்பித்தனுடனான நவீன எழுத்தின் தொடக்கத்தை தொடர்கிற எழுத்தின் அழுத்தக்குரல்களில் குறிப்பிடும்படியான பெண்குரல் அம்பை.

எழுபதுகளில் நவீன எழுத்து வீச்சமடையத் தொடங்கிய சூழலில் பெண் எழுத்தின் ஒரு வகை எழுச்சிக் குரலாக அல்லது யதார்த்த அடையாளக் குரலாக வெளிப்பட்டவர் அம்பை என்கிற சி.எஸ். லட்சுமி

கல்விப் புலம் சார்ந்த அவரது செயற்பாடுகள் ஆய்வுப் போக்குகள் எழுத்திலும் ஒருவகைப்புதுமையையும் அழுத்தமான இலக்கையும் ஏற்படுத்திற்று.

இந்நிலையில் புனைவைச் சிறுகதைகளிலிருந்து தொடங்கும் அம்பை 1967இல் முறிந்த சிறகுகளை எழுதத் தொடங்கி இலக்கியப் பறப்புக்கு முதிர்ந்த சிறகாயானவர்.

இவரது கதைகள் பெண் உலகை மையம் கொண்டமையால் பெண் எழுத்தடையாளமாக அம்பை இலக்கிய வரலாற்றில் இடம் கொண்டார்.

பெண் வாழ்வை இலக்கியத்துள் வரைந்த வலிய பேனா அம்மையுடையது. பெண் உறவுச்சிக்கல், பிரச்சினைகள், குழப்பங்கள், கோபம், சமரசம் என பெண் இருப்பை கலாபூர்வமாகவும் ஒரு வகைக் கிண்டல் தொனியில் அம்பை இலக்கியமாக்கானார். அதனால் இன்றுள்ள முக்கிய பெண் எழுத்தின் வாசனை மிக்க புனைவாளராக அம்பை மதிக்கப்படுகிறார்.


அரை நூற்றாண்டு எழுத்தியக்கத்தில் கதை, தொடர்கதை, கல்வி, ஆய்வு, கட்டுரை, திறனாய்வு, இதழியலென பன்முகப் பார்வைக்குள் விரிந்தஎழுத்தின் சொந்தக்காரி அம்பை, வீட்டின் மூலையில் ஒரு சமயலறை, காட்டில் ஒரு மான் சிறகுகள் முறியும் என நீண்ட எழுத்துப் பட்டியலின் சொந்தக்காரி இவர்.

'சிவப்பு கழுத்துடன் ஒரு பச்சை பறவை' என்கிற இவரது கதை 2021க்கான சாகித்ய அகாடமியின் விருதை இவர் வசப்படுத்தியது.

பெண் எழுத்தின் விரிதளமாகி இந்நூற்றாண்டையும் எழுத்தால் நிரப்பும் அம்பை கதைகள் இலக்கியத்தின் விரி கோணம்.

மறுவால்
முல்லை முஸ்ரிபா

# வாழ்வும் பணியும்: ஏ எம் ஏ காதர்



ஒரு மனிதனின் வாழ்வு சமூகப்பணிகளின் கூட்டினால் பயனுறுகிறது. வாழ்தல் என்பது சுயம் கடந்த பொதுமையின் பாற்பட்டது. பலரும் அத்தகைய பணிகூடு வாழ்வைக் கொண்டிருப்பதில்லை.

சிலருக்கு அத்தகைய பணி வாழ்வு வாய்க்கிறது; மகிழ்வளிக்கிறது.

அந்த வகையில் 'பன்முக ஆளுமை ஏஎம்ஏ காதர் வாழ்வும் பணியும்' நினைவு நூல் முக்கியம் பெறுகிறது.

ஓய்வுநிலை கல்வித்துறைப் பணிப்பாளர் அல்ஹாஜ் ஏரிஎம் அஷ்ரப், ஓய்வு நிலை ஆரம்ப பிரிவு ஆசிரிய ஆளுமை கவிஞர் ஐ ஐ ஜமால்டீன் ஆகியோர் தொகுந்த இந்தப் பனுவல் வழி கிழக்கின் மற்றொரு பன்முக ஆளுமையின் பணிகள் வரலாற்றிடம் பெறுகிறது.

ஓட்டமாவடி, சித்தி நபீஸா அறக்கட்டளை வெளியிட்டுள்ள இந்த நினைவு பதிவுப்பனுவலின் உள்ளடக்க வழி ஏஎம்ஏ காதர் எனும் மனிதத்தைப்புரிய முடிகிறது.

அறிமுகம் மற்றும் நேசிப்பால் வந்த ஆசிகள், வாழும் போதே வாழ்த்துக்கள்,ஊக்கம் தரும் ஆக்கங்கள், காதர் ஆசானின் ஆக்கங்கள் சரிதைப் பதிவுகளாக ஆகிய அத்தியாயங்கள் நூல் நாயகனின் பண்பையும் பணியையும் எழுத்தில் பேசுகின்றன.

'காதர் ஆசான் அவர்கள் தன்னை ஒரு எல்லைக்குள் மாத்திரம் நிலை நிறுத்திக் கொள்ளாமல் சமூகத்தின் பல துறைகளிலும் தடம் பதிந்திருந்த பை பார்க்க முடிகிறது'என மலர்க் குழு இதயம் பேசுகிறது.

கிழக்கின் ஓட்டமாவடியில் 1938 இல் தோன்றிய காதர் என்பார் இனிய மாணவனாக, ஆற்றல் மிகு ஆசிரியராக, ஆளுமை மிக்க அதிபராக, கொத்தணி அதிபராக, கோட்டக் கல்விப் பணிப்பாளராக , அரச பணியாற்றியவர்.அத்தோடுமட்டுப் பட்டு விடாமல் சமூகப் பணிக்காகத் தன்னை முழுமையும் ஈந்தவர். ஒரு பட்டியலாக நீளும் சமூகச் செயற்பாட்டைக் கொண்டவர் என்பதை அவரை வாழ்த்தியெழுதிய பல்துறையாளர்களின் கூற்றுக்கள் வழியே அறிய முடிகிறது. இத்தகைய பணிகளுக்காக தேசகீர்த்தி, கலாபூஷணம் உள்ளிட்ட விருதுகளின் சொந்தக்காரர். கனதியான இந்த நூல் மானுட ஆளுமை ஒருவருக்காக கௌரவமும் வரலாற்றுணர்வுமாகும்.

# "வசமிழந்த உதயம்"

"உதயகுமாரர் வசமென
இதயமீது வரைந்தேன்
எனது திருமுகம் வாசிக்க வாசிக்க
தம் அகம் நொந்தழுதனராம்
உதயகுமரரே
எனக்கொரு பதிலெழுதினர்
எழுத்திலென்னை அங்ஙனமே
இழுத்தனர்...."

(இருத்தலுக்கான அழைப்பு 2003)

எண்பதுகளின் நடுக்கூற்றில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியின் வகுப்புத் தோழன் உதயகுமாரின் நினைவுகளைக் கிளர்த்துவதாக அவரது மரணச் செய்தி என்னை வசப்படுத்திற்று.

கி.உதயகுமார் கலைப்பிரிவுக்கே பொருத்தமான கலைத்துவமானவன்.

வற்றாப்பளையிலிருந்து வகுப்புக்கு வந்து சேர்ந்திருந்த துடிப்பான தோழன்.

வற்றாப்பளையிலிருந்து அவன் தனியனாய் வரவில்லை. ஓர் அழகிய குரலையும் எடுத்து வந்தான்.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவிலின் வைகாசிப்பொங்கலின் குரலது.

அப்போதெல்லாம் வைகாசிப் பொங்கலின் மகிழ்ச்சி பொங்கும் காலம். திருவிழாவில் திரள் மத்தியில் இவனது ஆன்மீகக் குரல் ஒலிக்கும். அடியாரைக் கவர்ந்திழுக்கும் அற்புதக்குரல் இவனுக்கு. 'வாருங்கள்..வாருங்கள்...' என்ற அழைப்பின் குரலை நான் திரளுக்குள்ளிருந்து கேட்டிருக்கிறேன். பின் வகுப்பறையில் பாராட்டியுமிருக்கிறேன். நண்பன் உதயகுமார் வகுப்பைக் கலகலப்பாக்கும் மகிழ்ச்சி சுபாவமுடையவன்; பேசவல்ல இனியன்; நல் மதிப்பு மிக்கவன்; வகுப்பிலே முஸ்லிம் மாணவர் இருவர் இருந்தோம் பெரு நாட்களையும்,பொங்கல்களையும் ஒன்று கலக்கச் செய்யும் இளங்காலமது. ஆன்மீகப்புரிவும் கலாசார மதிப்பும் இருந்தது.



உதயகுமார் கவிதை, நாடகம், விவாதம், உரை என்று கலை இலக்கிய ஆர்வத்தைக் கல்லூரி நாடகளிலேயே பக்குவமாகப் பயின்று வெளிப்படுத்திய ஆளுமை மிக்கவர்.

எனது முதல் கவிதை 'சருகுகளாய்' தினகரன் கவிதா சாகரத்தில் வெளிவந்த காலம் நமது வகுப்புக் காலம்தான். வகுப்பிலே கவிதைப் பக்கத்தைக் காட்டிய போது மகிழ்ந்து போய் அதிலொரு சிறு வரி எழுதினான் 'ஸலவாத்துச்சொல்லி அழைக்க வேண்டுமென'

இனிய நண்பன் உதய குமாரை மட்டுமல்ல 'வித்தியானந்தாரிகள்' அனைவரையும் பிரித்த தொண்ணூறின் காலம் நம்மிடை குறுக்கிட்ட பின் வகுப்பே சிதறிற்று. புலம்பெயர் தேசத்தில்சில முகங்கள்; உள் நிலத்தில் சில,அகதியாகிச் சிலவென பிரிகோடு வளர்ந்தது.

நண்பன் உதயகுமாரையும் காணமுடியவில்லை.

இரண்டாயிரத்தின் முற்கூற்றில் உதயகுமாரை கல்விப்புலச் செயற்பாட்டாளராய் காண்கிறேன் . உற்சாகமாக இருந்தார். அவரது தமிழாளுமை வலயக்கல்வித்துறையின் ஆலோசகராக, உதவி நிலை அதிகாரியாக உயர்த்தியிருந்தது. வவுனியாவில் பணி செய்தார்.

கல்வியமைச்சின் பணித்தொடர்ச்சியில் இருவரும் சந்தித்திருக்கிறோம்; மகிழ்கால நினைவுகளை மீட்டிருக்கிறோம்.

முல்லைத்தீவில் ஹஜ்கால கலை விழாவுக்கு நண்பனை அழைத்தேன். வந்து கவிதை வாசித்து மகிழ்வித்திருந்தார் உதயகுமார்.

உதயகுமாரின் திடீர் பிரிவு ஒரு இலக்கிய இடைவெளியைக் தருகிறது.

எனினுமென்ன வைகாசிப்பொங்கலின் காற்றிலே அவரது இனிய குரல் இன்னுமிருக்கும்...

2001.12.18இல் நான் எழுதிய 'வசமிழந்த உதயம்'கவிதையை இப்போது அவருக்கு சமர்ப்பிக்கிறேன். ஆழிரங்கல் நண்பா

# ரூமியின் வைரங்கள்



(உ)
விடையைத்தேடு
வெட்டிப் பேச்சு
வேண்டாம் நண்பா
உண்மையின்
பிரசன்னத்தில்
மரபான சொற்கள்
உளறல் மட்டுமே
உளறலோ
பார்வைக்கான
நகரம். மட்டுமே
நிற்சலனம் ஆகட்டும்
உன் நீர்
நிலாவும் விண்மீன்களும்
பிரதிபலிக்கக் கண்டாய்
உன்னில்
உலகிற்கு அப்பால்
உள்ள ரகசியங்கள்
யாதென்று அறிய
இவ்வுலகில்
பிறந்திருக்கும் ஒரு
விருந்தினன்
மட்டுமே நான்
விடையைத் தேடு
உன் வினாவின்
உள்ளே
புலனுலகம்
தருவது மட்டும்
போதும் உனக்கென்றால்
நீயொரு தொழிலாளி
மறைவுலகம்
வேண்டுகிறாய் எனில்
உன் ஆசையில் நீ
உண்மையாய் இல்லை
இவ்விரண்டு.
ஆசைகளும்
அபத்தமானவை
நண்பா!
உண்மையில்
உன் சுயம்
வேண்டுவதெல்லாம்
காதலின்
பித்தேற்றும் இன்பமே
என்பதை மறந்து
விட்ட உன் பாவம்
மன்னிக்கப்படும் போ
கப்பலேறிப்
புறப்பட்டு விடு
எவருக்கும்
நிச்சயமாய்த் தெரியாது
மூழ்கிவிடுமோ அல்லது
துறைமுகம்
சேருமோ என்று
ஜாக்கிரதையான
மனிதர்கள் சொல்வார்கள்
நிச்சயமாய்த்
தெரியாதவரை
எதுவும் செய்யப்
போவதில்லை நான்
வணிகர்கள் அறிவார்கள்
இன்னும் நன்றாய்
எதுவும் நீ செய்யவில்லை
எனில் நஷ்டம்தான்
கடவுளின்
சவாலை ஏற்காத
வணிகர்களில்
ஒருவனாய்
இருக்காதே நீ

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா

உன் ஆறுதல் பேச்சு எனக்கு எப்போதும் உற்சாக பானமே” என்று நன்றியுடன் கூறினான்.மண்டேலாவும் நண்பனின் சொல்லை வேதவாக்காக நினைத்து கல்வியே அருந்தனம், அழியாப் பெருந்தனம் என்பதை உணர்ந்து கல்வியில் கண்ணாயிருந்தான்.

காலமெனும் பரந்த வானில் மாதமெனும் சில நட்சத்திரங்கள் மின்னி மறைந்தன. ஒருநாள் பல்கலைக்கழத்திற்கு பாடம் தொடங்கிய பிறகு விரைந்து வந்த மண்டேலா அவசரத்தில் ஒரு வெள்ளையின மாணவனுக்கு அருகே உட்கார்ந்துவிட்டான். தெரியாத்தனமாக மண்டேலாவின் கை அவ் வெள்ளையின மாணவனின் உடையில் பட்டுவிட அம்மாணவனோ கோபத்தில் சீறினான். அவன் உடனேயே எழுந்து வேறொரு இடத்திற்கு சென்று அமர்ந்துகொண்டு மண்டேலாவை ஒரு குஷ்டரோகியை பார்ப்பது போல நினைத்து அருவருப்புடன் பார்த்தான். மண்டேலாவோ எதுவுமே பேசாமல் மௌனியாக படிப்பில் கவனத்தை செலுத்தினான். இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் அப் பல்கலைக்கழக நிறவெறி கொண்ட மாணவர்களால் பல அவமானங்களுக்கும் புறக்கணிப்புகளுக்கும் மண்டேலா உள்ளாக நேர்ந்தது.மற்றொரு சமயம் சட்டப் படிப்பை போதிக்கும் பேராசிரியர் ஒருவரே மண்டேலாவிடம் வெளிப்படையாக நிறவெறியை உமிழ்ந்து தள்ளினார். மண்டேலாவை பார்த்து “உனக்கு சட்டப்படிப்பு ஒத்துவராது. கறுப்பின மக்களுக்கு சட்டப்படிப்பு எதற்கு? தங்கச் சுரங்கம் சென்று பணியாற்றுவதை விட்டுவிட்டு சட்டம் படிக்க வந்துவிட்டாய். கறுப்பர்களும் பெண்களும் சட்டம் பயில்வது வீண்வேலை. அதை முதலில் புரிந்துகொள். சட்டம், ஒழுங்கு, நீதி எல்லாவற்றிலும் மேலோங்கி நிற்பவர்கள் நாங்கள்தான்.” என்று மார் தட்டி பேசி மண்டேலாவை தாழ்மைப்படுத்தினார். அதையும் மண்டேலா அமைதியாக சகித்துக் கொண்டான். ஒன்றல்ல இரண்டல்ல இவ்வாறான பல சந்தர்ப்பங்களில் அவன் அவமானப் பேச்சுக்களுக்கும் குத்தல் பேச்சுக்களுக்கும் பலிக்கடாவாகினான்.

அந்த பல்கலைக்கழகத்தில் இந்திய மாணவர்கள் சிலரும் கல்வி பயின்றனர். ஆபிரிக்கர் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்த இந்திய மாணவர்கள் மண்டேலாவுடன் நட்புடன் கைகோர்த்தனர். இது மண்டேலாவின் மனதுக்கு பெரிதும் ஆறுதலாக இருந்தது. காலம் நகர்ந்து செல்லச் செல்ல வெள்ளையின மாணவர்கள் சிலரும் மண்டேலாவுடன் நட்புக்கரம் நீட்டினர். பல்கலைக்கழகத்தில் சில நல்ல நன்பர்களின் பரிச்சயம் கிடைத்ததால் மண்டேலா உற்சாகமடைந்தான்.

ஒருமுறை மண்டேலாவும் அவனது நண்பர்களும் பேரூந்தில் செல்லும் போது பேரூந்தின் வழி நடத்துனர் மண்டேலாவை தரக்குறைவான வார்த்தையான “கஃபிர்” (ஆபிரிக்காவில் கஃபிர் என்றால்



மிகவும் கீழ்த்தரமான சொல்லாகும்) என்று திட்டி விட அதெப்படி எமது சக மாணவனை அவ்வாறு திட்டலாம் என்று வரிந்துகட்டிக் கொண்டு இந்திய மாணவர்கள் பேரூந்து வழிநடத்துனருடன் சண்டையிட்டு மோதிக்கொண்டனர். இறுதியில் இந்த வழக்கு நீதிமன்றம் வரை போய்விட்டது. இதை அறிந்த கோரும் சிசுலுவும் ஓடோடி வந்து மண்டேலாவை சந்தித்து விடயத்தை கேட்டறிந்தனர். மண்டேலாவோ “கோர், சிசுலு உங்களைப் போல என் நலனில் அக்கறை செலுத்த இந்திய மாணவர்கள் சிலரும் என்னுடன் கைகோர்த்திருப்பது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது” என்று கூறி அகம் மகிழ்ந்தான். அதற்கு கோர் “நெல்சன், இந்த உலகத்தில் நல்லவர்களும் இருக்கிறார்கள். எல்லோரையும் நாம் கெட்டவர்கள் என்று நினைத்து ஒதுக்கி விடக் கூடாது.” என்று அறிவுரை கூறினான்.

அன்றிரவு மண்டேலாவுக்கு உறக்கம் கண்களைத் தழுவ மறுத்தன. நெடுநேரம் அவன் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தான்.

பல்கலைக்கழகத்திலும் பேரூந்திலும் நடந்த நிகழ்வுகள் ஒன்றன்பின் ஒன்றாக நிழற்படம் போல் அவன் மனத்திரையில் ஓடின.

அவன் தனக்குத் தானே ஆழ்மனதுடன் பேசிக்கொண்டான் “என் இனம் புறக்கணிக்கப்படுகிறது. இன் இன மக்கள் ஒதுக்கப்படுகிறார்கள். எம் தனித்துவ அடையாளம் கேலிக்குரியதாக்கப்படுகிறது.

எம் தேசம் எம் கண்முன்னே வெள்ளையின கயவர்களால் ஆளப்படுகிறது. சுயமரியாதை பறிபோகும் போது துணிச்சலுடன் எதிர்ப்பதுதான் அரசியல் என்றால், சுயம் இழந்து தவிக்கும் கறுப்பர்களை தயவின்றி கொடுமை செய்யும் வெள்ளையினக் கயவர்களுக்கு நயமாக சாட்டையடி கொடுக்கும் வழிமுறையே அரசியல் என்றால், கறுப்பர்களை வெறுத்தொதுக்கும் போது திமிறி எழுவதுதான் அரசியல் என்றால், எம் இன மக்களுக்காக குரல் கொடுப்பதுதான் அரசியல் என்றால் நான் ஏன் அரசியலில் இறங்கக்கூடாது?” என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். இறுதியில் அவன் மனம் அதனையே ஆமோதிக்கவும் செய்தது.



(தொடரும்)

கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

# கொடுத்து கொடுத்து சிவந்த கரங்கள்

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் (நவம்பர் 29, 1908 ஆகஸ்ட் 30, 1957) தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகரும் பாடகரும் ஆவார்.

நாகர்கோவில் அருகே ஒழுகினசேரியில் 1908ம் ஆண்டு நவம்பர் 29 ஆம் நாள் கலைவாணர் பிறந்தார். நாடகக் கொட்டகைகளில் சோடா விற்கும் பையனாக ஏழ்மை வாழ்க்கை இவரது இளமைப் பருவம். பின் சாதாரண வில்லுப்பாட்டுக் கலைஞராக தனது கலையுலக வாழ்வை துவங்கினார். பின்னர் நாடக துறையில் நுழைந்தார்.

சொந்தமாக நாடக கம்பெனியையும் நடத்தினார். அப்போது தமிழகத்தில் திரைப்படத்துறை பிரபலமடைந்தது. அதிலும் நுழைந்து தமிழ் திரைப்படத்துறையில் முன்னணி நகைச்சுவை நடிகராக வலம் வந்தார். திரைப்படத் துறையில் இவர் அறிமுகமான திரைப்படம் 1936களில் வெளிவந்த சதிலீலாவதி ஆகும். பெரும்பாலும் சொந்தமாக நகைச்சுவை வசனங்களை எழுதி அதையே நாடகத்திலும், திரைப்படங்களிலும் பயன்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். நகைச்சுவை மூலமாக கருத்துகளை பரப்பினார். ஏறத்தாழ 150 படங்களில் நடித்தார்.

இவரது மனைவி மதுரமும் பிரபலமான நடிகை என்பதால் இருவரும் இணைந்தே பல படங்களில் நடித்தனர். நகைச்சுவையை சினிமா காட்சிகளாக மட்டுமின்றி பாடல்களாகவும் அமைக்க முடியும் என நிரூபித்தவர். சொந்த குரலில் பல பாடல்களை பாடியுள்ளார். பழங் கலைகளின் பண்பு கெடாமல் அவற்றைப் புதுமைப்படுத்தி மக்கள் மன்றத்திற்குத் தந்தவர். அவர் நடத்திய கிந்தனார் கதாகாலட்சேபமும், தெருக்கூத்து, வில்லுப்பாட்டு போன்றவைகளும் இதற்குச் சான்று.

அறிவியல் கருத்துக்கள் நாட்டில் பரவ வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர். ஏறத்தாழ 150 படங்களுக்கு மேல் நடித்துள்ள அவர் சீர்திருத்தக் கருத்துக்களை திரைப்படங்களில் துணிவோடு எடுத்துக் கூறியவர். கலையுலகில் கருத்துக்களை வழங்கியது போல் தமது வாழ்க்கையிலும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு பணத்தை வாரி வழங்கியவர்.

காந்தியடிகளிடமும், காந்திய வழிகளிலும் பற்று கொண்டவர். காந்தியடிகளின் மறைவுக்குப் பின்னர், அவரது நினைவைப் போற்றும் வகையில், ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேல் தமது சொந்தப் பணத்தைச் செலவிட்டு



தனது ஊரில் காந்தியடிகளுக்கு நினைவுத்தூண் எழுப்பினார்.

அப்போது பிரபல கதாநாயகனாக இருந்த தியாகராஜ பாகவதருடன் ஒரு கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டார். இது இவரது கலை பயணத்தில் மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது. இந்தியா விடுதலை பெறுவதற்கு சில மாதங்களுக்கு முன் தான் குற்றமற்றவர் என தீர்ப்பளிக்கப்பட்டார். ஏறத்தாழ 30 மாதங்கள் சிறைவாழ்க்கைக்கு பின்னர் விடுதலை பெற்ற கலைவாணர் மீண்டும் படங்களில் நடிக்க துவங்கினார். எனினும் வழக்குகளிலேயே அவரது சொத்தில் பெரும்பகுதி கரைந்திருந்தது.

1957 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 ஆம் திகதி தனது 49வது வயதில் கலைவாணர் காலமானார்.

**கலைவாணர் அரங்கம்**

தமிழ்நாடு அரசு கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் நினைவாக சென்னையில் உள்ள அரசு அரங்கத்திற்கு கலைவாணர் அரங்கம் என பெயர் சூட்டியுள்ளது.

இந்த கலைவாணர் அரங்கம் 1035 இருக்கைகளுடன் குளிர் சாதன வசதியுடன் அரங்கம் விழாக்களுக்கும், பொது நிகழ்ச்சிகளுக்கும் வாடகைக்கு விடப்படுகின்றது.

என்.எஸ்.கிருஷ்ணன் பற்றி சுவையான சிறு குறிப்புகள்

என்.எஸ். கிருஷ்ணன் தமிழ் சினிமாவின் நாகரிகக் கோமாளி சிரிப்பு மொழியில் சீர்திருத்த விதை தூவியவர். நூற்றாண்டைக் கடந்து வாழும் கலைவாணர்!.

நாகர்கோவில் அருகே உள்ள ஒழுகினசேரி கிராமத்தில் 1908ல் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் நாள் பிறந்தவர். தந்தை சுடலைமுத்துப் பிள்ளை. தாயார் இசக்கி அம்மாள். நாகர்கோவில் சுடலைமுத்து கிருஷ்ணன் என்பதன் சுருக்கமே என்.எஸ்.கே!



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

# சூரன். ஏ. ரவிவர்மாவின் "திரைக்கு வராத சங்கதி" நூல் வெளியீட்டுவிழா







எழுத்தாளரும், ஊடகவியலாளருமான சூரன்.ஏ.ரவிவர்மாவின் " திரைக்கு வராத சங்கதி" எனும் நூல் வெளியீட்டு விழா தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் பொருண்மியம் சஞ்சிகையின் ஆசிரியர் இ. பாரதியின் தலைமையில் நடைபெற்றது

பிரான்ஸ் TNTR சர்வதேச ஊடகவியலாளர் திருமதி ரவிச்சந்திரன் ரவி சக்தி, வரவேற்புரையாற்றினார். அறிமுக உரையினை "ஒருவன்" செய்தித்தள முகாமையாளர் அ.நிக்ஸன் நிகழ்த்தினார். வெளியீட்டு உரையினை ஜீவநதி, கடல் ஆகிய சஞ்சிகையின் ஆசிரியர் க.பரணீதரன் நிகழ்த்தினார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை தலைவர் திருமதி பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் கருத்துரையாற்றினார்.

முதல் பிரதியினை எழுத்தாளரது சகோதரிகள் பெற்றுக்கொள்ள மூத்த ஊடகவியலாளர்களான அ.நிக்சன், இ.பாரதி, ஊடக கற்கைகள் தலைவி திருமதி பூங்குழலி ஆகியோர் இணைந்து வழங்கிவைத்தனர். இணை பிரதிகள் தேவரையாளி இந்துக்கல்லூரியின் அதிபர் செ. செல்வானந்தன், தினகரன் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் ராஜ ஸ்ரீகாந்தனின் பேத்தி அக்ஷரா ஆகியோருக்கு வழங்கப்பட்டது.









**உங்கள் செல்பி படங்களை அனுப்ப வேண்டிய முகவரி**
**இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தை கொழும்பு 10**




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஓகஸ்ட் மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.